உனக்கே உயிரானேன்



பிரேமா

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர் : உனக்கே உயிரானேன்

ஆசிரியர் : பிரேமா

உரிமை : ஆசிரியருக்கு

மொழி : தமிழ்

முதற் பதிப்பு : அக்டோபர், 2013

தாள் : 11.6 kg. வெள்ளைத் தாள்

நூலின் அளவு : 1 x 8 கிரவுன்

அச்சு எழுத்து : 11 புள்ளி

மொத்தப் பக்கங்கள் : 332

பைண்டிங் : சாதா அட்டை

நூல் வெளியிடுவோர் : அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

விலை: ரூ.150.00

கணினி அச்சு : வேலன் லேசர் - 94441-01753

அச்சிட்டோர் : ஜீ.எம்.கிராபிக்ஸ்,
சென்னை-14.



உனக்கே உயிரானேன்

முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களே,

உங்களது தொடர் ஆதரவிற்கு எனது நன்றிகள் பல உரித்தாகுக. நாயகன் நாயகியின் காதல் திருமணமும், அதற்கு பின் நிகழும் சம்பவங்களைப் பற்றியதே இந்தக் கதை. இக்கதையில் உள்ள நிறை குறைகளை premaarumugam@yahoo.com என்ற எனது மின்னஞ்சலுக்குத் தெரிவியுங்கள். உங்களது விமர்சனத்திற்காகக் காத்திருக்கிறேன்.

எனது கதைகளைப் புத்தகங்களாக வெளியிடும் அருணோதயம் திரு. அருணன் ஐயா அவர்களுக்கு என்றென்றும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்புடன்,

பிரேமா

உனக்கே உயிரானேன்

1



மதுரை மரிக்கொழுந்து வாசம்.

என் ராசாந்தி உன்னுடைய நேசம்.

மானோட பார்வை மீனோட சேரும்

என்ற பாடல் தொலைக்காட்சியில் ஒலித்துக் கொண்டிருக்க, ராதா சோபாவில் அமர்ந்து அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"நீ மதுரையிலே இருக்கிறே அப்படின்னு காட்டுறதுக்காக மதுரைன்னு வருகிற மாதிரி பாட்டைப் பார்த்துக்கிட்டு இருக்கியா?" என்று அவரது கணவர் ரவீந்திரன் கேட்கவும்,

"நான் என்னமோ டி.வி. சேனலுக்கு போன் போட்டு இந்தப் பாட்டைப் போடச் சொன்ன மாதிரியில்ல பேசுறீங்க. டி.வி.யிலே பாட்டு ஒடுது. நீங்களும் உங்க பொண்ணும் சாப்பிட வரும் வரைக்கும் பார்ப்போமேன்னு

உட்கார்ந்தேன். நீங்க கேட்குறதைப் பார்த்தா இதே சேனலில் சென்னைக்காரங்களுக்கு எல்லாம் சென்னை செந்தமிழ் மறந்தேன் உன்னாலே அப்படின்னு பாட்டு வருமோ?'' என்று கிண்டலாகக் கேட்க,

''ரொம்பப் பேசக் கத்துக்கிட்ட ராதா'' என்று ரவிந்திரன் சிலாகிக்க,

''இல்லைன்னா அப்பாக்கும் பொண்ணுக்கும் நடுவிலே என்னால காலம் தள்ள முடியாதே!'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே,

''என்னைப் பத்தி என்ன பேசிக்கிட்டு இருந்தீங்க?'' என்ற கேள்வியுடன் நிவேதா சாப்பாட்டு அறை நோக்கி வந்தாள்.

நிவேதா, கோடீஸ்வரரான ரவிந்திரன் - ராதா தம்பதியரின் ஒரே புதல்வி. இருபத்து மூன்று வயது யுவதி. பால் நிற மேனியுடையவள். அவளது தலை முடி பட்டுப் போன்றதா இல்லை அவளது சருமமா என்று ராதாவே அடிக்கடி வியந்து போவார். அவள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் நளினம் மிளிரும்.

தந்தைக்குப் பெண்ணின் மீது அளவில்லாத பாசம். அவள் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்ததும் லண்டன் சென்று B.B.A. பட்டம் பெற்று வந்தாள். படித்து முடித்து நேராகத் தந்தையுடன் சேர்ந்து அவரது கம்பெனி நிர்வாகத்தில் பங்கு எடுத்துக் கொண்டாள்.

''ஆபீஸ்காடா குட்டிம்மா அதுக்குள்ளே கிளம்பிட்டே?'' என்று ரவிந்திரன் கேட்டதும்,

''அவ என்னைக்குங்க ஆபீஸுக்கு ஜீன்ஸும், டாப்ஸும் போட்டுகிட்டுப் போனாள்?'' என்று ராதா எதிர்க் கேள்வி கேட்டார்.

''அம்மா பயங்கர ஸ்மார்ட் டாடி. நீங்க அம்மாவைப் பார்த்துக் கத்துக்கோங்க'' என்று நிவேதா கண்ணடித்துச் சொல்லவும்,

''அப்படியா சொல்லுறே? அப்போத் தேவையில்லையா?'' என்று மகளைப் பார்த்து ரவிந்திரன் கேட்டார்.

''என்ன தேவையில்லையான்னு கேட்குறீங்கப்பா?''

''இல்லைடா. நான் என் அறுபதாம் கல்யாணத்துக்கு ஸ்மார்ட்டா... இன்னும் கொஞ்சம் அழகா பொண்ணு பார்க்கலாம்ன்னு நினைச்சேன். நீ தான் இவளே ஸ்மார்ட்டா இருக்கான்னு சொல்லுறியே! அப்போ திரும்பவும் இவளையே கல்யாணம் பண்ணிக்கட்டுமா?''

''ஓ! உங்களுக்கு இந்த வயசிலே இன்னொரு பொண்ணு கேட்குதோ?'' என்று முதலில் கோபமாகக் கேட்ட ராதா பின் சந்தோஷக் குரலில், ''அட அது கூட நல்லா ஐடியாதாங்க. பேசாமல் நீங்க வேற பொண்ணு தேடுங்க. நானும் என் பொண்ணும் நிம்மதியா எங்க அம்மா ஊரிலே போய் செட்டில் ஆகிடுறோம்.''

''என்னது என் பொண்ணைக் கூட்டிட்டுப் போவியா? எதுக்கு? இல்லை எதுக்குன்னு கேட்குறேன். நான் எப்போ உன்னைத் தள்ளி வைக்குறதா சொன்னேன்?'' என்று அவர் அந்தர் பல்டி அடித்தார்.

''உங்க அப்பாவைப் பார்த்தியா நிவி? பொண்டாட்டியைக் கூட வேண்டாம்ன்னு சொல்லுவார். ஆனா பொண்ணை... ஒரு பேச்சுக்குக் கூட ஒதுக்கி வைக்க மாட்டார். உனக்கு அப்படி ஒரு அப்பா!'' என்று பெருமையாகக் கூறியவர். ''எனக்கு இப்படி ஒரு புருஷன்!'' என்று கேலிக் குரலில் இழுத்தார்.

"எனக்குப் பசிக்குது நாம சாப்பிடலாமா?" என்று ரவிந்திரன் கேட்டதும் ராதா வேறு ஒன்றும் சொல்லாமல் கணவருக்கும், பெண்ணிற்கும் உணவு பரிமாற ஆரம்பித்தார்.

சாப்பிட்டு முடித்த நிவேதா, "சரிம்மா நான் என் பிரண்டு சுமியைப் பார்த்துட்டு வரேன், பை டாடி" என்று சொல்லி அவர்களிடம் விடைபெற்றவள் வெளியே வந்து தன் கார் நோக்கிப் போக அவர்கள் வீட்டுக் கார் டிரைவர் வேலு ஓடி வந்தார்.

"பாப்பா வெளிய போகணுமா? நான் ஓட்டுறேன். அந்த வண்டியிலே வாம்மா" என்றார்.

"வேலுண்ணே, நானே என் காரை ஓட்டிக்குறேன். இப்படி நீங்களே தினமும் என்னைக் கொண்டு போய் விட்டுக்கிட்டு இருந்தால் எனக்கு டிரைவிங்கே மறந் துடும். நீங்க உங்க ஐயாவுக்கே வண்டி ஓட்டுங்க."

"ஐயா அவராப் போயிடுவார். இல்லைன்னா வேற யாராவது அவர் காரை ஓட்டுவாங்க. உன்னை நான் கூட்டிட்டுப் போறேன் பாப்பா."

"இப்ப நீங்க என்ன சொல்ல வரீங்க? எனக்குச் சரியா கார் ஓட்டத் தெரியாதுன்னா?"

"சே சே! நான் போய் அப்படிச் சொல்லுவேனா பாப்பா? நானெல்லாம் இருக்கும்போது நீ எதுக்குக் கார் ஓட்டிக் கஷ்டப்படணும் சொல்லு. நீ ராணி மாதிரி உட்கார்ந்திட்டு வா பாப்பா."

"ஆபீஸுக்குப் போகும் போது நீங்க ஓட்டுங்க. இப்ப என்னை ஆளை விடுங்க" என்று சொல்லிவிட்டுத் தனது காரை அவள் லாவகமாக ஓட்டிச் சென்றாள்.

செல்லும் அவளையே பார்த்துக் கொண்டு வேலு நிற்க... அவர் அருகில் வந்து ரவிந்திரன் கூப்பிட... அவரிடம் அசைவே இல்லை. அவரைப் பிடித்து உலுக்கவும் தான், "என்னங்க ஐயா கூப்பிட்டீங்களா?"

"என்னடா வேலு உங்க பாப்பா உன்னை வேண் டாம்னு சொல்லிட்டாளா?"

"காலங்கார்த்தாலே கடுப்பைக் கிளப்பாதீங்க ஐயா. என்னை வண்டி ஓட்டத் தான் வேண்டாம்னு சொல் லுச்சு."

"அதைத் தானேடா நானும் கேட்டேன்."

"கேட்குறதைத் தெளிவாகக் கேளுங்க."

"ஏன்டா இதுக்கே இப்படி முகத்தை தூக்கி வைச்சுக் கிறியே! நாளைக்கு நிவேதா கல்யாணம் ஆகிப் போயிட்டால் என்னடா செய்வே?"

"ஓ! காலம் முழுசும் உங்களுக்கே வண்டி ஓட்டிக் கிட்டு இருப்பேன் என்று நினைச்சுக்கிட்டு இருக்கீங் களா? என் பாப்பா கூடவே அவ இருக்கிற ஊருக்கு வண்டி ஓட்டப் போயிடுவேன். என்னையையும் பாப் பாக்குக் கொடுக்கப் போற சீர் செனத்தியோட சேர்த்து அனுப்பிடுங்க."

"நீ என்ன பொருளாடா? உன்னைச் சீர் சாமானோடு அனுப்புறதுக்கு?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் எங்க பாப்பா கூடத் தான் இருப்பேன்."

"அவ கல்யாணமாகி அமெரிக்காவுக்குப் போனால்... பாஷை தெரியாத ஊரிலே போய் நீ என்ன செய்வே?"

"உங்க வாயிலே நல்ல வார்த்தையே வராதா?"

"என் நேரம்டா. என் பொண்ணுக்கு அமெரிக்காவிலே மாப்பிள்ளைப் பார்ப்பேன் என்று நான் சொன்னால் அது கெட்ட வார்த்தையா? அது சரி. ஆமா உனக்கு என்னை எத்தனை வருஷமாத் தெரியும்?"

"ஏன் கேட்குறீங்க? எனக்கு ஒரு அஞ்சு வயசா இருக் குறப் போல இருந்து உங்க கூடத் தானே இருக்கேன்."

"அப்படின்னா கிட்டத்தட்ட ஐம்பது வருஷமா ஒண்ணா இருக்கோம். என்னை விட உனக்கு உன் பாப்பா பெருசாப் போயிட்டாளாடா?" என்று கேலிக் குரலில் கேட்டார்.

அவர்களது சம்பாஷணையை ராதா ஒரு புன்சிரிப் போடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்த வேலு மனதுக்குள் சிரித்துக் கொண்டே தன் முதலாளியிடம்,

"நான் உங்களை ஒண்ணு கேட்குறேன். நீங்க பதில் சொல்லுங்க. இப்போ உங்ககிட்டே வந்து உங்களுக்கு நம்ம அம்மா முக்கியமா? இல்லை பாப்பாவான்னு கேட்டால் என்ன பதிலைச் சொல்லுவீங்க?" என்று கேட்டுவிட்டு நமட்டுச் சிரிப்பு சிரிக்க...

தன் இடுப்பில் கை வைத்து ராதா அவர்கள் இருவரை யும் முறைக்க...

"ஏன்டா உள்ளே இப்பத் தான் ஒரு பஞ்சாயத்து முடிஞ்சது. மறுபடியும் நீ கிளப்பி விடுறாயா? வண் டியைக் கிளப்புடா" என்று சொன்னவர் பின் சீட்டில் ஏறி அமர்ந்து மனைவியைப் பார்த்துத் தலை அசைத்து விடைபெற்றார்.

நிவேதா சுமிதாவின் வீட்டிற்குச் சென்று உள்ளே நுழைந்ததும் அவளை சுமித்ராவின் தாய் வரவேற்றார்.

"வாம்மா நிவேதா. நல்லா இருக்கியா? வீட்டிலே எல் லோரும் சௌக்கியமா?" என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே சுமித்ரா வந்தாள்.

அவளை ஓடிச் சென்று அணைத்துக் கொண்டவள், "ஹேப்பி பர்த் டே சுமி!" என்றாள்.

சுமித்ரா நிவேதாவின் முன்னேயும் பின்னேயும் எதையோ தேடிப் பார்க்க...

"என்ன சுமி தேடுறே?" என்று குழப்பத்துடன் நிவேதா கேட்க,

"என் பர்த் டேக்கு எனக்கு கிஃப்ட் எதுவும் வாங்கிட்டு வரலியா?" என்று கேட்டாள்.

"உன்னை மதிச்சு நான் வந்ததே உனக்கு கிஃப்ட்டாத் தெரியலையா?" என்று நிவேதா கேட்டதும்,

"அப்படிச் சொல்லும்மா நிவேதா" என்று சுமித்ராவின் தாய் சந்தோஷமாகக் கூவினார்.

சுமித்ரா நிவேதாவை முறைத்துப் பார்த்தாள். தோழி யின் நிலையை நொடியில் கணக்கெடுத்த நிவேதா,

"ஆன்ட்டி நீங்க சந்தோஷப்படுறதைப் பார்த்தால் பர்த் டே பொண்ணை ஏமாத்திட்டீங்க போல! வாய் வார்த்தையா வாழ்த்தினாப் போதுமா? அவளுக்காக ஒரு ஹேர் பின் னாவது வாங்கிக் கொடுக்க வேண்டாமா?" என்று சொல்லிக் கொண்டே தனது கைப்பையில் இருந்த ஒரு தங்க மோதிரத்தை எடுத்தவள் தன் கையாலேயே தோழிக்கு அணிவித்தாள்.

"அது எப்படி நிவேதா டமால்ன்னு கட்சி மாறிட்டே?" என்று சுமித்ராவின் அம்மா வியப்புடன் கேட்க,

"என் பிரண்டை நான் நக்கல் பண்ணலாம். நையாண்டி பண்ணலாம். ஆனா மத்தவங்க பண்ண

நினைச்சால் நோ என்ட்ரி கார்டு போட்டுத் தடுத்திடணும். இது தான் என் பாலிசி. அந்த மத்தவங்க லிஸ்ட்டிலே நீங்களும் தான் இருக்கீங்க'' என்று சொல்லிச் சிரித்தாள்.

அவர் சிரித்துக் கொண்டே அவளுக்குக் காபி எடுத்து வரச் சென்றார்.

''நாளைக்குச் சென்னைக்குப் போக எல்லாத்தையும் பேக் பண்ணிட்டியா நிவி?''

''நாளைக்கு நைட் தானே சுமி போறோம். அதுக் குள்ளே முடிச்சுடுவேன். பவித்ரா ரெடியாகிட்டாளான்னு கேட்டியா?''

''அவ எப்போ எப்போன்னு காத்திருக்காள். இந்தக் கல்யாணத்துக்கு போகப் போறோம்ன்னு சொன்னதிலே இருந்து எங்க அம்மா என் கல்யாணம் பத்தியே பேசி ரம்பம் போடுறாங்க.''

''உங்க வீட்டிலுமா? எங்க வீட்டிலும் அதே பேச்சுத் தான்.''

''சன்டே வரைக்கும் சென்னையிலே இருப்பியா நிவி?''

''இல்ல சுமி. ஆபீஸில் வேலை இருக்கு. அதனால கல்யாணம் முடிஞ்ச அன்னைக்கே... அதாவது வெள்ளிக் கிழமையேத் திரும்பிடுவேன்.''

''பிசினஸ் வுமன். பிஸி பெர்சன்'' என்று சொல்லி சுமித்ரா தோள் குலுக்கவும்,

''நடக்கப் போறது உன் கல்யாணம்ன்னா எல்லா வேலையையும் தள்ளி வைச்சிடுவேன் சுமி'' என்று சொன்னதும் சுமித்ரா அவளது கை பிடித்து அழுத்திக் கொடுத்துப் புன்னகைத்தாள்.

சிறிது நேரத்தில் அங்கிருந்து கிளம்பி வீட்டிற்குச் சென்று புடவை அணிந்து வந்தாள்.

தாயிடம் விடைபெற்று வெளியே வர வேலு தயா ராகக் காத்திருந்தார்.

''விட மாட்டீங்களே'' என்று சலித்துக் கொண்டே அந்தக் காரில் ஏறி அமர்ந்து ஆபீஸ் சென்றாள்.

கஞ்சி போட்டு இஸ்திரி போட்டு அவள் உடுத்தி இருந்த காட்டன் புடவை அவளுக்கு கம்பீரம் சேர்த்தது. நிமிர்ந்த நடையுடன் கம்பீரமாக அவள் ஆபீஸில் நுழை யவும் எதிரே இருந்தவர்கள் வழக்கம் போல் மரியாதை யுடன் வணக்கம் செலுத்தினார்கள். பதில் வணக்கம் செலுத்திக் கொண்டே நடந்தவள் தந்தையின் அறை முன்னே உள்ள கும்பலைச் சுட்டிக் காட்டி செயலாள ரிடம் விளக்கம் கேட்டாள்.

அவர் அவர்களிடம் சென்று விவரம் தெரிந்து வந்து கூறவும், ''அவங்களை என் ரூமுக்கு வரச் சொல்லுங்க'' என்றாள்.

உள்ளே நுழைந்தவர்களிடம், ''உங்க பிரச்சனை என்ன? எதுக்கு வேலை நேரத்திலே மாநாடு போட்டுக் கிட்டு இருக்கீங்க?'' என்று அவள் குரலை உயர்த்தா மலே கேட்ட தோரணையிலேயே அவளது ஆளுமை குணம் வெளிப்பட,

அவர்கள் பவ்யமாக, ''மேடம் சார்கிட்டே சம்பள உயர்வு பத்திப் பேசினோம். சார் பிடி கொடுத்துப் பேசலை'' என்றனர்.

கடைசியா எப்போ சம்பளத்தை ஏத்தினோம் என்று தன் பி.ஏ.விடம் விவரம் கேட்டுத் தெரிந்து கொண்டவள்

தொழிலாளர்களைப் பார்த்து. ''அந்த டீடெய்ல்ஸை என் பி.ஏ. கிட்டே கொடுத்திட்டுப் போங்க. நான் சாங்ஷன் பண்ணுறேன்'' என்றாள்.

அவர்கள் முகம் பிரகாசம் அடைந்தது. பி.ஏ. தயக்கத் துடன், ''மேடம் சார்கிட்டே ஒரு வார்த்தை...'' என்று இழுக்கவும்.

''நிவேதா ஓகே சொல்லிட்டாள்ன்னு சொல்லிடுங்க'' என்று முடித்துவிட்டாள். தொழிலாளர்கள் அவளுக்கு நன்றி தெரிவித்துவிட்டுச் சென்றனர்.

அவர்கள் சென்றதும் தொழிற்சாலையைச் சுற்றி வரக் கிளம்பினாள். அதற்குள் அவள் சம்பள உயர்விற்குச் சம்மதம் தெரிவித்தது காட்டுத் தீ என பரவி இருந்தது. அதனால் அவர்கள் அனைவரும் அவளுக்கு நன்றி தெரிவித்தனர். அப்பொழுது ஒரு தொழிலாளி அவளது அருகில் வந்து நன்றி தெரிவிக்க அது தான் அவனது தப்பாகிப் போனது.

அவனது வாயில் இருந்து வீசிய மது வாடையால் முகம் சுளித்தவளாய், ''ஆபீஸுக்கு வரும் லட்சணமா இது?'' என்று கடுங் கோபத்துடன் கேட்டவள் தனது பி.ஏ.விடம் திரும்பி, ''இவரை ஒன் வீக் சஸ்பென்ட் பண்ணிடுங்க'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

''மேடம்...'' என்று அழைத்துக் கொண்டு அவன் சொல்ல வந்த விளக்கத்தைக் கேட்க அவள் அங்கே நிற்கவில்லை.

மாலையில் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான உத்தரவில் கையெழுத்திட்டவள் தனது பி.ஏ.விடம், ''டாடிகிட்டே சொல்லிட்டீங்களா?'' என்றாள்.

''யெஸ் மேடம்'' என்றவன் சிறிது தயக்கத்திற்குப் பின் ''அந்த வொர்க்கரோட சஸ்பென்ட் ஆர்டரை சார் கேன்சல் பண்ணிட்டார் மேடம்'' என்றான்.

''ஐ.சி. அப்பாகிட்டே நான் பேசிக்கிறேன். யூ மே கோ'' என்று அவனை அனுப்பி வைத்தாள்.

வேலு காரை ஓட்ட தந்தையும் மகளும் ஒரே காரில் வீடு திரும்பினார்கள்.

''ஏன் டாடி அந்த வொர்க்கரோட சஸ்பென்ட் ஆர்டரை கேன்சல் பண்ணுனீங்க? காலையிலே சம்பளத்தை அதிகப்படுத்த மாட்டேன் என்று சொல்லி உங்க இமேஜ் சரிஞ்சுட்டதால அதைத் தூக்கி நிறுத்த இப்படிச் செஞ்சீங்களா?''

ஹா ஹா என்று மகளது கேலியில் சிரித்தவர், ''அவன் நிஜமாவே இப்போ குடிக்கலைடா குட்டிம்மா. நைட் தான் தண்ணி அடிச்சிருந்திருக்கான். கொஞ்சம் ஓவராப் போயிட்டதால அதோட வாடை தான் இன்னமும் போகலை. அதான் சரின்னு உள்ளே விட்டுட்டேன்.''

''போன மாசம் இதே மாதிரி சம்பவம் நடந்தபோது நீங்க சரியாத் தீர்ப்பு சொன்னதா எனக்கு ஞாபகம் இல் லையே டாட்'' என்று அவள் கிண்டலாக இழுக்க,

''அவன் குடிச்சதுக்கா அவனை வேலையை விட்டுத் தூக்கினேன் என்று நினைக்குறே? அவன் என்னை எதிர்க்கத் துணிஞ்சான். புதுசா சேர்ந்தவன் என்கிறதாலே அவனைச் சுலபமா வேலையில இருந்து தூக்கிட்டேன். என்னை எதிர்க்கிற யாரும் என் எதிரில்கூட நிற்கக் கூடாது. அப்படிப்பட்டவன் என் கம்பெனியிலேவா? நோ நெவர்'' என்றார்.

நிவேதா ஒன்றும் சொல்லாது அமைதி காத்தாள். அவர்கள் வீட்டை அடைந்ததும் எதிர்ப்பட்ட ராதாவைப் பார்த்து, "ஹாய் அம்மா! ஐ மிஸ் யூ" என்றாள்.

"சும்மா நடிக்காதே!" என்று ராதா நொடித்துக் கொண்டார்.

"அம்மா நான் வீட்டில் நடிப்பது கிடையாது. இங்க மட்டும் தான் நான் நானா இருப்பேன். இப்பக்கூட ஆபீஸிலே நானும் அப்பாவும் நடிச்சிட்டுத் தான் வந்தோம்" என்று சொன்னவள் அன்று அலுவலகத்தில் நடந்ததைத் தாயிடம் பகிர்ந்தாள்.

"அவர் முடியாதுன்னு சொன்ன சம்பள உயர்வு விஷயத்தில் அவங்க கேட்ட பெர்சன்டேஜில் இருந்து கொஞ்சம் குறைச்சு சாங்ஷன் பண்ணி நான் நல்ல பேர் வாங்கிக்கிட்டேன். நான் ஸஸ்பென்ட் பண்ணதை ரத்து செய்து அவர் நல்ல பேர் வாங்கிக்கிட்டார்."

"எதுக்கு இப்படித் தலையைச் சுத்தி மூக்கைத் தொட நினைக்குறீங்க?"

"இதெல்லாம் பிசினஸ் டெக்னிக்கம்மா. அப்பா முதலிலேயே சம்பள உயர்வு கொடுக்கணும்ன்னு தான் நினைச்சார். ஆனால் அவங்க கேட்டது அதிகபட்சம். அதனால அவர் முடியாதுன்னு சொல்லி மறுத்துட்டார். இடையிலே நான் புகுந்து சமரசம் பண்ணுவது போல் நாங்க ஏற்கனவே முடிவு பண்ணியதைத் தாதா சொன்னேன். இப்போ அவங்களுக்கும் சந்தோஷம். எங்களுக்கும் நஷ்டமில்லை.

முதலாளிங்கிறவர் அணுகக் கூடியவராகவும் இருக்கணும். அதே சமயம் எல்லா நேரமும் தொழிலாளர்களுக்கு அனுகூலமாகவும் இருக்கக் கூடாது. கொஞ்சம்

கெத்தா இருந்தால் தான் அவங்களை எல்லாம் சமாளிக்க முடியும். அடம்பிடிச்சு அழுகுற குழந்தையை அப்பா அதட்டினால் அம்மா அரவணைக்கு சமாதானப்படுத்துறதில்லையா? அது மாதிரி தான் இதுவும். ஒருத்தர் முறுக்கா இருந்தால் இன்னொருத்தர் சீடையா இருக்கோம்" என்று சொல்லிக் கலகலவெனச் சிரித்தாள்.

"ஆபீஸிலே நிர்வாகம் பண்ணிக் கலக்குறதெல்லாம் இருக்கட்டும். வீட்டிலே... உனக்கு வீட்டை நிர்வாகம் பண்ணுற விஷயத்திலே ஏதாச்சும் ஒண்ணாவது தெரியுமா? தெரியாது. நல்லா டிரஸ் பண்ணிட்டு ஆபீஸ் போகத் தான் தெரியும். இன்னைக்குக் காலையிலே கூடப் பாரு... உன் பிரண்டைப் பார்க்கப் போக ஒரு டிரஸ். அடுத்த ஒரு மணி நேரத்திலே அடுத்த டிரஸ். இப்போ வீட்டுக்கு வந்ததும் ஒண்ணு..." என்று சொல்லிக் கொண்டிருந்தவரை இடைமறித்து,

"அ..ம்..மா" என்று அழுத்திக் கூப்பிட்டவள், "ஜீன்ஸெல்லாம் இப்போ போட்டாத்தான் உண்டு. கல்யாணம் ஆகி ஒரு பிள்ளையைப் பெத்து இடுப்பு பெருத்துப் போச்சுன்னா அதெல்லாம் போட முடியுமா?" என்று கேட்டாள்.

"பரவாயில்லையே! உனக்கு அந்த நினைப்பெல்லாம் இருக்கா?" என்று ராதா ஆச்சரியமாகக் கேட்க,

"எந்த நினைப்பு?" என்று புரியாதவளாய் நிவேதா விழித்தாள்.

"உன் கல்யாண நினைப்பைச் சொன்னேன். உங்க அப்பாக்குத் தான் பொண்ணைக் கட்டிக் கொடுக்கணுமேங்கிற நினைப்பு இல்லை. அட்லீஸ்ட் உனக்காச்சும் இருக்கே" என்று அலுத்துக் கொண்டார்.

''எனக்கா அந்த நினைப்பு இல்லைங்கிறே! நம்ம அந்தஸ்துக்குத் தகுந்த மாதிரி என் பொண்ணுக்கேத்த மாப்பிள்ளையைத் தேடிக்கிட்டு இருக்கேன்'' என்று ரவீந்திரன் சொல்ல,

நிவேதாவோ, ''அந்த நினைப்பு இல்லாமல் இல்லைம்மா. நானும் ஏதாச்சும் ஒரு பையனைப் பார்த்து அவனைப் பிடிச்சதுன்னா உங்ககிட்டே வந்து சொல்லி அவனை எனக்குக் கல்யாணம் பண்ணி வைங்கன்னு சொல்லலாம்னு தான் நினைக்கிறேன். ஆனா என்ன பண்ணுறது? இதுவரைக்கும் எந்தப் பையனைப் பார்த்தும் எனக்கு ஒரு ஸ்பார்க் வரலையே'' என்றாள்.

''என்னது ஸ்பார்க்கா? மொழி படத்திலே காட்டுற மாதிரி பல்ப் எரிஞ்சு மணி அடிக்கணுமா?'' என்று ராதா கிண்டலாகக் கேட்க,

''ஒருத்தன் லவ்வர்ஸோட ஃபீலிங்க்ஸைச் சொன்னால் நீங்க அதைக் கிண்டல் பண்ணுறீங்க. ம்ம்ம்.. நான் சொல்ல வந்தது கிட்டத்தட்ட அப்படித் தான். அப்படியே மனசெல்லாம் மத்தாப்பூவா ஒளிரணும். உள்ளுக்குள்ளே ஒரு சந்தோஷப் பூ பூக்கணும். இவன் தான் உனக்குன்னு மனசிலே அழுத்தமாத் தோணனும்'' என்று விளக்கினாள்.

''இந்த ராமாயணத்துல ராமர் சீதையை நோக்கின மாதிரியா குட்டிம்மா?'' என்று ரவீந்திரன் கேட்கவும் ராதாவின் முகம் வாடியது.

''அப்பா, அண்ணனும் நோக்கினான் அவளும் நோக்கினாள்ன்னு சொல்லத் தெரியாமலா நான் சொல்லாமல் இருக்கேன். அதைச் சொன்னால்... நான் என்னவோ கல்யாணத்துக்கு அப்புறம் என் ஹஸ்பண்டை

பிரிஞ்சுடுவேங்கிற மாதிரி இந்த அம்மா ஃபீல் பண்ணி கண்ணீர் வடிப்பாங்கன்னு தெரிஞ்சு தானே பேசாமல் இருக்கேன்.''

''ஓ! இதுல இப்படி ஒரு விஷயம் இருக்கா? நான் யோசிக்கலைடா குட்டிம்மா'' என்று மகளைப் பார்த்துச் சொன்னவர் மனைவியிடம், ''ராதா, அப்படியெல்லாம் ஒண்ணும் ஆகாது. நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காதே'' என்று ஆறுதலாகச் சொன்னார்.

''அம்மா, நான் சொல்லுறதை நல்லாக் கேட்டுக்கோங்க. நான் என் மனசுக்குப் பிடிச்சவனைத் தான் கல்யாணம் பண்ணுவேன். அப்படிக் கல்யாணம் பண்ணிக்கிறவனோட கடைசி வரைக்கும் வாழ்ந்து காட்டுவேன். போதுமா? சும்மா அழுது சீன் போடாதீங்க'' என்று தன் பங்கிற்குத் தாயைச் சமாதானப்படுத்துவது போல் ஆரம்பித்தவள் இறுதியில் சீண்டினாள்.

''என் கவலை உனக்குச் சீன் போடுற மாதிரி இருக்கா?''

''விடுங்கம்மா விடுங்கம்மா. நாளைக்குச் சென்னைக்குப் போறதுக்கு எனக்கு துணி எல்லாம் பேக் பண்ணி வைச்சிடுங்கம்மா. நைட் பாண்டியனிலே கிளம்பணும்.''

''ஏன்டா குட்டிம்மா ஃபிளைட்டிலே புக் பண்ணலையா?''

''இல்லைப்பா. நாங்க மூணு பிரண்ட்ஸும் டிரைனிலே தான் போறோம்.''

''எப்ப வரப் போற நிவி?'' என்று ராதா கேட்டதும்,

''அவங்க கூட சேர்ந்து எனக்கும் சன்டே நைட்டுக்கு டிக்கெட் வாங்கி வைச்சிருக்காங்க'' என்றாள்.

''என்னது சன்டேவா? மூணு நாளா?'' என்று ஒரு வேகத்துடன் ரவீந்திரன் கேட்டதும்,

''நான் வெள்ளிக்கிழமைக்கு ஃபிளைட் டிக்கெட் போட்டு வைச்சிருக்கேன் டாட். கல்யாணம் முடிஞ்சதும் வந்திடுவேன். ஒகேவா?'' என்றாள்.

''டபுள் ஒகேடா குட்டிம்மா'' என்றார்.

2



மறுநாள் சுமித்ரா, நிவேதா, பவித்ரா மூவரும் சென்னையைச் சென்று அடைந்ததும் நிவேதாவிற்காக அவளது தந்தை ஏற்பாடு செய்திருந்த கார் ரயில் நிலையத்தில் தயாராகக் காத்திருந்தது. அவர்கள் அதில் ஏறி சுமித்ராவின் அண்ணன் சுமோத்தின் வீட்டிற்குப் பயணப்பட்டனர். சுமோத் சென்னையில் இருந்து கொண்டு சொந்தமாகத் தொழில் செய்து கொண்டிருக்கிறான்.

ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த சுமோத்தைப் பார்த்து, ''ஹாய்!'' என்று கூவிக் கொண்டே மூவரும் உள்ளே நுழைந்தார்கள்.

''ஐயையோ! வானரங்களா நீங்க எங்கே இங்கே?'' என்று விஷயமறியாதவன் போல் அவன் அலறினான்.

சுமித்ராவும், பவித்ராவும் ஒருமித்த குரலில், ''என்னது வானரங்களா? எங்களைப் பார்த்தா வானரங்கள் மாதிரி தெரியுதா'' என்று எகிறினர்.

நிவேதா மட்டும் அமைதியாக இருக்க... சுமித்ரா அவளைப் பார்த்து, ''ஏய் நிவி! அவன் வானரம்னு சொன்னது உன் காதிலே விழலையா?'' என்று கேட்டாள்.

'ஆமா அவ சும்மாவே ஆடுவாள். இவ வேற அவளுக்கு எடுத்துக் கொடுக்கிறாள்' என நினைத்தவனாய் அவள் என்ன சொல்லப் போகிறாள் என அவளைப் பார்த்திருக்க...

''யோசிச்சுக்கிட்டு இருக்கேன் சுமி. இந்தக் காலத்திலே மாப்பிள்ளை பார்க்கிறதே கஷ்டம். இதுல நம்ம அண்ணன் வானரத்தை மாப்பிள்ளையாப் பிடிச்சிட்டு வரணும்ன்னா... நம்ம சுமோத் அண்ணா பாடு எவ்வளவு திண்டாட்டமாப் போயிடும்? யோசிச்சுப் பாருங்க. அதுவும் ஒண்ணு இல்லை. மூணு வானரத்தை! அதுங்க ஒரு பக்கம் இழுக்க... இவர் ஒரு பக்கம் இழுக்க...'' என்று அவள் சொன்ன விதத்தில் அனைவரும் சிரிக்க,

'அடிப்பாவி? என்னைக் குரங்காட்டிக்காரன் ரேஞ்சுக்கு இல்லை கற்பனைப் பண்ண வைக்குறாள்!' என்ற கடுப்புடன், ''நான் ஏன் உங்களுக்கு எல்லாம் மாப்பிள்ளை பார்க்கணும்? ஒழுங்கா மரியாதையா மூணு பேரும் எவனையாச்சும் லவ் பண்ணி...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

''லவ் பண்ணி இழுத்துட்டு ஓடச் சொல்லுறியா?'' என்று சுமித்ரா கேட்கவும்,

''அடிக்கழுதை, லவ் பண்ணிட்டு வந்து சொல்லுங்க. நான் அண்ணன்காரனா கல்யாணத்தை முடிச்சு வைக்குறேன் என்று சொல்ல வந்தேன். எனக்கு என்னமோ டவுட்டா இருக்கு. உன் பேச்சே சரியில்லையே!'' என்றவன் தங்கையைச் சந்தேகமாகப் பார்த்தான்.

சுமித்ராவை முந்திக் கொண்டு நிவேதா, ''எங்களுக்குக் கூட தான் இப்படி ஒரு அண்ணனான்னு இருக்கு? என் சுமி பேசாமல் நாம அண்ணனை டைவர்ஸ்

பண்ணிடுவோமா?'' என்று கேட்டதும் சுமித்ரா அவளது கையைக் குலுக்கி அந்தக் கருத்தை ஆதரித்தாள்.

''முதல்ல அதைச் செய்யுங்க தாயிங்களா! உங்களுக்குப் புண்ணியமாப் போகட்டும். என்னால உங்களோட காலம் தள்ள முடியலை. உங்க வருங்காலப் புருஷன்களை நினைச்சாத்தான் பாவமா இருக்கு. உங்களைக் கட்டி மேய்க்கப் போற அந்த நல்ல இதயங்களுக்குக் கோவில் கட்டித் தான் கும்பிடணும்.''

''இப்படியே நாலு பேர் காதுபட எங்களைப் பத்திப் பெருமையாப் பேசு. ஒரு பய எங்களைக் கட்டிக்க முன் வரமாட்டானுங்க'' என்று சுமித்ரா அலுத்துக் கொள்ளவும்,

''ஐயையோ! இனிமேல் நான் மூச்சு விடலை தாயே! உங்களை எல்லாம் காலம் முழுசும் பார்த்துக்க முடியுமா? கூடப் பொறந்த தோஷத்துக்கு நான் வேணா சகிச்சுக்கலாம். என்னைக் கட்டிக்கப் போறவளும் எதுக்காக சகிச்சுக்கணும்? அந்த ஒரே காரணத்துக்காக இனிமேல் உங்களை எல்லாம் நல்லவள் வல்லவள்ன்னு சொல்லிடுறேன்.''

''உங்க பாசத்தைப் பார்த்து அப்படியே எங்களுக்கு மெய் சிலிர்க்குது போங்க'' என்று நிவேதா நக்கல் பண்ணினாள்.

''சரோஜாம்மா ஊரிலே இருந்து தங்கச்சிங்க வந்து இருக்காங்க. நீங்க என்ன பண்ணுறீங்க. மூணு நாளைக்கு சமையல்கட்டுப் பக்கமே போகாதீங்க. ஒருத்தருக்கும் சமையல் அப்படின்னா என்னன்னு கூடத் தெரியாது. அது என்ன மொழி வார்த்தைன்னு கேட்பாங்க. நல்லா காயட்டும். அப்பத் தான் இனிமேல் என் வீட்டுக்கு வந்து என்னை வெளியே துரத்துற வேலையைப் பார்க்க

மாட்டாங்க'' என்று சமையல்கார அம்மாவிடம் சுமோத் தெரிவிக்க,

''என்னமோ உன்னை வெளியே நடுத் தெருவிலே நிறுத்துற மாதிரி இல்ல நீ பேசுறே. வழக்கம் போல நிவி உனக்கு ஸ்டார் ஹோட்டலில் ரூம் போட்டு வைச்சிட்டாள். பொம்பளைப் பிள்ளைங்க நாங்க தனியா ஹோட்டலில் போய் தங்க வேண்டாம்ன்னு உன்னோட இந்த இத்துப் போன வீட்டிலே நாங்க இருந்துக்கிட்டு உன்னை ராஜ உபச்சாரணை பண்ணுறோம். ரொம்பத் தான் பிகு பண்ணிக்கிறாய்'' என்று சுமித்ரா நொடித்துக் கொண்டாள்.

நிவேதா நீட்டிய ஹோட்டல் சாவியை வாங்கிக் கொண்டு தான் ஏற்கனவே எடுத்து வைத்திருந்த துணிப் பையுடன் சுமோத் வெளியேறினான்.

சுமித்ரா மற்றும் நிவேதாவின் பெற்றோர்களின் ஏற்பாடு இது. நிவேதா வெளிநாடு வரை சென்று படித்தவள். அதனால் ரவீந்திரன் அவளை ஹோட்டலில் தங்க அனுமதிப்பார். ஆனால் சுமித்ராவோ மதுரை எல்லையைத் தாண்டாதவள். அதனால் அவளது பெற்றோர் சுமித்ராவை ஹோட்டலில் தங்க அனுமதிப்பதில்லை. சென்னையிலே சுமோத் வீடு இருப்பதால் அவளை அங்கேயே தங்கிக் கொள்ளும்படி கூறுவார்கள்.

சுமோத்தின் வீட்டில், வீடு நிறைய வேலை ஆட்கள், காவலுக்கு காவலாளி என்று இருப்பதால் தம் பெண் பாதுகாப்பாய் இருப்பாள் என்பது சுமித்ராவுடைய பெற்றோரின் நம்பிக்கை.

சாதாரணமாக நிவேதா சென்னைக்கு வந்தால் ஸ்டார் ஹோட்டலில் தான் தங்குவாள். ஆனால் சுமித்ராவுடன்

வந்தால் அவளுடனே சுமோத் வீட்டிலேயே தங்கி விடுவாள். அதே சமயம் நிவேதா தங்குவதற்கென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அறையில் சுமோத் போய் தங்கிக் கொள்வான்.

நிவேதா சென்னைக்கு வந்தாள் என்றால் ரவிந்திரனின் ஏற்பாட்டின்படி காவலாளியாக இன்னொருவரும் வந்து நிற்பார். சுமித்ரா வசதியானவள் என்றால் நிவேதா அவளைக் காட்டிலும் சில மடங்கு வசதி அதிகம் படைத்தவள். அதனால் அவள் எப்பொழுது சென்னை வந்தாலும் சென்னையில் உள்ள சுமோத் வீடு தடபுடல் படும்.

காலையில் குளித்துச் சாப்பிட்டு தங்கள் தோழியின் கல்யாணத்திற்குச் சென்றனர். திருமணத்திற்கு வந்திருந்த பிற தோழிகளிடம் அரட்டை அடித்துவிட்டு, மணப்பெண்ணை வாழ்த்திவிட்டு சாப்பிடச் சென்றனர். சாப்பிட்டு முடித்ததும் இரு வேறு அணிகளாகப் பிரிந்தனர். நிவேதா தன் கம்பெனி வேலையாக வெளியே செல்ல வேண்டியிருந்ததால் அவர்களிடம் விடைபெற்றுத் தனியே செல்ல முடிவெடுத்தாள்.

"ஏற்கனவே சாயங்காலமே ஊருக்குப் போயிடுவேன் என்று சொன்னே! இப்போ பார்த்தால் இப்பவே கழண்டுக்கிறே!" என்று சுமித்ரா வருத்தம் தெரிவிக்கவும்,

"முக்கியமான வேலை சுமி. வேலை முடிஞ்சதும் கண்டிப்பா நீ சொன்ன மாதிரி பீச்சுக்கு வந்திட்டுத் தான் நான் ஊருக்குப் போவேன்" என்று உறுதி அளித்துவிட்டு தன்னுடைய காரில் ஏறிக் கிளம்பினாள்.

சுமித்ராவும் பவித்ராவும் சுமோத்தின் காரில் ஏறிச் சென்றனர். தோழிக்கு வாக்களித்தபடி மாலையில்

நிவேதா முதலில் பீச்சிற்கு வந்து சேர்ந்தாள். காரில் இருந்து இறங்கியவளை கடல் காற்று வரவேற்றது.

எலுமிச்சை மஞ்சள் கலரில் பட்டுச் சுடிதார் அணிந்திருந்தாள். தலையை கிளிப் கூட மாட்டாமல் விரிய விட்டிருந்தாள். அது காற்றின் திசைக்கு ஏற்ப அசைந்தாடியது. இடக்கையால் தன் தலை முடியைக் கோதிக் கொண்டே சுமித்ராவின் கைப்பேசிக்கு அழைத்தாள்.

அது எடுக்கப்படவில்லை என்றதும் தொடர்ந்து முயன்று கொண்டே இருந்தாள்.

ஐந்து நிமிடங்களுக்குப் பின் சுமித்ரா தன் கைப்பேசியை இயக்கி நிவேதாவை அழைத்து, "நிவி லேட்டாகிடுச்சு. நீ திட்டுவேன்னு தான் உன் போன் காலை எடுக்கலை. இப்போ நுழைஞ்சிட்டேன். அப்படியே திரும்பிப் பாரு" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தாள்.

அவர்கள் மூவரும் ஒன்றாய் சேர்ந்து மணலில் நடக்க ஆரம்பித்தனர். அங்கே சுமோத் நிற்பதைப் பார்த்து அவன் அருகே சென்றார்கள்.

நிவேதா அவனிடம், "இன்னைக்கு வெள்ளிக்கிழமை. ஆபீஸிலே வேலையைப் பார்க்காமல் பீச்சிலே இந்நேரம் இங்க என்ன பண்ணுறீங்க?" என்று கேட்டாள்.

அவளது குரலில் திரும்பியவன் அவர்கள் மூவரையும் பார்த்து, "அடப் பாவிங்களா? நீங்க எங்க இங்கே? எங்கே போனாலும் என் நிம்மதியைக் குலைக்கறதுக்குன்னே வருவீங்களா?" என்று சுமோத் அலறவும்,

அண்ணனின் வரவேற்பில் கடுப்பான சுமித்ரா, "ஐயோ! இந்த பீச் என்னமோ இவருக்கு மட்டுமே சொந்தங்கிற மாதிரி பந்தா விடுவதைப் பாரேன் நிவி" என்றாள்.

"அது வேற ஒண்ணும் இல்லை சுமி. சார் தனியா ஏகாந்தமா சைட் அடிக்கலாம்ன்னு வந்திருப்பார். நம் மளைப் பக்கத்திலே வைச்சுக்கிட்டு அதெல்லாம் பண்ண முடியாதில்லையா? அதான் இந்தக் கடுப்பு" என்று நிவேதாவும்,

"வெறும் சைட் தானா? இல்லை யாரையாச்சும் லவ் பண்ணுறீங்களா? அவளை இங்கே வரச் சொல்லி இருக்கீங்களா?" என்று பவித்ராவும் கேட்க,

"ஆரம்பிச்சிட்டீங்களா? இனி அடங்க மாட்டீங்களே!" என்று வாய்விட்டுப் புலம்பியவன், "அம்மாடி பரதேவதைகளா! நான் எந்தப் பொண்ணுக்காகவும் வெயிட் பண்ணலை. என் பிரண்ட்ஸுக்காகத் தான் வெயிட் பண்ணுறேன்" என்றான்.

அவர்கள் மூவரும் அவனை நம்பாத பார்வை பார்க்க...

"இங்கேயே இருங்க. அவனுங்க வந்ததும் பார்த்த பிறகே உங்க வழியாப் போங்க. சரியா?" என்றதும்,

"இது பேச்சு!" என்றனர்.

"நான் உங்களுக்கெல்லாம் அண்ணனா? இல்லை நீங்களான்னு புரியலை. பொண்ணுங்க உங்க மேல நம்பிக்கை வைச்சு நான் தனியா அனுப்புறேன். ஆம்பிளைப் பிள்ளை என்னை நம்ப மறுக்குறீங்க. காலம் கலிகாலங்கிறது சரியாத்தான் இருக்கு."

"சரி வெயிட்டிங் டைமிலே சாப்பிட என்ன வாங்கித் தருவீங்க?"

"வாங்கித் தருவதா? நானா? எதுக்கு?" என்று சுமோத் எகத்தாளமாகக் கேட்கவும்,

"ஹலோ பிரதர்! வெயிட்டிங் சார்ஜ் வாங்காமல் வெறும் ஸ்னாக்ஸ் தானே கேட்கிறோம். அதுக்கே இப்படி அலுத்துக்கிறீங்க!" என்று நிவேதா நக்கல் பண்ண,

"இதுக்கு அதுவே பரவாயில்லை. மாங்கா, தேங்கான்னு ஒவ்வொரு தள்ளு வண்டி கடையா இல்ல நிக்கச் சொல்லுவீங்க. உங்களை எனக்குத் தெரியாதா? என் பிரண்ட்ஸ் முன்னாடி என் மானம் போகும். யூ நோ வீ ஆர் டீசென்ட் ஃபெல்லோஸ். அதனால சமத்துப் பிள்ளைங்களா நீங்களே போய் வாங்கிக்கோங்க. போங்க" என்றதும்,

"சுமித்ரா சிரித்துக் கொண்டே, "டேய் அண்ணா! அங்க பாரேன் உன் டீசன்ட் பிரண்ட்ஸை. அவங்க உன் பிரண்ட்ஸ் தானே! நான் போட்டோவிலே பார்த்திருக்கேன்" என்றாள்.

அவள் சுட்டிக் காட்டிய பக்கம் அனைவரும் பார்வையைத் திருப்ப... அங்கே மூன்று இளைஞர்கள் மாங்காய் சாப்பிட்டுக் கொண்டே வந்தார்கள். அத்தோடு மட்டும் இல்லாமல் அந்த மாங்காய் துண்டுக்கு அவர்களிடையே சண்டை வேறு நடந்து கொண்டு இருந்தது.

இவர்கள் பக்கம் பார்க்காமல் அவர்கள் சுவாரஸ்யமாய் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருக்க...

'என் மானத்தை வாங்குறானுங்களே!' என்று சுமோத் தன் நண்பர்களை மனதில் திட்டிக் கொண்டே, "நான் இவனுங்களைப் பற்றிச் சொல்லலை. நான் ராஜீவ் பற்றி தான் சொன்னேன்" என்றான்.

சுமோத்தின் நண்பர்கள் வந்து விட்டதால் அவ்விடத்தில் இருந்து நகரப் போன தனது இரு தோழிகளையும் தடுத்து நிறுத்திய சுமித்ரா, "ஓ! அந்த சார் வேற

வருகிறாரா? அப்போ இருந்து பார்த்திட்டே போறோம்'' என்றாள்.

அந்த மூன்று நண்பர்களும் சுமோத்தைப் பார்த்து விட்டு அவனைப் பார்த்து கை அசைத்தவாறே வந்தார்கள். அவனருகில் இருந்த மூன்று பெண்களைப் பார்த்ததும் குழம்பினார்கள்.

சுமோத் தன் தங்கைகளிடம், ''இவங்க என் பிரண்ட்ஸ். பிளஸ் டூ வரை ஒண்ணா படிச்சோம். அப்புறமா எல்லோரும் பிரிஞ்சுட்டோம். இன்னைக்கு இவங்க சென்னைக்கு வந்ததால பீச்சிலே மீட் பண்ணலாம்ன்னு இங்க வந்தோம்'' என்று கூறி அவர்களின் பேர்களை எல்லாம் சொல்லி அறிமுகப்படுத்தினான்.

தனது நண்பர்கள் புறம் திரும்பியவன், ''என் தங்கச் சிங்கடா'' என்று கூறி அறிமுகப்படுத்தினான்.

அவர்கள் அனைவரும் 'ஹாய்!' அல்லது 'ஹலோ!' என்று சொல்லிக் கொண்டார்கள்.

அவர்கள் மூவரும் சுமோத்திடம், ''ஏண்டா தங்கச் சிங்களைக் கூட்டி வந்திருக்கே?'' என்று கடுப்புடன் கிசுகிசுத்தனர்.

''ஏண்டா வேலியிலே போற ஓணானை, இல்லையில்லை காரிலே போற சைத்தான்களை மடியிலே கட்டிக்கிட்டு வர எனக்கு என்ன கிறுக்கா பிடிச்சிருக்கு? நம்மளை மாதிரியே அவங்களும் பிரண்ட்ஸ் மீட்னு வந்து நிக்குறாங்க. இப்ப ராஜீவ் வந்ததும் கழட்டி விட்டுடலாம்'' என்று கிசுகிசுத்தான்.

நிவேதா சுற்றிலும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க அப்பொழுது அவளது பார்வை ஒரு இளைஞனின் மீது

விழுந்தது. நல்ல உயரமாய் கம்பீரமாய் இருந்தான். மாநிறமாய் இருந்தாலும் பார்ப்பதற்கு வெகு அழகாய் இருந்தான். அடர்த்தியான மீசை அவனுக்கு மேலும் அழகு சேர்த்தது.

அவன் யாரிடமோ செல்போனில் பேசிக் கொண்டே வந்து கொண்டிருந்தான். அவனது முக பாவனைகளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனிடம் ஒரு தனிக் கவர்ச்சி இருப்பதாகவே அவளுக்குப் பட்டது. அவளால் அவளது பார்வையை வேறு புறம் திருப்ப முடியவில்லை. அந்தளவிற்கு அவனது வசீகரம் தன்னைக் கவர்வதை ஒரு ஆச்சரியத்துடன் கவனித்தாள்.

அவன் நேரே இவர்களை நோக்கி வர நிவேதா விழித்துக் கொண்டாள். சட்டென்று ஒரு அலட்சியப் பாவனையை முகத்தில் தக்க வைத்துக் கொண்டாள். ஆனால் வந்தவன் நேரே சுமோத்திடம் வந்து நிற்கவும் இவன் தான் அந்த இன்னொரு பிரண்ட் ராஜீவ் என்று யாரும் சொல்லாமலே அவளுக்குப் புரிந்து போனது. அவளது முகம் மிருதுவானது.

கைப்பேசியை அணைத்தவன், ''ஹாய்!'' என்று பொதுவாகச் சொன்னான்.

''வாடா ராஜீவ்!' என்று வரவேற்ற சுமோத் அவனிடம், ''என் தங்கை பிரண்ட்ஸ். இவ நிவேதா. இவ பவித்ரா'' என்று சொல்லிவிட்டு.

பவித்ராவையும், நிவேதாவையும் பார்த்து, ''இவன் டாக்டர் ராஜீவ். எம்.எஸ். படிச்சிக்கிட்டு இருக்கான். படிச்சு முடிக்க இன்னும் ஒரு மாசம் தான் இருக்கு'' என்று அறிமுகப்படுத்தினான்.

நிவேதா, 'ஓ! சார் டாக்டரா?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

ராஜீவ் பவித்ராவையும், நிவேதாவையும் பார்த்து ஒரு ஹாய் சொல்லிவிட்டு சுமித்ராவின் புறம் திரும்பி, ''என்ன சுமி எப்படி இருக்கே?'' என்று கேட்டான்.

அவள் அதைக் காதில் கூட வாங்காதவள் போல் நிற்க...

''ஹேய் சுமி! உனக்கு இப்போ என்ன கோபம்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்க அப்பொழுதும் அவள் அமைதியாக இருந்தாள்.

நிவேதாவோ எங்கே அவனது சிரிப்பில் தன்னைத் தொலைத்து விடுவோமோ என்று பயந்து போய் நின்றிருந்தாள். அம்மாகிட்டே நான் சொன்ன ஸ்பார்க் இது தானோ? மனசெல்லாம் மத்தாப்பூ பூக்கணும் என்றெல்லாம் டயலாக் அடிச்சேன். இப்போ மத்தாப்பூ பூத்ததா தாமரைப் பூ பூத்ததான்னு சொல்லத் தெரியலை. ஆனால் உள்ளுக்குள் ஏதோ பிசையுதே! அப்போ இது அதுதானா? என்று குழம்பிப் போய் நின்றாள்.

''டேய் சுமோத்! இவளுக்கு என்னடா கோபம்?'' என்று ராஜீவ் தன் நண்பனைப் பார்த்துக் கேட்க, அவன் உதடு பிதுக்கினான்.

''சுமி...'' என்று ராஜீவ் தொடங்கவும்,

''யாரும் என்னிடம் பேச வேண்டாம். ஒரு போன் பண்ணி பர்த் டே விஷ் பண்ணத் தெரியாதவங்கெல்லாம் எதுக்கு என் கூடப் பேசணும்?'' என்று கேட்டதும்,

''ஓ காட்! இது தான் மேட்டரா? மறந்துட்டேன் சுமி. சாரி'' என்றான்.

''ஆமா எங்களையெல்லாம் உங்களுக்கு ஞாபகம் இருக்குமா? போன மாசம் மது பர்த் டேக்கு வாழ்த்துச் சொல்ல மறந்தீங்களா?'' என்று கேட்கவும்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவன் விழித்துக் கொண்டு நிற்க...

''அப்போ கரெக்ட்டா விஷ் பண்ணி இருக்கீங்க. நீங்க ஒண்ணும் பேசத் தேவையில்லை. ஹேய் வாங்க. நாம போகலாம்'' என்று தோழிகளைப் பார்த்துச் சொல்லிக் கொண்டே அவள் தண்ணீரை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

பவித்ரா சுமித்ராவின் வேகத்திற்கு ஈடு கொடுக்க நிவேதாவோ பொறுமையாகவே நடந்தாள். அவளுக்கு ராஜீவ் தன்னிடம் பேசாதது ஏமாற்றத்தைத் தந்தது என்றால் சுமித்ராவிடம் உரிமையுடன் பேசியது எரிச்சலைத் தந்தது.

அவனும் சிரித்துக் கொண்டே அவர்களைத் தொடர்ந்தான். அவர்கள் ஒரு கூட்டமாகவும் இவர்கள் தனி கூட்டமாகவும் இருந்தார்கள். ஆனால் அருகிலேயே இருந்தார்கள். நிவேதாவின் பார்வை அடிக்கடி அவன் பக்கமே பாய்ந்தது.

ஓரப் பார்வை பார்க்கும்போது உயிரில் பாதி இல்லை
மீதிப் பார்வை பார்க்கும் துணிவு பேதை நெஞ்சில் இல்லை
எனது உயிரைக் குடிக்கும் உரிமை உனக்கே உனக்கே

என்று மனதுக்குள் ஹரிணி உட்கார்ந்து பாட நிவேதா தன் வசத்தில் இல்லை. என்னவன் இவன் தான் என்ற தெளிவு அவளுக்குப் பிறந்தது. மீதி வரிகளை அவளது மனம் இட்டுக் கட்டிப் பாட ஆரம்பித்தது.

அவளது செருப்பைப் பார்வையிட்டவன், ''ஹீல்ஸ். அது வும் பாமிண்டட் ஹீல்ஸ். எத்தனை தடவை உன்னை ஹீல்ஸ் போடாதேன்னு சொல்லுறேன். கேட்குறியா?'' என்று மிரட்டிக் கொண்டிருந்தான்.

நிவேதா தனது கால்களைப் பார்வையிட்டுக் கொண் டாள். இனிமேல் ஹீல்ஸ் போடக் கூடாது என்ற தீர் மானத்தை மனதுக்குள் நிறைவேற்றினாள்.

''சரி அப்படியே உன் கார் வரைக்கும் நடந்து வா. கட்டுப் போட்ட பின்னாடி உன்னால மண்ணிலே நடக்க முடியாது'' என்று ராஜீவ் சொல்லவும் பவித்ராவும், நிவே தாவும் சுமித்ராவை அழைத்துக் கொண்டு கார் அருகே சென்றார்கள்.

தண்ணீர் ஊற்றி அவளது காலைக் கழுவியவன் சுமோத் கொண்டு வந்து தந்த முதலுதவி பெட்டியில் இருந்தவற்றைக் கொண்டு அவளது காலைச் சுத்தம் செய்து மருந்திட்டுக் கட்டினான்.

''மறக்காமல் போய் ஒரு டி.டி. போட்டுக்கோ.''

சரி என்னும் விதமாய் அவள் தலையாட்டினாள்.

சுமோத் டிரைவரை பார்த்து, ''பத்திரமாகக் கூட்டிட் டுப் போங்க!'' என்றான்.

சுமித்ராவும், பவித்ராவும் விடைபெற்றுச் சென்றனர்.

அவர்கள் சென்றதும் சுமோத், ''அப்புறம் நிவேதா... உன் கார் எங்கே இருக்கு?'' என்று கேட்டான்.

அவள் சுமோத்தின் கேள்வியைக் கண்டு கொள்ளாது தனது கையை ராஜீவின் புறம் நீட்ட அவனும் அதைப் பற்றிக் குலுக்கவும், ''நைஸ் டு மீட் யூ'' என்று சொன்னவள் திரும்பிப் பார்த்து சைகை செய்ய... அவளருகே ஒரு

விலை உயர்ந்த கார் வந்து நின்றது. அது அவளின் வசதியைப் பறைசாற்றியது. அவள் சுமோத்திடம் சொல் லிக் கொண்டு அதில் ஏறிச் சென்று விட்டாள்.

அவள் ராஜீவின் கைப்பற்றிக் குலுக்கியதையே அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்த சுமோத் அவள் அகன்றதும், ''ஒண்ணுமே புரியலை உலகத்திலே. என் னமோ நடக்குது. மர்மமாய் இருக்குது'' என்று பாடினான்.

''என்னடா சுமோத் பாட்டெல்லாம் பலமா இருக்கு?''

''கைக்குலுக்கல் எல்லாம் பலமா இருக்கிறபோது என் பாட்டு பலமா இருக்கக் கூடாதாடா?'' என்று சுமோத் கேட்க,

''ஹேய்! சும்மா இருடா'' என்று ராஜீவ் வெட்கப்பட் டான்.

''வெட்கப்படுறியாடா நீ? அப்போ சம்திங் சம்திங்...'' என்று சந்தோஷமாகவும், சந்தேகமாகவும் சுமோத் இழுக்க,

''பேசாமல் வாடா. நாம போவோம். அவனுங்க வேற காத்திருக்கானுங்க'' என்று சொல்லி சுமோத்தைக் கூட் டிக் கொண்டு தனது நண்பர்களை நோக்கிச் சென்றான்.

3



வழியில் மருத்துவமனைக்குச் சென்று ஊசி போட்டு விட்டு சுமித்ராவும், பவித்ராவும் கூட வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டனர். ஆனால் நிவேதா இன்னும் வர வில்லை.

''சுமி, அவ வேற எங்கேயாச்சும் போறேன்னு சொன்னாளா? ஒரு மணி நேரம் ஆச்சு. இன்னும் இந்தப் பொண்ணைக் காணலியே! போனில் வேற சார்ஜ் இல்லைன்னு அப்பவே சொல்லிக்கிட்டு இருந்தாள். அதனால ஸ்விட்ச் ஆஃப் ஆகிடுச்சு போல. எங்க தான் போனாள் இந்தப் பொண்ணு'' என்று பவித்ரா பரி தவித்துக் கொண்டிருக்க நிவேதா உள்ளே வந்தாள்.

''ஹேய் நிவி! எங்கே போனே?'' என்று இவர்கள் கேட்டதும் அவள் கையில் இருந்த பையே அவள் கடைக்குச் சென்றுவிட்டு வருகிறாள் என அவர்களுக்கு உணர்த்தியது.

''ஷாப்பிங்கா நிவி? சரி மதுரைக்கு எப்போ கிளம்புறே? நைட் ஃபிளைட்டிலா இல்லை மார்னிங் ஃபிளைட்டிலா?'' என்று சுமித்ரா கேட்கவும்,

''ஆமா ஷாப்பிங் தான் போனேன். செப்பல் வாங்கிட்டு வந்தேன். ஊருக்கு எப்ப போறேன்னு தெரியலை. உங்க கூடவே இன்னும் ரெண்டு நாள் இருந்திட்டு தான் போறேனே! இப்போ என்ன அவசரம்?'' என்றாள்.

''இதப் பாருடா? ரொம்ப நாளா சென்னையில் பவித்ரா முடிக்க வேண்டிய வேலை முடியுற வரைக்கும்... அதாவது சன்டே வரைக்கும் நீயும் எங்க கூடவே இருன்னு தானே சொன்னோம். இப்போ திடீர்ன்னு எப்படிங்க மேடம் மனசை மாத்திக்கிட்டீங்க?'' என்று சுமித்ரா கேட்டுக் கொண்டிருக்கும்போதே,

அவள் வாங்கி வந்த செருப்பைப் பிரித்துப் பார்த்த பவித்ரா, ''யாருக்கு செருப்பு வாங்கிட்டு வந்து இருக்கே நிவி?'' என்று கேட்டாள்.

''எனக்குத் தான் செப்பல்'' என்று பவித்ராவின் கேள்விக்கு மட்டும் பதில் சொன்னவள், ''நான் போய்

காபி குடிச்சிட்டு வரேன். நீங்க காபி குடிச்சாச்சா? ஹாஸ்பிட்டல் போய் ஊசி போட்டீங்களா?'' என்று கேட்டுக் கொண்டே அவர்களது பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல் கீழே இறங்கிச் சென்றாள்.

அவள் அகன்றதும் பவித்ரா சுமித்ராவிடம், ''கவனிச்சியா சுமி?'' என்றாள்.

''அவகிட்டே இருக்குற மாறுதலைத் தானே? அவ பாட்டுக்கு கேள்வி கேட்டுக்கிட்டு பதிலைக் கூட எதிர்பார்க்காமல் போய்கிட்டே இருக்காள். சாதாரணமா இருந்திருந்தாள்ன்னா உள்ளே நுழைஞ்சதும் என்னைப் பார்த்து என் கால் வலி பத்தித் தான் பேச்சையே தொடங்கி இருப்பாள். இப்ப என்னடான்னா அந்தக் கேள்வி கடைசியா வருது. அது கூடப் பரவாயில்லை. பதிலை நின்னு கேட்கிற பொறுமை கூட இல்லை. என்ன விஷயமா இருக்கும்?'' என்று சுமித்ரா யோசிக்கவும்...

''அது கூட இதையும் சேர்த்துக்கோ'' என்று கூறிய பவித்ரா நிவேதா வாங்கி வந்த செருப்பைத் தூக்கிக் காண்பித்தாள்.

''என்னது ப்ளாட்ஸா? நம்ம நிவியா? ஹீல்ஸ் இல்லாமல் ஒரு செருப்பு வாங்கி இருக்காளா? என்னாச்சு மேடம்க்கு?''

''சுமி, ஒண்ணு இல்லை மூணு. இதை அப்படியே ராஜீவ் உனக்குச் சொன்ன ஹீல்ஸ் போடாதேங்கிற அட்வைஸோட லிங்க் பண்ணிப்பாரு'' என்று பவித்ரா சொன்னதும்,

''ஹேய்! அப்படியும் இருக்குமோ? டெஸ்ட் பண்ணிப் பார்த்திடலாம்'' என்றாள்.

காபி குடிக்கச் சென்ற நிவேதா திரும்பி வந்து அறையில் குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தாள். பவித்ராவும், சுமித்ராவும் கண்களாலேயே பேசிக் கொண்டார்கள்.

"அவர் யாரு சுமி?" என்று திடீரென நிவேதா கேட்கவும்,

"எவர்? யாரைப் பத்திக் கேட்குறே?"

"அதான் ராஜீவ்?"

"அதான் அண்ணன் அறிமுகப்படுத்தினானே! நீயும் தானே அங்கே இருந்தே!"

"ம்ம்ம் அவரை உனக்கு எவ்வளவு நாளா தெரியும்?"

"சின்ன வயசில் இருந்தே தெரியும்."

"இவ்வளவு நாளா நான் அவரை உங்க வீட்டிலே பார்த்ததே இல்லையே."

"அவருக்கும் நமக்கும் அஞ்சு வருஷம் வித்தியாசம். அப்படின்னா அவர் ப்ளஸ் டூ படிச்சபோது நாமெல்லாம் சின்ன பொண்ணுங்களா இருந்தோம். அப்புறமா அவர் சென்னைக்கு படிக்கப் போயிட்டார். அதனால எப்ப வாச்சும் தான் வீட்டுக்கு வருவார்."

"ஓ! நீ அவரை எப்படிக் கூப்பிடுவே? ராஜீவ் அப்படின்னா கூப்பிடுவே?"

"இல்லை, ராஜீவ் அண்ணான்னு கூப்பிடுவேன்" என்று சுமித்ரா சொன்னவுடனே நிவேதாவின் முகம் ஒளிர்ந்தது.

"கவனித்தாயா சுமி? புரிஞ்சதா?" என்று பவித்ரா கண் ஜாடை காட்டினாள்.

'பின்னாளில் எங்க அண்ணன் பிள்ளைக்காக மாங்காய் சாப்பிட ஆசைப்பட்டுத் தான் அவ இன்னைக்கு பீச்சிலே மாங்காய் கடிச்சாள் என்கிற கதையும் எனக்குப் புரிஞ்சது' என்று சுமித்ரா தலையாட்டிக் கொண்டாள்.

இவர்களின் கண் ஜாடைகளைக் கவனிக்காதவளாய் நிவேதா கனவு உலகத்தில் சஞ்சரித்தாள். மீண்டும் குறுக்கும் நெடுக்குமாய் நடை பயின்றவள் சடாரென சுமித்ராவின் புறம் திரும்பி, "அந்த மது யாரு?" என்றாள்.

"எந்த மது?" என்று வேண்டுமென்றே அவளைச் சீண்டுவதற்காகத் தெரியாததைப் போல சுமித்ரா கேட்கவும்,

"இல்லை ஒண்ணுமில்லை" என்று சொல்லிய நிவேதா அந்த அறையில் இருந்து வெளியேறினாள்.

தோழிகள் இருவரும் சிரித்துக் கொண்டனர். நிவேதா தன் தந்தைக்கு அழைத்துத் தன் தோழிகளுடன் இரு நாட்களைச் செலவழிக்கப் போவதால் திங்கட்கிழமை காலையில் தான் வீட்டிற்கு வரப் போவதாகத் தெரிவித்தாள்.

ரவீந்திரனும், 'சின்னப் பெண் தானே! தன் தோழிகளைப் பார்த்ததும் பிரிய மனமில்லை போல!' என்று எண்ணிக் கொண்டார்.

மறுநாள் தூங்கி எழுந்து வந்த நிவேதாவிடம் பவித்ரா ஒரு காகிதத்தை நீட்ட அதை வாங்கிப் படித்த நிவேதா குழம்பினாள்.

"பாரு நிவி. நேத்து பீச்சுக்கு வந்த யாரோ என்னை வர்ணிச்சு இப்படிக் கடிதம் எழுதி இருக்காங்க."

''பீச்சுக்கு வந்தவங்க தான் என்று அது எப்படி அவ்வளவு கரெக்ட்டா சொல்ல முடியும்?''

''நான் நேத்து போட்ட டிரஸ் மட்டுமில்லாமல் நாடி நேத்துப் பேசின பேச்சு கூட அதிலே குறிப்பிட்டுச் சொல்லி இருக்காங்கன்னா என்ன அர்த்தம்? எனக்கு உறுதியாத் தெரியும். நேத்து வந்தவங்களில் யாரோ ஒருத்தர் தான் இதை டைப் பண்ணி அனுப்பி இருக்கணும். நேத்து மொத்தம் அஞ்சு பேர் இருந்தாங்க. அதிலே நம்ம அண்ணன நீக்கிட்டுப் பார்த்தால் மீதி உள்ள நாலு பேரிலே யாரோ ஒருத்தர் தான் இதைச் செஞ்சிருக்கணும். யாரா இருக்கும்? இதை எப்படியாவது கண்டுபிடிச்சே தீரணும்'' என்று பவித்ரா சொன்னதும் நிவேதா கலக்கமுற்றாள்.

'இந்தக் கடிதத்தை ராஜீவ் எழுதி இருக்க மாட்டான் தானே? முருகா! அவர் எழுதி இருக்கக் கூடாது. அவர் எனக்குத் தான். எனக்கே எனக்குத் தான்!' என்று அவளது மனம் கூவியது.

''இப்போ என்ன செய்யலாம் பவி?'' என்று நிவேதாவின் கேள்விக்கு.

''அவர்களில் ஒருத்தரிடம் உதவி கேட்டு இதை அனுப்பியது யாருன்னு கண்டு பிடிக்கணும். உங்க ரெண்டு பேரில் யார் இதை எனக்காகச் செய்யப் போறீங்க?'' என்று பவித்ரா எதிர் கேள்வி கேட்டாள்.

''எனக்குத் தான் காலில் அடிபட்டிருக்கே பவித்ரா அதனால நம்ம நிவி ராஜீவ்கிட்டே உதவி கேட்டு இதைக் கண்டுபிடித்துத் தருவாள்'' என்று சுமித்ரா சொன்னதும் நிவேதாவின் முகம் மலர்ந்தது.

தோழிகளிடம் இருந்து தனது முக பாவனையை மறைக்க எண்ணியவளாய் நொடியில் தன் முகத்தைச் சீராக்கியவள், ''நானே போய் விசாரிச்சுச் சொல்லுறேன்'' என்று கூறினாள்.

''சுமி ராஜீவ் போன் நம்பரைத் தா'' என்று தோழியிடம் கேட்டு வாங்கித் தனது கைப்பேசியில் பதிந்து வைத்துக் கொண்டாள்.

நிவேதா அந்த இடம் விட்டு அகன்றதும் தோழிகள் இருவரும் தங்களது கட்டை விரலைத் தூக்கிக் காண்பித்துச் சிரித்துக் கொண்டனர்.

நிவேதா விடாமல் தொடர்ந்து ராஜீவின் கைப் பேசிக்கு முயன்று பார்த்துத் தோல்வியுற்றாள். அவன் மருத்துவமனையில் இருந்ததால் தனது கைப்பேசியை சைலண்ட் மோடில் போட்டிருந்தான். அன்று சனிக்கிழமை என்பதால் ராஜீவிற்கு பாதி நாள் மட்டுமே வேலை.

வீட்டிற்குச் செல்லும் முன் தனது கைப்பேசியை இயக்கியவன் ஒரே எண்ணில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட அழைப்பு வந்திருந்ததைப் பார்த்து, 'யாருடா இந்த விடாது கருப்பு? இத்தனை முறை நம்மைக் கூப்பிட்டு இருப்பது?' என்று ஆச்சரியம் அடைந்தான்.

அவர்களை அழைத்து, 'யார் நீங்கள்? என்ன விஷயமாய் அழைத்தீர்கள்?' என்று கேட்க எண்ணியவனாய் அந்த எண்ணிற்கு அழைத்தான்.

ராஜீவின் கைப்பேசியில் இருந்து தனக்கு அழைப்பு வரவும் நிவேதா ஆர்வத்துடனே தன் கைப்பேசியை எடுத்து இயக்கிக் காதில் வைத்தாள்.

''ஹலோ நான் ராஜீவ் பேசுறேன். யார் நீங்க? எதுக்கு இத்தனை தடவை என்னைக் கூப்பிட்டு இருக்கீங்க?'' என்று கேட்டான்.

தன்னை மறந்தவளாய் அவனது குரலை ரசித்துக் கொண்டிருந்த நிவேதாவை அவனது சில ஹலோக்கள் நனவுலகத்திற்கு இழுத்து வந்தது.

''ராஜீவ், நான் தான் நிவேதா... சுமித்ரா பிரண்டு நிவேதா பேசுறேன்.''

''நீங்க தானா அந்த விடாது கருப்பு? சாரி சாரி விடாது வெள்ளை.''

என்ன சொல்ல வருகிறான் என்று விழித்த நிவேதா, ''என்ன சொல்லுறீங்க? புரியலை'' என்று கேட்டதும்,

''இல்லை கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி யாருடா விடாது நம்மளைக் கூப்பிட்ட விடாத கருப்புன்னு யோசிச்சேன். அது நீங்கன்னு தெரிஞ்சதால விடாது வெள்ளைன்னு மாத்திட்டேன்'' என்றான்.

அவனது விமர்சனத்தில் சன்னமாக வெட்கப்பட்டவள், ''இப்போ நான் உங்களைப் பார்க்கணுமே? நீங்க ஃப்ரீயா?'' என்று கேட்டாள்.

''பார்க்கலாமே. வேலை முடிஞ்சிடுச்சு. சாப்பிடத் தான் போறேன்.''

''அப்போ நீங்களே ஒரு ரெஸ்டாரண்ட் சொல்லுங்க. நான் அங்க வந்துடுறேன். நான் உங்க ஹாஸ்பிட்டல் இருக்கும் ஏரியால தான் இருக்கேன்.''

சரி என்று சொன்னவன் அவளை ஒரு குறிப்பிட்ட உணவகத்திற்கு வரச் சொல்லிவிட்டு தனது பைக்கை எடுத்துக் கொண்டு அந்த உணவகத்தை நோக்கிச் சென்றான். அவன் அங்கு சென்றடையும் முன்பே நிவேதா அங்கு வந்து சேர்ந்திருந்தாள்.

அவர்கள் ஒரு மேஜையைத் தேர்ந்தெடுத்து எதிர் எதிரே அமர்ந்தனர். தங்களுக்கான உணவைக் கொண்டு வரச் சொல்லிவிட்டுக் காத்திருந்தனர்.

அப்பொழுது ஒரு பெண் ராஜீவிடம் வந்து, ''உன்னை நான் லஞ்சுக்கு எத்தனை வருஷமாக் கூப்பிடுறேன். நான் கூப்பிட்டா மட்டும் வரமாட்டே. ஆனால் இன்னைக்கு...'' என்று இழுத்தவள் நிவேதாவை மேலிருந்து கீழாகப் பார்க்க,

ராஜீவோ, ''நான் வரமுடியாதுன்னு நேராகச் சொன்ன பிறகும் நீ கூப்பிட்டால்... அதுக்கு நான் என்ன பண்ண முடியும்?'' என்று தோளைக் குலுக்கிவிட்டு தனது கைப்பேசியை நோண்ட ஆரம்பித்தான்.

அவள் ஏமாற்றத்துடன் அவ்விடம் விட்டு அகலவும் நிவேதா அவனிடம், ''உங்களுக்கு அந்தப் பொண்ணைப் பிடிக்காதா?'' என்று கேட்டாள்.

''அப்படியில்லை. எனக்குப் பொண்ணுங்க கூட வெட்டியா ஊர் சுத்துறது பிடிக்காது. அதைவிட அவளோட நோக்கம் சுத்தமாப் பிடிக்காது'' என்றான்.

'அவர்களுக்கிடையே ஏதோ வேண்டாத விஷயம் நடந்திருக்கும் போல! நாம் அதைக் கிளற வேண்டாம்' என்று எண்ணிக் கொண்டாள்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த நிவேதா சுற்றி வளைக்காமல் ராஜீவிடம் நேரடியாக, ''உங்களுக்கு என் பிரண்டு பவித்ராவைப் பிடிச்சிருக்கா?'' என்றாள்.

அவன் தன் முகத்தை அஷ்டகோணலாக மாற்றிக் கொண்டு, ''ஏன் கேட்குறீங்க?'' என்றதுமே,

''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டாள். அவளது செய்கை அவனுக்கு எதையோ விளக்கியது.

"இல்லை நேத்து உங்க பிரெண்ட்ஸுன்னு சொல்லிக் கிட்டு வந்த மூணு தடித் தாண்டவராயர்களில் யாரோ என் பிரண்டு பவித்ராக்கு லெட்டர் கொடுத்து அனுப்பி இருக்காங்க" என்று அதை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

அதைக் கை நீட்டி வாங்கிக் கொண்டே, "நானும் சுமோத்தும் த.த. இல்லையா? அதான்மா தடித் தாண்டவராயன்?" என்று சந்தேகம் எழுப்பினான்.

"சுமோத் அண்ணாவுக்கு பவியும் ஒரு தங்கை தான். நீங்க இல்லைன்னு தெரிஞ்சு போச்சு."

"அப்போ உங்க பாஷையிலே லவ் பண்ணுறவங்களுக்குப் பேரு தடித் தாண்டவராயனா?"

'இதுக்கு எப்படி ஆமாம்ன்னு சொல்ல முடியும்? நான் இவரை லவ் பண்ணுற விஷயம் சொல்லி இவரும் என்னை லவ் பண்ணனுமே!' என்று நினைத்தவள் ஒரு வேகத்துடனே, "அதை அழிச்சிடுங்க" என்றாள்.

"எதை அழிக்கணும்?"

"நான் சொன்ன வார்த்தையை அழிச்சுடுங்கன்னு சொல்லுறேன். அதை நானே வாபஸ் வாங்கிக்குறேன்" என்று சொன்னவள் அதன் பின்பு பவித்ரா பற்றியும் பேசவில்லை அந்தக் கடிதத்தைப் பற்றியும் பேசவில்லை.

சாப்பாடு வந்து இருவரும் சாப்பிட ஆரம்பித்ததும், "உங்க அம்மாவும், அப்பாவும் இந்த ஊரிலா இருக்காங்க? அவங்க என்ன பண்ணுறாங்க?" என்று கேட்டாள்.

"அம்மா, அப்பா ரெண்டு பேருமே டீச்சர்ஸ். மதுரையிலே ஒரு ஸ்கூலில் வேலை பார்த்தாங்க. இப்போ ரிட்டயர் ஆன பின்னாலே எங்க சொந்த ஊரான சோழவந்தானுக்கே போய் செட்டில் ஆகிட்டாங்க."

"நீங்க அவங்களுக்கு ஒரே பையனா?"

'இப்ப... என்ன என் பயோ - டேட்டா வேண்டுமா?' என்று நினைத்து உள்ளுக்குள் சிரித்துக் கொண்டவன், "நான் எங்க அம்மா அப்பாக்கு ஒரே பையன் தான். ஆனால் எனக்கு ஒரு அக்கா இருக்காள். பேரு காயத்ரி. அவளும் எங்க மாமா மகேஷும் சாப்ட்வேர் இஞ்சினியர்ஸ். இங்க சென்னையில தான் இருக்காங்க" என்றான்.

'நேற்று சுமித்ரா சொன்ன அந்த மது யாருன்னு தெரிஞ்சுக்கலை என்றால் எனக்கு மண்டை வெடிச்சிடுமே! இவரிடம் எப்படிக் கேட்பது? அவள் எனக்கும் இவருக்கும் குறுக்கே நிற்கிறாளான்னு தெரிஞ்சே ஆகணுமே! நேரடியாகக் கேட்டுவிட வேண்டியது தான்' என நினைத்தவளாய்,

"உங்களுக்கு மதுன்னு யாரும் க்ளோஸ் பிரண்ட் இருக்காங்களா?" என்று அந்தக் 'க்ளோஸ்' என்ற சொல்லை அழுத்திக் கேட்டாள்.

'இவள் க்ளோஸை அழுத்துவதைப் பார்த்தால் அந்த வார்த்தையையே க்ளோஸ் பண்ணிடுவாள் போலவே! இவளுக்கு எப்படி மதுவைப் பற்றித் தெரிய வந்தது? ராஜீவ் யோசி!' என்று தன் மூளையைத் தட்டி யோசித்தவனுக்கு நேற்று சுமி சொன்ன 'மது பார்த்டேக்கு மட்டும் சரியா வாழ்த்துச் சொன்னீங்க தானே?' என்ற கேள்வி ஞாபகம் வந்தது.

'ஓ! விஷயம் அப்படிப் போகுதா? மேடம்க்கு பொறாமையா இருக்கா? வர வேண்டிய உணர்வு தான்' என்று சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே அவள் இரு முறை அவனை அழைத்து விட்டாள்.

"என்ன ராஜீவ் இவ்வளவு யோசிக்குறீங்க?"

"மது... அதாவது மதுமிதா எனக்கு ரொம்பவே க்ளோஸ்தான்" என்றான்.

அவளுக்கு மனமும் முகமும் வாடலாயிற்று. அவளது வாட்டத்தைப் பார்த்துத் தனக்குள் புன்னகைத்துக் கொண்டான்.

"அவங்க படிக்குறாங்களா இல்லை வேலை பார்க்குறாங்களா?"

"படிச்சிக்கிட்டு தான் இருக்கிறாள். சிக்ஸ்த் ஸ்டாண்டர்ட். அவ என் அக்கா பொண்ணு." என்றதும் அவள் முகத்தில் சந்தோஷம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"இன்னமும் ஏதாச்சும் கேள்வி இருக்கா?" என்று அவன் கிண்டலாகக் கேட்க,

"உங்க அம்மா அப்பா பேரு சொல்லலையே?"

"அம்மா பேரு யசோதா. அப்பா பேரு சுந்தரம். என்னைப் பத்தின கேள்வி முடிஞ்சிடுச்சு என்றால் உங்க பயோ டேட்டாவைச் சொல்லுங்க" என்றதும்,

"நான் என்னைப் பற்றி விவரம் சொல்லுறேன். ஆனா அதுக்கு முன்னாடி நான் உங்களை விட அஞ்சு வயசு சின்னவ தானே! அதனால இனிமேல் நீங்க என்னை நீ, வா, போன்னு சொல்லுங்க" என்றாள்.

'நீ எப்போ இப்படி சொல்லுவாய்ன்னு தானே நான் காத்திருக்கேன்' என்று நினைத்துக் கொண்டே, "அப்படியே சொல்லிட்டால் போச்சு. உன்னைப் பத்தி சொல்லு" என்றான்.

அவள் தன்னைப் பற்றியும், தனது பெற்றோர் பற்றியும் சொன்னாள். அவள் தனது அந்தஸ்து பற்றி ஒரு

வார்த்தைகூட பெருமையாகச் சொல்லாதது ராஜீவிற்கு அவள் பால் ஏற்பட்ட ஈர்ப்பை இன்னமும் அதிகப்படுத்தியது.

அவளுக்கு அவனிடம் இருந்து பிரிய மனமே இல்லை. அவன் பைக்கில் சென்று மறைந்த பின்பே அந்த இடத்தில் இருந்து கிளம்பினாள்.

4



நிவேதா வீட்டிற்கு வந்ததுமே தோழிகள் அவளைச் சூழ்ந்து கொண்டனர். பதட்டமாய் இருப்பதாக பாவனை செய்தனர்.

"என்னாச்சு நிவி?"

"அந்த லெட்டரை ராஜீவ் எழுதலை" என்று குதூகலத்துடன் சொன்ன நிவேதாவை அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டே,

"அப்படின்னா வேற யார் எழுதினாங்களாம்?" என்றனர்.

"அது யாருக்குத் தெரியும்? ராஜீவ் எழுதலைன்னு தான் விஷயம் தெரிஞ்சிடுச்சே!"

"அப்படின்னா நீ அதைத் தெரிஞ்சுக்கத் தான் போனாயா?" என்ற தோழியின் கேள்வியில் நிவேதாவின் மூளை விழித்துக் கொண்டது.

"இல்லை ராஜீவ் அதைக் கண்டு பிடிச்சுத் தரேன் என்று சொல்லியிருக்கார்" என்று வாய்க்கு வந்த பொய்யைச் சொன்னவள் வேகமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

"அம்மணி ஒரேடியா கவுந்துட்டாங்களோ கமி?"

"பார்த்தால் அப்படித் தான் தெரியுது" என்று சிரித்துக் கொண்டே கமிற்ரா சொன்னதும்,

"நாம தப்பான வேலை ஒண்ணும் செய்யலையே?" என்று ஒருவித பயத்துடன் பவித்ரா கேட்டாள்.

தோழியை ஒரு இளைஞனுடன் இணைக்கும் வேலையைச் செய்கிறோமோ என்ற அவளுக்கு லேசான உறுத்தல் வந்தது.

"கண்டிப்பா கிடையாது பவி. நாம ஒண்ணும் ராஜீவைக் காதலின்னு அவகிட்டே சொல்லலையே. அவளாத் தானே விருப்பப்படுறாள். உனக்கு அவ பிடி வாதம் தெரியாதா? அவ ஒரு முடிவு எடுத்துட்டாள்ன்னா அதை எப்பாடு பட்டாவது நடத்திக் காட்டுவாள். எங்க ராஜீவ் அண்ணாவும் சரி அவர் ஃபாமிலியும் சரி ரொம்ப நல்லவங்க. அண்ணாவோட அம்மாவும், அப்பாவும் ரொம்ப சாது. இவளை நல்லா கவனிச்சுக்குவாங்க. மொத்தத்தில் தே ஆர் மேட் ஃபார் இச் அதர். அதனால கவலைப்படாதே!" என்று சொல்லி பவித்ராவிற்கு நம்பிக்கை ஊட்டினாள்.

மறுநாள் காலை பவித்ரா நிஜக் கவலையுடன் அமர்ந்திருந்தாள்.

"என்னாச்சு இப்படி காலங்கார்த்தாலே சோக டியூன் வாசிக்குறே?" என்று நிவேதா விசாரித்ததும் ஒரு பேப்பரை எடுத்து நீட்டினாள். அதில் ஒரு கவிதை எழுதப் பட்டிருந்தது.

உன்னைக் கண்ட நொடி
அடியோடு வீழ்ந்தேன்.

வீழ்ந்தவன் எழுந்தேன்!
உனது கண்களில்
காதலைக் கண்டதும்
புரிந்து கொண்டேன்!
நான் உன்னை
அடியோடு வீழ்த்தியதை.
எழுந்து வா!
நாம் இருவரும்
காதலெனும் காவியம் படைப்போம்.

"இது இன்னைக்குக் காலையிலே வந்திருக்கு நிவேதா" என்று அழுதுவிடும் குரலில் பவித்ரா சொன்னதும் நிவேதாவிற்கு இது என்னடா இன்னொரு புதுக் குழப்பம் என்றிருந்தது.

"இதுக்கெல்லாமா பயந்து போய் அழுவாங்க. கவலைப்படாதே பவித்ரா."

"நிவி, எங்க வீட்டைப் பத்தி உனக்குத் தான் தெரியுமே! நானெல்லாம் நடுத்தர வர்க்கம். இது மாதிரி எல்லாம் நடந்துச்சுன்னு தெரிஞ்சாலே எங்க அப்பா என்னை வெட்டிப் போடுவார். எனக்கும் காதலுக்கும் காத தூரம். என்னை எங்கப்பா வெளியிலே விடவே மாட்டார். கூப்பிட்டுப் போறது நீங்க என்றதால் தான் சென்னைக்குப் போகவே சம்மதிச்சார். அந்தஸ்து பார்க்காமல் எங்கூட நட்பா இருக்கீங்கன்னு உங்க ரெண்டு பேர் மேலேயும் அவருக்கு பாசமும் உண்டு. மரியாதையும் உண்டு. வந்த இடத்திலே இப்படி ஒண்ணு வந்தா எனக்குச் சங்கடமா இருக்காதா?"

''நான் என்னன்னு விசாரிக்குறேன் பவி'' என்று சொன்னவள் குளித்து முடித்துச் சாப்பிடாமல் கூட ராஜீவைப் பார்க்கக் கிளம்பினாள். நிவேதாவிற்குத் தான் நேற்றே சரியாக விசாரிக்காமல் போனது தான் தப்போ என்ற குற்ற உணர்ச்சி மனதை அரிக்க ஆரம்பித்தது.

ராஜீவ் வேளச்சேரியில் இருக்கும் ஃபீனிக்ஸ் மாலில் இருப்பதைத் தெரிந்து கொண்டு அங்கே சென்றாள். அங்கே உள்ள ஃபுட் கோர்ட்டில் அமர்ந்து ராஜீவும், சுமோத்தும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

நேராக அவர்களிடம் சென்றவள், ''பவித்ரா அழுதுக்கிட்டே இருக்கா தெரியுமா?'' என்று எடுத்த எடுப்பிலேயே ஆரம்பித்தாள்.

''ஏன் உங்களுக்குள்ளே அப்படி என்ன சண்டை?'' என்று சுமோத் புரியாமல் கேட்க,

''நாங்க எப்போ சண்டை போட்டோம்? இப்படி ஒரு கவிதை அவளுக்குக் காலையிலே வந்துச்சு. வாசலில் வாட்ச்மேனிடம் யாரோ கொண்டு வந்து கொடுத்திட்டுப் போயிருக்காங்க'' என்று அந்தக் கவிதையை எடுத்து நீட்ட ராஜீவ் சுமோத்தை முறைத்தான்.

அதைக் கைகளில் வாங்கிய சுமோத் நண்பனின் முறைப்பிலே அரண்டவனாய், ''ஹேய்! இது நான் எழுதின கவிதை ஆச்சே! இது எப்படி உங்க கையிலே கிடைச்சது?'' என்று சொன்னவுடன்,

''அப்பாடா! இதை நீங்க தான் எழுதுனீங்களா? நான் இதை அவளுக்கு உடனே போன் பண்ணிச் சொல்லிட்டு வரேன்'' என்று சொன்னவள் அந்த ஃபுட் கோர்ட்டில் உள்ள பால்கனி பக்கம் நகர்ந்தாள்.

''ஹேய் சுமி! அந்தக் கவிதை எழுதினது நம்ம சுமோத் அண்ணாவாம். இது எப்படி நம்ம கைக்குக் கிடைச்சதுன்னு கேட்கிறார்? பவித்ராவை அழாமல் இருக்கச் சொல்லு'' என்று உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டே வந்தவள், ''அச்சோ நான் நேத்து வந்த லெட்டரை மறந்தே போனேனே! அதை யார் எழுதினதுன்னு கண்டு பிடிக்கணுமே!'' என்று படபடப்புடனும், பதட்டத்துடனும் சொல்லவும்,

சுமித்ரா மெதுவான குரலில், ''நிவி நாங்க தான் உன்னை ஏப்ரல் ஃபூல் பண்ண அதைப் பொய்யாத் தயாரிச்சோம்'' என்றாள்.

''என்னது ஃபூல் பண்ணுனீங்களா? உன்னை...'' என்று பல்லைக் கடித்தவள்,

''பவித்ராவிற்குப் பிரச்சனை இல்லைங்கிறதால நான் இப்போ சந்தோஷமா இருக்கேன். அதனால பிழைச்சுப் போ. ஆனால் எதுக்கு இப்படி ஒரு விஷயம் செஞ்சே சுமி?'' என்றதும்,

''ராஜீவ்'' என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு சுமி அழைப்பைத் துண்டித்தாள்.

'ஆகா நாம சொல்லலைன்னாலும் கண்டு பிடிச்சுட்டாளே கள்ளி!' என்று தோழியை மனதிற்குள் கொஞ்சிக் கொண்டே நடந்தாள்.

இங்கு சுமோத்தும் ராஜீவும் பேசிக் கொண்டிருந்தார்கள். ''எப்படிடா சுமோத் காலையில இருந்து சொதப்பல் மேல சொதப்பலா செய்யுறே?''

''விடுறா மச்சான். எப்படியோ சமாளிச்சுட்டேன் இல்ல. அதை மட்டும் பாரு. டேய் ராஜீவ்! நீ எப்படா அவளிடம் பிரபோஸ் பண்ணப் போறே?''

"எந்த மடையனாவது காட்டிலே வைச்சுப் பிரபோஸ் பண்ணுவானாடா?"

"ஏன்டா உனக்கு இந்த மாலைப் பார்த்தால் காடு மாதிரியா இருக்கு?"

"ஓ! இது மால்-ஆ? இப்போ கரடி எல்லாம் மாலுக்குள்ளே வர ஆரம்பிச்சிடுச்சா?"

"அப்படின்னா என்னைக் கரடின்னு சுத்தி வளைச்சுச் சொல்லுறியா?"

"இல்லை" என்று ராஜீவ் மறுத்ததும்,

"அது தானே பார்த்தேன்" என்று சுமோத் பெருமைப் பட,

"சுத்தி வளைச்செல்லாம் சொல்லலை. நான் நேரடியாவே தான் உன்னைக் கரடின்னு சொல்லுறேன். வந்த வேலை முடிஞ்சிடுச்சு தானே! மரியாதையா இடத்தைக் காலி பண்ணு."

"எல்லாம் என் நேரம்டா" என்று சொல்லி எழுவதற்கும் நிவேதா அங்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

சுமோத் இருவரையும் பொதுவாகப் பார்த்து, "வரேன்" என்று சொல்லி விடைபெற்றான்.

"டேய்! கார் சாவி கொடுத்திட்டுப் போடா" என்று ராஜீவ் சொன்னதும் சுமோத் அதை தூக்கிப் போட ராஜீவ் அதை லாவகமாகப் பிடித்தான்.

சுமோத் அகன்றதும் ராஜீவைப் பார்வையிட்டவள் அவனும் தானும் ஒரே நிறத்தில் உடை அணிந்து இருப்பதைப் பார்த்து சந்தோஷமடைந்தாள். வரும் போது பதட்டத்தில் இருந்ததால் நிவேதா அதைச் சரியாகக் கவனிக்கவில்லை.

அவன் நீல ஜீன்ஸும், வெள்ளை நிற அரைக் கைச் சட்டையும் அணிந்திருந்தான். நிவேதா அதே நிற ஜீன்ஸும், வெள்ளை டாப்ஸும் அணிந்திருந்தாள்.

டோமினோஸ் பீட்சாவை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் அவள் வந்து அமர்ந்ததும் அவளுக்கும் வேண்டுமா என்று கேட்பதற்கு வாயெடுக்கும் முன்,

"ராஜீவ் நீங்க போய் உங்களுக்கு வேற வாங்கிக்கோங்க. காலையில சாப்பிடலை. செம பசி" என்று சொன்னவள் அவனுடையதாகத் தன் பக்கம் இழுத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

உனக்கு புதுசா வேற வாங்கித் தரேன் என்று சொல்ல நினைக்கும் முன் அவனுடையதை அவள் சாப்பிட ஆரம்பித்ததும் வேற எதுவும் வேண்டுமா என்று மட்டும் கேட்டு அதை வாங்குவதற்குச் சென்றான்.

இவர்களை விட்டு சுமோத் அகன்ற இரண்டாவது நிமிடத்திலேயே தன் அண்ணனை சுமித்ரா அழைத்தாள்.

"டேய் அண்ணா! பக்கத்திலே நிவி இருக்காளா?"

"அச்சச்சோ இப்பத் தானே அங்கே இருந்து வந்தேன். ஏன் ஏதாச்சும் சொல்லணுமா?"

"அதை அவ செல்லுக்குக் கூப்பிட்டுச் சொல்ல மாட்டேனா? உன் கவிதை பத்தி விசாரிக்கலாம்ன்னு தான் கூப்பிட்டேன். என்ன விஷயம்? எதுக்கு நிவியிடம் பொய் சொன்னே?"

"ஹேய் சுமி! எப்படி அது பொய்ன்னு கரெக்ட்டாக் கண்டுபிடிச்சே?"

"நீயெல்லாம் அம்மான்னு எழுதச் சொன்னால் ஆமான்னு எழுதுற கேசு. இதுல கவிதை வேறயா..." என்று அவள் கேலி செய்தாள்.

"அதை நம்ம ராஜீவ் எழுதி நிவிக்குன்னு கொடுக்கச் சொன்னான். நான் தான் காலையிலே வந்து கொடுத்துட்டுப் போனேன். ஆனால் நம்ம வாட்ச்மேன் நான் நிவின்னு சொன்னதை பவின்னு மாத்திட்டான் பாவி."

"இன்டிரஸ்டிங். டாக்டர் சார் எப்போல இருந்து தொழிலை மாத்தினார்?"

"பீச்சிலே நம்ம நிவேதாவைப் பார்த்ததில் இருந்து தான்."

"இங்கேயும் அதே கதை தான் நடக்குது. நிவி ஊருக்குக் கூடப் போகாமல் ராஜீவ் புராணம் பாடிக்கிட்டு இருக்காள்."

"நல்ல ஜோடி இல்ல சுமி?"

"கண்டிப்பா. அதனால தானே நானும் அவ லவ்வுக்குப் பச்சைக் கொடி காட்டிக்கிட்டு இருக்கேன். சரி வைச்சுடுறேன்" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தாள்.

ராஜீவும், நிவேதாவும் சாப்பிட்டு முடித்து எழுந்து நடக்க ஆரம்பிக்கும் போது எதிரே வந்தவர்கள், "ஹேய்! ஒரே கலர் டிரஸ் போட்டு அசத்தலா இருக்காங்க இல்ல! நல்ல ஜோடி" என்று இவர்களைப் பார்த்து விமர்சிக்கவும் ராஜீவ் குனிந்து தங்கள் இருவரது உடையையும் ஆராய்ந்தான். பின் மெதுவாகப் புன்னகைத்துக் கொண்டான்.

"அட ஆண்டவா! இப்போது தான் இதையே கவனிக்கிறாரா? நிவி, இவரை நம்பினால் உனக்கு நேரா அறுபதாம் கல்யாணம் தான் நடக்கும். நீ தான் அதிரடியா களத்திலே இறங்கணும்' என்று அவளது மனசாட்சி குரல் கொடுத்தது.

'இவருக்கு நம்மைப் பிடிச்சிருக்கு. நேற்று அந்தப் பொண்ணு கூடச் சாப்பிடக் கூட மறுத்தவர் ரெண்டு நாளா நம்ம கூடச் சேர்ந்து சுத்துவதிலேயே அது தெளிவாத் தெரியுது. இப்பக்கூட எங்களை நல்ல ஜோடின்னு சொன்னதுக்கு சிரிக்கத் தானே செஞ்சார். ஒருவேளை என்னோட வசதியைப் பார்த்துத் தயங்குறாரோ என்னவோ!' என நினைத்துக் கொண்டாள்.

அவர்கள் அங்கிருந்து வெளியேறி கீழ் தளம் வந்து நடக்க ஆரம்பித்தபோது நிவேதா தன் கைப்பேசியில் வந்த குறுஞ்செய்தியைக் குனிந்து பார்த்துக் கொண்டே ஓரமாக வந்தாள். ராஜீவிற்கு கைப்பேசியில் அழைப்பு வரவே அவன் அதில் பேசிக் கொண்டே நிவேதாவிற்குப் பின்னால் நடக்க ஆரம்பித்தான்.

அப்பொழுது எதிரே வந்த இரு இளைஞர்கள் நிவேதாவையே பார்வையிட்ட வண்ணம் வந்தனர். அவளைத் தெரியாமல் இடிப்பது போல் இடிக்கத் திட்டமிடுவது அவர்கள் உள்ளடங்கி நடப்பதிலேயே புரிந்து போக ராஜீவ் நொடியில் அவளை உள்புறம் இழுத்துத் தள்ளியவன் நிவேதாவிற்கும் அந்த இளைஞர்களுக்கும் நடுவில் வந்தான். அவர்கள் ராஜீவின் தோளில் இடித்து விட்டு அவனின் தீப் பார்வைக்குப் பயந்து போய் அந்த இடம் விட்டு ஓடினர்.

தன் பார்வையின் உஷ்ணத்தைக் கொஞ்சமும் குறைக்காமல் அவன் நிவேதாவைப் பார்க்க, "சாரி ராஜீவ் நான் கவனிக்கலை" என்று மெதுவான குரலில் இழுத்தாள்.

"கவனத்தைப் பாதையிலே வை. அதுவும் பொது இடத்தில் ரெட்டிப்பு கவனம் வேண்டும்" என்று கோபத்துடன் சொன்னதும்,

"இனிமேல் நான் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கேன்" என்று சொல்லி அவனைச் சமாதானப்படுத்தினாள்.

அவளுக்கு அவனுடைய உரிமை கலந்த கோபம் பிடிக்கவே செய்தது. அது அவளுக்குப் புதுத் தெம்பைத் தந்து தனது காதலை இன்று எப்படியும் சொல்லி விடுவது என்று முடிவெடுக்க வைத்தது.

அவர்கள் நடந்து வந்து கொண்டிருக்கும்போது ராஜீவுடன் படித்த ஒரு பெண் எதிர்ப்பட்டாள்.

அவள் ராஜீவைப் பார்த்து, "ஹேய் ராஜீவ்! வாட் அ பிளஸன்ட் சர்ப்ரைஸ்!" என்று சொன்னதும்,

ராஜீவ் அவளிடம் ஒரு ஹாய் சொல்லிவிட்டு நிவேதாவைக் கைகாட்டி, "என் பிரண்டு நிவேதா" என்று சொன்னவன் அந்தப் பெண்ணைக் கைகாட்டி நிவேதாவிடம், "என் காலேஜ்மேட். என் கூட எம்.பி.பி.எஸ். படிச்ச பிரண்டு. பேரு உஷா" என்றான்.

அறிமுகம் முடிந்தவுடன் ராஜீவும், உஷாவும் பேச ஆரம்பித்தார்கள். முதலில் தங்களின் குடும்ப நலனைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தவர்களின் பேச்சு நேரம் செல்லச் செல்ல மருத்துவம் பக்கம் திரும்பியது. கேட்டுக் கொண்டிருந்த நிவேதாவிற்கு ஒன்றும் புரியாததால் அவர்களின் உரையாடல் ரொம்பவே சலிப்பு தட்டியது. எப்போதுடா பேசி முடிப்பார்கள் என்றானது.

ஐந்து நிமிடங்கள் கால் மாற்றிக் கால் நின்று பார்த்தவளின் பொறுமை பறந்தது. தனது இடது கையை ராஜீவின் வலது கைக்குள் விட்டுக் கோர்த்துக் கொண்டவள், "ராஜ்!" என்று அழைத்தாள்.

ராஜீவ் அவளது செயலிலும், அழைப்பிலும் அதிசயித்துப் போனான். 'அடிப்பாவி! என்ன தைரியம்!' என்று

மனதிற்குள் சொல்லிக் கொண்டவன் நிவேதாவிடம் இருந்து பார்வையைத் திருப்பி உஷாவைப் பார்க்க...

அவளோ, "ஹேய்! ராஜ்ன்னு ஷார்ட்டா கூப்பிடுறாங்க! நான் பார்த்து நீ எந்தப் பொண்ணு கையையும் இப்படிப் பிடிக்க விட்டதில்லையே! ஒரே கலர் டிரஸ்... ஏதாச்சும் உங்களுக்குள்ளே லவ்வா?" என்று ஆர்வமாகக் கேட்க,

'போச்சுடா! இப்போ உஷாவுக்கு நான் என்ன பதிலைச் சொல்வது?' என்பது போல் ராஜீவ் விழித்துக் கொண்டிருந்தான். நிவேதாவோ சற்றும் தயங்காமல்,

"யூ ஆர் டூ ஸ்மார்ட். கரெக்ட்டா கெஸ் பண்ணிட்டீங்களே!" என்றாள்.

'இவள் என்னைக் காலி பண்ணாமல் போக மாட்டாள் போலவே!' என்று ராஜீவ் எண்ணிக் கொண்டிருக்க...

உஷா ராஜீவ் புறம் கை நீட்டிக் கொண்டே, "கங்கிராட்ஸ்" என்றாள்.

நிவேதா அவனது வலது கையை விடுவித்தால் தானே அவன் உஷாவின் கையைப் பற்றிக் குலுக்க முடியும். நிவேதா அவனது கையை விடுவிக்காமல் தனது வலது கையை நீட்டி உஷாவின் கைப்பற்றிக் குலுக்கி, "தாங்க் யூ!" என்று சொல்லி அந்த வாழ்த்தை ஏற்றுக் கொண்டாள். தனது வலது கையையும் அவனது கைகளுக்குள் கோர்த்துக் கொண்டாள்.

உஷா ஒரு புன்னகையுடனே ராஜீவைப் பார்த்து, "என்ன ராஜீவ் இனிமேல் கையிலே க்ளவுஸோடு தான் பேஷண்ட்டைப் பார்ப்பியா?" என்று கேட்டுக் கொண்டே, "சரி நான் நந்தியா இருக்க விரும்பலை.

என்ஜாய் பண்ணுங்க. பை'' என்று சொல்லிவிட்டு அகன்றாள்.

அவள் அந்தப்புறம் சென்றதும் ஊப் என்று சொல்லி வாய் வழியே மூச்சை வெளியேற்றியவள் நிவேதா!

''ஹலோ மேடம். அப்படி நான் செய்யணும். நீ பாட்டுக்கு என்னன்னவோ அள்ளி விடுறே?'' என்று ராஜீவ் கேட்டதும்,

''உண்மையத் தானே சொன்னேன்'' என்றாள்.

ராஜீவ் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல், ''அவ தான் போயிட்டாளே. இப்பவாச்சும் கையை விடு!'' என்றான்.

அவள் கையை விலக்காமல் அவனை இழுத்துக் கொண்டு நடக்கவும், ''நிவி!'' என்று ராஜீவ் அழைத்தான்.

நடந்து கொண்டிருந்தவள் சட்டென்று நின்று ராஜீவின் கண்களை நேருக்கு நேர் சந்தித்தாள். அவள் மீதான அவனின் காதலை அவன் கண்களில் கண்டவள், ''அதான் நிவின்னு சொல்லிட்டீங்களே. அப்புறம் ஏன் நான் கையை விலக்கிக்கணும்?'' எனறு அலட்டிக்காமல் கேட்டாள்.

அவளைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டே, ''நிவி இது பப்ளிக் ப்ளேஸ்'' என்றான்.

''ஜஸ்ட். கையைத் தானே ராஜ் பிடிச்சேன். நான் என்னமோ கிஸ் அடிச்ச மாதிரி ஃபீல் பண்ணுறீங்க.''

''அம்மா தாயே! நீ செஞ்சாலும் செய்வே. பட் ப்ளீஸ். சொன்னால் கேளு'' என்றதும் தனது இரு கைகளால் அவனது முழங்கையைப் பற்றி இருந்தவள் தனது ஒரு கையை விலக்கி மற்றொரு கையை இறக்கி அவனது உள்ளங்கையைப் பற்றினாள்.

'இது உங்களுக்கு பரவாயில்லையா?' என்று கேட்க நினைப்பதற்குள் ராஜீவ் அவளது கையை அழுத்திக் கொடுத்தான். அந்த அழுத்தம் அவளது செயலுக்கான அங்கீகரிப்பாய் இருந்தது.

''ராஜ், எங்கேயாச்சும் போகலாமா?''

''எங்கே போகணும்?''

''சும்மா ஊரைச் சுத்துவோம். நான் இன்னைக்கு நைட் பாண்டியன் எக்ஸ்பிரஸில் கிளம்பணும். அதுவரைக்கும் தான் நமக்கு டைம். அப்புறமா நான் என் வேலையில் பிசியாகிடுவேன். நீங்களும் உங்க ஹாஸ்பிட்டல் வேலையில பிசியாகிடுவீங்க. அதனால இந்த நாள் நமக்கே நமக்குத்தான்.''

''சரி போகலாம். நீ எதிலே வந்தே? உன் காரை என்ன செய்வது?''

''அது ஒண்ணும் பிரச்சனை இல்லை. நான் போன் செஞ்சு திருப்பி அனுப்பிடுறேன்'' என்று சொன்னவள், அவள் வந்த கார் டிரைவரைக் கைப்பேசியில் கூப்பிட்டுத் திரும்பிப் போகும்படிச் சொன்னாள்.

அவர்கள் கார் பார்க்கிங் இடத்திற்கு வந்து கருப்பு நிற ஹூண்டாய் வெர்னாவில் ஏறுவதைப் பார்த்த அந்த டிரைவர் கர்ம சிரத்தையாய் ரவீந்திரனுக்கு அழைத்து விஷயம் தெரிவித்தான்.

''சார் ஒரு விஷயம். நான் நேத்தே சொல்லியிருக்கணும். அப்போ அது பெருசாத் தெரியலை. ஆனா இன்னைக்கு...'' என்று தயங்கி இழுத்தான்.

''என்னப்பா சொல்லணும்? சும்மாத் தைரியமாச் சொல்லு'' என்று ரவீந்திரன் ஊக்கவும்,

"மேடம் நம்ம காரை வேண்டாம்ன்னு சொல்லிட்டு இன்னொருத்தருடன் கிளம்பிப் போறாங்க சார்."

"ஆள் எப்படி இருக்கான்?"

"நல்லா அழகாத் தான் இருக்கார். நான் வெள்ளிக் கிழமை மேடத்தைப் பீச்சிலே ஏத்தின போதும் மேடம் அவர் கூடத்தான் பேசிக்கிட்டு இருந்தாங்க. நேத்து மதியமும் அவரைப் பார்க்கப் போனாங்க. இன்னைக்கும் அவர் கூடவே கிளம்பிப் போயிட்டு என்னைத் திரும்பிப் போகச் சொல்லுறாங்க."

"சரி நீ வைச்சிடு. நான் பார்த்துக்கிறேன்" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்த ரவீந்திரன் யோசனையில் ஆழ்ந்தார்.

ராஜீவும், நிவேதாவும் முட்டுக்காடு சென்றார்கள். மாயா ஜாலுக்குச் சென்று படம் பார்த்தார்கள்.

நிவேதா ராஜீவிடம் அவனது படிப்பு மற்றும் வேலை சம்பந்தமான கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தாள்.

"உங்க கோர்ஸ் எப்போ முடியும்?"

"இந்த மாசத்தோட முடிஞ்சிடும். எக்ஸாம் மட்டும் தான் பாக்கி இருக்கு."

"அதுக்கு ஸ்டடி ஹாலிடேஸ் விடுவாங்களா?"

"ஒரு பத்து நாள் போல விடுவாங்க."

"உங்களுக்கு எக்ஸாம் முடிஞ்சவுடன் எங்கே போஸ்டிங் போடுவாங்க?"

"ஏற்கனவே கவுன்சிலிங் முடிஞ்சிடுச்சும்மா. எனக்கு இங்க சென்னையில தான் போஸ்டிங் போட்டு இருக்காங்க."

"அப்படின்னா நாம சென்னைவாசி ஆகப் போறோமா?"

"ஆமா சென்னையிலே செட்டில் ஆக வேண்டியது தான். நிவி, உங்க அப்பா அம்மாவோட போட்டோ காட்டேன்" என்று சொன்னதும்,

"ராஜ் எனக்கு இந்த மொபைல் போனில் போட்டோ வைச்சுக்கிற பழக்கம் சுத்தமா கிடையாது. அதனால என்னிடம் இப்போ எந்த போட்டோவும் இல்லை. நாம அடுத்த முறை மீட் பண்ணும்போது காட்டுறேன்" என்று சொல்லிவிட்டாள்.

அன்றிரவு சுமித்ராவும், பவித்ராவும் நிவேதாவின் பெட்டியையும் எடுத்துக் கொண்டு நேராக எக்மோர் ரயில் நிலையம் வந்துவிட ராஜீவ் அவளை நேராக ரயில் நிலையத்திற்கே கூட்டிச் சென்றான். அவனிடமிருந்து விடைபெற்று தோழிகளுடன் போய் சேர்ந்து கொண்டாள்.

5

நிவேதா மதுரை சென்று இறங்கிய போது ரவீந்திரன் விமானத்தில் சென்னை சென்று விட்டார்.

ரவீந்திரன் தொழில் சம்பந்தமாகத் தான் சென்னை சென்றார். ஆனால் அவர் தன்னுடைய வேலையை முடித்துக் கொண்டு நிவேதாவுடன் சுற்றிய இளைஞன் பற்றியத் தகவலைச் சேகரிக்க எண்ணினார். ஆனால் அந்த டிரைவர் ஊரில் இல்லாததால் வந்த வேலையை மட்டும் முடித்துக் கொண்டு ஊர் திரும்ப முடிவு செய்தார்.

ரவீந்திரன் மதுரை செல்ல விமானத்தைப் பிடிக்கக் கிளம்பினார். காரில் பின் சீட்டில் ஏறி அமர்ந்து

கொண்டார். அவருக்கு உதவிய சென்னையைச் சேர்ந்த உதவியாளர் டிரைவர் சீட்டுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார். ரவீந்திரன் தன் வாட்சைத் திருப்பி மணி பார்த்தார்.

''டிரைவர் நேரமாகுதே. ஃபிளைட்டைப் பிடிச்சிட லாமா? கரெக்ட் டைமுக்குப் போயிடலாமா?'' என்று ரவீந்திரன் சந்தேகமாக இழுக்க,

டிரைவரை முந்திக் கொண்டு அவரது உதவியாளர், ''சார், ஷார்ட் கட்டிலே போயிடலாம்'' என்று சொல்லி டிரைவரிடம் வழி சொல்ல ஆரம்பித்தார். பின் அவரே,

''இந்த மெட்ரோ ரயிலுக்காக அங்கங்கே தோண்டிப் போட்டிருப்பதால் நிறைய ரோடு ஒன் வே ஆகிடுச்சு. போக்குவரத்தும் அடிக்கடி ஸ்தம்பித்துப் போகுது. ஆனால் சென்னை மாதிரி பெரிய சிட்டிக்கு மெட்ரோ ரயிலும் அவசியம் தேவை தான். அதனால கொஞ்ச நாளுக்கு இந்த அசௌகரியங்களை நாம பொறுத்துத் தான் போகணும்'' என்று சொன்னார்.

ரவீந்திரன் எந்த பதிலும் சொல்லவில்லை. முதலாளி களுக்கு இது ஒரு வசதி. எல்லாக் கேள்விகளுக்கும் பதிலோ, கருத்தோ சொல்லத் தேவையில்லை.

''அடடா! இதை ஒன் வே ஆக்கிட்டாங்களா? நான் இந்த ரோடை நம்பித் தானே இந்த வழியா வரச் சொன்னேன். இப்போ சுத்திப் போனால் லேட் ஆகிடுமே. என்ன சார் செய்யலாம்?'' என்று உதவியாளர் விழிக்க...

ரவீந்திரன் டிரைவரிடம், ''உள்ளே விடுப்பா. மதிய நேரம் என்பதால் ரோடிலே ஆளே இல்லை. மெதுவா மட்டும் ஓட்டு. வருவதைப் பார்த்துக்கலாம்'' என்றார்.

டிரைவரும் அவரின் கூற்றின்படி அது ஒரு வழிச் சாலை என்று தெரிந்தும் அந்தச் சாலையில் திரும்பி மெதுவாக ஓட்டினான். அவர்கள் அந்தச் சாலையைக் கடக்கும் தருவாயில் எதிரே டி.வி.எஸ். 50-ஐ ஓட்டி வந்த ஆள் நிலை தடுமாறி விழுந்தான். எதிரே வண்டி வரும் என்று எதிர்பார்க்காததால் அந்த ஆள் காரில் மோதிக் கீழே விழும்போது அவனருகில் வந்து கொண்டிருந்த ராஜீவின் மீது மோதி அவனையும் கீழே விழச் செய்தான்.

திருப்பம் என்பதால் வண்டியை மெதுவாக ஓட்டி வந்ததால் ராஜீவுக்கு லேசான சிராய்ப்போடு போனது.

கீழே விழுந்ததில் அந்த ஆளுக்குத் தான் அடிபட்டு ரத்தம் கசிந்தது. ராஜீவ் ஓட்டி வந்த வண்டியின் முன் பக்க கண்ணாடி நொறுங்கிச் சிதறியது. சாலையில் இருந்து எழுந்த ராஜீவ் வண்டியைத் தூக்கி நிறுத்தி ஸ்டாண்ட் போட்டான்.

முழங்கையை ஊதி விட்டுக் கொண்டே கார் டிரைவரைப் பார்த்து, ''கீழே இறங்கி வாய்யா'' என்று கத்தினான்.

வண்டி மோதியதுமே டிரைவர் இறங்குவதற்குத் தான் தயாரானான். தனது வண்டியின் சேதத்தைக் கணக்கிட வேண்டுமல்லவா?

''எதுக்குய்யா ராங் சைடிலே வண்டியை ஓட்டிட்டு வந்தே? அங்கே போர்டு மாட்டி இருக்கு தானே? உனக்கு டிராபிக் சிம்பள் தெரியாதா?'' என்று கோபத்துடன் ராஜீவ் கத்தவும்,

''சார் தான் போகச் சொன்னார்'' என்று ரவீந்திரனைப் பார்த்து அந்த டிரைவர் கை காட்டினான்.

நிலைமையைச் சமாளிக்க காரில் இருந்து இறங்கிய ரவீந்திரன், ''தெரியாமல் நடந்திடுச்சு. பெருசு பண்ணாமல்

போங்க'' என்று ராஜீவைப் பார்த்துச் சொன்னவர் த
உதவியாளரைப் பார்த்து அந்த அடிபட்ட ஆளை
கவனிக்கும்படி கண் ஜாடை காட்டினார்.

''என்னது தெரியாமல் நடந்திடுச்சா? தெரிஞ்சு தானே
சார் ராங் ரூட்டிலே வந்திருக்கீங்க. ஏதோ எங்க நல்ல
நேரம். ஸ்லோவா வந்ததால அடியோட போக்க. இ
லைன்னா உயிரே இல்ல போயிருக்கும். அது எப்படி சா
தப்பையும் செஞ்சுட்டு உங்களால இவ்வளவு கூலாப்
பே முடியுது?'' என்று எகத்தாளமாகக் கேட்க,

''அவசரமாப் போக வேண்டி இருந்துச்சு. அதான்
வந்திட்டோம்'' என்று அப்பொழுதும் விறைப்புடனே
ரவீந்திரன் சொல்ல,

''அவசரமாவா? யாருக்காச்சும் உடம்பு சரி இல்லையா?''
என்று கேட்டுக் கொண்டே அவரது வண்டிக்குள் எட்டிப்
பார்த்தவன், ''அப்படி யாரும் இல்லையே? இல்லை ஒரு
வேளை நீங்கள் டாக்டரா? உயிரைக் காப்பாத்த
அவசரமாப் போறீங்களா?'' என்று கேட்கவும்,

''இப்ப உனக்கு என்ன வேணும்? உன் கண்ணாடி
உடைஞ்சதுக்கு நஷ்ட ஈடா பணம் தரணுமா?'' என்று
ரவீந்திரன் தன் மரியாதைப் பன்மையைக் கைவிட்டுத்
திமிராகக் கேட்கவும்,

''பணமா? உங்க பணம் யாருக்கு சார் வேணும்?
தப்பு செஞ்சுட்டு அதை ஒத்துக்காமல் தெனாவட்டாகப்
பேசவா செய்யுறீங்க?'' என்று கேட்டுக் கொண்டிருக்கும்
போதே அங்கே டிராபிக் போலீஸ் ஒருவர் வந்தார்.

ராஜீவ் அவரிடம், ''சார், இவர் மேல கேஸ் எழுதி
ஃபைன் போடுங்க சார். ராங் ரூட்டிலே வந்து ரெண்டு
பேருக்கு அடிபட வைச்சிருக்கார்'' என்றான்.

ரவீந்திரனின் உதவியாளர் அந்தக் காவலாளியிடம் சென்று அவரது காதில், ''சார், அவர் பேர் ரவீந்திரன். மதுரையிலே பெரிய பணக்காரர். அடிபட்ட ஆளைச் சரி கட்டி பணம் கொடுத்து அனுப்பிட்டோம். இந்தத் தம்பி மட்டும் தான் தகராறு பண்ணுது. கொஞ்சம் பேசி அனுப்பி விடுங்க. சாருக்கு ஃபிளைட்டுக்கு நேரமாச்சு'' என்றார்.

அந்தக் கான்ஸ்டபிள் ரவீந்திரனைப் பார்த்து ஒரு சலாம் போட்டுவிட்டு ராஜீவ் அருகே வந்து, ''அவர் தான் பணம் கொடுத்து செட்டில் பண்ணுறேன் என்று சொல்லு றார் தானே சார். அடி ஒண்ணும் பெருசாப் படலையே'' என்றதும்,

''சார், உங்களுக்கு சம்பளம் தருவது கவர்மென்ட்டா இல்லை இவரா? வாங்குற சம்பளத்துக்கு வேலை பாருங்க சார். நானும் கவர்மென்ட் செர்வென்ட் தான் சார். பொறுப் புள்ள இந்தியக் குடிமகனா ரூல்ஸை மதிங்கன்னு சொல்லு றேன். அது தப்பா?'' என்று அவன் மேலும் வாதாடிய தில் அந்தக் கான்ஸ்டபிள் யார் பக்கம் பேசுவது என்று தெரியாமல் திணறினார்.

கடைசியில் ரவீந்திரன் இறங்கி வந்து ஃபைனைக் கட்டிவிட்டு ராஜீவை முறைத்துக் கொண்டே வண்டியில் ஏறினார். உன்னை வைச்சுக்கிறேன்டா என்று சொல் லாமல் சொல்லியது அவர் பார்வை.

அவர் விமான நிலையம் அடையத் தாமதம் ஆனதால் அவரால் அவர் முன்பதிவு செய்திருந்த விமானத்தில் பயணம் செய்ய முடியாமல் போனது. அந்தக் கடுப்பும் சேர்ந்து ராஜீவ் மேல் திரும்பியது.

மதுரை விமான நிலையம் வந்திறங்கி அவர் வீட்டை அடைந்ததும் நிவேதா அவரை எதிர்கொண்டு வரவேற்றாள்.

அவர் மீது சாய்ந்து கொண்டு, ''மிஸ் யூ சோ மச் டாட். உங்களைப் பார்த்து நாலு நாளாச்சு தெரியுமா?'' என்று செல்லம் கொஞ்சினாள்.

அவளது தலையை வருடிக் கொடுத்தவர், ''மறுநாளே திரும்ப வருவேன் என்று சொல்லிவிட்டுப் போன நீ தான் வீட்டுக்கு வராமல் உன் பிரண்ட்ஸுங்களோடு ஊரைச் சுத்தினாய்'' என்றார்.

தன் மகளே அந்த இளைஞன் (ராஜீவ்) யாரென்று விவரம் சொல்லுவாள் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் அவளோ அது பற்றி வாய் திறக்கவில்லை.

''நான் வந்த பின்னாடி நீங்க சென்னைக்குப் போயிருக்கலாம் தானே? அதை விட்டுட்டு நான் வரும் முன்னாடியே போயிட்டீங்க. இப்பவும் பாருங்க. சாயங்காலம் வரேன் என்று சொல்லிவிட்டு நைட் தான் வந்து சேர்ந்திருக்கீங்க'' என்று அவள் அலுத்துக் கொள்ளவும்,

''உன்னைப் பார்க்கத் தான்டா குட்டிம்மா நான் அவசர அவசரமா வந்தேன். வழியிலே ஒரு திமிர் பிடிச்சவன் குறுக்கே புகுந்து காரியத்தைக் கெடுத்துட்டான்'' என்று சொன்னவர் அன்றைய நிகழ்வை மகளிடம் எடுத்துரைத்தார்.

''அவன் சரியாத் தானேப்பா சொல்லியிருக்கான். நீங்க நப்பாத் தானே போயிருக்கீங்க.''

''வேணாம் குட்டிம்மா. அவனை மட்டும் சப்போர்ட் பண்ணிப் பேசாதே. அப்புறமா உன்னையும் திட்டிவிடப் போறேன். நான் அவன் மேலே செம கடுப்பில் இருக்கேன். சின்னப் பயல். என்ன துள்ளு துள்ளுறான். ரூல்ஸ் பேசறானாம் ரூல்ஸ். அரை மணி நேரம் வாதாடுறான். அவன் என் பணத்தையும் மதிக்கலை. என் வயசுக்கும் மதிப்புக் கொடுக்கலை.''

''சரிப்பா. அவனைப் பத்தி நாம பேசவும் வேண்டாம். நீங்க உங்க பிரஷரை ஏத்திக்கவும் வேண்டாம்.''

''அம்மா எங்கேடா?''

''கோவிலுக்குப் போயிருக்காங்க.''

''சாப்பிடுறீங்களா? நான் சாப்பாடு வைக்கட்டுமா?''

''இல்லைடா அம்மா வரட்டும். அவளுக்கு அவ கையால நமக்குப் பரிமாறினால் ஒரு திருப்தி. நாம ஏன் அதைக் கெடுக்கணும்?''

ராதா வந்து பின் அவர்கள் சாப்பிட்டு முடித்துத் தனது அறைக்குத் தூங்குவதற்கு வந்தவள் ராஜீவின் கைப் பேசிக்கு அழைத்தாள்.

''என்னங்க மேடம் சென்னையிலேயே தங்கிட்டதாலே ரெண்டு நாளா விட்டுப் போன வேலை எல்லாம் முடிச்சிட்டீங்களா?''

''யெஸ் ராஜ். எல்லா வேலையும் முடிச்சாசு.''

ஸ்ஆஆ என்று ராஜீவ் மெலிதாக முனகவும்...

''என்னாச்சு ராஜ்?'' என்று பதட்டத்துடன் கேட்டாள்.

''ஒண்ணுமில்லைம்மா. கையிலோ லேசா சிராய்ப்பு. அதே இடத்திலேயே சுவரில் இப்போ மோதிக்கிட்டேன்.''

''சிராய்ப்பா? எப்படி வந்துச்சு? எங்கேயாவது விழுந்துட்டீங்களா?''

''எதுக்கு இத்தனைக் கேள்வி. நானே டாக்டர் தானே! என்னைப் பார்த்துக்க மாட்டேனா?''

''நான் கேட்ட ஒரு கேள்விக்குக் கூட நீங்க பதில் சொல்லலை ராஜ்'' என்று கடுப்புடன் கூற,

"மதியம் ஒரு பணக்கார மனுஷன் செஞ்ச வேலை..." என்று அவன் மதியம் நடந்ததைக் கூற ஆரம்பிக்கவும், கடகடவெனச் சிரித்த நிவேதா, "நீங்க தான் அந்த 'அம்பி' ராமானுஜமா?" என்று கேட்டாள்.

"என்ன சிரிப்பு? எதுக்கு இப்போ என்னை நக்கல் பண்ணுகிறாய்?"

"ராஜ், அது என்னோட டாடி தான். அவர் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வந்து இந்த விஷயத்தைச் சொன்னதும் நான் உங்களுக்கு மனசுக்குள்ளே இந்தப் பேரைத் தான் வைச்சேன்" என்று சிரித்துக் கொண்டே சொல்லிக் கொண்டு வந்தவள்,

தந்தை சொல்லிய 'அவனை மட்டும் சப்போர்ட் பண்ணிப் பேசாதே. அப்புறமா உன்னையும் திட்டிவிடப் போறேன்' என்ற வரிகளே காதில் ரீங்காரமிட்டு அவளைச் சிந்தனைக்குள்ளாக்கியது.

நிவி... நிவேதா என்று பலமுறை ராஜீவ் அழைத்த பின்பே நனவுலகத்திற்கு வந்தவள், "என்ன ராஜ் கேட்டீங்க?" என்று கேட்டாள்.

"நான் பாட்டுக்கு உங்க அப்பா கூட சண்டை போட்டுட்டேனே! இதனால எல்லாம் பொண்ணு தர மாட்டேன் என்று சொல்லிட மாட்டாரே?"

"அப்படி எல்லாம் எதுவும் நடக்காது ராஜ். நான் எதுக்கு இருக்கேன்: நான் பார்த்துக்குவேன்."

"சரியான அடாவடியா உங்க அப்பா? விட்டால் என்னை அறைஞ்சிருப்பார். நீ எப்பவாவது அவர்கிட்டே அடி வாங்கி இருக்கியா?"

"அடியா? எங்கப்பாவா? என்னையா? நல்லா கேட்டீங்க போங்க. எங்கம்மா என்னைக் கொஞ்சினால் கூட அவருக்குப் பொறுக்காது. அவருக்கு என் மேல அவ்வளவு பாசம். அப்படிப்பட்டவர் என்னை அடிக்குறதாவது?"

'அப்போ வருங்காலத்திலே என் பாடு கஷ்டமா?' என்று மனதில் நினைத்தவன், "ஒரு வேளை உன் அப்பா உன்னை எதிர்த்தால்..." என்று கேட்டு நிறுத்த,

"அப்படி ஒரு நாள் என் லைஃபிலே வராது ராஜ். அப்படி வந்தால் என் வாழ்க்கையின் கடைசி நாள் அது தான்."

"ஹேய் நான் விளையாட்டுக்குக் கேட்டால் நீ என்ன எதையோ உளறிக்கிட்டு இருக்கே. இனி ஒரு தரம் இப்படிப் பேசாதே." என்று வருத்தத்துடன் ராஜீவ் சொன்னதும்,

"இனிமேல் பேசலை. ராஜ் உங்களுக்கு ஸ்டடி ஹாலிடேஸ் எப்போ? நீங்க எப்போ மதுரைக்கு வருவீங்க?" என்று கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

அவனிடம் பேசிவிட்டு கைப்பேசியை அணைத்தவள் சிந்தனையில் ஆழ்ந்தாள். அப்பா வந்த பின்னாலே ராஜீவ் பற்றிச் சொல்லணும் என்று நினைத்தோம். ராஜீவோட அந்தஸ்து நம்மை விடக் குறைவானது என்று அப்பா கண்டிப்பாக மறுப்பார். போராடித் தான் வெல்லணும் என்று நாம கணக்குப் போட்டு வைத்திருக்க இறைவன் வேறு மாதிரி கணக்குப் போட்டு இருக்காரோ? இப்போதைக்கு எதையும் சொல்ல வேண்டாம் எனத் தீர்மானித்தாள்.

பத்து நாட்கள் கழிந்து ராஜீவ் சோழவந்தான் வந்திருந்தான்.

"எனக்கு உன்னைப் பார்க்கணுமே நிவி. நாம பார்த்து ரொம்ப நாள் ஆச்சு. உன்னை எங்கே வந்துப் பார்க்கட்டும்?" என்று அவன் கேட்டும்,

"இப்ப வேண்டாம். நானே உங்களைக் கூப்பிடுறேன் ராஜ். அப்போ வந்து பாருங்க" என்றாள்.

"உனக்கு என்னைப் பார்க்கணும்ன்னு தோணலையா நிவி?" என்று அவன் ஏமாற்றத்துடன் கேட்க,

"ஐ டூ மிஸ் யூ சோ மச் ராஜ். ஆனால் நான் கொஞ்சம் பிசியா இருக்கேன். நாம வியாழக்கிழமைப் பார்ப்போமா? இடத்தை நான் அப்புறமா உங்களுக்குப் போன் பண்ணிச் சொல்லுறேன்" என்று சொன்னதும்,

"உன் போனுக்காகவும், வியாழக்கிழமைக்காகவும் நான் காத்திருப்பேன்டா நிவி" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

வியாழக் கிழமை காலை...

ராதா காபியை எடுத்துக் கொண்டு மகளது அறைக்குச் சென்றார். பல் துலக்கி விட்டுக் குளியலறையில் இருந்து வெளியே வந்த நிவேதா ஒரு தாங்க்ஸ் மா சொல்லி அதை வாங்கிப் பருகினாள்.

காலிக் கோப்பைக்காக ராதா கை நீட்ட அவள் அதை அவரிடம் தராமல் அருகிலுள்ள மேஜையில் வைத்து விட்டு அவரைக் கைப் பிடித்து படுக்கையில் அமர வைத்தாள். அவர் அமர்ந்ததும் அவரது மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டாள்.

அவளது தலையைக் கோதிக் கொடுத்துக் கொண்டே, "என்னடா நிவி இன்னும் தூக்கம் போகலையா?" என்று கேட்டார்.

அவரது இடுப்பைச் சுற்றி கைகளைப் போட்டுச் செல்லம் கொஞ்சிக் கொண்டே, "உங்களுக்கு ஏதாச்சும் வேலை இருக்காம்மா?" என்று கேட்டாள்.

"மடியிலே இருக்கிற என் பொண்ணைத் தள்ளி விட்டுட்டுப் போய் முடிக்குற அளவுக்கு எந்த வேலையும் இல்லை" என்றதும் நிவேதா புன்னகைத்தாள்.

"உங்க அப்பா பார்த்தால் தான் பொறாமைப்படுவார். கடவுள் மட்டும் ஆண்களுக்கு குழந்தை பெத்துக்குற பாக்கியத்தை கொடுத்திருந்து. உன் அப்பா மட்டும் உன்னைச் சுமந்து பெத்திருந்தாரு... அவ்வளவு தான். உன்னைத் தொடக்கூட விட்டிருக்க மாட்டார் போல!" என்று கணவரைக் கேலி செய்தவர்.

மகளின் முகத்தை வருடிக் கொண்டே, "உன்னைக் கல்யாணம் முடிச்சுக் கொடுத்து உன் புருஷனுக்கு எப்படி விட்டுக் கொடுக்கப் போறாருன்னு தான் தெரியலை" என்று கூறி பெருமூச்சொன்றை வெளியிட்டார்.

சரியாக அந்த நேரம் நிவி என்று அழைத்துக் கொண்டே ரவீந்திரன் வந்தார். "பாரு பாரு! உங்க அப்பாக்கு மூக்கிலே வியர்த்திருச்சு. சரியா வந்திட்டார்" என்று ராதா கேலியாகக் கூற,

உள்ளே நுழைந்த ரவீந்திரன், "என்ன குட்டிம்மா அம்மாவைக் கட்டிக்கிட்டுப் படுத்திருக்கே" என்றார்.

"நான் அப்பவே சொன்னேன் தானே!" என்று மகளைப் பார்த்து ராதா கூற,

"அதுக்கு அப்படி அர்த்தம் எடுத்துக்கக் கூடாதும்மா. நீ எப்படி என் வைஃபைக் கட்டிப் பிடிக்கலாம்ன்னு அர்த்தம். இல்லையாப்பா?" என்று கண் சிமிட்டித் தனது தந்தையைப் பார்த்து நிவேதா வினவ.

''இப்போதைக்கு இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல நான் விரும்பலைம்மா. நான் வேற முக்கியமான விஷயமாப் பேச வந்தேன். உங்க அம்மாவும் இங்கேயே இருக்காள். அதனால ஒரேடியா உங்க ரெண்டு பேருக்கும் சேர்த்தே சொல்லிடுறேன்'' என்று சொல்லிக் கொண்டே, தான் கொண்டு வந்திருந்த கவரில் இருந்து புகைப்படம் ஒன்றை உருவினார்.

தந்தை அறைக்குள் வந்ததும் நிவேதா அவரைப் பார்க்கும் வண்ணம் ஒரு பக்கமாகத் திரும்பிப் படுத்திருந்தாள். அவர் அவளிடம் அந்தப் புகைப்படத்தை நீட்ட அவளோ சற்றும் அசையாமல் படுத்திருந்தாள். இவர்களது மௌன நாடகம் புரியாதா ராதா அதைக் கை நீட்டி வாங்கிக் கொண்டார்.

''இது தான் நான் நிவிக்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளை. பேரு சுரேஷ். இன்ஞ்சினியர்க்குப் படிச்சிருக்கார். நம்மளை மாதிரி வசதியானவங்க'' என்று ஒவ்வொன்றையும் மகளைப் பார்த்துக் கொண்டே அழுத்தமாகக் கூறிக் கொண்டு வந்தவர் தன் மனைவியிடம்,

''என்ன ராதா மாப்பிள்ளை எப்படி இருக்கார்? அவரோட அழகைப் பார்த்து ராஜ்..'' என்று சொல்லி ஒரு நொடி நிறுத்தியவர் ''ராஜகுமாரன் என்று கூப்பிட ணும்னு தோணலை'' என்றார்.

அந்த ராஜ் என்ற பேரைச் சொல்லும் போது தகப்பனின் கண்களும் மகளின் கண்களும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன.

''மாப்பிள்ளை போட்டோவில் நல்லா இருக்காருங்க. அவர் குடும்பத்தைப் பத்தி, மாப்பிள்ளையோட குணத்தை பத்தியெல்லாம் விசாரிச்சுட்டீங்களா?''

''அதெல்லாம் விசாரிக்காமல் இருப்பேனா? அவங்க அப்பா சாதாரண பள்ளிக் கூடத்து டீச்சர் இல்லை. பெரிய பிசினஸ் மேன். மாப்பிள்ளையின் குணம் பத்திக் கேட்டே இல்லை. அவர் யாரையும் நியாயம் பேசுறேன்னு எதிர்த்து நிற்க மாட்டார். முக்கியமா என்னை'' என்று மனைவியிடம் சொன்னவர்,

''என்னடா குட்டிம்மா நீ ஒண்ணும் சொல்லாமல் அமைதியா இருக்கே'' என்று சீண்ட வேறு செய்தார்.

''நீங்க தான் என்னோட அபிப்ராயத்தைக் கேட்கலையேப்பா. உங்க அபிப்ராயத்தைத் தானே என் மேலே திணிக்கப் பார்க்குறீங்க'' என்று இடக்காக நிவேதா பதில் கூற.

''குட். நான் உன் மீது இதைத் திணிக்குறேன் என்று உனக்குப் புரியுது தானே! எனக்கு அது போதும்'' என்று சொன்னவர் வெளியே செல்லத் திரும்பினார். போகும் போது ''இன்னும் ரெண்டு நாளில் நம்ம வீட்டுக்கு அவங்களை வரச் சொல்லி இருக்கேன்'' என்று சொல்லிக் கொண்டே சென்றார்.

மகள் அந்தப் புகைப்படத்தைக் கையால் கூடத் தொடாததும் கணவன் தன் பெண்ணிடம் பேசிய பாங்கும் ராதாவைச் சிந்திக்க வைத்தன.

ராதா தன் மகளிடம், ''நிவி நீ யாரையாச்சும்... உனக்கு வேற யாரையாவது பிடிச்சு இருக்கா?'' என்று கேட்டார்.

மகள் ஆம் என்னும் விதமாகத் தலையாட்ட சில நொடிகள் சிந்தனையில் ஆழ்ந்த ராதா,

''அவரோட அப்பா டீச்சரா? அவர் பேர் ராஜ் ஆ? அவர் உன் அப்பாவோட சண்டை போட்டாரா?'' என்று வரிசையாகக் கேள்விகளை அடுக்க,

"யூ ஆர் டூ ஸ்மார்ட் மம்மி" என்று சொல்லி எம்பித் தாயின் கன்னத்தில் முத்தம் பதித்தவள் மீண்டும் தாயின் இடுப்பைக் கட்டிக் கொண்டு படுத்துக் கொண்டாள்.

ராதாவின் கை மகளது முதுகை வருடிக் கொடுக்க ஆரம்பித்தது. அவரின் மனதைக் கவலை ஆட்கொள்ள ஆரம்பித்தது. இரு பிடிவாதக்காரர்களின் இந்தப் போராட்டத்தில் வெற்றி யார் பக்கம் இருக்கக் கூடுமோ என்ற பயமும் எழ அவரது வருத்தம் அதிகரித்தது.

ஐந்து நிமிடங்கள் அதே நிலையில் அமர்ந்திருந்தவர், "எழுந்து போய் குளிச்சிட்டு வந்து சாப்பிடும்மா" என்று சொல்லி மகளது தலையை மடியில் இருந்து படுக்கை யில் இறக்கி வைத்தார்.

மகளது ஆசை தெரிந்த பின்னும்... அது தன் கணவ னுக்கு எதிரான ஆசை என்ற காரணத்தால் மகளின் ஆசைக்கு ராதா பச்சைக்கொடி காட்டவில்லை. அதே சமயம் சிகப்புக் கொடியையும் காட்டாது அவ்விடம் விட்டு அகன்றார். தாயின் நிலையைப் பார்த்து நிவேதா விற்கு பெருமூச்சு தான் வந்தது.

6



நிவேதா குளித்து முடிச்சுச் சாப்பிட வரும் முன் ரவீந் திரன் கிளம்பிச் சென்றிருந்தார். அதிக ஜரிகை இல்லாத மென் பட்டை உடுத்தி வந்தவள் சாப்பிட அமர்ந்ததும், மகள் வேண்டுமென்றே தான் தாமதமாகச் சாப்பிட வருகிறாள் என்று தெரிந்திருந்தும், "என்னடா நிவி லேட் ஆகிடுச்சா?" என்ற கேள்வியை ராதா கேட்டு வைத்தார்.

தகப்பனும் மகளும் ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் சந்திப்பதைத் தவிர்க்கிறார்கள் என்பது அவருக்குத் தெரிந்து தான் இருந்தது. அதற்காக அவரால் அவர்களை அப்படியே விட்டுவிட முடியுமா என்ன?

"அப்பா இப்பத் தான்டா கிளம்பிப் போனார். உனக்கு டயர்டா இருந்தால் வீட்டிலே ரெஸ்ட் எடுக்கச் சொல் லிட்டுப் போனார்" என்று அவர் பாட்டுக்குக் கூறிக் கொண்டிருந்தார்.

ஆனால் அவரது மகளிடம் தான் அதற்கான எந்த எதிரொலியும் இல்லாது போனது.

சாப்பிட்டு முடித்து வெளியே கிளம்பியவள் தன் அன்னையிடம் விடைபெற வந்தாள்.

"என்னடா நிவி கழுத்திலே எந்த செயினும் போடலை. மொட்டையா வைச்சிருக்கே. கையிலே கூட எதையும் போடலை. வாட்ச் கூடக் கட்டலையா?" என்று கேட்டுக் கொண்டே வந்தவரின் கன்னத்தில் முத்தம் ஒன்றைப் பதித்தவள், "சாரிம்மா" என்று மட்டும் சொல்லி விடை பெற்றாள்.

அவள் வெளியே சென்று இரு நிமிடங்கள் கழித்தே தன்னுணர்வு பெற்ற ராதா வெளியே வந்து பார்த்தார். அவளது கார் அங்கேயே நிற்கக் கண்டு குழப்பம் அடைந் தார்.

'காரைக் கூட எடுக்காமல் போயிருக்காளா?' என்று முதலில் குழம்பியவர், 'ஒரு வேளை வேலு திரும்பி வந்து கூட்டிக்கிட்டுப் போயிருப்பாரோ? இருக்கும்' என நினைத்துக் கொண்டார்.

வீட்டை விட்டு வெளியேறும் முன்பே நிவேதா ராஜீவிற்கு போன் செய்து, "ராஜ் நான் சொல்லுற

இடத்துக்கு உடனே வாங்க'' என்று இடத்தைக் குறிப் பிட்டு அவனை வரச் சொல்லி இருந்தாள்.

அதனால் அவள் சென்று இறங்கிய பத்தாவது நிமிடம் அவனும் வந்து இறங்கினான்.

ரிஜிஸ்தர் அலுவலக வாயிலில் வியர்க்க விறுவிறுக்க நிற்பவளைப் பார்த்த ராஜீவ் ''இங்கே என்னம்மா பண்ணுறே?'' என்று கேள்வி எழுப்பினான்.

அவள் வாய் திறந்து பதில் சொல்லும் முன், ''என் கழுத்தை இப்படி மொட்டையா வைச்சிருக்கே! அதுவும் புடவை கட்டிக் கொண்டு...'' என்று கேட்டுக் கொண்டே தனது கழுத்தில் போட்டிருந்த தங்கச் செயினை எடுத்து அவளது கழுத்தில் அணிவித்தான். அவளது முகம் பிரகாசமானது.

''என்னங்க மேடம்! பழைய செயின். அதுவும் ஜென்ட்ஸ் மாடல் செயினுக்கு இவ்வளவு சந்தோஷமா?'' என்று அவன் கேலியில் இறங்க,

''பழசோ புதுசோ என் ராஜோடது. என் ராஜ் கையால் என் கழுத்தில் ஏறியது. அதுக்கு மவுசு தனிதான்'' என்றாள்.

அவளது விளக்கத்தைக் கேட்டுப் புன்னகைத்துக் கொண்டே, ''இங்கே எதுக்கு வரச் சொன்னே?'' என்று வினவினான்.

''ராஜ், டூ யூ ரியலி லவ் மீ?''

அவன் பதில் சொல்லாது அவளது கண்களைத் தீர்க்க மாகப் பார்த்தான்.

''எனக்கு பதில் தெரியும் ராஜ். பட் இப்போ நான் ஏன் அப்படிக் கேட்குறேன் என்றால் அதை நீங்க நிரூபிக்க வேண்டிய கட்டாயம் வந்திருக்கு.''

''என்ன கட்டாயம்? சரி விடு. நான் என்ன செஞ்சு உனக்கு என் லவ்வை நிரூபிக்கணும்?'' என்று கேட்டதும்,

''ரிஜிஸ்டர் ஆபீஸுக்கு உள்ளே வந்து நம்ம கல்யாணத் துக்குக் கையெழுத்துப் போடணும்'' என்று சற்றும் அலட்டாமல் அவள் கூற,

''வாட்ட்ட்?'' என்று அவன் அதிர்ந்தான்!

''யெஸ் ராஜ். இப்போ நாம ரிஜிஸ்டர் மேரேஜ் பண் ணிக்கப் போறோம்.''

''உனக்கு என்ன பைத்தியமாப் பிடிச்சிருக்கு. யாரும் இல்லாமல் இப்படி வந்து... ஏன் நம்ம திருட்டுத்தனமா கல்யாணம் பண்ணனும்?''

''எங்கப்பா நம்ம கல்யாணத்துக்கு சம்மதிக்க மாட்டார்.''

''நீ அவரிடம் கேட்டுப் பார்த்தியா?''

இல்லை என்று அவள் தலை அசைத்து மறுத்ததும், ''நான் என் அம்மா அப்பாவோட வந்து முறைப்படி பொண்ணு கேட்குறேன்மா'' என்றான்.

''உங்க எல்லோரையும் அவமானப்படுத்துவார். பொண்ணு தர மாட்டார்.''

''ஒரு வேளை அவர் அப்படிச் செஞ்சால் அதுக்கு அப் புறமா நாம அவரை எதிர்த்துக் கல்யாணம் பண்ணுவது பத்தி யோசிப்போம்.''

''ஐயோ ராஜ் புரிஞ்சுக்கோங்க. காலையிலே அவர் மாப்பிள்ளை போட்டோன்னு ஒண்ணைக் கொண்டு வந்து நீட்டி... என்ன சொன்னார்ன்னு உங்களுக்குத் தெரியுமா?'' என்று காலையில் நடந்ததை அவனிடம் எடுத்துரைத்தாள்.

''ஓ! அவருக்கு விஷயம் தெரிஞ்சு தான் இருக்கு. அப்படின்னா இன்னும் வசதி. நான் வந்து அவரைப்

பார்க்கிறேன்'' என்று சொன்னதும் கண் மூடி அமைதியானாள்.

கண் திறந்தவள் உங்களுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது என்பது போல் அவனைப் பார்த்தாள்.

''ராஜ், அவரை எனக்கு நல்லாத் தெரியும். இன்னைக்கு நம்ம கல்யாணம் நடக்கலைன்னால் என்னைக்குமே நடக்காது.''

''அப்படியே கல்யாணத்தை பதிவு செய்யணும் என்றாலும் அதுக்கு சில சர்ட்டிபிகேட் எல்லாம் கொடுக்கணுமே. என்னிடம் இப்போ ஒண்ணுமே இல்லையே.''

''அதெல்லாம் முன்னாலையே கொடுத்தாச்சு ராஜ்.''

''அப்போ நீ முன்னாடியே முடிவு செஞ்சிட்டியா? என்னோட சர்ட்டிபிகேட் எல்லாம் எப்படிக் கிடைச்சது?'' என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே சுமோத் அங்கு வந்து சேர்ந்தான். எப்படி என்பது நிவேதா விளக்காமலே ராஜீவிற்குப் புரிந்து போனது.

இவன் வேலை தானா எல்லாம் என்று நண்பனைப் பார்த்து ராஜீவ் முறைத்துக் கொண்டிருக்க... சுமோத்தும் அவன் பின்னோடு வந்த சுமித்ராவும் நிவேதாவைப் பார்த்து,

''எங்களை எதுக்கு அவசரமா இங்கே வரச் சொன்னாய்?'' என்று கேட்டனர்.

''எங்களுக்கு இன்னைக்கு இப்போ கல்யாணம்'' என்று நிவேதா சொன்னதும்,

சுமித்ரா அதிர்ந்து விழிக்க... சுமோத் ராஜீவிடம், ''என்னடா உளறுகிறாள்!'' என்று கேட்டான்.

ராஜீவ், ''ம்ம்ம் நீயே கேளு உன் அருமை தங்கச்சி கிட்டே இது கூடத் தெரியாமலா என் சர்ட்டிபிகேட்டை எல்லாம் எடுத்துக் கொடுத்திருக்கே!'' என்றான்.

அவனது குரலிலேயே அவனுக்கு இதில் உடன்பாடு இல்லை என்பது சுமோத்திற்கும், சுமித்ராவிற்கும் புரிந்து போனது.

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நிற்க... நிவேதா ராஜீவைப் பார்த்து, ''இப்போ உள்ளே வந்து சைன் பண்ணப் போறீங்களா இல்லையா?'' என்று கேட்டவள் சுமித்ராவிடம் திரும்பி, ''சாட்சி கையெழுத்துப் போடத் தான் உங்க ரெண்டு பேரையும் வரச் சொன்னேன். உங்களால போட முடியுமா முடியாதா?'' என்று கேட்டாள்.

அவர்கள் யாருமே அவளுக்குப் பதில் சொல்ல முற்படவில்லை என்றதும்,

''ஓ.கே. நான் இப்போ கிளம்புறேன். இன்னும் கொஞ்ச நேரத்திலே பிரஸ் ஆளுங்க எல்லாம் இங்க வந்து என் கல்யாணம் பத்தி விசாரிப்பாங்க. அவங்க கிட்டே கல்யாணம் நின்னுடுச்சு. ஏன்னா கல்யாணப் பொண்ணு குஸைட் பண்ணிக்கிட்டாள்ன்னு சொல்லிடுங்க'' என்று கூறியவள்,

அந்த இடம் விட்டு நகர ஆரம்பிக்க... அவளது கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்திய ராஜீவ் அவளைத் தீப் பார்வை பார்த்தான். அவள் சற்றும் அசராது அவனது பார்வையை எதிர் கொண்டாள்.

சில நொடிகள் கண் மூடி அமைதி காத்தவன், ''ஓ.கே. நாம இன்னைக்குக் கல்யாணம் பண்ணிக்கலாம்'' என்று கூறியவன் தனது கைப்பேசியை எடுத்து இயக்க...

''யாருக்கு போன் பண்ணுறீங்க?'' என்று நிவேதா அவசரமாகக் கேட்க,

"எங்க அம்மா அப்பாக்கு விஷயம் சொல்ல வேண்டாமா? நான் லவ் பண்ணின விஷயத்தைத் தான் சொல்லலை. அட்லீஸ்ட் கல்யாணம் பண்ணப் போற விஷயத்தையாவது சொல்ல வேண்டாமா? நான் அவங்களுக்கு ஒரே பையன் வேற!" என்று கடுப்புடன் கூறியவன் தனது கைப்பேசியில் இருந்து தந்தைக்கு அழைத்துக் கொண்டே அந்த இடம் விட்டு சற்றே நகர்ந்தான்.

"பிரஸ்ஸுக்கு நீயா தகவல் சொல்லி வரச் சொல்லி இருக்கே? எதுக்கு நிவி?" என்று சுமித்ரா பயத்துடன் வினவினாள்.

"என் அப்பாக்கு மட்டுமில்லாமல் இந்த மதுரைக்கே விஷயம் தெரிய வேண்டாமா? அதுக்குத்தான்."

"பிரஸ் ஆளுங்க உன் அப்பாவுக்கு தகவல் சொல்லிட்டால்... அவர் நேரா இங்கே வந்து நின்னால்..."

"ம்ம்ம் அவரால இன்னைக்கு ஒரு மணி வரைக்கும் வெளியே அசையவும் முடியாது. வெளியே இருக்கும் யாராலையும் அவரை அணுகவும் முடியாது. முக்கிய மான மீட்டிங். அதுக்குள்ளே என் வேலை இங்கே முடிஞ்சிடும்."

"அப்போ தெளிவாத் தான் திட்டம் போட்டு இருக்கே!"

அவளைப் பார்த்துப் புன்னகைத்த நிவேதா, "கவலைப் படாதே சுமி. எல்லாம் நல்லபடியா நடக்கும். அதோ பவித்ராவும் வந்துவிட்டாள்" என்று அப்பொழுது தான் ஆட்டோவில் வந்து இறங்கிய பவித்ராவைச் சுட்டிக் காட்டினாள்.

ராஜீவ் தனது தந்தையுடன் பேச ஆரம்பித்தான்.

"அப்பா, ஒரு சின்னச் சிக்கல்" என்று தொடங்கிய வன், "நான் ஒரு பொண்ணை லவ் பண்ணுறேன்ப்பா.

என் எக்ஸாம் முடிஞ்சதுக்கு அப்புறமா உங்ககிட்டே சொல்லி உங்களையும், அம்மாவையும் பொண்ணு கேட்கச் சொல்லலாம்ன்னு இருந்தேன். முதல்லயே விஷயத்தைச் சொல்லாததுக்கு சாரிப்பா..." என்று அவன் தயங்கி இழுக்க,

"மேலே சொல்லுப்பா. இப்பவும் உன் காதல் விஷயம் உன் வாய் வழியாத் தானே எங்களுக்குத் தெரிய வந்திருக்கு. அதனால லேட்டாத் தெரிஞ்சதாலே தப்பு ஒண்ணுமில்லை. அக்காக்குத் தெரியுமா?"

"இல்லைப்பா. நான் நிவேதாவைப் பார்த்து இன்னும் ஒரு மாசம் கூட ஆகலைப்பா" என்று சொன்னவன் நிவேதா பற்றியும் அவள் இன்று பண்ணி வைத்திருக்கும் ஏற்பாடு பற்றியும் எடுத்துரைத்தான்.

"நான் என்னப்பா செய்யுறது? ஒரு பக்கம் பத்திரிகை ஆளுங்களை எல்லாம் வர வைச்சிருக்காள். இன்னொரு பக்கம் தற்கொலை செய்வேன் என்று சொல்லிப் பய முறுத்துறாள்" என்று கேட்டதும்,

"ராஜா, நான் அம்மாகிட்டே பேசிட்டு உன்னைத் திரும்பக் கூப்பிடுறேன்" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தார்.

ஐந்து நிமிடங்களுக்குப் பின் அழைத்தவர், "உனக்கு அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணுவதில் இஷ்டம் தானே?" என்று கேட்டார்.

"என்னப்பா இப்படிக் கேட்குறீங்க. நான் நீங்க வளர்த்த பிள்ளைப்பா. லவ் பண்ணுறதுக்கு ஒருத்தியையும், கல்யாணம் பண்ணுறதுக்கு இன்னொருத்தியையும் எப்படிப்பா நினைப்பேன்?"

"அப்படின்னா ராஜா அவ ஆசைப்படி இப்போ ரிஜிஸ்டர் கல்யாணம் பண்ணி நம்ம ஊருக்கு... நம்ம வீட்டுக்கு அனுப்பி வை. நாளைக்கு முஹூர்த்த நாள் தான். அதனால நாளைக்கே முறைப்படி உங்கக் கல்யாணத்தை நடத்திடலாம்."

"என்னப்பா நீங்க அவளுக்கு மேலே அதிரடியா இருக்கீங்க."

"வேற வழி இல்லையே ராஜா. இவ்வளவு தூரம் ஆன பிறகு அவளை அவங்க வீட்டுக்கு அனுப்ப முடியாது. சட்டப்படி கல்யாணம் ஆகிடுச்சுன்னு மேரேஜ் சர்ட்டிபி கேட் எல்லாம் நம்ம ஊரு ஜனங்ககிட்டே காட்டிட்டு அவளை நம்ம வீட்டிலும் தங்க வைக்க முடியாது. அவங்க எல்லாம் மஞ்சள் கயிறைத் தான் புரிஞ்சுக்குவாங்க. சட்டப்படி மனைவியான பின்னாலே எதுக்கு வேற யார் வீட்டிலாச்சும் தங்க வைக்கணும். காதல் கல்யாணம். பொண்ணோட அப்பா ஒத்துக்கலை. அதனால அவசரக் கல்யாணம்ன்னு நாங்க ஊருக்குள்ளே சொல்லி ஏற்பாடு களைப் பார்க்க ஆரம்பிக்கிறோம். நீ ரிஜிஸ்டர் மேரேஜ் பத்தி யாரிடமும் சொல்லாதே."

"அக்காகிட்டே சொல்லணுமே. அவங்க மாமியார்..."

"அதெல்லாம் பார்க்க இப்போ நேரம் இல்லைப்பா. எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தார்.

அவன் நிவேதாவிடம் வந்து விஷயம் சொன்னதும், "நாளைக்குக் கல்யாணம்ன்னு இப்போ போய் கேட்டால் மண்டபம் கிடைக்குமா?" என்று கேட்டாள்.

"மண்டபம் கிடைக்காது. கோவில்ல வைச்சு முடிப்பாங்க. சாப்பாட்டுப் பந்தி எல்லாம் வீட்டிலேயே

வைச்சுக்குவாங்க. எங்க பூர்வீக வீடு ரொம்பப் பெருசு" என்றான்.

நிவேதா செய்து வைத்திருந்த ஏற்பாட்டின்படி அவர்கள் கையெழுத்திட்டு சட்டப்படி கணவன் மனைவியானார்கள். வெளியே காத்திருக்கும் பத்திரிகை ஆட்களிடம் நிவேதா தன் கல்யாணத்தைப் பற்றி அறிக்கை கொடுத்தாள்.

அதன் பின் ராஜீவ் நிவேதாவை பவித்ராவுடனும், சுமோத்துடனும் சோழவந்தானுக்கு அனுப்பி வைத்தான். போகும் வழியிலேயே நிவேதாவின் கை நிறைய கண்ணாடி வளையல்களையும் போலி நகைகளையும் வாங்கி அடுக்கினாள் பவித்ரா.

7



ஏற்கனவே சுமோத் தகவல் தெரிவித்து இருந்ததால் அவர்கள் சோழவந்தானை நெருங்கும் போதே ராஜீவின் வீட்டின் முன்னே கூட்டம் திரண்டு இருந்தது. ஒரு பக்கம் திருமணத்திற்கு பந்தல் போடும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது.

அவளுக்கு ஆலம் சுற்றி உள்ளே அழைத்துக் கொண்டு சென்றார்கள்.

அவர்களின் பூர்வீக வீடு இரட்டைத் திண்ணையுடன் காட்சி அளித்தது. உள்ளே நுழைந்ததும் வரவேற்பறை. அதைத் தாண்டியதும் பெரிய முற்றம் இருந்தது. அதைச் சுற்றியே அறைகள் அமைக்கப்பட்டு இருந்தன. பின் பக்கம் கொல்லைப்புறத்தில் மரம், செடி, கொடிகள் என்று

இருந்தது. வீடு பெரியதாக இருந்தது. ஆனால் கிராமிய மணம் வீசுவதாய் இருந்தது. தனது கணவனின் சிறு வயது நினைவுகளைக் கொண்டது என்பதாலேயே அவளுக்கு அந்த வீட்டின் மேல் ஒரு பாசம் தோன்றியது.

அவளை அங்கிருந்த நாற்காலியில் அமர வைத்தனர். அவளைச் சுற்றிப் பெண்கள் கூடி அவளை வேடிக்கை பார்த்தது அவளுக்கு விநோதமாய் இருந்தது.

"பொண்ணு இம்புட்டு அழகா இருந்தா எந்த சீமைக்கு ராசாவா இருந்தாலும் கவுந்துதேன் ஆவான்" என்று பாட்டி ஒருவர் சொல்ல அனைவரும் சிரித்தனர்.

அவர்கள் அனைவரும் நிவேதாவின் அழகைப் புகழ நிவேதாவிற்குக் கூச்சமாக இருந்தது. அவளுக்கு தங்குவதற்கு ராஜீவின் அறையைக் காட்டிவிட்டு அவளிடம் விடைபெற்று யசோதாவும், சுந்தரமும் சுமோத்துடன் மதுரை செல்லக் கிளம்பினார்கள்.

மதியம் இரண்டு மணிக்குத் தான் மீட்டிங் முடிந்து ரவீந்திரன் வெளியே வந்தார். அவர் நேராக வீடு நோக்கிச் செல்ல அவரை ராதா எதிர்கொண்டு வரவேற்றார்.

"என்னங்க நீங்க மட்டும் வந்து இருக்கீங்க நிவி எங்கே?" என்றதும் ரவீந்திரன் புருவம் உயர்த்தினார்.

"அவ வீட்டிலே இல்லையா? ஆபீஸ் வந்த மாதிரி தெரியலையே!" என்று சொல்லிக் கொண்டே தனது பி.ஏ.விற்கு அழைத்துப் பேசினார்.

"மேடம் இன்னைக்கு ஆபீஸ் வந்தாங்களா?" என்று எடுத்த எடுப்பிலேயே அவர் கேட்க,

"சார் அவங்க வரலை. ஆனால்..."

"என்ன ஆனால்ன்னு இழுக்குறீங்க?"

"சார் இப்பக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி பத்திரிகை ஆபீஸில் வேலை செய்யுற என் பிரண்டு போன் பண்ணினான். நானே உங்களைக் கூப்பிடலாம்ன்னு இருந்தேன்..." என்று விஷயத்தைச் சொல்லாது அவரது செயலாளர் மென்று முழுங்க...

"விஷயம் என்னவென்று நேராகச் சொல்லுங்க."

"நம்ம மேடம் அவங்க லவ் பண்ணுற பையனை ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டாங்களாம். பிரஸைக் கூட்டி வைச்சு பேட்டி கொடுத்து இருக்காங்க" என்றதும்,

மேற்கொண்டு ஒன்றும் பேசாது கைப்பேசியை அணைத்து அதைத் தூக்கி விட்டெறிந்தார். அவருக்கு மிதமிஞ்சிய ஆத்திரம் வந்தது. ராதா பயந்து போனார்.

"என்ன ஆச்சுங்க? எதுக்கு இவ்வளவு கோபம்?" என்று சொல்லிக் கொண்டே தன் கணவனின் முகத்தைத் துடைத்து விட்டார்.

மனைவியின் கையைத் தட்டிவிட்டவர், "காலையிலே உன் பொண்ணு எதிலே போனாள்?" என்று கேட்டார்.

அவர் கேட்ட கேள்வி ராதாவின் மூளையில் பதிய வில்லை. அவர் கூறிய 'உன் பொண்ணு' என்ற சொற் றொடரிலேயே அவர் விதிர் விதித்துப் போனார். அவர் திரும்பவும் அதே கேள்வியைக் கேட்டதும்,

"நிவியா? நான் பார்க்கலைங்க. அவ கார் இங்கே தான் நிக்குது. வேலு கூடக் காரிலே போயிருப்பாள்ன்னு நினைச்சுக்கிட்டேன்."

"கையிலே பெட்டி ஏதாச்சும் எடுத்துட்டுப் போனாளா?"

"இல்லையேங்க. இன்னும் சொல்லப் போனால் அவ கழுத்திலே கையிலே கூட ஒண்ணும் போடாமல்

போனாள். எதுக்கு இத்தனையும் விசாரிக்குறீங்க. நம்ம பொண்ணுக்கு எதுவும் ஆபத்தா? யாராச்சும் கடத்திட்டு...'' என்று ஆரம்பித்தவரால் அடுத்துப் பேசக் கூட முடிய வில்லை.

ஐயோ என் பொண்ணைக் கடத்திட்டாங்களா என்று அவர் மனம் ஒலமிட்டது. ஆனால் பொண்ணு கடத்தப் பட்டிருந்தால் இவரும் சேர்ந்து அல்லவா பதறுவார்? இப்படி உன் பொண்ணுன்னு ஏன் பிரிச்சுப் பேசப் போறார்? என்று குழம்பியவர்,

''சொல்லுங்க... என்னாச்சு நம்ம நிவிக்கு?' என்று கணவரைப் பிடித்து உலுக்கினார்.

''உன் பொண்ணுக்குக் கல்யாணம் ஆகிடுச்சாம். அவ லவ் பண்ணின பையனோட... பத்திரிகைக்காரங்களைக் கூப்பிட்டு பேட்டி கொடுத்து இருக்கான். நீயும் வேண் டாம் உன் வீட்டிலே உன் பொருளும் வேண்டாம்ன்னு கிளம்பிப் போயிருக்காள்'' என்று அவர் கடுங்கோபத் துடன் எகத்தாளமாகச் சொல்ல,

''கல்யாணமா? நம்ம நிவியா? நமக்குத் தெரியா மலா?'' என்று கேட்ட ராதா அதிர்ந்து போய் நின்றார்.

காலையில் அவள் நடந்து கொண்டதன் பின்னணி மில் இதுவா மறைக்கப்பட்டிருந்தது. என்றும் இல்லாத திருநாளா என் மடியில் படுத்துக் கொஞ்சிக் கொண்டிருந்த துக்குக் காரணம் இதுவா? கிளம்பும் போது அவள் சொன்ன சாரிக்கும். கொடுத்த முத்தத்திற்கும் இதுவா அர்த்தம்? என்று தவித்துப் போனார்.

ரவீந்திரனோ, ''வா ரெண்டு பேரும் சேர்ந்து அவ ளுக்குத் தலை முழுகுவோம்'' என்றார்.

இங்கே மதுரையில் சுமித்ராவும், ராஜீவும் சேர்ந்து போத்தீஸுக்குச் சென்று அவளுக்கான துணிகளை வாங்க ஆரம்பித்தார்கள். சுடிதார், சேலை, பேண்ட், டாப்ஸ் என்று எல்லாவற்றையும் ராஜீவுடன் சேர்ந்து சுமித்ராவும் தேர்வு செய்தாள். இரவு உடைகளையும், உள்ளாடைகளையும் சுமித்ரா தனியே சென்று வாங்கினாள்.

ராஜீவின் பெற்றோர்கள் வந்ததும் அவர்கள் முஹூர்த்த புடவை, பட்டு வேஷ்டி, சட்டை வாங்கினார்கள். அக்கா குடும்பத்திற்கும் ஜவுளி வாங்கிய பின் தாலியையும் வாங்கிக் கொண்டு அவர்களின் வீடு செல்வதற்கு மாலைக்கு மேல் ஆனது.

வீடு சென்றதும், ''காபி குடிச்சீங்களாம்மா?'' என்று தோழிகள் இருவரையும் யசோதா விசாரித்துவிட்டுத் தனது வேலையைப் பார்க்கச் சென்றார்.

சுமித்ரா தாங்கள் வாங்கிய துணிமணிகளைக் கொண்டு போய் நீட்டவும்...

''ஹப்பாடா டிரஸ் வாங்கிட்டு வந்துட்டீங்களா? டிரஸ் சேஞ்ச் பண்ணிக்கிறேன்'' என்று சொல்லி அவள் அதை ஆராய்ந்தாள்.

''என்ன டிரஸ் நிவி போடப் போறே? நைட் பேண்டா?'' என்று அதிர்ச்சியுடன் சுமித்ரா கேட்கவும்,

''நான் அவ்வளவு தூரத்துக்கு லூசு ஒண்ணும் கிடையாது. சேலை தான் உடுத்தப் போறேன். சித்திரை மாசத்து வெயில் மண்டையைப் பொளக்குது. ஒரே கசகசன்னு இருக்கு. ஒரு குளியல் போடலாம்ன்னு பார்த்தேன். மாத்துறதுக்கு டிரஸ் இல்லையேன்னு தான் காத்துக்கிட்டு இருந்தேன்'' என்று சொல்லி அதை

எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

அவள் குளித்து முடித்து வந்ததும், ''நிவி, நானும் பவியும் பக்கத்துக் கோவிலுக்குப் போயிட்டு வந்திடுறோம். நீ தனியா இருந்துக்குவே தானே?'' என்று சுமித்ரா கேட்டாள்.

''தாராளமாப் போயிட்டு வாங்க. வீடு பூராவும் ஆளுங்களா இருக்காங்க. எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை'' என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தாள்.

அவர்கள் வெளியே செல்வதைப் பார்த்துக் கொண்டே ராஜீவ் கொல்லைப் புறத்திலிருந்து வந்தான். அவனது அறையிலும் காயத்ரியின் அறையிலும் மட்டுமே குளியலறை அறைக்குள்ளே இருக்கும். தனது அறையை நிவேதா பயன்படுத்திக் கொண்டிருப்பதால் அவன் கொல்லையில் உள்ள குளியலறையில் குளித்துவிட்டு அப்பொழுது தான் உள்ளே நுழைந்தான்.

'இந்த ரெண்டு வாண்டுகளும் வெளியே போறாங்கன்னா நம்ம ஆளு மட்டும் உள்ளேத் தனியா இருக்காளா?' என்று நினைத்தவன் அவளைத் தனியே சந்தித்துப் பேச ஆவல் கொண்டு சப்தம் எழுப்பாது தனது அறைக்குள் நுழைந்தான்.

மேஜையில் இருந்த ராஜீவின் சிறு வயது படத்தை ரசித்துக் கொண்டிருந்தவளை பின்னால் இருந்து இழுத்து அணைத்தவன் அவளது கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்தான். அவனது மீசையின் உராய்விலும், அவனது அணைப்பிலும் கிறங்கியவள், ''ராஜ், இங்கே என்ன பண்ணுறீங்க?'' என்று கிசுகிசுப்பாய் கேட்டாள்.

''பார்த்தாத் தெரியலை. என் வைஃபைக் கொஞ்சிக்கிட்டு இருக்கேன். சும்மா மைதா மாவிலே செஞ்சு வைச்ச பொம்மை மாதிரி இருக்கே தெரியுமா?'' என்று அவன் கிசுகிசுக்க...

அவள் அவன்புறம் திரும்பிய தனது கைகளை அவனது கழுத்தில் மாலையாகக் கோர்த்துக் கொண்டு, ''காலையில யாரோ சைன் போட அப்படி பிகு பண்ணினாங்க. இப்போ மட்டும் என்ன கொஞ்சல் வேண்டியிருக்கு'' என்று கேட்டாள்.

மனைவியின் முக வடிவை தனது விரலால் அளவிட்டவன் அவளது உதட்டில் வந்து நிறுத்த... அவளது முகம் அந்திவானமாய் சிவந்தது.

''ம்ஹூம்கும். இதுக்கு மேல முடியாது'' என்றவன் அவளது உதடுகளைத் தன் உதடுகளால் சிறை செய்தான். இருவருமே அந்த முத்தத்தில் லயித்து இருக்க... ''நிவேதா!'' என்று யசோதா அழைக்கும் குரல் கேட்டது.

அவருக்கு பதில் சொல்லட்டும் என்று அவன் அவளது உதடுகளை விடுவிக்க நிவேதாவிற்கு வாயிலிருந்து வார்த்தை வரவில்லை. வெறும் காத்து தான் வந்தது.

ராஜீவ் மெதுவாக அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, ''என்னடா நிவி பேச எனர்ஜி இல்லையா? நான் வேணா உன் பேட்டரியை சார்ஜ் பண்ணட்டுமா?'' என்று கேட்டுக் கொண்டே அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்து முத்தம் ஒன்றை வைக்க... நிவேதா தன்னை மறந்தவளாக அதில் கிறங்கி நிற்க... இப்பொழுது நிவேதா என்ற குரல் அருகில் கேட்கவும் கணவனைப் பிடித்துத் தள்ளியவள்,

அறை வாசலுக்கு வந்து நின்று, ''என்னங்கத்தை கூப்பிட்டீங்களா?'' என்று மெதுவான குரலில் கேட்டாள்.

''ஊர்க்காரங்க கொஞ்சப் பேர் பொண்ணைப் பார்க்க ணும்னு வந்து நிக்குறாங்கம்மா. கொஞ்சம் வந்திட்டுப் போ'' என்று யசோதா கூப்பிட்டார்.

''வரேன் அத்தை'' என்று சொல்லிக் கொண்டே அவரைப் பின் தொடர்ந்தாள்.

போகும் முன்பு அறையின் விளக்கை அணைத்தால் தான் ராஜீவால் யார் கண்ணிலும் படாமல் வெளியேற முடியும் என நினைத்த நிவேதா கதவின் வலப்புறம் இருந்த ஸ்விட்சில் ஒன்றை அணைத்துவிட்டுச் சென்றாள்.

அவள் அணைக்க நினைத்தது விளக்கை. ஆனால் அணைத்து விட்டுச் சென்றதோ மின் விசிறியை. கத வின் இடப்புறம் இருந்த ராஜீவால் அந்த விளக்கையும் அணைக்க முடியவில்லை. மின் விசிறியையும் போட முடியவில்லை.

அவன் வியர்வையில் குளித்துக் கொண்டிருந்தான். முற்றத்தில் ஒரு இருபது பேர் போல உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கண்ணில் படாமல் இந்த அறையில் இருந்து எப்படி வெளியேறுவது என தவித்துக் கொண்டிருந்தான். யாராவது பார்த்து விட்டால் தேவையில்லாத சிக்கல் வந்துவிடுமோ என்று பயந்து போய் கதவின் பின்னே நின்றிருந்தான். ஆண்டவா காப்பாற்று என்று வேண்டிக் கொண்டான்.

அந்தக் கூட்டத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த நிவேதா ஐந்து நிமிடங்களுக்குப் பின்பே தனது அறையில் விளக்கு எரிவதைக் கவனித்தாள்.

ஐயோ! அப்படின்னால் நான் அணைத்தது விளக்கை அல்லவா? எதை அணைத்தேன்? ஆனால் அதுவல்ல இப்போதைய பிரச்சனை. ராஜு உள்ளே தான் மாட்டிக் கொண்டு இருக்கிறாரா? ஐயோ கோவிலுக்குப் போன சுமியும் பவியும் வேற இப்ப வந்திடுவாங்களே. அவளுங்க வேற நேரா அறைக்குள் நுழைந்து விட்டால்! ஆனால் அது கூடப் பரவாயில்லை தான். ஊர் கூடி பார்ப்பதற்குப் பதிலாக இவளுங்க ரெண்டு பேரும் பார்த்தால் பரவாயில்லை. அது மட்டுமில்லாமல் சுமி எப்படியாவது ராஜை வெளியேத்திடுவாள். சீக்கிரமா வாயேன் சுமி என்று மனதுக்குள் தோழிக்கு அழைப்பு விடுத்தாள்.

பத்து நிமிடங்களுக்குப் பின் மின்சாரம் தடைபட்டு வீடே இருளில் மூழ்கியது. அந்த வேளையில் ராஜீவ் தனது அறையை விட்டு வெளியேறினான்.

''யாரு இன்வர்ட்டர் ஸ்விட்சை ஆப் பண்ணி வைச்ச துன்னு தெரியலையே?'' என்று யசோதா குரல் கொடுத் துக் கொண்டிருக்கும்போதே விளக்குகள் ஒளிர ஆரம் பித்தன.

''கரண்ட் வந்திடுச்சு. நாங்க வரோம்'' என்று சொல் லிக் கொண்டே வந்தவர்கள் விடைபெற்றனர்.

அப்பொழுது தான் கொல்லைப்புறத்தில் இருந்து வருபவனைப் போல் ராஜீவ் வீட்டிற்குள் நுழைந்தான்.

''என்ன ராஜா, குளிச்சிட்டு துடைக்காமலே சட்டையை மாட்டிக்கிட்டு வந்துட்டியா? அவ்வளவு மறதியா? உன் வேலைக்கு மறதி மட்டும் ஆகாதுப்பா. ஜாக்கிரதையா இரு'' என்று விவரம் தெரியாமல் யசோதா மகனுக்கு அறிவுரை வழங்கினார்.

'ஓ! அப்படின்னா நாம ஆஃப் பண்ணியது ஃபேனா?' என்று நினைத்துக் கொண்டிருந்த நிவேதாவிற்கு யசோதாவின் பேச்சு சிரிப்பை வரவழைத்தது. அவள் குனிந்து கொண்டு தனக்கு வந்த சிரிப்பை அடக்கப் பாடுபடுவதைக் கண்ட ராஜீவ் அவளைக் கடுப்புடன் முறைத்துக் கொண்டே சென்றான்.

தோழிகள் வந்த பின் அவர்கள் அனைவரும் சாப்பிட்டு முடித்து அறைக்குள் வந்ததும் நிவேதாவின் கைப்பேசி அலறியது. ராஜீவ் தான் அழைத்திருந்தான்.

"அடிப்பாவி எதுக்கு இப்படி ஃபேனை ஆஃப் பண்ணி என்னைப் பழிவாங்கினே?" என்று எடுத்த எடுப்பிலேயே கேட்க,

வந்த சிரிப்பை மென்று முழுங்கிக் கொண்டே, "ராஜ் நான் உங்களுக்கு ஹெல்ப் பண்ண லைட்டைத் தான் ஆஃப் பண்ண நினைச்சேன். ஆனால் தப்பா ஃபேனை அணைச்சிட்டேன்" என்றாள்.

"எங்க அம்மா அட்வைஸ் பண்ணும்போது சிரிக்கவா செய்யுறே. நான் அப்படியே அங்கேயே உன்னை இழுத்து வைச்சு... அந்தச் சிரிப்பை அடக்கி இருக்கணும். மிஸ் பண்ணிட்டேன்."

"சீ..." என்று அவள் வெட்கப்பட,

அவன் பதில் சொல்லும் முன் மொட்டை மாடியில் அரவம் கேட்டு போனைக் காதில் இருந்து இறக்கிக் கொண்டே வருவது யார் என்று திரும்பிப் பார்த்தான்.

"ஹேய் காயுக்கா! வந்துட்டியா வா வா. எங்கே மாமா?" என்று தனது அக்காவை வரவேற்றான்.

காயத்ரியின் பின்னால் வந்த மகேஷ், "டேய் பரவாயில்லைடா. எங்களையெல்லாம் உனக்கு அடையாளம்

தெரியுதா? நான் கூட எங்களை நாங்களே அறிமுகப் படுத்திக்கணும்ன்னு நினைச்சேன்டா."

"சே சே! என்ன மாமா அப்படிச் சொல்லிட்டீங்க."

"ஏன்டா அதே ஊரில் தானேடா நான் இருக்கிறேன். உன் லவ் மேட்டரைப் பத்தி என்கிட்டே ஒரு வார்த்தை மூச்சு விட்டியாடா? உனக்கு நான் அந்தளவுக்கு வேண்டாதவளாப் போயிட்டேனா?" என்று காயத்ரி முகம் திருப்பிக் கொள்ள,

அவளைத் தோளோடு அணைத்தவன், "அக்கா, உன்கிட்டே தான் முதல்ல சொல்லுறதா இருந்தேன். எக்ஸாம் முடியட்டும்ன்னு நினைச்சேன். அதுக்கு நடுவிலே இப்படி ஆகிடுச்சு. சாரிக்கா. நான் உன் செல்லத் தம்பி தானே. பிழைச்சுப் போடான்னு என்னை மன்னிச்சு விட்டுடுவியாம்" என்றான்.

அவனது கையைத் தட்டிவிட்டவள், "போடா. நான் ஒண்ணும் இதை மன்னிக்கவும் மாட்டேன். மறக்கவும் மாட்டேன்" என்றதும்,

அவர்களது உரையாடலைக் கைப்பேசி வாயிலாகக் கேட்டுக் கொண்டிருந்த நிவேதா பயந்து போனாள். அச்சோ அக்கா தம்பிக்கிடையிலே பிரச்னையை உண்டு பண்ணிட்டோம் போலவே என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கும்போதே,

"அடுத்த தடவை நானும் என் விஷயம் எதையாச்சும் ஊருக்கெல்லாம் சொல்லும்போது தான் உன்கிட்டே... ஹூம் கடைசியா தான் உன்கிட்டே வந்து சொல்லுவேன்" என்று காயத்ரி அலட்டிக் கொண்டாள்.

தமக்கையின் குரலில் தெரிந்த செல்ல கோபத்தை ரசித்துச் சிரித்தவன், "ஓ! அப்படியாக்கா. கடைசியில தான் சொல்லுவியா? அதையும் பார்ப்போமா?" என்று சவால் விடவும்,

"நான் இப்படி ஏமாளியா இருக்கப் போய் தானேடா என்னிடம் மறைச்சுட்டே. நான் சில விஷயத்தை உன் மாமா கிட்டேச் சொல்லும் முன்னாடி கூட உன்னிடம் சொல்லி இருக்கேன் தெரியுமா. ஆனால் நீ..." என்று சொல்லி நிறுத்த,

தனது புன்னகையைக் கைவிட்டவன் தமக்கையின் அருகில் வந்து, "அக்கா என்னைப் பாரு" என்று அவளது முகத்தைத் தன் பக்கம் திருப்பி அவளது கண்களைப் பார்த்துக் கொண்டே,

"நான் கண்டிப்பா எக்ஸாம் முடிஞ்ச அன்னைக்கு உன்னிடம் வந்து சொல்லிட்டுத் தான் ஊருக்கு பஸ் ஏறணும் என்று இருந்தேன். உனக்கு அப்புறமாத் தான் அப்பா அம்மாக்கே விஷயம் சொல்லலாம்ன்னு இருந்தேன். ஆனால் சந்தர்ப்பம் அப்படி அமையலை. நான் உன் தம்பி... என்னை நம்புக்கா" என்றான்.

அவள் அப்பொழுதும் சமாதானம் ஆகாமல் இருக்கவும் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மகேஷிடம், "என் மாமா எனக்குச் சப்போர்ட் பண்ணிப் பேசாமல் இப்படி அமைதியா வேடிக்கைப் பார்த்துக்கிட்டு இருக்கீங்க?" என்று அவனை வம்புக்கு இழுத்தான்.

"எதுக்குப்பா? நீ யார் எங்களுக்கு நடுவிலே அப்படின்னு நீங்க ரெண்டு பேரும் என்னை நடுவிலே கழட்டி விடுறதுக்கா? நீங்களே முட்டி மோதிக்கோங்க" என்று ஒரு சிரிப்புடனே மகேஷ் சொன்னதும்,

"ஃபிளைட் அப்பவே வந்து இருக்குமே? என்ன இவ்வளவு லேட்டா வரீங்க?" என்று ராஜீவ் பேச்சை மாற்ற,

"இவ தான்டா. உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணத்துக்கு செயின் கிஃப்ட்டாக் கொடுக்கணும்னு சொன்னாள். அதான் நகைக் கடைக்குப் போயிட்டு வர லேட் ஆகிடுச்சு." என்று சொன்ன மகேஷ் ஓரக் கண்ணால் தன் மனைவியைப் பார்த்துக் கொண்டே,

"நான் கூட ராஜீவ் தான் தன் லவ்வைப் பத்தியே நம்ம கிட்ட எதுவும் சொல்லலையே! அவனுக்கு எதுக்கு கிஃப்ட்ன்னு நினைச்சேன்..." என்று சொல்லி முடிக்கும் முன்பே,

"உங்களுக்கு அப்படி வேற எண்ணம் இருந்துச்சா? எனக்கு இருக்கிறது ஒரே தம்பி. அவனுக்கு நான் செய்யாமல் வேற யார் செய்வா? ஏதோ என்னிடம் சொல்லாமல் விட்டுட்டான் என்பதற்காக அவனை விட்டுக் கொடுத்திடுவேன் என்று நினைச்சீங்களா?" என்று காயத்ரி சிலிர்த்துக் கொண்டதும் இரு ஆண்களுமே சிரித்து விட்டனர்.

காயத்ரியைத் தோளோடு அணைத்து விடுவித்த ராஜீவ், "நான் உன்னிடம் சொல்லாததுக்கு சாரி. நீ என்னைப் புரிஞ்சுக்கிட்டதுக்கு தாங்க்ஸ்" என்றான்.

"நாங்க போய் நிவேதாவைப் பார்த்துப் பேசிட்டுத் தூங்கப் போறோம்" என்று காயத்ரி சொன்னதும் தான் நிவேதா லைனில் இருப்பதே ராஜீவிற்கு ஞாபகம் வந்தது.

"அக்கா தயவு செய்து திரும்பவும் நீ அந்தக் கரடி வேலையைப் பார்க்காதே. நானும் அவளும் கொஞ்ச நேரம் ஃப்ரீயாப் பேசணும்."

"திரும்பவும் என்றால்? இவ்வளவு நேரம் அவகிட்டே தான் பேசிக்கிட்டு இருந்தியா? நான் வந்ததால தான் கட் பண்ணிட்டியா?"

"இல்லை. கட் பண்ணலை..."

"என்னது கட் பண்ணலையா? அப்போ இவ்வளவு நேரமும் நான் போட்ட சண்டையை அவளுக்கு லைவ்வா ஒட்டிக் காண்பிச்சியா? என்னைப் பத்தி என்ன நினைப்பாள்? ரொம்ப நல்லா அறிமுகப்படுத்துறடா ராஜீவ்!"

"அக்கா, நான் அவ லைனிலே இருப்பதை மறந்துட்டேன். அவ மட்டும் என்ன சாதுவா? பெரிய சண்டைக் கோழி தான். அதனால லூசிலே விடு. பெருசு பண்ணாதே. நேராப் போய் உன் ரூமிலே தூங்கு. அவ ரூம் பக்கம் போகாதே" என்று கூறி அவளுக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

மகேஷ் சிரித்துக் கொண்டும், காயத்ரி முறைத்துக் கொண்டும் அந்த இடம் விட்டு நகர்ந்தார்கள்.

தனது கைப்பேசியைக் காதில் வைத்து ராஜீவ், "ஹலோ!" என்றதும்,

"நான் உங்களுக்குச் சண்டைக்கோழியா?" என்று நிவேதா சிணுங்கினாள்.

'இவள் இப்படிச் சிணுங்கியே என்னைச் சிதறடிச் சிடுவாள் போல!' என்று ராஜீவ் எண்ணிக் கொண்டிருக்க...

அவன் பதில் சொல்லும் முன்பே, "உங்க அக்கா சமாதானம் ஆகிட்டாங்களா ராஜ்? ரொம்பக் கோபப்பட்டாங்களா?" என்று கேட்டாள்.

"இதுக்கு நான் எங்க அக்காவையே உன் ரூமுக்கு அனுப்பி இருப்பேன். உனக்கு என் கூடப் பேச வேற

விஷயமே இல்லையா?" என்று அலுத்துக் கொண்டவன், "அப்போ நாம பேச்சை எதிலே விட்டோம்?" என்று கேட்டான்.

மறுபடியும் யாரோ மாடி ஏறி வரும் சத்தம் கேட்டு, "நிவி, யாரோ வராங்க. நான் உன் கூடத் தனியாப் பேசணும்னு மொட்டை மாடிக்கு வந்தேன். என்னைத் தேடப் போறாங்களேன்னு எங்க அம்மாகிட்டே விஷயத்தைச் சொல்லிட்டு வந்தேன். அது தான் தப்பாப் போச்சு. என் பிள்ளை மாடியில்தான் இருக்கான் என்று சொல்லி ஒவ்வொருத்தரா மேலே அனுப்புறாங்க. இப்போதைக்கு நம்மால ஃப்ரீயாப் பேச முடியாது. நீ தூங்கு. குட் நைட்" என்றான்.

ராஜா என்று சுந்தரத்தின் குரல் பின்னணியில் கேட்கவும் நிவேதா குறும்புடன், "குட்நைட் ராஜ். ஸ்வீட் ட்ரீம்ஸ்" என்று சொல்லி போனில் ஒரு முத்தம் கொடுத்தாள்.

தந்தையை முன்னால் வைத்துக் கொண்டு அவன் ஒன்றும் சொல்லவோ செய்யவோ முடியாமல் தவித்தான்.

"எனக்குக் கிஸ் கொடுக்க மாட்டீங்களா ராஜ்?" என்று அவள் சிரித்துக் கொண்டே கிசுகிசுப்பாய் கேட்க வேறு செய்தாள்.

அவளது சிரிப்பே அவளது குறும்பை எடுத்துக் காட்டியது. கொஞ்ச நேரத்திற்கு முன்பு அம்மா அவளைக் கூப்பிட்ட போது நாம வம்பு பண்ணினோம்னு நம்மை இப்போ பழி வாங்கப் பார்க்கிறாள் எனப் புரிந்து கொண்ட ராஜீவ்,

தனது தந்தையிடம் கைப்பேசியில் பேசிவிட்டு வருகிறேன் என்பதுபோல் சைகை செய்து விட்டு

அவருக்கு முதுகு காண்பித்து மொட்டை மாடியின் அடுத்த கோடிக்கு நடந்து சென்று.

''ஸ்வீட் டிரீம்ஸ்டா நிவி'' என்று சொல்லி அழுத்தமாக முத்தமிட்டு கைப்பேசியை அணைத்தான்.

ராஜீவின் அந்த முத்தச் சப்தம் கூட தனது உச்சி முதல் உள்ளங்கால் வரை சிலிர்க்கச் செய்யும் என்பதை உணர்ந்து ஆச்சரியம் அடைந்தாள். தலையணையில் முகம் புதைத்து இன்பக் கனவுகளில் மூழ்கினாள்.

8



மணமக்கள் இருவருக்கும் மறுநாள் காலை பரபரப்பாக விடிந்தது. காலை எழுந்து அவள் குளித்து முடித்துத் தயாராகிக் கொண்டிருக்கும்போதே காயத்ரி உள்ளே வந்தாள்.

''வாங்க அண்ணி! உங்க கோபம் போயிடுச்சா? சாரி அண்ணி, என்னால தான் இப்படி ஆகிடுச்சு'' என்று வரவேற்று ராஜீவின் செயலுக்கு விளக்கம் சொன்ன நிவேதாவைப் பார்த்த கணமே காயத்ரிக்குப் பிடித்துப் போனது. கோடீஸ்வர குடும்பத்துப் பொண்ணு எப்படி இருப்பாளோ என்ற தன்னுடைய பயத்தைப் பொய்யாக்கியவளை வாஞ்சையாய் அணைத்துக் கொண்டாள்.

''ம்ம்ம் இப்போ புரியுது. இத்தனை வருஷமா என் தம்பி ஏன் காத்திருந்தான் என்று. இப்படி ஒரு தேவதை வருவாள்ன்னு தெரிஞ்சு தான் நாங்க கல்யாணத்தைப் பத்தி பேசும் போதெல்லாம பிடி கொடுக்காமல் பேசி இருக்கான் போல!'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

''ஹாய் அத்தை! எழுந்துட்டீங்களா?'' என்று கேட்டுக் கொண்டே மதுமிதா உள்ளே நுழைந்தாள்.

அவளைத் தன்னருகே இழுத்துக் கொண்ட நிவேதா, ''வாங்க மது மேடம். நீங்க எப்படி இருக்கீங்க? உங்க பிரண்டு ப்ரீத்தி எப்படி இருக்காள்?'' என்று கேட்டதும்,

''ஹேய்! உங்களுக்கு என் பிரண்டு பத்தி கூடத் தெரியுமா?'' என்று ஆச்சரியமாக மதுமிதா கேட்கவும்,

''உன்னைப் பத்தி எல்லாம் தெரியுமே. உனக்கு என்ன விளையாடப் பிடிக்கும்ன்னு கூட அத்தைக்குத் தெரியுமே. நாம ரெண்டு பேரும் சேர்ந்து விளையாடலாம்'' என்று அவளைக் கொஞ்சவும் மதுமிதா சந்தோஷத்துடன் தன் அத்தையைக் கட்டிக் கொண்டாள்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது ராஜீவ் அவர்கள் அருகே வந்தான்.

''டேய் தம்பி! இங்கே உனக்கு என்னடா வேலை? ஓடு ஓடு!'' என்று காயத்ரி அவனைப் பொய்யாய் மிரட்ட,

''நான் என் வைஃபை சைட் அடிக்க வந்தேன்'' என்று மதுமிதாவின் காதில் விழாதவாறு தன் அக்காவின் காதில் கிசுகிசுத்தவன் பின் சத்தமாக, ''என் வைஃப் எப்படிக்கா இருக்காள்?'' என்று கேட்டான்.

''டேய்! சத்தமாச் சொல்லாதேடா. நானே என் மாமியார் இந்த அவசரக் கல்யாணத்தைப் பத்தி ஏதாச்சும் தப்பாச் சொல்லிடுவாங்களோன்னு பயந்து போய் இருக்கேன். இதுல நீ வேற...'' என்று அவள் பயந்து போய் அலற...

''அம்மா, பாட்டி வராங்க!'' என்று மதுமிதா சொல்லவும், நிவேதா அவளிடம் குனிந்து.

"யாருடா மது உங்க பாட்டி?" என்று கேட்டாள்.

மது அவளது பாட்டியைச் சுட்டிக் காட்டவும் நிவேதா சட்டென்று அந்த இடம் விட்டு நகர்ந்து அவரை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

காயத்ரி தன் தம்பியின் காதில், "டேய்! இவ எங்கடா போறா?" என்று பீதியுடன் கேட்க,

"அக்கா அவ ஒரு அதிரடி. எப்போ என்ன செய் வாள்ன்னு யாருக்கும் தெரியாது. என்னையவே நேற்று கார்னர் பண்ணிக் கையெழுத்துப் போட வைச்சவ ளாச்சே! என்ன வேணா செய்வாள்."

"டேய்! நீ வேற பீதியைக் கிளப்பாதே. எனக்குப் படபடன்னு வருது" என்று காயத்ரி புலம்பினாள்.

மகேஷின் தாய் யசோதாவுடன் பேசிக் கொண்டிருந் தார். இல்லையில்லை கேள்வி மேல் கேள்வியாய் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவர் தன் சம்பந்தி யசோதாவிடம், "ஏன் சம்பந்தி, இப்படிக் கல்யாணப் பத்திரிகைகூட அடிக்காமல் அவசர அவசரமாக உங்க பையனுக்குக் கல்யாணம் பண்ணனும் என்று என்ன அவசியம் வந்துச்சு? இவளை விட்டா ஊர் உலகத்திலே வேற பொண்ணா கிடைக்காது. நாங்க சம்பந்தம் பண்ணின பிறகு உங்க வீட்டிலே நடக்கப் போற முதலும் கடைசியுமான கல்யாணம். அதுக்கு முறைப்படி நாங்க இருக்கிற இடம் தேடி வந்து கல் யாணத்துக்குப் பத்திரிகை வைச்சு நீங்க எங்களைக் கூப்பிட வேண்டாமா? நீங்க என்னடான்னா நாளைக்குக் கல்யாணம்ன்னு போன் பண்ணிக் கூப்பிடறீங்க! என் மகனும், மருமகளும் எங்களையும் சேர்த்து இழுத்துக் கிட்டு ஃபிளைட் பிடிச்சு ஓடி வராங்க! இதெல்லாம்

நல்லாவா இருக்கு? இன்னைக்கே இந்தக் கல்யாணம் நடக்கணுமா என்ன?" என்று கோபமாய் அலுத்துக் கொண்டார்.

'ஐயோ இவர் வேற அச்சானியமாய் எதையாச்சும் சொல்லிவிடப் போகிறார். என் பையன் கல்யாணத் துக்கு இன்னைக்கே என்ன அவசியமா? நேற்றே சட் டப்படி கல்யாணம் ஆன விஷயம் தெரிஞ்சால் வானத் துக்கும் பூமிக்கும் குதிப்பாரோ?' என நினைத்து யசோதா பயந்தார்.

யசோதா பதில் பேசாதது மகேஷின் தாய்க்கு இன்னும் வசதியாய் போயிற்று. அவர் மேலும்,

"உங்களுக்கு இருக்கிறது ஒரே பையன். அவன் கல்யாணத்தை ஊர் உலகத்தைக் கூட்டி ஜாம் ஜாம்ன்னு நடத்தணும்ன்னு உங்களுக்கு ஆசை இல்லையா? இப் படியா காலிலே வெந்நீரைக் கொட்டினது போல அவ சரப்படுவீங்க?" என்று கேட்டார்.

'என் பையன் கல்யாணம். அவன் இஷ்டப்படி நடக்குது. நாங்களே பெருசாக் கண்டுக்கலை. நீங்க ஏன் தவிக்குறீங்க?' என்று தன் சம்பந்தியிடம் யசோதா கேட்கத் தான் நினைத்தார். நினைக்க மட்டுமே செய்தார். பொண்ணைக் கட்டிக் கொடுத்த சம்பந்தியிடம் இது மாதிரி கேட்டு விட முடியுமா என்ன?

மகேஷின் தாய் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் யசோதா தடுமாறிக் கொண்டிருக்கும் போது தான் நிவேதா அவர்களை நோக்கி வந்தாள். தங்களை நோக்கி வந்த நிவேதா யாரிது என்பது போல் மகேஷின் தாய் பார்வையிட்டார். சம்பந்தியம்மாள் அடுத்து என்ன கேட்கக் கூடுமோ என்று ஒரு

திகிலுடனே அவரிடம் பேசிக் கொண்டிருந்த யசோதாவும் நிவேதாவைப் பார்த்துக் குழம்பினார்.

நிவேதா நேராக மகேஷின் தாயின் காலில் விழுந்து, ''என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கம்மா!'' என்றாள்.

அவர், ''நல்லா இரும்மா!'' என்று ஆசீர்வதித்து அவளைத் தூக்கி நிறுத்தியதும்,

''நான் தான்மா கல்யாணப் பொண்ணு நிவேதா. எங்க அப்பா எனக்கு வசதியா மாப்பிள்ளை பார்த்து வைக்கக் கிட்டு அவரைத் தான் கல்யாணம் பண்ணனும்னு கட்டாயப்படுத்துறார். ஆனால் நான் உங்க வீட்டுப் பையனை லவ் பண்ணிட்டேனே! என்னால எப்படிம்மா வேற ஒருத்தரைக் கல்யாணம் பண்ண முடியும்? அதான் இந்த அவசரக் கல்யாணம். எனக்கு அம்மாவா இருந்து நீங்க தான் இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்கணும்'' என்று தன்மையாகச் சொல்ல... அவர் அப்படியே குளிர்ந்து போனார்.

''அதுக்கென்னம்மா. நானும் என் வீட்டுக்காரரும் உனக்கு அம்மா, அப்பாவா இருந்து இந்தக் கல்யாணத்தை முடிச்சி வைக்கிறோம்'' என்று சொன்னவர் யசோதாவிடம் திரும்பி, ''பொண்ணு அடக்க ஒடுக்கமா குணசாலியா இருக்காள். நம்ம ராஜீவ் கொடுத்து வைச்சவன்'' என்றார்.

யசோதாவிற்கு பெருத்த நிம்மதி வந்து சேர்ந்தது. தன் மருமகளின் சாமர்த்தியத்தை நினைத்துப் பெருமிதமும் உண்டானது.

நிவேதா அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''தாங்க்ஸ் மா. இந்த உதவியை நான் என்னைக்குமே

மறக்க மாட்டேன்!'' என்று சொல்லிவிட்டுத் திரும்பியவள் காயத்ரியைப் பார்த்துக் கண்ணடித்தாள்.

ராஜீவும், காயத்ரியும் தங்களது முகம் மாறாமல் காக்க அரும்பாடுபட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கு நேரே தானே காயத்ரியின் மாமியார் நின்று கொண்டிருந்தார்.

அவள் அறைக்குள் செல்வதற்கு ராஜீவைக் கடக்கும் போது, ''எப்பூடீ?'' என்றாள்.

அவன் தன் வாய் மேல் கை வைத்து மறைத்துக் கொண்டே, ''சூப்பர்'' என்றான்.

காயத்ரியும், ராஜீவும் மனதுக்குள் சிரித்தபடியும், நிவேதாவின் சாமர்த்தியத்தை மெச்சியபடியும் அங்கிருந்து அகன்றார்கள்.

''செமையா கலக்கிட்ட நிவி. ஆமா முதலிலேயே அவங்களிடம் இது மாதிரி சொல்லணும் என்று முடிவு செஞ்சு வைச்சிருந்தியா?'' என்று அறைக்குள் இருந்த நிவேதாவிடம் சுமித்ரா கேட்கவும்,

''அப்படி எல்லாம் இல்லை. உங்க அம்மா அப்பாவைத் தான் நிக்க வைக்கணும் என்று நினைச்சிருந்தேன்..'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள் தனது பெற்றோர்களின் நினைப்பில் கண் கலங்கினாள்.

''எங்க அம்மாவும், அப்பாவும் இருந்து செய்ய வேண்டியது. ஆனால் இப்போ...'' என்று சொன்னவள் தனது கண்ணீரையும் துக்கத்தையும் மறைக்கப் படாதபாடு பட்டாள்.

பவித்ராவும் சுமித்ராவும் ஆளுக்கு ஒரு பக்கமாக நின்று அவளை அணைத்துக் கொண்டனர்.

சுமித்ரா மெதுவாக, ''உங்க அம்மாவிடம் பேசினாயா நிவி?'' என்றாள்.

"எங்க அப்பா மொபைலுக்கு நிறைய தடவை முயற்சி பண்ணினேன். அவர் எடுக்கலை. அம்மாவைக் கூப்பிடலை. கூப்பிடவும் மாட்டேன்."

"என்ன நிவி அப்படிச் சொல்லுறே?"

"நேத்து ராஜு பத்தி விஷயம் தெரிஞ்சவுடன் எங்க அம்மா அமைதியாத்தான் இருந்தாங்க. ஒரு வார்த்தை கூட எனக்கு ஆதரவாச் சொல்லலை. அவங்க என் அப்பாவை மீறிச் சொல்லவும் மாட்டாங்க. இப்போ நான் போன் பண்ணி எங்க அம்மாகிட்டே பேசினேன் என்று வைச்சுக்கோங்க. இதனால எங்க அம்மாக்கும், அப்பாக்கும் இடையிலே சண்டை வர வாய்ப்பு இருக்கு. அது மட்டும் நடந்திடவே கூடாது. எங்க அப்பாவிடம் போய் நான் முக்கியமா இல்லை என் அம்மா முக்கியமா என்று கேள்வி கேட்டால் அவர் கொஞ்சம் கூட யோசிக்காமல் என் பேரைத் தான் சொல்லுவார். இப்போ நானும் இல்லாமல்... பக்கத்திலே இருக்கிற என் அம்மா கூடவும் என் டாடி சண்டை போட்டுக்கிட்டு இருந்தால்... அவர் நிலைமை ரொம்பவே பாவம் இல்லையா? இன்னும் கொஞ்ச நாளைக்கு அவங்களே தான் ஒருத்தருக்கு ஒருத்தர் ஆதரவா இருந்து ஆகணும்.

நான் கொஞ்சம் கொஞ்சமாத் தான் என் அப்பாவை என் பக்கம் இழுக்கணும். ராஜின் உதவியுடன் இதை நான் நடத்திக் காட்டுவேன்" என்று குரலில் உறுதிபடக் கூறினாள்.

இந்த விஷயத்தில் கணவனின் துணை தனக்குக் கிடைக்கப் போவதில்லை என்பதை அறியாமல் தன் தோழிகளிடம் எதிர்காலம் குறித்து நம்பிக்கையுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

நிவேதாவின் அழகுக்கு அழகு சேர்க்கவென்று அழகு நிலையத்தில் இருந்து பெண்கள் வந்திருந்தார்கள்.

கோவிலில் திருமணம் என்பதால் வீட்டிலேயே முஹூர்த்தப் புடவையை அணிந்து வருமாறு கொடுத்து விட்டுச் சென்றார்கள். ஆரஞ்சு வண்ணப் புடவையில் தங்க ஜரிகைகள் மின்னியது. அதை உடுத்திய நிவேதா தங்கப் பாவை என ஒளிர்ந்தாள்.

"வாவ்வ்வ் நிவி! எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா? அண்ணன் தாலி கட்டுற வரைக்கும் ஸ்டெடியா இருப்பாரா?" என்று சுமித்ரா கண்ணடித்துக் கேட்டதும் நிவேதா ராஜீவின் நினைவில் வெட்கம் அடைந்தாள்.

அவளைக் கோவிலுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே மணமேடையில் பட்டு வேஷ்டி சட்டையில் அமர்ந்திருந்த ராஜீவை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே மணமேடைக்குச் சென்று அவனருகே அமர்ந்தாள். உட்கார்ந்ததும் ராஜீவை நிமிர்ந்து பார்க்க அந்த நொடி அவனும் அவளைப் பார்க்க இருவரும் புன்முறுவல் பூத்தனர்.

நல்ல நேரத்தில் ராஜீவ் அவளது சங்குக் கழுத்தில் தாலி கட்டினான். முதல் இரண்டு முடிச்சுக்களை அவன் போட மூன்றாவது முடிச்சை அவனது அக்கா காயத்ரி போட்டாள்.

தாலி கட்டும்போது ராஜீவ் கடவுளிடம், 'என்னை மட்டுமே நம்பி வந்திருக்கும் இவளைக் கடைசிவரைக் கண் கலங்காமல் காப்பாற்ற நீயே துணை புரிய வேண்டும்!' என்று வேண்டிக் கொண்டான்.

நிவேதா 'முருகா! இத்தனை நாள் என்னைப் பாசமாக வளர்த்த என் அம்மா அப்பாவை எதிர்த்துக் கல்யாணம்

பண்ணுகிறேன். சீக்கிரமே அவங்களோட ஆசீர்வாதம் எனக்குக் கிடைக்க நீயே அருள் புரிய வேண்டும்!' என்று வேண்டினாள்.

தாய் தகப்பனை நினைத்ததும் அவளது கண்களில் கண்ணீர் திரண்டு அது கன்னங்களில் உருண்டோடியது.

முன் வரிசையில் அமர்ந்திருந்த பாட்டி ஒருவர், ''கவலைப்படாத தாயி. உங்கப்பாவும் அம்மாவும் உன்னைச் சீக்கிரமா ஏத்துக்குவாங்க. எங்க வாத்தியார் மவனைப் போல புருசன் கிடைக்க நீ குடுத்துத் தான் வைச்சிருக்கணும். அழுவாத தாயி'' என்றார்.

ராஜீவ் அவளது கையை அழுத்திக் கொடுக்க... என்னை நானே கட்டுப்படுத்திக் கொள்கிறேன் என்னும் விதமாய் தலையாட்டினாள்.

திருமணம் முடிந்து வீட்டிற்கு வந்து பந்தி முடிந்ததும் வந்தவர்கள் ஒவ்வொருவராகக் கிளம்ப ஆரம்பித்தார்கள். சாப்பிடும் வரை தான் ராஜீவ் அவளருகில் இருந்தான். அதன் பின்பு அவனைக் காண முடியவில்லை.

இது கிராமம். இனி அவரை இரவு தான் காண முடியும் போல என்று எண்ணிக் கொண்டாள்.

தோழிகளும் விடைபெற்றுச் சென்றதும் தனிமையில் இருப்பது கொடுமையாக இருந்தது. காயத்ரியும் யசோதாவும் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

மதுமிதா தான் அவ்வப்போது எட்டிப் பார்த்துத் தன் அத்தையிடம் பேசுவதும் பின்பு பாட்டிக்கு உதவி செய்வதுமாய் இருந்தாள். புதுப் பெண் என்று சொல்லி இவளை வேலை செய்யவும் விடவில்லை.

இல்லாவிட்டாலும் உனக்கு என்ன வேலை செய்யத் தெரியும் நிவேதா என்று அவளது மனம் அவளைக் கேலி செய்தது.

மாலை ஆன போது வீடு காலியாக ஆரம்பித்தது. மகேஷ் தனது பெற்றோரைக் கூட்டிக் கொண்டு சென்று விட்டான். காயத்ரியும், மதுமிதாவும் தான் தங்கி இருந்தார்கள். அவர்கள் இருவரும் ஞாயிறன்று சென்னை செல்வதாக முடிவு பண்ணியிருந்தார்கள்.

''ஹைய்யா! மாமா வந்தாச்சு'' என்று மதுமிதாவின் குரல் கேட்டு அறைக்குள் அமர்ந்திருந்த நிவேதாவிற்கு சந்தோஷமாக இருந்தது. வெளியே சென்றவன் திரும்பி விட்டான். ஆனால் அவனை இப்பொழுதே தனியாகச் சந்திக்க முடியுமா என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது. ஆனால் அவனே அவளைத் தேடி நேராக அறைக்குள் வந்தான். அது வரை அவனது வரவிற்காக ஆவலும் வெட்கமுமாகக் காத்திருந்த நிவேதாவிற்கு கணவனது முகம் குழப்பத்தையே தந்தது.

''ராஜ், இவ்வளவு நேரமும் எங்கே போனீங்க?'' என்று கேட்டதற்குப் பதில் சொல்லாமல் அவன் அந்த அறையின் கதவை அடைத்து விட்டுத் திரும்பினான்.

அவனது வருத்தமான முகபாவனை அவளை வேறு விதமாய்ச் சிந்திக்கவிடவில்லை.

''என்னாச்சு ராஜ்? ஏதாச்சும் பிரச்சனையா?'' என்று மெதுவாக இழுக்கவும்.

அவன் ஒன்றும் சொல்லாது அவளைக் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு படுக்கைக்குச் சென்று அமர்ந்தான். அவளைத் தன் மடி மீது அமர வைத்துக் கொண்டவன் அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டு அவளை அணைத்த வண்ணம் அமைதி காத்தான்.

நிவேதாவிற்குத் தனது கணவன் தனக்கு வருத்தம் அளிக்கக் கூடிய ஏதோ ஒரு விஷயத்தை சொல்லப்

போகிறான் என்று புரிந்து போனது. மனம் படபடக்க ஆரம்பித்தது. சில நிமிடங்களுக்குப் பின் அவளது கைகளைத் தனது கைகளுக்குள் அழுத்திக் கொடுத்துக் கொண்டே அவளது காதில் மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

"நிவி, நான் இப்போ சென்னைக்குக் கிளம்புறேன்டா!" என்று சொன்னதும் சரேலெனத் திரும்பி அவனின் முகம் பார்க்க அவளது முடியை ஒதுக்கிவிட்டுக் கொண்டே அவன் தொடர்ந்து பேச ஆரம்பித்தான்.

"உனக்குத் தான் தெரியுமேடா. எனக்கு எல்லாமே எக்ஸாம் இருக்குன்னு. அதனால நான் அவசியம் போயாகணும்."

"அது அடுத்த வாரம் தானே? திங்கட்கிழமை தானே?"

"அடுத்த வாரம் தியரி பேப்பர்ம்மா. நாளைக்கு பிராக்டிகல்ஸ். இப்போ கிளம்பினாத்தான் காலையிலே அங்க போய் குளிச்சுக் கிளம்பச் சரியா இருக்கும்."

"நானும் வரேன் ராஜு."

"வந்து... எங்கே தங்குவே? நான் இவ்வளவு நாளும் பசங்க கூட ஒண்ணா இருந்தேன். உன்னை அங்க கூட்டிட்டுப் போக முடியாது."

"அப்போ ஹோட்டலில் தங்கிக்குவோமா? இல்லைன்னா சுமோத் அண்ணா வீட்டிலே?"

"அதெல்லாம் சரியா வராதுடா. நான் எல்லாத்தையும் யோசிச்சுப் பார்த்து தான் முடிவு பண்ணி இருக்கேன்."

"உங்களுக்கு என்னைக்கு எக்ஸாம் முடியுது?"

"அடுத்த வெள்ளிக்கிழமை நிவி."

"ஒரு வாரம் நான் இங்க தனியா இருக்கணுமா? நான் வேணா காயத்ரி அண்ணி வீட்டில்..." என்று தொடங்கியவள், "ம்ஹூம். அது சரி வராது. அவங்க மாமனார் மாமியார் கூட ஒண்ணா ஒரே வீட்டிலே இருக்காங்க தானே! நான் எப்படி ராஜு இங்கே ஒரு வாரம் இருப்பேன்? அம்மா வீட்டிலே..." என்று தொடங்கியவள், "ப்ச. அங்கே தான் போக முடியாதே. அப்பாக்கூடப் பேச டிரை பண்ணினேன் ராஜு."

"என்ன சொன்னார் உன் டாடி?"

"என் நம்பரில் இருந்து கூப்பிட்டால் எடுக்க மாட்டாருன்னு புது நம்பரிலே இருந்து போட்டேன். எனக்குக் கல்யாணம் முடிஞ்சிருச்சு டாடின்னேன். அதுக்கு..." என்று தொடங்கியவள் சொல்லாமல் நிறுத்த...

"என்ன சொன்னார்? உன்னைத் திட்டினாரா? இல்லை என்னையா?" என்றான்.

அவள் அமைதி காக்கவும்... "சும்மா மறைக்காமல் சொல்லு" என்று வற்புறுத்தவும்,

"கண்ட பரதேசியைக் கட்டிக்கிட்டு நீ எப்படி சந்தோஷமா இருக்கேன்னு நானும் பார்க்கிறேன் அப்படின்னு சொல்லி வைச்சிட்டார்" என்று தீனமான குரலில் கூறியவளின் தலை கவிழ்ந்தது.

கண் மூடி சில நொடிகள் அமைதி காத்தவன், "ஒண்ணு சொல்லுறேன். நல்லா கேட்டுக்கோ நிவி. உனக்கு நான் முக்கியம்ன்னு நீ நினைச்சா உன் அப்பாகிட்டே நீ இன்னைக்குப் பேசினது தான் லாஸ்ட்."

"என்ன ராஜு இப்படிச் சொல்லுறீங்க. அவர் கோபத்திலே ஒரு நியாயம் இருக்கு தானே! அதுக்காக அப்படியே விட்டுவிட முடியுமா?"

"அது சரி. அவர் என்னைப் பத்தி தானே கேவலமா பேசினார். அது தான் உனக்கு அவர் பேசினது புத்தியிலே பதியலை போல! நீ நல்லா அவர் கூடக் கொஞ்சிக் குலாவு. எனக்கு என்ன வந்துச்சு?"

"இப்ப எதுக்கு ராஜ் நீ நான் என்று பிரிச்சுப் பேச நீங்க?" என்று அழுதுவிடும் குரலில் கேட்டவளிடம்,

"நானாப் பேசலை. நீ தான் என்னைப் பேச வைக்குறே!" என்று கடுப்புடன் கூறியவன் அவளை மடியில் இருந்து நகர்த்திவிட்டு அந்த இடம் விட்டு அகல முற்பட அவனைக் கைப்பிடித்து தடுத்து நிறுத்தியவள்,

"கோபத்தோடு போகாதீங்க ராஜ். அடுத்து உங்களைப் பார்க்குற வரைக்கும் எனக்கு உங்க கோப முகம் தான் கண்ணிலே நிக்கும். அப்புறம் நீங்க இல்லாமல் என்னால இங்கே தனியா சமாளிக்க முடியாது. எதுவா இருந்தாலும் பேசிச் சமாதானம் ஆன பிறகு கிளம்புங்க" என்றாள்.

வெளியே செல்ல எழுந்தவன் வெளியேறாது சுவற்றில் ஒங்கிக் குத்தினான்.

"ராஜ் என்னாச்சு?" என்று அவள் பயந்து போய் கேட்கவும் ஒன்றும் சொல்லாது அங்கிருந்த சாய்வு நாற்காலியில் சென்று அமர்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

இதுவரை ராஜீவ் கோபப்பட்டு அவள் பார்த்ததும் இல்லை. அதை எப்படித் தணிப்பதென்றும் அவளுக்குத் தெரியவில்லை. அவள் கலங்கிய கண்களுடன் அமைதியாக ராஜீவைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

ஐந்து நிமிடங்கள் சென்ற பின் கண் திறந்தவன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த நிவேதாவைப் பார்த்து வா என்று தனது வலது கை நீட்டி அழைக்க

அவள் ஓடிச் சென்று அவன் மடி மீது அமர்ந்து கொண்டு அவன் மீது சாய்ந்து கண்ணீர் விட்டாள்.

அவளது கண்ணீரைத் துடைத்தவன், "நிவி ப்ளீஸ். அழ மட்டும் செய்யாதே. அதுவும் இன்னைக்குக் கண்டிப்பா வேணாம்டா. இது நமக்கான ஸ்பெஷல் டே. எற்கனவே நாம பிரிய வேண்டி இருப்பதே இந்த நாளுக்கான முக்கியத்துவத்தைக் குறைக்குது. நீ அழுது மேலும் அதோட முக்கியத்துவத்தைக் குறைக்காதே. ப்ளீஸ் என்ன சண்டையா இருந்தாலும் நாம இன்னொரு நாளைக்கு ஒத்தி வைச்சுக்கலாம். இன்னைக்கு வேண்டாம். உங்க அப்பாவை நானும் புரிஞ்சுக்க டிரை பண்ணுறேன். எனக்குக் கொஞ்சம் டைம் கொடு. அதுவரைக்கும் நீ அவரிடம் பேசாதே. சரியா?" என்றதும்,

ம்ம் என்ற முனகலோடு தலையாட்டித் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். அவளது கன்னத்தில் முத்தம் பதித்தவன், "நான் கிளம்பட்டுமா?" என்றான்.

அவள் எழுந்து கொண்டாள். நாற்காலியில் இருந்து எழுந்தவன் வெளியே செல்ல இரண்டு எட்டு வைத்தான். அடுத்த அடியை வைக்காமல் அவள் புறம் திரும்பியவன், "சமாளிச்சு இருந்துக்குவே தானே?" என்று வருத்தமும், சந்தேகமுமாய் கேட்க... நிவேதா திடம் பெற்றாள்.

அவனருகே சென்றவள், "ராஜ் நீங்க என்னை உங்க வீட்டிலே தானே விட்டுட்டுப் போறீங்க. காட்டுலேயா விட்டுட்டுப் போறீங்க? என்ன ஒண்ணு... புது இடம். புது மனிதர்கள். கொஞ்சம் போர் அடிக்கலாம். எப்படியும் அத்தையும், மாமாவும் இங்க தானே ராஜ் இருக்காங்க. நான் சமாளிச்சுக்குவேன். நீங்க என்னைப் பத்தி யோசிக்

காமல் எக்ஸாமை நல்ல படியா எழுதுங்க. நாம வெள்ளிக் கிழமை பார்த்துக்கலாம். நடு நடுவே மறக்காமல் போன் மட்டும் பண்ணுங்க'' என்றாள்.

அவளது கன்னம் தட்டியவன், ''தாங்க்ஸ்டா பை'' என்றான்.

தனது கன்னத்தில் பதிந்திருந்த அவனது கைப்பிடித்து உள்ளங்கையில் முத்தமிட்டவள், ''பை ராஜ். பத்திரமாப் போயிட்டு வாங்க'' என்றாள்.

அவன் அறையை விட்டு வெளியேறினான். காயத்ரி எதிர்ப்பட்டாள். அவனது கைப்பிடித்து அழுத்திக் கொடுத்தாள். அவன் பதிலுக்கு அழுத்திக் கொடுத்துவிட்டு ஒன்றும் பேசாமல் அமைதி காத்தான்.

அதன் பின், ''அக்கா, நீ ஊருக்குப் போகிற வரைக்கும் அவளுக்குக் கொஞ்சம் கம்பெனி கொடுக்கா'' என்றான்.

''நான் பார்த்துக்கிறேன்டா'' என்று காயத்ரி தழுதழுத்தாள். அவளிடமிருந்து விடைபெற்றவன் தாயிடம் வந்தான்.

''ராஜா கவலைப்படாதேடா. சரியாகிடும். நீ பரீட்சையைப் பற்றி மட்டும் யோசி. அதைக் கோட்டை விட்டுடாதேப்பா'' என்றார். அவரிடம் ஒரு ஐந்து நிமிடம் பேசிக் கொண்டிருந்தான்.

''நீங்க ரெண்டு பேரும் உடம்பைப் பார்த்துக்கோங்க'' என்று சொல்லித் தன் தந்தையைப் பார்த்து ஒரு தலையாட்டலுடன் விடைபெற்றான்.

வீட்டின் நுழைவாயிலில் காலை வைத்தவன் திரும்பித் தன் மனைவியின் முகத்தில் பார்வையைப் பதித்தான். அவள் புன்னகை என்ற பெயரில் உதடுகளை இழுத்துக் காட்டவும் வீட்டை விட்டு வெளியேறினான்.

அவன் சென்ற பின் வீட்டில் மயான அமைதி நிலவியது. அவர்கள் ஆளுக்கொரு மூலையில் முடங்கியதால் காலையில் கல்யாணம் நடந்த வீடு போலில்லாமல் களை இழந்து இருந்தது.

எட்டு மணி போல் காயத்ரி நிவேதாவைச் சாப்பிட அழைக்க வந்தாள்.

''இல்லண்ணி...'' என்று நிவேதா மறுக்கத் தொடங்குமே.

''இந்த உலகத்திலே கஷ்டப்படாத மனுஷன் யாரு சொல்லு? ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான கஷ்டம். அதுக்காக எல்லாம் வயித்தைப் பட்டினி போட முடியுமா? வா. வந்து சாப்பிடு. நீ சாப்பிட்டால் தான் நாங்க எல்லோரும் சாப்பிடுவோம்'' என்று வற்புறுத்தி அவளைச் சாப்பிட வைத்தார்.

9



மறுநாள் காலையில் நிவேதாவின் கைப்பேசியில் குறுஞ்செய்தி ஒன்று வந்ததிற்கான ஒலி கேட்கவும் அதைக் கையிலேயே வைத்திருந்தவள் வேகவேகமாகத் திறந்து பார்க்க அது அவள் கணவனிடம் இருந்து தான் வந்திருந்தது. பத்திரமாக சென்னை வந்து சேர்ந்தேன் என்ற செய்தியைப் படித்தவள் உடனே அவனுக்கு அழைத்தாள்.

முதல் அழைப்பு மணியிலேயே எடுத்தவன், ''என்னடா அதுக்குள்ளே முழிச்சிட்டியா? இல்லைத் தூங்கவே இல்லையா?'' என்று வினவினான்.

"ம்ம்ம் இல்லை" என்று பொதுப்படையாய் ஒரு பதில் அளித்தவள், "நீங்க தூங்குனீங்களா ராஜ்?" என்று கேட்டாள்.

அவன் அவளுக்கு மேல் மழுப்பலாய் ஒரு பதில் சொன்னான். இருவரும் சில நொடிகள் அமைதி காக்க... "ராஜீவ்" என்ற குரல் பின்னணியில் ஒலித்தது.

"எனக்கு நேரமாச்சுடா நிவி. நான் கிளம்பணும். அப்புறமாப் பேசட்டுமா?"

"யார் ராஜ் அது? சுமோத் அண்ணாவா? அவர் குரல் மாதிரி இருக்கு?"

"ஆமாடா நிவி. அவன் கூட தான் சென்னைக்கு வந்தேன். டைம் ஆச்சு. பை" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்து விட்டான்.

காயத்ரியின் வற்புறுத்தலின் பேரில் காலைச் சாப்பாட்டை முடித்தாள். காயத்ரி அவளையும் மதுமிதாவையும் அழைத்துக் கொண்டு திருவேடகம் ஏடகநாதர் கோவிலுக்குச் சென்றாள்.

"இந்தக் கோவிலுக்கு இதுக்கு முன்னாடி நீ வந்திருக்கியா நிவேதா? இதோட சிறப்பம்சம் தெரியுமா?" என்ற காயத்ரியின் கேள்விக்கு,

"இல்லையே அண்ணி. இப்போ தான் முதல் முறையா வரேன். என்ன விசேஷம்? உங்களுக்குத் தெரிஞ்சா சொல்லுங்க. கேட்டுக்கிறேன்" என்றாள்.

"சில நோங்களில் அவசர அவசரமாகக் கல்யாணம் நடத்த வேண்டியிருக்கும். நாள் சரியாக அமையாது. அது மாதிரி இக்கட்டான சமயங்களில் நம்ம மனசு சஞ்சலப்படும்.

அவசரப்பட்டு, திருமணம் முடிச்சால் என்னாகு மோன்னு பயமும் இருக்கும். அது மாதிரி கவலைப் பட்டுக்கிட்டு இருக்காமல் ஒரு திருமணப் பத்திரிகையை எடுத்துக் கொண்டு வந்து பத்ரிகா பரமேஸ்வராள ஏடகநாதர் முன்னாடி பாக்கு வெற்றிலை வைச்சு பூஜை செய்யணும். அவரை நம்ம வீட்டுத் திருமணத்துக்கு வரவேண்டுமென மானசீகமாக வேண்டிக் கொள்ளணும். பின்பு ஜாம் ஜாமெனத் திருமணத்தை நடத்த வேண்டியது தான். எந்தப் பிரச்சனையும் வராது அப்படிங்கிறது இந்தக் கோயிலோட சிறப்பம்சம்."

"ஓ அப்ப நாங்க கண்டிப்பா வந்து கும்பிட வேண்டிய கோயில் தான்."

"ஆமாம்மா. முந்தா நாளே அம்மா, அப்பா, ராஜீவ் எல்லோரும் இங்க வந்திட்டுப் போனாங்க. நீங்க மட்டும் தான் பாக்கி. அதான் உன்னையும் இன்னைக்குக் கூட்டிட்டு வந்தேன்."

தங்களது திருமண வாழ்க்கையில் எந்தச் சிக்கலும் வரக்கூடாது என்று நிவேதா பக்தியுடன் வேண்டிக் கொண்டாள்.

வீட்டிற்கு வந்த பின் மதுமிதா அவளது அத்தையை ஒட்டிக் கொண்டு அலைந்ததில் நிவேதாவிற்கு அன்றைய பொழுது வேகமாக ஓடியது என்றே சொல்லலாம்.

காயத்ரி, நிவேதா, மதுமிதா மூவரும் சேர்ந்து கேரம் போர்டு விளையாடினார்கள். வெளியே சென்று வந்த சுந்தரமும் சேர்ந்து கொள்ள ஆட்டம் களை கட்டியது.

அறையில் இருந்து கைப்பேசி அலறவும் நிவேதா வேகமாக ஓடி வந்து எடுத்தாள்.

"சொல்லுங்க ராஜ்!" என்றவளுக்கு மூச்சிரைத்தது.

"என்னடா நிவி பண்ணுறே? இப்படி மூச்சு வாங்குது?"

"நாங்கெல்லாம் விளையாடிக்கிட்டு இருக்கோம் ராஜ். கேரம். உங்க போன் சத்தம் கேட்டதாலே ஓடி வந்து எடுக்குறேன்."

"யாரெல்லாம் விளையாடுறீங்க?"

"அத்தைக்கு விளையாடத்தெரியாதுன்னு சொல்லிட்டாங்க. அதனால நாங்க நாலு பேரும் விளையாடுறோம். இப்ப நீங்க கூப்பிட்டதாலே நான் அத்தையை என் இடத்திலே உட்கார வைச்சிட்டு வந்திருக்கேன். அவங்க சொதப்பாமல் இருக்கணும். சரி நீங்க சொல்ல வந்ததை சீக்கிரமாச் சொல்லுங்க."

"அடிப்பாவி. நேற்று நான் ஊருக்குப் போறேன்னதும் ஒரு பொண்ணு கண்ணைக் கசக்கிட்டு நின்னாளே! அது நீயில்லையா?"

"அது நேற்று. இது இன்னைக்கு. விஷயம் என்னன்னு சொல்லுங்க? அங்க ஆட்டம் போய்க்கிட்டு இருக்கு."

"ஓ! அப்ப நான் போனை வைக்கவா?" என்று காற்றுப் போன பலூனாய் அவன் இழுக்கவும்,

"ஒகே. பை" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தவள் அறை வாயிலை அடைத்துவிட்டு வந்து கணவனுக்கு அழைத்தாள்.

உடனே எடுத்தவன், "யாரோ என்னை போனை வைக்கச் சொன்னாங்க? இப்ப என்ன... அவங்க ஆட்டத்தைக் கலைச்சிட்டுப் போயிட்டாங்களா? உடனே இந்த ராஜ் ஞாபகம் வந்திடுச்சா? சும்மா இருக்கறதுக்கு இவன்கிட்டவாச்சும் பேசுவோம்ன்னு தோணுச்சா?"

என்று அவன் கேள்விகளாக அடுக்க அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

அவள் ஒரு ஹலோ கூடச் சொல்லவில்லை என்பதை அப்பொழுது தான் உணர்ந்த ராஜீவ், "ஹலோ நிவி? லைனிலே இருக்கியா? அழறியா? நிவி... நிவி" என்று கத்தியதும் அதுவரை தனது வாய் மீது கை வைத்துத் தனது சிரிப்பை மறைத்தவள் அடக்க முடியாமல் சிரிக்கவும் ராஜுவிற்கு நிம்மதி உணர்வே தலை தூக்கியது.

"ஹலோ மேடம்! இங்க என்ன காமெடி படமா காட்டுறேன்?!"

"பின்னே என்ன ராஜ். உங்ககிட்டே பேசுறதை விட நான் கேரம் விளையாடுறதையா முக்கியமா நினைப்பேன்? நான் எங்கப்பாவையே உங்களுக்காகத் தூக்கிப் போட்டவள்."

ம்ம்ம் என்று அவன் இழுக்கவும், "என்ன ராஜ் பண்ணிக்கிட்டு இருக்கீங்க?" என்று மெதுவான குரலில் கேட்டாள்.

போனிலே முத்தம் கொடுத்தவன், "என் வைஃபைக் கொஞ்சிக்கிட்டு இருக்கேன்" என்று கிசுகிசுப்பான குரலில் கூறினான்.

"என்னை மிஸ் பண்ணீங்களா?" என்று இவள் இழைய,

"ரொம்ப. உன் ஞாபகமாவே இருந்துச்சு" என்று அவன் வழியவும்,

"அப்போ எக்ஸாம் கோவிந்தாவா? இன்னொரு தடவை எல்லாம் எழுத டைம் தர மாட்டேன். மரியாதையா எழுதி பாஸ் பண்ணப் பாருங்க" என்று மிரட்டினாள்.

"ஹலோ மேடம்! நானெல்லாம் மெரிட் ஸ்டுடண்ட் டாக்கும். குப்பராப் படிப்பேனாக்கும். என்ன இப்பத் தான் நடுவிலே ஒரு பத்து நாள் கொஞ்சம் டைவர்ட் ஆகிட் டேன்."

அவன் தன்னைத் தான் சொல்லுகிறான் என்று புரிந்து கொண்ட நிவேதா, "ஏன் ராஜ்! நான் உங்களை டிஸ்டர்ப் பண்ணிட்டேனா? கல்யாணம்ன்னு சொல்லி அலைய விட்டு நடுவிலே ரெண்டு நாள் உங்களைப் படிக்க விடாமல் பண்ணிட்டேனா?" என்று வருத்தத்துடன் கேட்டாள்.

"அப்படியெல்லாம் இல்லைடா நிவி. நீ ஏன் ஃபீல் பண்ணுறே? என் மனசாட்சி உள்ளிருந்து குரல் கொடுத் துக்கிட்டே தான் இருக்கு. டேய் மடையா! உன்னை நம்பி ஒரு பொண்ணு இருக்கு. அவளை நல்லபடியா வைக்கக் காப்பாத்தணும்ன்னா ஒழுங்கா படின்னு! நான் பாஸ் பண்ணிடுவேன். நீ கவலைப்படாதே."

"உங்க மனசாட்சி ரொம்ப நல்ல மனசாட்சி. உண்மை எல்லாம் சொல்லுது இல்ல ராஜ்?"

அவன் குழப்பத்துடனே, "என்னான்னு சொல்லுது?" என்று கேட்டான்.

"உங்களை மடையன் என்று கரெக்டா சொல்லுது இல்ல. அதைச் சொன்னேன்."

"நீ எப்ப சீரியஸாப் பேசறே. எப்ப காமெடிக்கு மாறு கிறேன்னு புரியலை போ" என்று அலுத்துக் கொண்டான்.

அதைக் கேட்டு அவள் சிரித்தாள். அவர்கள் பேச ஆரம்பித்து அரை மணி நேரம் ஆன போது, "போதும் ராஜ். போய் படிங்க. இல்லைன்னா தூங்கி ரெஸ்ட்

எடுங்க. நான் இதுக்கு மேலே உங்க டயத்தை எடுத்துக்க விரும்பலை" என்று சொல்லி விடை கொடுத்தாள்.

மறுநாள் ஞாயிறன்று மதியம் போல் காயத்ரியும் அவளது பெற்றோரும் சொந்தக்காரரின் வீட்டிற்குச் செல்ல மதுமிதாவும் நிவேதாவும் தனித்து விடப்பட் டார்கள். அந்தப் பெரிய வீட்டில் அவர்கள் இருவரும் ஒடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது மேகம் திரண்டு இடியுடன் மழை பொழிய ஆரம்பித்தது.

அந்த வீட்டு முற்றத்தில் வந்து விழுந்த மழைத் தண்ணீரைப் பார்த்ததும் நிவேதா, "ஹேய்! இது சூப்பர். வீட்டுக்குள்ளேயே சூப்பரா பொய்யுது. மது, நாம மழை யிலே நனையலாமா?" என அவள் தனது மருமகளைக் கூப்பிட்டாள்.

"இல்லத்தை. எனக்கு மழையிலே நனைஞ்சா உடனே ஜூரம் வந்திடும். நான் வரலை" என்று சொல்லி மதுமிதா மறுத்துவிட்டாள்.

"ஓ! அப்படின்னா வராதே. நான் நனையுறேன். எனக்கு ஆசையா இருக்கு" என்று சொல்லி மழையில் இறங்கியவள் நன்றாக ஆட்டம் போட்டாள். பெரிய வர்கள் வீடு திரும்பும் வரை அவளது ஆட்டம் நீடித்தது.

"என்னம்மா நிவேதா! சின்னப் புள்ளை மாதிரி மழையிலே நனைஞ்சிருக்கே. சளி பிடிச்சுக்கப் போகுது. போ. போய் டிரஸ் மாத்து" என்று யசோதா சொன்னதும் மனசே இல்லாமல் அவள் அங்கிருந்து நகர்ந்தாள்.

"ஒவர் வெயில்ல புழுக்கமா இருந்துச்சு அத்தை. மழையில நனைஞ்சது ஜில்லுன்னு செமையா இருந்துச்சு.

அதான்'' என்று விளக்கம் சொன்னவள் தனது அறைக்குச் சென்று உடை மாற்றி வந்தாள்.

அன்று இரவு ரயிலில் மதுவும் காயத்ரியும் சென்னை செல்ல இருப்பதால் அவர்கள் மாலையே அவளிடம் விடைபெற வந்தார்கள்.

''அண்ணி உங்களுக்குத்தான் ஆபீஸ். சென்னைக்குப் போயே ஆகணும். மதுவுக்கு ஸ்கூல் லீவ் தானே. ஜூன் மாசம் தானே ஸ்கூல் தொடங்கப் போகுது. அவ என்னுடன் இருக்கட்டுமே. நான் சென்னைக்கு வரும் போது கூட்டிட்டு வரேன்.''

''இவ எதுக்கு உங்களுக்கு இடையிலே நந்தி மாதிரி? நீ அடுத்த தடவை ஊருக்கு வரும் போது அவளை உன்னுடன் அனுப்பி வைக்கறேன். இந்த தடவை வேண்டாம்'' என்று மறுத்த காயத்ரி மதுமிதாவைத் தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டாள்.

அவர்களும் சென்றதும் நிவேதாவிற்கு பொழுதே போகவில்லை.

இரவு சாப்பாட்டிற்குப் பின் தனது அறைக்கு வந்து அமர்ந்தவளுக்கு மூக்கு நமநமத்தது. தும்மல் வர ஆரம்பித்தது. அவளுக்கு படுத்துத் தூங்க வேண்டும் போல் அசதியாக இருந்தது. சரியாக அந்த நேரம் ராஜீவ் அழைத்தான்.

'இவரிடம் அதிக நேரம் பேசினால் தும்மல் வந்து காட்டிக் கொடுத்துவிடும். நாம மாட்டிக்குவோம்!' என எண்ணியவள், ''ராஜ் நாளைக்கு தானே பார்ஸ்ட் எக்ஸாம். நல்லா படிங்க. நான் உங்களைத் தொந்தரவு பண்ண விரும்பலை. ஆல் தி பெஸ்ட். நாம நாளைக்குப் பேசிக்கலாம்'' என்றதும்,

''சரிடா. நான் நாளைக்கே கூப்பிடுறேன். காலையிலே டைம் இருந்தால் உன்னை கூப்பிடுறேன். இல்லைன்னா மதியம் பேசுவோம்'' என்று சொல்லி வைத்தான்.

காலையில் நிவேதா எழுந்து வரவில்லை. அவளாக எழுந்து வரட்டும். அலுத்துப் போய் தூங்குகிறாள் என நினைத்த யசோதா அவளது அறைப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. மணி எட்டைக் கடந்த போது எதுக்கும் போய் தட்டி எழுப்புவோமா? என நினைத்துச் சென்று அவர் கதவைத் தட்ட வெகு நேரம் பதில் இல்லை.

யசோதாவிற்கு பயம் வந்தது. என்னன்னு தெரியலையே! இந்தப் பொண்ணு கதவைத் திறக்க மாட்டேங்குதே என மனதிற்குள் புலம்பியவராய் தனது கணவனிடம் விஷயம் சொல்ல விரைந்தார். தந்தையை எதிர்த்து நடந்த திடீர் திருமணம் என்பதால் நிவேதா ஏதாவது விபரீதமாகச் செய்து கொண்டாளோ என்று அந்த அப்பாவித் தாய் பயந்து போனார்.

விஷயத்தைக் கேட்ட சுந்தரம், ''நேத்து மழையிலே நனைஞ்சது சேரலையோ என்னவோ? காய்ச்சல் வந்தாலும் வந்திருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே வந்து கதவைத் தட்டினார்.

கணவரது பேச்சினால் 'ஓ! அப்படி இருக்குமோ? வேற எதுவும் எக்குத் தப்பாய் இருக்காது' என நினைத்துப் பயம் அகன்றவராய், ''நிவேதா! அம்மாடி நிவேதா!'' என்று தன் பங்குக்கு யசோதா குரல் எழுப்பினார்.

''இதோ வரேன் அத்தை'' என்று நிவேதா தீனமான குரலில் கூறவும் யசோதா நிம்மதி அடையப் பெற்றார்.

சுந்தரத்தின் கூற்றே உண்மையாயிற்று. நிவேதாவிற்கு நடு இரவிலே காய்ச்சல் வந்தது. இவர்களது தொடர்

தட்டலில் கண் விழித்தவள் ஜூரத்தினால் பலவீனமாய் உணர்ந்ததால் தடுமாறியபடியே வந்து கதவு திறந்தாள். கதவைத் திறந்தவள் அதன் மேலேயே சாய்ந்து கொள்ள யசோதா ஓடிச் சென்று அவளைத் தாங்கிப் பிடித்தார்.

''என்னம்மா இப்படிக் கொதிக்குது?'' என்று கேட்டவர் பயந்து போனார்.

முதலில் சுந்தரம் காய்ச்சலாக இருக்கும் என்று சொன்ன போது விபரீதம் ஏதும் இல்லை என சந்தோஷம் அடைந்த அவரின் மனம் காய்ச்சல் வந்தால் என்று சிந்திக்கவில்லை. இப்பொழுது காய்ச்சல் அனலாகக் கொதிக்கவும் மனம் சங்கடப்பட்டார். அவளை நடத்திச் சென்றுப் படுக்கையில் படுக்க வைத்தார்.

''என்னங்க, காய்ச்சல் இப்படி அடிக்குதே. நம்ம ராஜாக்கு ஒரு போன் பண்ணுவோமா?'' என்று யசோதா கேட்டதும், மறுப்பு இருவரிடம் இருந்து பிறந்தது.

''வேணாம் அத்தை'' என்று மெல்லிய குரலில் நிவேதாவிடம் இருந்தும்,

''அவன் பரீட்சைக்குப் போய்கிட்டு இருப்பான் யசோதா. இப்பப் போய் அவனைச் சங்கடப்படுத்த வேண்டாம்'' என்று சுந்தரத்திடம் இருந்தும் பிறந்தது.

''அப்படின்னா இப்ப என்ன செய்யலாம்?''

''நீ அவளுக்குச் சாப்பிடக் கொடுக்கறதுக்குக் கஞ்சி காய்ச்சுற வேலையைப் பாரு. நான் போய் டாக்டரைக் கூட்டிட்டு வரேன்'' என்று சொல்லிக் கிளம்பினார்.

மருத்துவர் வந்து பரிசோதனை செய்து ஊசி போட்டு மருந்து மாத்திரை எழுதிக் கொடுத்துவிட்டு சாப்பாடு பற்றி ஒரு குட்டிப் பிரசங்கம் முடித்துக் கிளம்பியதும்

யசோதா அவளைச் சாப்பிட வைக்க முயற்சித்தார். ஆம் முயற்சித்தார் தான்.

காய்ச்சலில் படுத்திருந்தவளால் உணவை உட்கொள்ள முடியாமல் போனது. சுருண்டு படுத்தவளைப் பார்த்து மனம் வருந்திய யசோதா, 'இந்தப் பய ஜாதகத்திலே நேரமே சரியில்லை போல! ஏதாவது ஒண்ணு மாத்தி ஒண்ணு வந்து சேருது' என நினைத்துப் பெருமூச்சு விட்டார்.

மதியம் தேர்வு எழுதி முடித்த ராஜீவ் மனைவியின் குரலைக் கேட்க விரும்பி அவளது கைப்பேசிக்கு அழைத்தான். ஜூரத்தில் படுத்திருந்தவள் தனக்குத் தொந்தரவாக இருக்கக் கூடாது என்றெண்ணி அதை சைலண்ட் மோடில் போட்டிருந்தாள்.

மூன்று முறை அடித்தும் அவள் எடுக்கவில்லை என்பதால் இன்னும் ஒரு முறை மட்டும் அழைத்துப் பார்ப்போம். இல்லாவிட்டால் அப்பாவின் எண்ணிற்கு அழைக்கலாம் என்ற முடிவுடன் ராஜீவ் அழைக்க... திரும்பிப் படுக்க நினைத்த நிவேதா அவளது கைப்பேசி ஒளிர்ந்ததைப் பார்த்து அதை எடுத்து இயக்கிக் காதில் வைத்தாள்.

''ஹலோ நிவி! ஏதாச்சும் வேலையா இருந்தியா? என்ன இவ்வளவு நேரமா போன் எடுக்கலை'' என்று படபடப்புடன் கேட்டான்.

ராஜ் என்ற ஒற்றை சொல்லை அவள் மெதுவாக முணங்க...

''நிவி, ஆர் யூ ஆல் ரைட்? அழுதியா? உடம்பு சரியில்லையா? என்னாச்சும்மா? ஏதாச்சும் பிரச்சனையா?'' என்று அவன் கேள்விகளை அடுக்கினான்.

தன்னுடைய தினறலான ஒற்றை அழைப்பிற்கு கணவன் காட்டும் அக்கறை அவளுக்கு அந்த நிலையிலும் மகிழ்ச்சியைத் தந்தது. அவள் மென்மையான குரலில் பேச ஆரம்பித்தாள்.

"ராஜ், பெருசா ஒண்ணும் இல்லை. நேத்து மழையிலே ஆட்டம் போட்டேன். அதான் ஃபீவர்."

"ஃபீவரா? எப்போல இருந்து? டாக்டர்கிட்டே போனியா? இல்லை அப்பா டாக்டரை வீட்டுக்கே கூட்டிட்டு வந்தாரா? இப்போ எப்படி இருக்கே? டெம்ப்ரேச்சர் கம்மி ஆகிடுச்சா?" என்று அவன் மேலும் பல கேள்விகளை அடுக்க,

"ராஜ், நான் நல்லாத் தான் இருக்கேன். டென்ஷன் ஆகாதீங்க. நீங்க எக்ஸாம் எப்படிப் பண்ணீங்க?" என வினவினாள்.

"நல்லாத் தான் செஞ்சிருக்கேன். நான் அங்கே வரட்டுமா? எனக்கு நாளை மறுநாள் தான் அடுத்த எக்ஸாம். ஒரு மூன்று மணி நேரம் அங்க இருந்து உன்னைப் பார்த்திட்டுப் போகட்டுமா?"

மூன்று மணி நேரம் இருப்பதற்காகப் போக வர என்று இருபது மணி நேரத்திற்கு மேலாகப் பயணம் செய்ய வேண்டி இருக்குமே என நினைத்தவள், "ராஜ் நான் சீக்கிரமே சரியாகிடுவேன். நீங்க இதுக்காக வர வேண்டாம்" என்று சொல்லிவிட்டாள்.

பத்திரம் என்று பல முறை சொன்னவன் சமாதானம் ஆகாமலே அழைப்பைத் துண்டித்தான்.

அவள் சரியாகிவிடும் என்று எதிர்பார்த்ததிற்கு நேர் மாறாக அவளுக்கு ராத்திரியில் உள்ளே சென்ற உணவு

அனைத்தும் வாந்தி என்ற பேரில் வெளியேறியது. மீண்டும் காய்ச்சல் அலைகாக் கொதிக்க ஆரம்பிக்க, சந்தரம் மறுபடியும் மருத்துவரை வீட்டிற்கே அழைத்து வந்தார். யசோதா மருமகளுக்குத் துணையாக அவளது அறையிலேயே படுத்துக் கொண்டார்.

உடல் சுகவினம் அசைந்தவுடன் நிவேதாவிற்கு பெற்றவர்களின் நினைவு அதிகமாகியது. அவர்களைப் பார்க்க ஆசைப்பட்டாள். ஆனால் அது தன்னால் முடியாதென்பதை உணர்ந்த அவளது மனம் அவர்களுக்கு அடுத்த உறவான கணவனைப் பார்க்க விரும்பியது. அவனைப் பார்த்துவிட்டால் தனது மனமும் உடலும் சரியாகிவிடும் என்று தோன்றிவிட விடிவதற்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

காலையில் யசோதா எழுந்து வேலைகளைப் பார்க்க வென அறையை விட்டு வெளியேறியதும் நிவேதா கணவனின் கைப்பேசிக்கு அழைத்தாள்.

"ஹலோ நிவி? எப்படிம்மா இருக்கே? நேத்தை விட இன்னைக்குப் பரவாயில்லையா?"

"ராஜ், நைட் எல்லாம் வாந்தி. திரும்ப ஃபீவர் வந்திடுச்சு."

"அச்சச்சோ! அப்புறம் டாக்டர் வந்தாரா? என்ன சொன்னார்? ஏதாவது மெடிசின் மாத்திக் கொடுத்திருக்காரா?"

அவனது எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல், "ராஜ், எனக்கு உங்களைப் பார்க்கணும் போல இருக்கு. வரீங்களா?" என்று குரல் தழுதழுக்கக் கேட்டாள்.

அதனைக் கேட்ட ராஜீவிற்கு தனது இயலாமையின் மீது கோபமும், வருத்தமும் வந்தது. சில நொடிகள் அமைதி காத்தவன்,

"நான் இப்போ கிளம்பினால் கூட அங்க வந்து சேர நைட் ஆகிடுமேடா. வந்த உடனே அப்படியே கிளம்பினால் தான் காலையிலே எக்ஸாம்க்குப் போக முடியும். உடம்பு டயர்டாவது பிரச்சனை இல்லை. ஆனால் எக்ஸாம்க்கு படிக்க முடியாமல் பெயில் ஆகிட்டால்... கவர்மென்ட் வேலைக்குப் பிரச்சனை வராது. ஆறு மாசம் கழிச்சு போய் எழுதிக்கோன்னு சொல்லிடுவாங்க. ஆனால் பாஸ் ஆகாமல் என்னால பிரைவேட் ஹாஸ்பிட்டலிலே வேலை தேட முடியாதே! வெறும் ஒரு சம்பளத்தை வைச்சு குடும்பம் நடத்தக் கஷ்டமா இருக்குமே!" என்று நிதர்சனத்தை அவன் எடுத்துரைக்க இப்பொழுது அமைதி காப்பது அவள் முறையானது.

"நிவிம்மா, ஏதாச்சும் சொல்லுடா? எனக்கும் நேத்திலே இருந்து இங்கே இருப்பே கொள்ளலை தான். நேத்து நான் வரட்டுமான்னு கேட்டப்போ நீ தான் வேண்டாம்ன்னு சொன்னே! நானும் நமக்கு வாடகைக்கு வீடு தேடப் போயிட்டதாலே நேத்து சரியா படிக்க முடியாமல் போச்சு. இப்போ நேரம் இல்லையேம்மா? என்ன செய்யுறது?"

"உங்களாலே ஃபிளைட்டிலே வர முடியாதா?"

"ஃபிளைட்டா? பத்தாயிரத்துக்கு மேலே செலவாகும். செலவைக் கூட எப்படியாச்சும் சமாளிச்சுக்கலாம். ஆனால் மணி இப்போ ஆறரை. எப்படியும் பத்தரை மணி ஃபிளைட்டிலே இடம் கிடைச்சாத் தான் நான் இங்கே இருந்து ஏர்போர்ட் போய் சேர முடியும். அங்கே வந்து சேரும் போது மணி ஒண்ணாகிடும். அப்படியே திரும்ப வந்து.. ஒரு முழு நாளும் ஓடிப் போயிடுமே! படிக்க டைம் இருக்காதே!"

"பெரிய படிப்பு. உங்களுக்கு என்னை விடப் படிப்பு தானே முக்கியமாப் போச்சு. நீங்க அதையேக் கட்டிக் கிட்டு அழுங்க!" என்று சொன்னவள் டக்கென்று அழைப்பைத் துண்டித்துவிட்டாள்.

அவன் பல முறை முயன்றும் அவள் அதை எடுக்க வில்லை.

காலைச் சாப்பாடு சாப்பிடவில்லை. வாந்தி வர மாதிரி இருக்கு என்று பொய் சொல்லி உணவை உட்கொள்ள மறுத்துவிட்டாள்.

மதியம் ஒரு மணி போல் ராஜீவ் ஊர் வந்து சேர்ந்தான். மனைவியின் பிடிவாதம் ஒரு கணம் கோபம் விளைவித்தது என்னவோ உண்மை தான். ஆனால் இப் போதைக்கு அவள் தன்னிடம் தானே அவளது கோபம், இயலாமை என அனைத்தையும் காட்ட முடியும் என்று உணர்ந்ததினால் மனைவியின் ஆசைப்படி விமானம் பிடித்து வீடு வந்து சேர்ந்தான்.

"வாடா ராஜா!" என்று வரவேற்ற யசோதா அவன் கையில் உணவுத் தட்டைக் கொடுத்து, ரசம் சாதமும், துவையலும் வைத்து இருக்கேன். எப்படியாவது அவளைச் சாப்பிட வை" என்று சொல்லி அவனது அறைக்குள் அனுப்பி வைத்தார்.

அதை வாங்கிக் கொண்டு அவன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். கதவு திறக்கும் சத்தம் கேட்டவள் தலையைத் திருப்பாது, "நான் தான் பசிக் கலை. வாந்தி வர மாதிரி இருக்குன்னு காலையிலேயே சொன்னேனில்லை. எனக்குச் சாப்பாடு வேண்டாம்" என்று கடுப்புடன் சொல்ல.

ராஜீவ் பதிலொன்றும் சொல்லாமல் அவளையேப் பார்த்திருந்தான்.

யாரும் வெளியே செல்லும் சப்தம் கேட்கவில்லை என்றதும் யாரென்று பார்க்க அவள் திரும்பிப் படுக்க கணவனைக் கண்டதும் முகம் மலர எழுந்து அமர்ந்தாள். அவனது முகத்தில் இருந்த கடுமையில் ஒன்றும் பேசாது அவனையே பார்த்திருக்க...

"இப்படித் தான் பெரியவங்ககிட்ட பேசுவியா நிவி? நான் உன்கிட்டே இதை எதிர்பார்க்கலை. கோபம் என் மேலே தானே. அதை எங்க அம்மாகிட்டே காட்டுவியா? இல்லை சாப்பிடாமல் இருப்பியா? இன்னைக்கு சொல்லு றேன் கேட்டுக்கோ. என் மேலே உள்ள கோபத்தை என் வீட்டு ஆளுங்ககிட்டே காட்டக் கூடாது. அதே மாதிரி எதுக்காகவும் சாப்பிடாமலும் இருக்கக் கூடாது!" என்று சொன்னவன் தட்டை மேஜை மேல் வைத்தான்.

"சாரி ராஜ். இனிமேல் பார்த்து நடந்துக்கிறேன்" என்று தலையைக் குனிந்து கொண்டே சொன்னாள்.

தான் கொண்டு வந்த பையில் இருந்து ஊசியையும், மருந்தையும் எடுத்தான்.

"உங்க ஃபாமிலி டாக்டர் போன் நம்பரை சுமியிடம் இருந்து வாங்கினேன். அவரிடம் உனக்கு எப்பவும் என்ன மெடிசின் கொடுப்பார்ன்னு கேட்டுத் தெரிஞ்சுக்கிட் டேன். அதையே வாங்கிட்டு வந்திருக்கேன். எழுந்து நேரா உட்காரு. ஊசி போடணும்." என்றான்.

"நான் வரச் சொன்னது என் ஹஸ்பண்ட் ராஜீவை. டாக்டர் ராஜீவை இல்லை" என்று முணுமுணுத்தாள்.

"சொல்லுறதைச் சத்தமாச் சொல்லு. என் காதிலும் விழட்டும்" என்று அவன் சொல்லியும் தான் சொன் னதைத் திரும்பச் சொல்லாமல் அமைதி காத்தாள்.

அவளுக்கு ஊசி போட்டு முடித்ததும் கைகளைக் கழுவிக் கொண்டு வந்தவன் தட்டை அவளிடம் நீட்டி சாப்பிடச் சொல்ல அவள் அசையாது அமர்ந்திருந்தாள்.

"எனக்கு வாய்க்கு நல்லாவே இல்லை. வேண்டாம்" என்று அவள் மறுத்ததும் அவன் சாதத்தை எடுத்து அவள் வாயருகே கொண்டு போகவும் ஒன்றும் சொல்லாது வாய் திறந்து வாங்கிக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

அவள் நான்கு வாய் சாதத்தை வாங்கிய பின், "இப்ப மட்டும் சாப்பாடு ருசியா இருக்கோ?" என்று அவன் நக்க லாகக் கேட்க,

"கண்டிப்பா" என்று சொன்னவள் அவனை நிமிர்ந்து பார்த்து, "இப்போ நான் சாப்பிடவா, வேண்டாமா?" என்று கேட்கவும் அவன் அவளைக் கிண்டல் செய்வதை நிறுத்திவிட்டு ஊட்ட ஆரம்பித்தான்.

அவள் சாப்பிட்டு முடித்ததும், "இந்த மாத்திரைகளை எல்லாம் முழுங்கு" என்று சொன்னவன் அவளிடம் மாத்திரைகளைக் காட்டிவிட்டு தட்டை எடுத்துக் கொண்டு அடுக்களைக்குள் சென்றான்.

நாளைத் தேர்வை வைத்துக் கொண்டு இன்று விமானம் பிடித்து மதுரை வந்ததற்கு பெற்றோரிடம் என்ன விளக்கம் சொல்வதென்று விழித்துக் கொண்டே அவன் அடுக்களைக்குள் நுழைந்தான்.

அவனிடம் இருந்து தட்டை வாங்கிக் கொண்ட யசோதா, "எல்லாத்தையும் சாப்பிட்டாளா? அப்பாடா! நீ வந்தது நல்லதாப் போச்சுடா. நேத்து ராத்திரியில் இருந்து கொலைப் பட்டினி கிடக்குறாடா? உனக்குப் பரீட்சை இல்லைன்னா நானே உன்னை வரச் சொல்லி இருப்பேன். சரி நீ வந்து சாப்பிடு" என்றார்.

"ஈசி மாத்திப் போட்டு இருக்கியாப்பா? பயப்பட ஒண்ணும் இல்லையே?" என்று சுந்தரம் கவலையுடன் வினவ,

"அதெல்லாம் ஒண்ணுமில்லைப்பா. காய்ச்சல் வந்த உடனே வீட்டு நினைப்பும் சேர்ந்தே வந்து இருக்கும். அதான் ரொம்ப சோர்வா இருக்காள். சரியாகிடுவாள்" என்று அவருக்கு நம்பிக்கை அளித்தான்.

அவன் சாப்பிட்டு முடித்து தனது புத்தகத்தை எடுத்துக் கொண்டு தனது அறைக்குள் நுழைந்தான். அவள் படுக்காது கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்தாள்.

"படுக்கலையா?" என்று கேட்டுக் கொண்டே கட்டிலில் ஏறி அவளருகில் அமர்ந்தான்.

"நீங்க சாப்பிட்டீங்களா? என்று கேட்டுக் கொண்டே அவன் மார்பு மீது சாய்ந்து கொண்டு தனது கைகளை அவனது முதுகுப் பக்கம் கொடுத்து பின்னிக் கொண்டாள்.

அவளை அணைத்துக் கொண்டே, "காலையிலே என்டா அப்படிப் பேசினே? உன்னை விட எனக்குப் படிப்பு முக்கியமாப் போகுமாடா? நீ இன்னைக்கு ஒரு நாள் கஷ்டப்படுறதைப் பத்திப் பேசுறே! நான் எக்ஸாமிலே பெயில் ஆகிட்டால் ஆறு மாசம் கஷ்டப்படணுமேன்னு பார்த்தேன். நான் எது செஞ்சாலும் உனக்கு நல்லதான்னு மட்டும் தான் யோசிப்பேன். எனக்கு நீ தான்டா முக்கியம்" என்று சொன்னவன் அவளது உச்சியில் முத்தமிட்டான்.

"எனக்குப் புரியுது ராஜ். ஆனால் நீங்க என் இடத்தில் இருந்து யோசிச்சுப் பாருங்க. எனக்குக் காய்ச்சல் வந்தால் எங்க அம்மா என் பக்கத்திலேயே இருப்பாங்க. இந்தப்

பக்கம் அந்தப் பக்கம்ன்னு எங்கேயும் நகர மாட்டாங்க. இப்போ எங்கம்மாவும் பக்கத்திலே இல்லை.

நான் நேத்திலே இருந்து இந்த ரூமை விட்டு நகரலை. எங்க வீட்டிலே என் ரூமிலேயும் டிவி இருக்கும். இங்கே ஹாலில் தான் இருக்கு. என்னாலே அங்கே போய் உட்கார்ந்துக்கிட்டு பார்க்க முடியலை. சரி கஷ்டப்பட்டு உட்காரலாம்ன்னு நினைச்சாக் கூட அந்த டிவியிலே தான் அத்தை சீரியல் பார்க்குறாங்க. அதை என்னாலே பார்க்க முடியாது. வெறும் இந்த நாலு சுவரையே எவ்வளவு நேரம் பார்த்துக்கிட்டு படுத்திருப்பது சொல்லுங்க? சாப்பாடும் தங்காமல் காய்ச்சலும் இறங்காமல், நீங்களும் இல்லாமல் ரொம்பக் கஷ்டமா இருந்துச்சு" என்று மெதுவாக விளக்கினாள்.

"புரியுதுடா" என்று சொல்லி அவளது உச்சியில் மீண்டும் ஒரு முத்தம் வைக்க அவள் மேலும் அவனிடம் ஒண்டினாள்.

அவளது முதுகை வருடிக் கொடுத்தவன், "தூங்கும்மா. கொஞ்ச நேரம் படுத்திரு. நான் ஊருக்குக் கிளம்பும் முன்னாடி சரியாகிடுவாய்" என்று சொன்னதும் அவனை ஓரமாகத் தள்ளி அமரச் சொன்னவள் அவன் மடி மீது தலை வைத்துத் தூங்கிப் போனாள்.

ராஜீவ் தனது புத்தகத்தை எடுத்துப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான்.

மாத்திரைகளின் தாக்கத்தாலோ அல்லது கணவனின் அருகாமை தந்த நிம்மதியோ அவள் இரண்டு மணி நேரம் நிம்மதியாகத் தூங்கிப் போனாள். கண் விழித்துப் பார்த்தவளுக்கு தலைகீழாய் ஒரு மருத்துவ புத்தகம் தான் காட்சி அளித்தது.

அவளை நினைத்து அவளுக்கே வருத்தமாக இருந்தது. நிம்மதியாக படிக்க விடாமல் கணவனை அலைகழித்து விட்டோமோ என்று வருந்தியவளாய், ''சாரி ராஜ்'' என்று கணவனிடம் மன்னிப்புக் கேட்டாள்.

தூக்கத்தில் ஏதும் உளறுகிறாளா என்று புத்தகத்தைத் தழைத்துப் பார்வையிட்டவன் மனைவி விழித்துவிட்டாள் என்பதைப் பார்த்து,

''இப்ப எப்படிம்மா இருக்கு? கொஞ்சமாச்சும் பெட்டரா இருக்கா?'' என்று கேட்டான்.

தலையாட்டிக் கொண்டே எழுந்து அமர்ந்தவளிடம், ''பசிக்குதா? ஏதாச்சும் வேணுமா? பால் குடிக்கிறியா?'' என்று கேட்டான்.

''இப்ப வேணாம். நைட்டுக்கு அத்தையை இட்லி கொடுக்கச் சொல்லுறீங்களா?''

''இதுக்கு எதுக்கு ரெகமண்டேஷனுக்கு என்னைக் கூப்பிடுறே! உனக்கு வேண்டியதை அம்மாகிட்டே கேட்க வேண்டியது தானே? அவங்க ஒண்ணும் தப்பா நினைச்சுக்க மாட்டாங்க'' என்று சொன்னவன் தான் கொண்டு வந்திருந்த பையில் இருந்து நகை டப்பா ஒன்றை வெளியே எடுத்தான்.

அதிலிருந்து தாலிச் செயினை எடுத்துக் கொடுத்தான். ''இதை அம்மா நல்ல நாள் பார்த்து மாட்டிவிடுவாங்க'' என்று சொன்னவன் அவளது கைகளில் வளையலை மாட்டிவிட்டான். ''இதிலே கம்மல் செயின் எல்லாம் இருக்கு'' என்று சொல்லி அந்த நகை டப்பாவை அவளிடம் கொடுத்தான்.

''சரி. உங்களுக்குக் கிளம்ப டைம் ஆச்சா?''

''இன்னும் ஒரு பத்து நிமிஷம் இருப்பேன்.''

ம்ம்ம் என்று சுருதி குறைந்து முகம் வாடி நின்றவளிடம், ''இப்போ உன் பிரண்டு சுமித்ரா வந்திடுவாள். இன்னும் ஒரு ரெண்டு நாளைக்கு இங்கே தான் இருப்பாள்'' என்று சொன்னதும் அவள் முகமே மலர்ந்துவிட்டது.

''இதப் பாருடா ஆயிரம் வாட்ஸ் பிரகாசத்தை! இப்படின்னு தெரிஞ்சு இருந்தால் நான் வந்திருக்கவே தேவை இல்லை போலவே! அப்பவே அவளை வரச் சொல்லி இருக்கலாமோ?!''

''யாராலையும் உங்க இடத்தை இட்டு நிரப்ப முடியாது ராஜ்!'' என்று அவனைப் பார்த்து மிகத் தீவிரமான குரலில் சொன்னாள்.

''அதையே தான் நானும் சொல்லுறேன். இந்த உலகத்திலேயே உன்னை விட எனக்கு முக்கியமானது என்று எதுவும் கிடையாது. அதை நீயும் நல்லாப் புரிஞ்சுக்கோ'' என்று அவளது கண்களை பார்த்துக் கொண்டே கூறினான்.

அந்தப் பார்வையின் தீட்சண்யம் தாங்க முடியாமல் தலை கவிழ்ந்தாள். அடுத்த பத்து நிமிடத்தில் சுமித்ரா வந்து சேர்ந்தாள். மனைவியிடம் ஆயிரமாயிரம் அறிவுரைகளையும் அக்கறையான எச்சரிக்கைகளையும் விடுத்தவன் சுமித்ரா வந்த காரிலேயே மதுரை விமான நிலையத்திற்குக் கிளம்பினான்.

10



ராஜீவ் வந்து சென்றபின் அவளது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. அவன் சென்னை

சென்று தனது படிப்பில் மூழ்கினான். இங்கே தோழிகள் இருவரும் தங்களது அரட்டையில் மூழ்கினர்.

''ஏன் அத்தை வீட்டிலே ஏ.சியே மாட்டலை. என்னாலே இங்கே இருக்கவே முடியலை. உங்களுக்கு எல்லாம் நைட்டிலே வியர்க்கலையா?'' என்று நிவேதா யசோதாவிடம் கேட்டாள்.

'என்னடா இவ இப்படிக் கேட்டுவிட்டாளே?' என சுமித்ரா ஒரு நிமிடம் பயந்து போனாள்.

''நாங்க ஜன்னல் எல்லாம் திறந்து வைச்சிட்டுத் தூங்குவோம். அதனால அவ்வளவா சூடு தெரியலை. நீ மூடி வைச்சுக்கிட்டுத் தூங்குறியா. அதான் உனக்கு கஷ்டமா இருக்கு போல!'' என்று அவர் அவளுக்கு விளக்கம் அளித்தார்.

''திறந்து வைச்சுக்கிட்டா? அப்படித் தூங்கினால் எனக்கு யாரோ என்னைப் பார்க்குற மாதிரியே இருக்கும். என்னாலே அதெல்லாம் முடியாது அத்தை. அதனால ஏ.சி மாட்டுங்க.''

''சரிம்மா. நீ அடுத்த தடவை வரும் போது கண்டிப்பா மாட்டிடலாம்'' என்று மருமகளுக்கு உறுதி அளித்தார்.

தனி அறைக்குள் வந்தவுடன், ''என்ன நிவி, நீ பாட்டுக்கு ஏ.சி. போடுங்கன்னு சொல்லிட்டே?'' என்று சுமித்ரா தோழியிடம் விசாரிக்க,

''எனக்குக் கஷ்டமா இருக்கு சுமி. உனக்கு தெரியாதா? என்னால ஏ.சி இல்லாமல் இருக்க முடியாது. அதான் கேட்டேன். ராஜ் தான் எதா இருந்தாலும் அத்தையிடம் உரிமையோட கேட்கச் சொன்னார்'' என்றாள்.

'அண்ணா எதைச் சொன்னாரோ? இவள் இதைக் கேட்கிறாள்' என நினைத்து சுமித்ரா பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

வெள்ளிக்கிழமை காலை சுமித்ரா தனது வீட்டிற்குக் கிளம்பினாள். அவள் கிளம்பும் முன் நிவேதாவிடம், ''நாளைக்குக் காலையிலே அண்ணா வந்திடுவாங்க. இன்னைக்கு ஒரு நாள் மட்டும் நீ தனியா சமாளிச்சுக்கோ. சென்னைக்குப் போன பின்னாடி நான் உன்னை அங்க வந்து பார்க்கிறேன்'' என்று கூறி விடைபெற்றாள்.

சுமித்ரா சென்ற பின் பொழுது ஆமை வேகத்தில் நகர்ந்தது. இரவு கணவனின் கைப்பேசிக்கு அழைக்க முயன்ற நிவேதாவிற்கு அது ஸ்விட்ச் ஆஃப் செய்யப் பட்டுள்ளது என்ற செய்தியே வந்தது.

'சார்ஜ் இல்லை போல! வேற எண்ணில் இருந்தாவது நம்மகிட்டே பேசலாம் தானே! காலையில வரட்டும் பேசிக்கலாம்' என்று கறுவியவளாய் நிவேதா சீக்கிரமே படுக்கச் சென்றுவிட்டாள்.

ஆனால் ராஜீவோ பரீட்சை முடிந்தவுடன் கிளம்பி விட்டான். கிடைக்கும் பேருந்தில் ஏறி திருச்சி வரை வந்தான். அதன் பின் அங்கிருந்து பேருந்து மாறி மாறி அவன் சோழவந்தான் வந்து சேர்ந்த போது மணி பத்தைக் கடந்திருந்தது.

மகனைக் கண்ட யசோதா, ''என்னப்பா ராஜா! பரீட்சை முடிஞ்சவுடனே கிளம்பிட்டியா? முகமே கறுத்துப் போய் இருக்கு. சாதாரண பஸ்ஸிலே வந்தியா? ஏ.சி. பஸ்ஸிலே வந்திருக்க வேண்டியது தானே?'' என்றார்.

''இல்லைம்மா ஏ.ஸி. பஸ் கிடைக்கலை.''

"கிடைக்கலையா இல்லை காசு அதிகமாகும்ன்னு நினைச்சியா?"

"யசோதா!" என்று அதட்டலாய் கூப்பிட்ட சுந்தரம், "போய் அவன் சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணு" என்று கூறி மனைவியை அனுப்பி வைத்தார்.

பின் மகனிடம் திரும்பி, "ஒரு போன் பண்ணி சொல்லி இருக்கலாமே ராஜா. நாங்க போன் போட்ட போதும் ஸ்விட்ச் ஆஃப்ன்னு வந்துச்சு."

"இல்லைப்பா எக்ஸாம் டென்ஷனில் நான் சார்ஜ் போட மறந்துட்டேன். நான் வரப் போறதா சொன்னா அம்மா நான் வரும் வரைக்கும் சாப்பிடாமல் இருப்பாங்க. அதான்..."

"இப்ப மட்டும் சாப்பிட்டாளா? நீ போனை எடுக்கலைன்னு புலம்பிக்கிட்டு தான் உட்கார்ந்திருந்தாள். சரி நீ கொல்லைப் பக்கம் போய் குளிச்சிட்டு வா. வந்து அம்மா கூடச் சேர்ந்து சாப்பிடு."

தாயுடன் சாப்பிட்டு முடித்தவன் தனது அறையை நோக்கி நடந்தான். அறை பூட்டி இருக்கும் என்று நினைத்ததற்கு நேர்மாறாக அவன் கை வைத்தவுடன் அது திறந்து கொண்டது. அறையை மூடித் தாளிட்டவன் தனது பையை மேஜையில் வைத்துவிட்டு படுக்கை அருகே சென்று பார்க்க... அங்கே நிவேதா நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

'பாரு! ஒருத்தன் கஷ்டப்பட்டு பஸ் மாறி மாறி வீடு வந்து சேர்ந்து இருக்கேன். இவ என்னடான்னா நான் வந்தது கூடத் தெரியாமல் நிம்மதியா தூங்கிக்கிட்டு இருக்காள்!' என மனதுக்குள் மனைவியை செல்லமாகச் சீராட்டிக் கொண்டான்.

சப்தம் எழுப்பாமல் அவளருகே சென்று படுத்தவன் அவளது இடுப்பில் கை போட்டான். அவன் இடுப்பில் கை வைத்ததும் ம் என்று முணங்கியவள் தனது தூக்கத்தைத் தொடர்ந்தாள்.

அவளது இடுப்பின் மென்மையை உணர்ந்தவன், 'மைதா மாவிலே செஞ்ச பொம்மை மாதிரி இருந்து ஆளை மயக்கிக்கிட்டு நான் தொடுவது கூடத் தெரியாமல் தூங்கவா செய்யுறே' என்று நினைத்துக் கொண்டே அவளைப் பின்னோடு அணைத்தவன் அவளது கழுத்து வளைவில் முத்தம் பதித்தான்.

"அடப்போடா! உனக்கு வேற வேலை இல்லை" என்று அவள் முணுமுணுக்கவும்,

"நான் எப்போடி உன்னை இப்படி எல்லாம் கொஞ்சினேன்?" என்று கேட்டுக் கொண்டே அவளது காதை பிடித்து மென்மையாகக் கடிக்க...

தூக்கம் கலைக்கப்பட்டு எழுந்து அமர்ந்தவள், "ராஜ், வந்துட்டீங்களா? காலையிலே தானே வரதா சொன்..." என்று பேச ஆரம்பித்தவளை அவன் பேசவும் விடவில்லை. தூங்கவும் விடவில்லை.

நிவேதா காலையில் எழுந்து பார்க்கும் போது ராஜீவ் அந்த அறையில் இல்லை. அவள் எழுந்து குளித்து தயாராகி வெளியே வந்தாள். நேராக அடுக்களைக்குள் சென்றவள் வெட்கத்துடன் குனிந்து கொண்டே யசோதாவிடம், "சாரி அத்தை அசந்து தூங்கிட்டேன்" என்றாள்.

"அதனால என்னம்மா. சாப்பாடு ரெடியா இருக்கு. அவனும் சாப்பிடவில்லை. நீங்க ரெண்டு பேரும் சாப்பிடுங்க" என்று சொல்லி அடுக்களையை விட்டு வெளியேறினார்.

அவர்கள் இருவரும் சாப்பிட்டுத் தங்கள் அறைக்குத் திரும்பினார்கள்.

"ராஜ், நாம ஹனிமூன் போகலாமா?"

"ஹனிமூனா? ஒரு ரெண்டு வருஷம் கழிச்சுப் போவோமா?"

"ராஜ், ரெண்டு வருஷம் கழிச்சுப் போனால் அதுக்குப் பேரு டூர். ஹனிமூன் கிடையாது."

"இல்லைம்மா. எனக்குத் திங்கட்கிழமையே வேலையிலே சேரணும்னு சொல்லிட்டாங்க. லீவ் கிடையாது. வீடு புடிச்சுட்டேன். போய் அதை செட்டில் பண்ணனும். பிரைவேட் ஹாஸ்பிட்டலில் வேலை தேடணும். அங்க ஜாயின் பண்ணிட்டால் அப்புறமா லீவ் கிடைக்கக் கொஞ்சம் கஷ்டமாகிடும். அதான்..." என்று அவன் இழுக்கவும்,

"ஓ! திங்கட்கிழமையே ஜாயின் பண்ணனுமா? அப்போ சன்டே போயிடுவீங்களா? என்னைக் கூட்டிட்டுப் போவீங்களா?" என்று பரிதாபமாகக் கேட்டாள்.

"அதான் வீடு பார்த்தாச்சுன்னு சொன்னேன் தானேம்மா. காதிலே விழலையா? நீயும் தான் கிளம்பணும்."

"அப்போ சரி. அப்படின்னா நாம கொடைக்கானலுக்குப் போவோமா? அங்கே இருந்து அப்படியே சென்னைக்குப் போயிடலாம்."

"கொடைக்கானலா? இப்பவா?"

"ப்ளீஸ் ராஜ். போகலாம். மாட்டேன்னு சொல்லாதீங்க."

"நீ கொடைக்கானல் போனதே இல்லையா? எதுக்கு இத்தனை ப்ளீஸ் போடுறே?"

"ஆமா நான் போனதே இல்லை" என்றதும், 'எதுக்கு இப்படிப் புளுகுகிறாய்?' என்பது போல் பார்த்துக் கொண்டிருந்த ராஜீவைப் பார்த்து,

"என் ராஜோடு போனதே இல்லை" என்று சொன்னதைக் கேட்ட பிறகு அவளது ஆசையை நிறைவேற்ற மாட்டானா என்ன?

அவள் ஆசைப்படியே கொடைக்கானலில் ஹோட்டல் அறையில் தங்குவதற்கும் சென்னை செல்லப் பயணச் சீட்டிற்கும் ஏற்பாடுகளைச் செய்தான். மதியச் சாப்பாட்டிற்குப் பின் அவர்கள் கொடைக்கானல் செல்லத் திட்டமிட்டார்கள். அவனது பெற்றோரிடம் விடைபெறும் போது மருமகளுக்குச் சொன்ன அறிவுரையை விட மகனுக்குத் தான் நிறையச் சொன்னார்கள்.

நிவேதாவிடம், "விளையாட்டுப் பொண்ணா இருக்கக் கூடாது" என்று மட்டும் சொன்ன யசோதா ராஜீவிடம்,

"கோபப்படக் கூடாது. குடும்பம்னு இருந்தால் சண்டை சச்சரவு வரத் தான் செய்யும். அதுக்காக எடுத்தேன் கவிழ்தேன் என்று எந்த முடிவும் எடுக்கக் கூடாது. எந்தக் கோபத்தையும் அதிக நாள் இழுத்துப் பிடிச்சு வைச்சுக்காமல் உடனுக்குடன் சமாதானம் ஆகிக்கோங்க. வேலை வேலைன்னு சுத்தாமல் நேரத்தோடு வீட்டுக்கு வரணும். அவளையும் பார்த்துக்கிட்டு உன்னையும் பார்த்துக்கணும். நீ தான் பெரியவனா அவளுக்கு விட்டுக் கொடுத்துப் போகணும். அவ உன்னையே நம்பி வந்திருக்காள். பார்த்து பத்திரம்..." என்று பெரிய பிரசங்கமே பண்ணி முடித்தார்.

மதியம் வாடகைக் காரில் அவர்கள் புறப்பட்டனர். வண்டி ஓட ஆரம்பித்து ஐந்து நிமிடம் ஆன உடனே நிவேதா அவனது தோள் வளைவில் படுத்துத் தூங்க ஆரம்பித்துவிட்டாள்.

கொடைக்கானல் அறையில் தங்குவதற்கான பதிவேடுகளில் கையெழுத்துப் போட்டு மறுநாள் ஊர் சுற்றிப்

பார்க்க என அவள் ஏற்பாடு செய்து முடிக்கும் வரை வெளியே நின்று அவள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு ஜில்லென்று வீசியப் பனிக்காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

அறைச் சாவியைப் பெற்றுக் கொண்டு இரண்டாவது தளத்தில் உள்ள அறைக்குள் நுழையும் வரை நிவேதா எதுவும் சொல்லவில்லை.

அறைக்குள் நுழைந்து தனது கண்களைச் சுழலவிட்டவள், ''நாட் பேட்!'' என்றாள்.

'இதையே இப்படிச் சொன்னாள் என்றால் நாம் இப்போது சென்னையில் பார்த்திருக்கும் வாடகை வீட்டை என்னவென்று சொல்லுவாள்?' என நினைத்துக் கொண்டவன்,

''ஏன் உங்க அம்மா வீட்டிலே உன் ரூம் இதை விடச் சூப்பரா இருக்குமா?'' என்று கேட்டான்.

''கண்டிப்பா. அதிலே என்ன சந்தேகம்'' என்று சொன்னவள் அறையின் குளுமையை ரசித்தபடியே, ''உங்க வீட்டிலே ஏ.சி இல்லையா. இந்த ஒரு வாரமா நான் அங்க இருக்குறதுக்குத் திண்டாடிப் போயிட்டேன். இங்க ஊரே ஏ.சி போட்ட மாதிரி சும்மா சூப்பரா இருக்கு'' என்றாள்.

''அப்போ நீ நான் பார்த்திருக்கிற சென்னை வீட்டிலே எப்படி இருப்பாய்? அது எங்க பூர்வீக வீட்டை விட ரொம்பவே சின்னது வேற!''

''நீங்க அந்த வீட்டிலே தானே ராஜ் இருப்பீங்க. நீங்க இருக்கிற இடத்திலே நான் இருந்திடுவேன். உங்க

வீட்டிலே இருக்க கஷ்டமா இருந்ததுக்கு நீங்க அங்க இல்லாததும் ஒரு காரணம் தான் ராஜ்.''

அவளை இழுத்து அணைத்தவன், ''இதை அப்படியே மனசிலே இருத்திக்கோ. நம்ம லைஃப் பிரச்சனை இல்லாமல் போயிடும்'' என்றான்.

மாலை வேளையில் கொடைக்கானல் வந்தவர்கள் மறுநாள் காலை வரை அறையை விட்டு வெளியேறவில்லை. அது சரி அவர்கள் என்ன ஊர் சுற்றிப் பார்க்கவா வந்தார்கள்?

மறுநாள் குளித்துத் தயாராகி வந்த ராஜீவ் தொலைக்காட்சியில் செய்தியைப் பார்த்துக் கொண்டு இருந்தான். நிவேதா தன் கணவன் சுமித்ராவின் உதவியுடன் தனக்கு வாங்கித் தந்திருந்த புளு கலர் ஜீன்ஸையும், பேபி பிங்க் நிற மேல் சட்டையையும் அணிந்தாள்.

ராஜீவின் முன்னே சென்று நின்று கொண்டு, ''ராஜ் என் டிரஸ் எப்படி இருக்கு? எனக்கு நல்லா இருக்கா? என் ஹஸ்பண்ட் வாங்கிக் கொடுத்தார்'' என்றாள்.

அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தவன், ''உன் கலருக்கு எந்த டிரஸ் நல்லா இல்லாமல் போகும்?'' என்றான்.

அவனருகே சென்று அவனது கன்னத்தில் முத்தமிட்டவள், ''தாங்க் யூ!'' என்றாள்.

அவளது கன்னத்தைத் தடவியவன், ''இப்படி மழு மழுன்னு இருப்பதற்கு உங்க அம்மா உனக்கு என்னதைக் கொடுத்து வளர்த்தாங்க குட்டிம்மா?'' என்றான்.

''இப்ப என்ன சொன்னீங்க ராஜ்? திரும்பச் சொல்லுங்க'' என்று நிவேதா பரபரப்புடன் கேட்கவும்,

"உங்க அம்மா என்ன சாப்பாடு கொடுப்பாங்கன்னு கேட்டேன்?" என்று குழப்பத்துடனே பதில் கூறினாள்.

"அதில்லை. என்னை எப்படிக் கூப்பிட்டீங்க?"

அவளது இடுப்பில் கைப் போட்டு அருகே இழுத்து அவளைத் தன்னோடு பிணைத்துக் கொண்டே, "குட்டிம்மான்னு கூப்பிட்டேன். என் வைஃபை நான் எப்படி வேணாக் கூப்பிடுவேன். உனக்கு என்ன வந்துச்சு?" என்று அவன் கிண்டலடிக்க,

"எங்க டாடி என்னை அப்படித்தான் கூப்பிடுவாங்க. இன்னொரு வாட்டிக் கூப்பிடுங்களேன்" என்று அவள் சொன்னதும் அவன் தனது அணைப்பில் இருந்து அவளை விலக்கிவிட்டு தொலைக்காட்சியை அணைக்கச் சென்றான்.

அதை செயல் இழக்கச் செய்தவன் கதவை நோக்கி நகர்ந்து கொண்டே சற்று முன் அவள் தன்னிடம் எதுவும் கேட்காததைப் போல், "சாப்பிடப் போகலாமா?" என்று கேட்டான்.

கணவனின் செயலில் மனம் வருந்தினாள். ஆனால் ஒன்றும் சொல்லாது அவனுடன் வெளியேறினாள். அன்றைய நாளின் தொடக்கமே கசப்பாய் அமைந்து போனது. அன்று இரவு வரை அது நீடிக்கவும் செய்தது.

பஃபே முறையில் உணவு காத்திருந்தது. பிரட், பட்டர், ஜாம் ஒரு புறமும், பூரி, தோசை, இட்லி, பொங்கல் என அனைத்தும் இன்னொரு புறமும் வைக்கப்பட்டிருந்தது. சாப்பிடும் பொழுது அறையில் நடந்ததை மறந்தவர்களாய் இயல்பாய் பேசிக் கொண்டனர்.

நன்றாகச் சாப்பிட்ட பின் தங்களுக்காக வாடகைக் கார் வரும் என அவள் நினைக்க... அவனோ 'கன்டக்டட் டூர்'

என்று சொல்லக் கூடிய பதினைந்து பேர்களை ஒரே வேனில் கூட்டிச் சென்று ஊர் சுற்றிக் காட்டும்படியான சுற்றுலாவிற்குப் பணம் செலுத்தி இருந்தான்.

எங்கே வெளியே செல்வதானாலும் தனது சொந்தக் காரில் அதுவும் விலை உயர்ந்த காரில் சென்று பழகிய வளுக்கு வாடகைக் கார் என்பதே ஒரு படி இறக்கமாகத் தோன்றியது. நிலைமை இப்படி இருக்க அவளது மனநிலையைப் புரிந்து கொள்ளாது அவனோ கூடப் பத்து பேருக்கு மேல்.. அதுவும் முன்னே பின்னே அறிமுகம் ஆகாத பத்து பேரைச் சேர்த்துக் கொண்டு சுற்ற வேண்டும் என்று ஏற்பாடு செய்து இருந்ததைப் பார்த்து நிவேதாவிற்கு கோபம் சிவுசிவு என வந்தது. அவள் ராஜீவை முறைத்துக் கொண்டே வேனில் ஏறி ஜன்னல் புறமாக அமர்ந்தாள்.

மனைவியின் கோபத்திற்கான காரணம் தெளிவாகப் புரிந்த போதும் தன்னால் எதுவும் செய்ய இயலாது என்பதால் அவன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

எல்லோரும் வழக்கமாகச் செல்லும் வெள்ளி நீர்வீழ்ச்சி, பில்லர் ராக், கோக்கர்'ஸ் வாக் என்று கூட்டிச் செல்லாமல் அமைதிப் பள்ளத்தாக்கு, பசுமைப் பள்ளத்தாக்கு என்று கூட்டிச் சென்றார்கள்.

வெளிச்சமாக இருக்கும்போதே பனிமூட்டம் வந்து பாதையை மறைத்தது. சுற்றுப்புறமே வெண்புகையாய் காட்சியளித்தது. மிகவும் ரம்மியமாக இருந்தது.

முதல் பள்ளத்தாக்கைப் பார்க்கச் சொல்லி இறக்கி விடும் போதே அவள் பெரிதாக ஆர்வம் காட்டாமல் பின் தங்கியே நடந்து வந்தாள்.

'நான் மட்டும் போய் அதை எல்லாம் பார்த்து எனக்கு என்ன கிடைக்கப் போகிறது?' என்று எண்ணமிட்டவனாய் அவனும் அவளுடனே மெதுவாகவும், அமைதியாகவும் நடந்தான்.

தன்னைச் சுற்றிலும் உள்ள கொடைக்கானலின் பசுமையும், சீதோஷண நிலையும் அவளது மனதிற்கு கொஞ்சம் குளுமை சேர்த்தது தான். ஆனால் அவற்றால் எல்லாம் அவளது கோபத்தை முற்றிலும் மறைய வைக்க முடியவில்லை.

மனைவியை அவன் சமாதானம் செய்ய முற்படவில்லை. தனக்கு இன்ன விஷயம் பிடிக்கவில்லை என்று வாயால் சொன்னால் அதன் பிறகு விளக்கம் சொல்லலாம் என நினைத்தான். அவளும் தன் கோபத்துக்கான காரணத்தை வாய் திறந்து சொல்லவில்லை. அதனால் அவனும் அதைக் கண்டும் காணாதும் இருந்தான். மொத்தத்தில் அவர்களுக்கு மத்தியில் அமைதி என்னும் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக ஓடியது.

இவர்களும் இன்னொரு குடும்பமும் சீக்கிரமாக வந்துவிட.. மீதிப் பேர்களுக்காக அவர்கள் காத்திருக்க ஆரம்பித்தார்கள். அதில் இரு பள்ளி செல்லும் சிறுமிகளும் இருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் கேலிப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அதில் சின்னவள் வேனிலிருந்து வெளியே விளையாடிக் கொண்டிருந்த குரங்குகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதை தன் அக்காவிடம் காட்டினாள். ''ஏ மங்கி! ஏ மங்கி!'' என்று கூவவும் செய்தாள்.

பெரியவளோ, ''அது ஏ மங்கி இல்லை. எம் மங்கி'' என்று திருத்தினாள்.

''என்ன சொல்லுறே? எனக்குப் புரியலை.''

''மங்கியோட அப்பா யாரு? இன்னொரு மங்கி தானே? அப்படின்னா அதுக்கு இனிஷியல் எம் தானே? எப்படி ஏ ஆக முடியும்?'' என்று பெரியவள் விளக்கிச் சொன்னதும்,

''உன் கடியைக் கேட்டு அந்த மங்கிக் கூட்டமே வந்து உன்னைக் கடிச்சு வைச்சிடும்'' என்று சின்னவள் மிரட்டிக் கொண்டிருந்தாள்.

ராஜீவ் புன்னகைத்துக் கொண்டே மனைவியைத் திரும்பிப் பார்க்க அவளோ வந்த புன்னகையைக் கோபம் என்னும் போர்வையின் பின்னே மறைத்துக் கொண்டிருந்தாள்.

''சிரிப்பு வந்தா சிரி நிவி. என் மேலே உள்ள கோபத்தை ஏன் அந்தப் பொண்ணு சொன்ன ஜோக்கு மேல காட்டுறே?'' என்று கேட்டதும், அவனது புஜத்தில் குத்தினாள்.

''ம்ம்ம்... இது கரெக்ட். இப்படி ரெண்டு அடி அடிச்சிட்டுப் போவியா. அதை விட்டுட்டு யாராச்சும் பேசாமல், சிரிக்காமல் இருப்பாங்களா?'' என்று சொன்னதும் அவள் புன்னகைக்க.. அந்த சண்டையும் ஒரு முடிவிற்கு வந்தது.

மதியம் சாப்பிட நிறுத்துவார்கள் என்று பார்த்தால் அவர்கள் அதற்கான நேரத்தை ஒதுக்கவே இல்லை. காலையில் கொஞ்சம் அதிகமாகவே சாப்பிட்டு இருந்ததால் இரண்டு மணி வரைக்கும் தான் நிவேதாவால் தாக்குப் பிடிக்க முடிந்தது. நடந்து சென்றது வேறு அவளது காலைச் சாப்பாட்டைச் சீக்கிரமே ஜீரணிக்க வைத்துவிட்டது.

மனைவியின் முகம் பசியால் வாடியதைக் கண்ட கணவனின் மனம் வாடியது. 'குணா குகை' என்ற இடத்தில்... அதாவது குணா படத்தில் இடம் பெற்ற குகையின் முன்னே வண்டி நிற்கும் போது மணி இரண்டரை. அங்கே தின்பண்டங்கள் விற்றுக் கொண்டிருந்தார்கள். எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம் கூட்டமாகத் தென்பட்டார்கள். வேனிலிருந்து அனைவரும் இறங்கிப் போனார்கள்.

"வா நிவி. இறங்கிப் போகலாம்."

"என்னால இதுக்கு மேலே நடக்க முடியாது ராஜ். நீங்க வேணா போய் பாருங்க. நான் வரலை."

"நான் பார்க்கிறதுக்குக் கூப்பிடலை. அங்கே போய் ஏதாச்சும் சாப்பிடலாம் வா."

"இந்த இடத்திலா? ரோட்டுக் கடையிலா? நான் வரலை" என்று மறுத்துவிட்டாள். அவளுக்குத் துணை இருப்பதா இல்லை அவளது பசிக்கு ஏதாவது வாங்கி வருவதா என்று முதலில் குழம்பினான். பின் அவளது பசியைப் போக்க முடிவு செய்தவனாய் கீழே இறங்கிப் போனான்.

எதை வாங்குவது என்று பார்வையிட்டான். பஜ்ஜி, சமோசா என்று பொறித்து வைத்திருந்தார்கள். அந்த எண்ணையைப் பார்க்கும் போது அவனுக்கே அதை வாங்கப் பிடிக்கவில்லை. ஸ்வீட் கார்ன் என்று சொல்லப் படும் இனிப்பு மக்காச் சோளத்தை வேக வைத்து விற்றுக் கொண்டிருந்தார்கள். இதில் கலப்படம் செய்ய வாய்ப்பு இல்லை என்றெண்ணி அதை வாங்கிக் கொண்டான்.

அதன் பின் ஒரு கடையில் இரண்டு முட்டைகளை உடைத்து ஊற்றி அதில் மிளகுத் தூள் தூவி... அதன்

மேல் ஒரு ரொட்டித் துண்டை வைத்து அதை அப்படியே ஆம்லெட்டாக மடித்து அதை நான்காகக் வெட்டித் துண்டு போட்டு விற்றுக் கொண்டிருந்தார்கள். அதில் இரண்டு தட்டை வாங்கிக் கொண்டு வேன் நோக்கிச் சென்று அவளிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னான்.

"எனக்கு வேண்டாம் ராஜ்!" என்று அதைத் தொடக் கூட மறுத்துவிட்டாள்.

"ஏன்? பசிக்குது தானே? தள்ளு வண்டியிலே வித்த தால வேண்டாமா? இதையே ஸ்டார் ஹோட்டலில் ஆம்லெட் என்ற பேரிலோ ஸ்கிராம்பிள்ட் எக் என்ற பேரிலோ செஞ்சு கொடுத்தால் நூறு ரூபாய்க்கு மேல் பணம் கொடுத்துச் சாப்பிடுவீங்க தானே?" என்று கேலி செய்தான்.

அப்படியாவது ரோஷப்பட்டு அவள் சாப்பிடுவாள் என்று அவன் நினைத்ததற்கு மாறாக அவள் அதைக் கண்டு கொள்ளவே இல்லை. இவளை என்ன சொல்லிச் சாப்பிட வைக்கலாம் என்று யோசிக்க ஆரம்பித்தவனுக்கு பளிச்சென்று ஒரு நினைவு வந்தது.

வந்த புன்னகையை அடக்கிக் கொண்டு குரலில் இல்லாத சலிப்பை வரவழைத்தவனாய்,

"அன்னைக்கு யாரோ ஒரு பொண்ணு நான் வாங்கிக் கொடுத்தேன் அப்படிங்கிறதுக்காக தள்ளு வண்டியிலே வாங்கினாலும் பரவாயில்லை, பிரண்டு முறைச்சாலும் பரவாயில்லைன்னு வேகவேகமா வாங்கிச் சாப்பிட் டாங்க. அவங்களுக்கு என் மேலே அன்பு, காதல் எல் லாம் இருந்துச்சு" என்று சொல்லிக் கொண்டிருந்தவனை அடுத்த வரியைச் சொல்லவிடாமல் அவனது கையில்

இருந்து அந்த ஆம்லெட்டைப் பறித்துச் சாப்பிட ஆரம்பித்தாள்.

அவன் தானும் ஒன்றைச் சாப்பிட ஆரம்பித்தான். அவள் முட்டையைச் சாப்பிட்டு முடித்ததும் அந்த மக்காச் சோளத்தை எடுத்து நீட்ட அவள் அதையும் காலி செய்தாள். 'இவ்வளவு பசியையும் வைச்சிக்கிட்டு கோபத்திலே சாப்பிடாமல் இருக்கப் பார்த்திருக்காள். எப்படியோ சாப்பிட வைச்சிட்டோம்' என நினைத்து நிம்மதியானான்.

அனைவரும் வந்ததும் வேன் கிளம்பியது. அவர்களை நேரே ஏரிக்குப் படகு சவாரிக்கு கொண்டு விடுவதாய் சொன்னார்கள். இவர்கள் இருவரும் அதை வேண்டாம் என்று சொல்லி அறைக்கேத் திரும்பிவிட்டனர்.

''கொஞ்ச நேரம் தூங்கு நிவி. ரொம்ப டயர்டா தெரியுறே'' என்று சொன்னதும் அவள் படுத்துத் தூங்கிப் போனாள். சிறிது நேரங் கழித்து அவளைத் தட்டி எழுப் பியவன், ''டைம் ஆச்சும்மா. கிளம்பணும். எழுந்திரு'' என்றான்.

சரி என்று எழுந்து அவள் தயாராகி வந்து அவர்கள் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்ப ஆயத்தமான சமயம், ''இப்ப நாம எதிலே சென்னைக்குப் போறோம்?'' என வினவினாள்.

''பஸ்ஸிலே போறோம்மா. ஆறு மணிக்கு கிளம் பிடும்.''

''பஸ்ஸிலா?''

''வேற எதிலே போக முடியும்? கொடைக்கானலில் இருந்து டிரைன் ஓடலியே!''

''நான் ஒண்ணும் சொல்லலை'' என்று அவள் முணு முணுக்கவும்,

''பெர்த் உள்ள பஸ் தான் நிவி. வசதியாத் தான் இருக்கும்'' என்று சொல்லி அழைத்துச் சென்றான்.

அவள் பேருந்தில் ஏறியதும், ''அப்பாடா ஏ.சி பஸ்ஸா?'' என்று நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள்.

சென்னை வீட்டில் கண்டிப்பாக ஏ.சி மாட்டியாகணும் என அவன் மனதில் குறித்துக் கொண்டான்.

''கடைசி சீட் நிவி. இதுவே யாரோ கேன்சல் பண்ணியதால தான் கிடைச்சது. வா'' என்று அழைத்துச் சென்றான்.

இருவரும் கால் நீட்டி நன்றாக சாய்ந்து அமர்ந்து கொள்ளும்படி இருந்தது. அவர்கள் உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். நடுவில் சாப்பிட ஒரு ஹோட்டலில் நிறுத்த அங்கே சென்று சாப்பிட்டு வந்தார்கள். அதுவரை நன்றாகத் தான் போய் கொண்டு இருந்தது. திரும்பி வந்து பேச ஆரம்பித்தவர்களின் பேச்சு எதிர்கால வாழ்க்கையைப் பற்றித் திரும்பியது.

''ராஜ், நாம எப்போ குழந்தைப் பெத்துக்கலாம்?''

''ஒரு ரெண்டு வருஷம் கழிச்சு'' என்று அவன் சற்றும் தாமதிக்காமல் சொல்லிய விதமே அவன் இது பற்றி முன்பே தீர்மானித்து வைத்திருப்பதைக் காட்டியது.

''நீங்களே முடிவு பண்ணிடுவீங்களா? என்கிட்டே கன்சல்ட் பண்ண மாட்டீங்களா?'' என்று அவள் மனத் தாங்கலுடன் கேட்க,

''நான் லைஃபிலே செட்டில் ஆக இரண்டு வருஷம் ஆகும். அதனால இப்போதைக்கு குழந்தை வேண்

டாம்னு நினைச்சேன். குழந்தை நமக்கு சுகமானதா இருக்கணும். சுமையாத் தோணிடக் கூடாதுன்னு நினைச்சேன். சரி... நீ என்ன முடிவு பண்ணி இருக்கே. சொல்லு கேட்கிறேன்.''

''நாம உடனடியாக் குழந்தைப் பெத்துப்போம்.''

''எதுக்கு? நம்ம குழந்தையும் சேர்ந்து நம்மோட கஷ்டப்படுறதுக்கா? பொறுமையாப் பெத்துக்கலாம்.''

''இல்லை ராஜ். அப்பத் தான் பேரப் பிள்ளையைக் கொஞ்சுற சாக்கிலே அப்பா என்னை மன்னிப்பார்.''

''உன் அப்பா உன்னை மன்னிக்கணும் அப்படிங்கிறதுக்காக என்னால என் பிள்ளையைக் கஷ்டப்படுத்த முடியாது. எது எப்படின்னாலும் இன்னும் ரெண்டு வருஷத்துக்கு அட்லீஸ்ட் ஒரு வருஷத்துக்கு இந்தப் பேச்சே வேண்டாம்'' என்று சொன்னவன்,

''படுத்துத் தூங்கு. நானும் தூங்குறேன். நாளைக்குத் தான் முதல் நாள் என்பதால் சீக்கிரமா போய் வேலையில் சேரணும்'' என்று சொல்லி அவர்களின் படுக்கையை மறைக்க வைத்திருக்கும் திரையை இழுத்துவிட்டுப் படுத்துக் கொண்டான்.

பாதிப் பேச்சிலே இப்படிக் கழண்டுக்குவதே இவருக்குப் பிழைப்பாப் போச்சு என மனதினுள் திட்டியவள் ஜன்னல் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள். ஐந்து நிமிடங்கள் கடந்த நிலையில் எழுந்து அமர்ந்து கொண்டாள்.

''என்னாச்சு? எதுக்கு உட்கார்ந்திருக்கே?'' என்று அவள் கேட்டதும்,

''ஏ.சி முகத்திலே அடிக்குது. கஷ்டமா இருக்கு'' என்று முணுமுணுத்தாள்.

''சரி நீ இந்தப் பக்கம் வா'' என்று சொல்லி ஜன்னல் புறம் அவன் படுக்கச் சென்றான். மறுபடியும் ஐந்தே நிமிடத்தில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

''இப்ப என்ன விஷயம்?'' என்று கேட்டதும்,

''பிடிக்குறதுக்கு பிடிமானமே இல்லை. கீழே தள்ளிவிடுற மாதிரியே இருக்கு'' என்றாள்.

படுத்திருந்தவன் அவளைத் தன் பக்கமாக இழுத்து தன் மீது படுக்க வைத்துக் கொண்டு அணைத்துக் கொண்டான்.

''நான் பிடிச்சுக்கிறேன். நீ எப்படிக் கீழே விழுவாய்ன்னு நான் பார்க்கிறேன்'' என்றான்.

கணவனின் மார்பு மீது முகம் வைத்துப் படுத்தவளின் கண்ணீரால் அவனது சட்டை நனைந்தது. பெருமூச்சை வெளியேற்றியவன் அவளது கன்னீரைத் துடைத்து விட்டு அவளது காதில்,

''மனசைப் போட்டு குழப்பிக்காதே நிவி. நாம இது விஷயமா அப்புறமாப் பேசலாம். இதைப் பேசுறதுக்கு இது சரியான இடம் இல்லை. எதைப் பத்தியும் யோசிக்காமல் தூங்கு. அப்பத் தான் நானும் தூங்க முடியும். காலையிலே வேலைக்குப் போகணும். ப்ளீஸ்ம்மா'' என்று சொன்னதும் சரி என்ற தலை உருட்டலுடன் ஜன்னல் புறமாக நகர்ந்து படுத்துக் கொண்டு தூங்க ஆரம்பித்தாள்.

11



அடுத்த நாள் அவர்கள் சென்னை சென்று இறங்கியதும் அவன் வாடகைக்கு அமர்த்தி இருந்த வீட்டிற்குக் கூட்டிச் சென்றான்.

"அக்காவை வைச்சு பால் காய்ச்சச் சொல்லிட்டேன். அவங்களும் வீட்டைக் கிளீன் பண்ணி வைச்சுட்டாங்க. இனிமேல் தான் திங்க்ஸ் வாங்கணும்" என்று கூறிக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

அந்த வீடு ஒரேடியாக பழைய வீடாக இல்லாமல் ஓரளவுக்குப் புதிதாகக் காட்சி அளித்தது. ஒரே ஒரு படுக்கை அறை கொண்ட வீடு. தந்தையின் வீட்டில் அவளது படுக்கை அறையின் அளவு தான் மொத்த வீடே இருந்தது.

சின்னதாக ஒரு வரவேற்பறை. அதை விடச் சின்ன தாய் ஒரு அடுக்களை இருந்தது. ஒரு பால்கனியும் இருந்தது. அங்கு தான் துணி காயப் போட வேண்டும் போல! அதற்கான கொடி கட்டப்பட்டு இருந்தது. வரவேற்பறையில் நான்கு பிளாஸ்டிக் சேர்கள் இருந்தன. அவை தவிர வேற எந்தப் பொருளும் அங்கே இல்லை.

"நிவி நான் ஊருக்கு வரும் முன்னாடி... அதாவது வெள்ளிக்கிழமை மதியம் இங்க கொஞ்ச திங்க்ஸை எல்லாம் வாங்கி வைச்சிட்டு ஊருக்கு வரலாம்ன்னு தான் நினைச்சேன். அப்புறமா இந்த வீட்டை நிரப்புவது முக்கியமா இல்லை வைஃப் மனசை நிரப்புவது முக்கியமான்னு கேள்வி எழுந்துச்சா? அதான் அன்னைக்கு அப்படியே விட்டுட்டு ஓடி வந்துட்டேன். இன்னைக்கு மதியம் வந்ததும் சரி செஞ்சிடலாம். அது வரைக்கும் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ" என்று சொன்னவன் குளித்து முடித்து தனது பல்சர் வண்டியை எடுத்துக் கொண்டு போய் அருகில் உள்ள உணவகத்தில் சாப்பிட்டு முடித்து அவளுக்கு சாப்பாடு வாங்கிக் கொண்டு வந்து தந்தான்.

போகும் முன் அவளது கையில் ஒரு லட்சம் ரூபாய் பணத்தைக் கொடுத்து. "இந்தப் பணம் வீட்டுக்குத் தேவையானதை வாங்குவதற்கு. வைச்சிரு" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

அவன் மதியம் இரண்டு மணிக்கு வரும் போதே சாப்பாட்டையும், இரண்டு தட்டையும் வாங்கிக் கொண்டு வந்தான்.

"என்ன நிவி போர் அடிச்சுச்சா? ரொம்பப் பசிச்சதா? படுக்கக் கூட இடம் இல்லாமல் கஷ்டமா இருந்துச்சா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. வாங்க சாப்பிடுவோம்" என்று சொல்லிக் கொண்டே அவனது கையிலிருந்த பார்சலை வாங்கிப் பிரித்தாள். அடுப்பு மேடையை மேஜையாக்கி அந்த பிளாஸ்டிக் நாற்காலியில் அமர்ந்து கொண்டு சாப்பிட்டு முடித்தார்கள்.

சாப்பிட்டு முடித்த கையோடு, "அந்தப் பணத்தை எடுத்துட்டு வா நிவி. நாம போய் திங்க்ஸ் வாங்கிட்டு வந்திடுவோம்" என்றான்.

"எந்தப் பணம்?"

"காலையிலே உன்னிடம் கொடுத்தேனே ஒரு லட்சம்."

"அதை வைச்சு நான் பர்னிச்சர்ஸ் புக் பண்ணி இருக்கேனே."

"நீயாப் போய் வேலையை முடிச்சிட்டியா? எல்லாத்தையும் ஆர்டர் பண்ணிட்டு வந்துட்டியா?" என்று ஆச்சரியமாக அவன் கேட்கவும்,

"எல்லாத்தையும்ன்னா எதைச் சொல்லுறீங்கன்னு புரியலை. நான் கட்டில், மெத்தை, சோபா மூணும் ஆர்டர் பண்ணிட்டு வந்து இருக்கேன். ஒரு லட்சமும் காலி" என்றாள்.

"விளையாடாதே நிவி. சீரியஸாப் பேசு."

"நான் சீரியஸாத் தான் பேசுறேன். அந்தப் பணத்தை வைச்சுத் தான் புக் பண்ணிட்டு வந்திருக்கேன்."

மனைவியின் செயலால் கோபம் வரப் பெற்றவனாய், "நீ யாரைக் கேட்டு இப்படிச் செஞ்சே?" என்று கேட்டான்.

"என் வீட்டுக்கு திங்க்ஸ் வாங்க நான் யாரைக் கேட்கணும். கைமிலே பணம் இருந்துச்சு. நான் வாங்கினேன்."

"அது நான் கொடுத்த பணம். நான் எதுக்கு அதை வைச்சிருக்கேன்னு ஒரு வார்த்தை கேட்கணும்ன்னு உனக்குத் தோணவே இல்லையா? நீ பாட்டுக்கு உன் இஷ்டத்துக்கு செலவு பண்ண இது ஒண்ணும் உன் பனக்கார அப்பா வீடு இல்லை. சாதாரண டாக்டர் வீடு. இங்க அளந்து அளந்து தான் செலவு பண்ணனும்."

"இப்போ எதுக்குத் தேவையில்லாமல் எங்க அப்பாவை இழுக்குறீங்க? உங்களுக்கு அவர் என்ன செஞ்சார்?" என்று கோபமாய் அவள் கேட்டதும்,

"பின்னே நீ உன் இஷ்டத்துக்கு எனக்கு செலவு இழுத்துவிட்டால் நான் எப்படிச் சமாளிப்பது? அன்னைக்கு இப்படித் தான்... ஃபீவர் வந்த உடனே உன்னைப் பார்க்க வரச் சம்மதிச்சு இருந்தால் பஸ்ஸிலேயே வந்திட்டுப் போயிருப்பேன். வேண்டாம்ன்னு சொன்னவள் அடுத்த நாள் ஃபிளைட் பிடிச்சு வாங்கன்னு சொல்லிட்டே. அதுக்கு ஒரு பத்தாயிரம் செலவு. அதோட போச்சா? இப்பவே கொடைக்கானல் கூட்டிட்டுப் போன்னு சொல்லி அதுக்கு ஒரு பத்தாயிரம் அவுட்டு. சரி அந்த இருபதாயிரத்தை எப்படியாச்சும் சரிக் கட்டிக்கலாம்ன்னு நான் நினைச்சுக்கிட்டு இருந்தால்.. இப்போ ஒரு லட்சம். என்னோட மொத்த சேவிங்க்ஸே அது தான். நான்

இப்போ எங்கே போய் கடன் வாங்குறது? ப்ச்க..." என்று அலுத்துக் கொண்டே அந்தச் சேரில் அவன் கண் மூடி அமர்ந்தான்.

நிவேதாவிற்குக் கணவனின் குற்றச்சாட்டு அதிகக் கோபத்தை வரவழைத்தது. அதைவிட அவன் தன்னைப் பார்க்க வந்ததை எல்லாம் செலவுக் கணக்கில் பட்டியலிட்டது கடுப்பை ஏற்றியது. படுக்கை அறைக்குள் விறுவிறுவெனச் சென்றவள் தனது கைப்பையை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

பேசி முடித்த பின்பே தன்னையும் மீறி வார்த்தைகள் வெளியே வந்துவிட்டதை உணர்ந்து வருந்தியவனாய் ராஜீவ் கண் திறந்தான்.

படுக்கை அறையில் இருந்து வெளியே வந்தவளிடம், "சாரிம்மா. கோபத்திலே ஏதோ சொல்லிட்டேன்" என்று சொன்னதைக் காதிலே வாங்காதவளாய் அவள் வெளியேற எத்தனிக்க... அவன் விரைந்து சென்று அவளது கைப்பிடித்துத் தடுத்தான்.

"எங்கே போறே நிவி?"

"உங்களை விட்டுட்டு ஓடிப் போக மாட்டேன். வெளியே போயிட்டு அரை மணி நேரத்திலே வந்திடுவேன்" என்று சொல்லி வெளியேறினாள்.

'ராஜீவ், உனக்குப் பொறுமை போச்சுடா. இப்படின்னா இன்னும் ஒரு நிலைக்கு வரும் வரைக்கும் என்னவெல்லாம் திட்டுவியோ? பொறுமையை வளர்த்துக்கோ. கோபத்தைக் குறைச்சுக்கோ. அம்மா சொன்ன அறிவுரை எல்லாம் மறந்து போச்சா? எதையும் பேசும் முன்னாடி கொஞ்சம் யோசிச்சுப் பேசு. அவளைக் காயப்படுத்திவிட்டு உன்னால சந்தோஷமா வாழ்ந்திட

முடியுமா?' என்று அவனது மனசாட்சி அவனுக்கு எடுத்து... இல்லையில்லை இடித்துரைத்தது.

ஆட்டோவில் பயணம் செய்யும் பொழுது முதலில் கணவன் தன்னைப் பார்க்க வந்ததைச் சொல்லிக் காட்டிவிட்டானே என்று அதைப் பற்றியே எண்ணிக் கொண்டு அவனைத் திட்டித் தீர்த்தாள்.

பின்பே கணவன் கூறிய 'என் மொத்த சேவிங்க்ஸே இது தான்!' என்ற வாசகம் ஞாபகம் வந்தது.

ஒருவனைக் காதலிக்கும் போது அவனது நிதி நிலை மையைப் பற்றித் தெரிந்து கொண்டு காதலித்தால் அதற்குப் பெயர் காதலே அல்ல. அந்த வகையில் நான் ஒரு நல்ல காதலி.

ஆனால் அதே சமயம் என் கணவனின் நிதி நிலை மையைத் தெரிந்து கொள்ளாமல் இருந்தால் நான் ஒரு நல்ல மனைவியாக இருக்க முடியாதே! நம்ம கோபம் கொஞ்சம் வடிந்ததும் அவரிடம் இது பற்றி உட்கார்ந்து பேச வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்தாள்.

நாற்பது நிமிடங்களில் திரும்பி வந்தாள். அவளது கைப்பையில் கைவிட்டு பணத்தை எடுத்தவள், ''இந்தாங்க உங்க பணம். பத்தாயிரம் குறையும். அந்தக் கடை யிலேயே பத்தாயிரத்துக்குப் பொருள் வாங்கிக்கோங்க. அதுக்கு அட்வான்ஸ் பே பண்ணினதுக்கான பில் இது'' என்று சொல்லி அதையும் நீட்டினாள்.

''பணத்தை எப்படிடாத் திருப்பிக் கொடுத்தான்? பொருவா கொடுக்க மாட்டாங்களே!'' என்று ஆச்சரிய மாகக் கேட்டுக் கொண்டே வந்தவன், ''அவன்கிட்டே கெஞ்சினாயா?'' என்று வருத்தத்துடன் கேட்க,

''எங்க கம்பெனியிலே உள்ள மொத்த வொர்க்கர்ஸ், எங்க சப்ளையர்ஸ் என்று ஏகப்பட்ட பேரைச் சமாளிக்கத் தெரிஞ்ச எனக்கு ரெண்டு பேரைச் சமாளிக்கத் தெரி யாதா? எங்கப்பா எனக்கு அதை எல்லாம் தெளிவாக் கத்துக் கொடுத்திருக்கார்'' என்று சிலுப்பிக் கொண்டு சொன்னாள்.

''நிவி, சாரிம்மா. நான் காலையிலே உன்னிடம் அந்தப் பணம் பற்றித் தெளிவாச் சொல்லாமல் போயிட் டேன். தப்பு என் பேரிலே தான். சரி வா... நாம இப்பப் போய் வீட்டுக்கு வேண்டியதை வாங்கிட்டு வருவோம்.''

''நான் எங்கேயும் வரதா இல்லை'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வீட்டின் அழைப்பு மணி அடித்தது.

''சுமோத் வந்திருக்கான் என்று நினைக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறக்கச் சென்றான்.

வந்தது சுமோத் தான். உள்ளே வந்த உடனே நிவே தாவின் முகமே அவள் நல்ல மனநிலையில் இல்லை என்பதை அவனுக்குக் காட்டிக் கொடுத்தது.

''எப்படிம்மா நிவேதா இருக்கே?'' என்று சுமோத் நலன் விசாரித்தான்.

''நான் நல்லா இருக்கேன் அண்ணா'' என்று மட்டும் சொன்னாள்.

நண்பனிடம் திரும்பியவன், ''ஏ.சி பிட்டிங் பண்ண ஆள் கூட்டிட்டு வந்திருக்கேன்டா'' என்றான்.

''உனக்கு வேலை இருக்கா? கொஞ்சம் பக்கத்தில் இருந்து பார்த்துக்கிறியா? நான் போய் முதல்ல கட்டில் மெத்தை வாங்கிட்டு வரேன். முடிஞ்சால் இன்னைக்கே எல்லாத்தையும் வாங்கிடலாம்ன்னு பார்க்கிறேன்.''

"நீ போயிட்டு வாடா. எனக்கு முக்கியமான வேலை ஒண்ணும் இல்லை. திங்க்ஸ் வீட்டுக்கு வரும் போது யாராவது ஒருத்தர் பக்கத்திலே இருக்கிறது நல்லது தானே?" என்று சுமோத் சொல்லவும்,

"சரிடா. நான் கிளம்புறேன். வரேன் நிவி" என்று சொல்லிவிட்டு அகன்றான்.

சுமோத் அழைத்து வந்தவர்கள் ஏ.சியை மாட்டி முடிப்பதற்கும் கட்டிலும், மெத்தையும் வருவதற்கும் சரியாக இருந்தது.

ராஜீவ் ஸ்டீல் கட்டில், ஸ்டீல் பீரோ, ஸ்டீல் கைப்பிடியுடன் உள்ளே சோபா என்று அனைத்தையுமே விலை குறைவான ஸ்டீல் பொருட்களாக வாங்கினான். இருபது இன்ஞ் தொலைக்காட்சிப் பெட்டி, சிறிய சாப்பாட்டு மேஜை, பிரிஜ், சாதாரண மாடல் வாஷிங் மெஷின் என அனைத்தையும் அவன் வாங்கினான்.

ஒவ்வொரு பொருளாக வீடு வந்து சேர்வதும் அதை சுமோத் இடம் பார்த்து வைப்பதுமாய் இருந்தான். பொருட்கள் எல்லாம் வந்த பின்பு தான் அந்த கட்டிடம் வீடாகக் காட்சி அளித்தது. ராஜீவ் வீடு வந்து சேரும் போது இரவானது.

"என்னாச்சுடா? நீ வாங்கி அனுப்பின பொருள் எல்லாம் கூட வந்திடுச்சு. நீ வர என் இவ்வளவு லேட் ஆகிடுச்சு?"

"இல்லைடா. டி.விக்கு கேபிள் கனெக்ஷன் இல்லாம அவ நாளைக்கு எப்படி டி.வி பார்ப்பாள்? அதான் கேபிள் ஆபரேட்டரைப் பார்த்துச் சொல்லிவிட்டு வந்தேன். அப்படியே ஜன்னலுக்கு ஸ்க்ரீன் வாங்கிட்டு வந்தேன். இன்னும் சமையல் சாமான் தான் வாங்கணும். அதை

நாளைக்குத் தான் பார்க்கணும். சரிடா சாப்பிட வா. உனக்கும் சேர்த்து சாப்பாடு வாங்கிட்டு வந்திருக்கேன்" என்று சொல்லி அவன் அதை மேஜையில் வைத்துப் பிரிக்க ஆரம்பித்தான்.

"நிவி, வா சாப்பிடலாம்" என்று அழைக்கவும் சுமோத்தின் முன் கணவனிடம் வாதிட விரும்பாமல் பேசாமல் வந்து அமர்ந்தாள்.

"ரெண்டு தட்டு தானேடா இருக்கு. நாம மூணு பேர் இருக்கோமே?" என்று சுமோத் கேட்டதும்,

'நாம வேண்டும் என்றால் பிறகு சாப்பிட்டுக் கொள்ளலாம்' என நினைத்த ராஜீவ் அதைச் சொல்வதற்கு வாய் திறக்க ஒலித்த குரலோ நிவேதாவோடது.

"நாங்க ரெண்டு பேரும் ஒரே தட்டில் சாப்பிட்டுக் கிறோம் அண்ணா" என்றதும் இரு ஆண்களுமே நிம்மதியானார்கள்.

வந்ததில் இருந்து இறுக்கமாய் இருக்கிறாளே அதனால் இவர்களுக்கு இடையே பெரிய சண்டை வந்து இருக்குமோ? அதை எப்படி நண்பன் சமாளிக்கப் போகிறான் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த சுமோத்திற்கு. சின்ன சண்டை தான் போல! சமாதானமாகப் பேசிவிட்டாளே! என்று இருந்தது.

ராஜீவோ மனைவி சமாதானக் கொடியை ஆட்டியதாக நினைத்து நிம்மதியுற்றான்.

அந்தப் பெரிய தட்டில் அவள் ஒரு ஓரமாகத் தனது இட்லியை வைத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள். அவன் இன்னொரு ஓரத்தில் வைத்துக் கொண்டு சாப்பிடத் தொடங்கினான்.

"என்னோட லக்கேஜ் எல்லாம் எங்கேடா சுமோத்?"

"உள்ளே உன் பெட் ரூமிலே இருக்குடா?"

"அப்போ நான் பார்க்கும் போது ஒண்ணுமே எடுத்துட்டு வரலியேடா? திரும்பப் போய் எடுத்துட்டு வந்தியா?"

"இல்லைடா பால் காய்ச்சின அன்னைக்கே கொண்டு வந்து வைச்சுட்டேன். நீ காலையிலே ஹாஸ்பிட்டல் போற அவசரத்திலே கவனிச்சிருக்க மாட்டே. அந்த பெட்ரூம் செல்ஃபிலே இருக்கு."

"ஓ.கே. தாங்க்ஸ்டா!"

சாப்பிட்டு முடித்து சுமோத் கிளம்பிச் சென்றதும் கதவை அடைத்துவிட்டு வந்த ராஜீவ், "முதல்ல உனக்கு படுக்க பெட்டை ரெடி பண்ணித் தரட்டுமா? காலையிலே இருந்து நீயும் ஒரே சேரிலே உட்கார்ந்துக்கிட்டு கஷ்டப்பட்டு இருந்திருப்பே தானே?" என்று கேட்டுக் கொண்டே சுமோத் சொன்ன அவனுடைய பெட்டியில் இருந்து படுக்கை விரிப்பையும், தலையணை உறையையும் வெளியே எடுத்தான்.

தன்னுடைய உடமையில் இருந்து ஒரு பிளேடைத் தேடி எடுத்தவன் அந்த மெத்தையின் மேலிருந்த பாலீதின் கவரைக் கிழித்து விட்டு அதன் மேல் அந்த விரிப்பை விரித்தான். பின் தலையணையையும் கவரில் இருந்து வெளியே எடுத்து உறை மாட்டிக் கொடுத்தான். அவனைப் பின் பற்றி அவளும் இன்னொரு தலையணைக்கு உறையை மாட்டினாள்.

ஏ.சியை ஆன் பண்ணியவன், "நீ படுத்துக்கோ நிவி" என்றான்.

"நீங்க வேற என்ன வேலை செய்யப் போறீங்க?"

"இல்லைம்மா ஜன்னலுக்கு ஸ்கிரீன் மாட்டலாம்ன்னு பார்த்தேன்."

"நாளைக்கு நான் பகலில் சும்மா இருக்கும் போது மாட்டிக்குறேன். இப்போ நீங்களும் தூங்குங்க."

"இல்லைம்மா. அது உயரத்திலே இருக்கும். உனக்கு எட்டாது."

"சேர் போட்டு ஏறிக்குவேன்."

"இல்லைம்மா கீழே விழுந்திடப் போறே. நாள் இல்லாத போது அது மாதிரி எதையாச்சும் செஞ்சு வைக்காதே."

"இந்த அக்கறைக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை."

அவளது கைப்பிடித்து நடத்திச் சென்று படுக்கையில் அமர வைத்தவன், "எதிலேயும் குறையலைடா நிவி. சட்டுன்னு கோபம் வந்திடுச்சு. அதான் அன்னைக்கு மதுரை வந்த கணக்கெல்லாம் சொல்லிட்டேன். தப்புத் தான் சாரி.

நான் என்னுடைய நிதி நிலைமை பத்தி உன்கிட்டே முன்னாடியே தெளிவாச் சொல்லி இருக்கணும். ஆனால் அதுக்கான நேரம் தான் இல்லாமல் போச்சு. இப்பச் சொல்லுறேன். பொறுமையாக் கேளு. என்னையும், அக்காவையும் எங்க அம்மா, அப்பா கஷ்டப்பட்டு தான் படிக்க வைச்சாங்க. அக்காக்கு வசதியான இடத்திலே இருந்து சம்பந்தம் வந்தது. நாங்க கடன் வாங்கி அவங்க கல்யாணத்தை முடிச்சு வைச்சோம். அந்தக் கடனைத் தான் இத்தனை நாளா நானும், அம்மா அப்பாவும் சேர்ந்து அடைச்சிக்கிட்டு இருந்தோம். கொஞ்ச நாள் முன்னாடி தான் அடைச்சோம்.

இப்பத் தான் நான் எனக்குன்னு காஸ்ட்லியா ஒரு மொபைல், பைக், வாட்ச்ன்னு எல்லாம் வாங்க ஆரம்பிச்சேன். இன்னும் ஒரு ரெண்டு வருஷத்திலே நானும் கொஞ்சம் செட்டில் ஆகிடுவேன்னு வைக்கக்கோ. அதுக்குள்ளே நமக்குக் கல்யாணம் ஆகிடுச்சு. இப்பக் கூட இந்த ஒரு மாசம் தான் ரொம்பவே இழுத்துப் பிடிக்கணும். எல்லாம் புதுசா வாங்க வேண்டியதாப் போச்சு. வீட்டுக்கு அட்வான்ஸ்... அப்படி இப்படின்னு நிறைய செலவு. சோ என்னோட சேவிங்ஸிலே இருந்து எடுத்துத் தான் நான் இதையே செலவு செய்யுறேன்.

எப்படியும் இன்னும் ஒரு வாரத்திலே பிரைவேட் ஹாஸ்பிட்டலில் வேலை தேடிக்குவேன். வேலை கிடைச்சிட்டால் அடுத்த மாசத்திலே இருந்து ரெண்டு சம்பளம் வந்துவிடும். கொஞ்சம் ஃப்ரீ ஆகிடலாம். அது வரைக்கும் நாம கொஞ்சம் பார்த்துத் தான்டா செலவு செய்யணும். உனக்குப் புரியுதா?'' என்று தங்களது குடும்ப நிதி நிலவரத்தைப் பற்றி எடுத்துரைத்தான்.

ம்ம்ம் என்று பெரிதாகத் தலையாட்டினாள்.

''சரி தூங்கு'' என்று சொல்லி அவனும் அவளை அணைத்தவாறு படுத்துத் தூங்கிப் போனான்.

நிவேதா கணவன் சொன்னதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள். கணவனது செல்வ நிலை அவளுக்குப் புரிந்து போனது. அவன் ஏன் இன்னும் சிறிது காலத்திற்குக் குழந்தை வேண்டாம் என்று மறுக்கிறான் என்பதற்கான காரணம் புரிந்தது. அவனது திட்டமிடல் பிடித்திருந்தது. இனிமேல் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அவளது வீட்டில் மெத்தை மிகவும் மென்மையாக இருக்கும். ஆனால் இதுவோ கடினமானதாகத் தோன்றியது. ஆனால் அந்த நினைப்பைக் கூட உடனே உதறினாள். கஷ்டப்பட்டுக் கணவன் தனக்காக ஒன்று வாங்கித் தந்திருக்கிறான். அதைக் குறை சொல்லக் கூடாது என்று முடிவு செய்தாள்.

12



பின் தூங்கிப் பின் எழும் பத்தினியாய் அவள் எழுந்து பார்க்கும் பொழுது அவன் எழுந்து மருத்துவ மனைக்குச் செல்லத் தயாராகி இருந்தான்.

''குட்மார்னிங் மா. நான் போய் சாப்பிட்டு உனக்கும் சாப்பாடு வாங்கி வந்துட்டேன். மதியம் வரும்போது சாப்பாடு வாங்கிட்டு வரேன். பக்கத்திலே ஒரு வேலைக் காரம்மாக்குச் சொல்லி இருக்கேன். செக்யூரிட்டி கூட்டிக் கிட்டு வருவார். உனக்குப் பிடிச்சிருந்தால் வேலைக்கு அமர்த்து. கேபிள் ஆளுங்களும் கனெக்ஷன் கொடுக்க பத்து மணிக்கு வந்திடுவாங்க. பார்த்துக்கோ. நான் மதியம் வந்திடுறேன். பை'' என்று சொல்லிக் கிளம்பினான்.

அவன் மதியம் வரும் போது அவள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அப்பாடா! வந்துட்டீங்களா ராஜ்'' என்று அவள் வரவேற்றதும்,

''ரொம்ப போர் அடிக்குதா நிவி?'' என்று கேட்டான்.

''ஆமா ராஜ். நான் வீட்டிலே இப்படிச் சும்மா இருந்ததே இல்லை. அதான்... நான் வேணா எங்கேயாவது வேலைக்குப் போகட்டுமா?''

"வேலைக்கா? நீயா? உனக்கு நிர்வாகம் பண்ணித் தானேம்மா பழக்கம். உன்னால யார்கிட்டவும் கை கட்டி வேலை பார்க்க முடியாதே."

"அப்போ வீட்டிலேயே செய்யுற மாதிரி வேலை செய்யட்டுமா? ஷேர் டிரேடிங் பண்ணட்டுமா?"

"எனக்கு அது பத்தியெல்லாம் அதிகம் தெரியாது. உனக்கு இன்டிரஸ்ட் இருந்தால் செய்."

"அப்போ உங்க லாப் டாப்பைக் கொடுங்க."

"லாப் டாப்பா? நான் ஒரு டாக்டர்ம்மா. எனக்கு எதுக்கு கம்ப்யூட்டர்?"

"ஓ! அப்போ என்ன செய்யுறது?"

"ஒரு மாசம் பொறுத்துக்கோ. எனக்கு எப்படியும் இன்னும் ஒரே வாரத்திலே வேற இடத்திலும் வேலை கிடைச்சிடும். அடுத்த மாசம் சம்பளம் வந்தவுடன் வாங்குவோம்." என்று சொன்னதும்,

அவள் பேச்சைத் திசைத் திருப்பினாள். அதற்கு மேல் பேசி அவனை வருந்தும்படி செய்துவிடக் கூடாது என எண்ணினாள்.

அன்றே அவர்கள் சமையல் மற்றும் வீட்டு வேலை செய்வதற்கு ஒரு வேலையாளை அமர்த்தினார்கள். இருவரும் போய் சமையல் செய்யத் தேவையானப் பொருட்களை வாங்கி வர முடிவு செய்தார்கள்.

"ஆட்டோவிலே போயிட்டு வந்திடுவோமா நிவி? சாமானை எல்லாம் பைக்கிலே கொண்டு வர முடியாதே!"

"எதுக்கு ராஜ் ஆட்டோ? உங்க காரிலே போயிடு வோம்."

"என்னிடம் கார் இல்லையேம்மா. பைக் மட்டும் வாங்கியதாகத் தானே நேத்து சொன்னேன்."

'ஆனால் அன்றைக்கு வந்த கார் உங்களோடது இல்லையா?' என்று வாய் வரை வந்த கேள்வியை ஒதுக்கினாள். அவர்கள் வெளியே சென்று வேண்டியதை வாங்கிக் கொண்டு இரவு உணவையும் முடித்துவிட்டு வீடு திரும்பினர்.

புதன் கிழமை மருத்துவமனை சென்று திரும்பியவன் சாப்பிட்டு முடித்ததும், "நிவி, உன் பர்த் டே இந்த சன்டே வருது தானே? அதுக்கு உனக்கு ஒரு வாட்ச் வாங்குவோமா?" எனக் கேட்டான்.

"ஏன் ராஜ் கிஃப்டை சஸ்பென்ஸாக் கொடுக்க மாட்டீங்களா?"

"அது மாதிரி அடுத்த வருஷம் தரேன். இப்போ உன்கிட்டே வாட்ச் இல்லையே. நான் பாட்டுக்கு எதையாவது ஒண்ணை வாங்கிட்டு வந்து அது உனக்குப் பிடிக்காமல் போச்சுன்னா... எதுக்கு வம்பு? அதனால உனக்குப் பிடிச்ச மாதிரியே அதை வாங்குவோம். இந்தா பணம். அன்னைக்கு வெளியே சுத்துவதற்கும் சேர்த்து இதிலே பணம் இருக்கு. ஒருவேளை உனக்குப் பகலிலே போர் அடிச்சால் நீயே போய் கூட வாட்ச் வாங்கிக்கோ. ரெண்டாயிரத்தை பர்த் டே செலிபிரேஷனுக்குத் தனியா எடுத்து வைச்சிட்டுப் போய் வாங்கு."

"சரி தாங்க. பணம் என்கிட்டேயே இருக்கட்டும். ஆனால் நாம சனிக்கிழமை சேர்ந்து போய் வாங்குவோம். அன்னைக்கு உங்களுக்கு டியூட்டி சீக்கிரம் முடிஞ்சிடும் தானே?"

"ஓ.கே. அப்படியே செய்வோம். இப்போ ஒரு சினிமாவுக்குப் போவோமா நிவி?" என்று கேட்டான்.

''ஹேய்! சூப்பர் ராஜ். வாங்க போகலாம். எனக்கும் போரடிக்குது'' என்று சொல்லிக் கிளம்பினாள்.

அவள் தனது பல்சர் பைக்கில் ஏறி அமர்ந்து வண்டியை இயக்கிவிட்டு அவளை ஏறச் சொன்னான். அவள் ஏறாமல் அவனது வண்டியை ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்க...

''நிவி ஏறாமல் என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?''

''ராஜ். இது என்ன சீட் இவ்வளவு ஹைட்டா இருக்கு? இதிலே எப்படி உட்காருவது? நான் இதுக்கு முன்னாடி பைக்கிலே போனதே இல்லையே!'' என்று பரிதாபமாகக் கேட்டவளைப் பார்த்து ராஜீவிற்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

''ஏறு நிவி. பழகிக்கோ. வேற வழியில்லை. சென்னையிலே எல்லா இடத்துக்கும் ஆட்டோவிலே போக ஆரம்பிச்சா நாம பாதி சொத்தை ஆட்டோச் சார்ஜுக்குக் கொடுக்க வேண்டி இருக்கும். என்னைப் பிடிச்சுக்கோ'' என்று சொன்னதும் வண்டியில் ஏறப் போனவள் அதில் இடித்துக் கொண்டதும் ஆ என்று அலறினாள்.

''என்ன நிவி அந்த சிஸ்டிலே பட்டிருச்சா? அது சின்ன சர்ஜரி பண்ணி கிளீன் பண்ண வேண்டியது. அதைப் போய் வைச்சுக்கிட்டு அலறிக்கிட்டு இருக்கே. இந்த அழகுல உன் புருஷன் ஒரு சர்ஜன். வெளியிலே சொல்லிடாதே நிவி. சிரிக்கப் போறாங்க'' என்று கேலி செய்தான்.

அவளது வலது முழங்காலுக்கு கீழே ஐம்பது பைசா அளவில் ஒரு சின்ன வீக்கம் உண்டு. அது சாதாரணமாக வலிக்காது. எதிலாவது உரசினால் வலிக்கும். அதைப் பார்வையிட்ட ராஜீவ், 'இது சேபேசியஸ் சிஸ்ட் (sebaccous cyst). வீங்காமல் இருந்து இருந்தால் சர்ஜரி கூடத் தேவைப்படாது. உனக்கு வெளியே லேசா வீங்கிக்கிட்டு இருப்பதால் தான் மைனர் சர்ஜரி தேவை' என்று சொல்லி இருந்தான். அவன் பிரச்சனை இல்லை என்று சொன்னதால் அவள் அதை அகற்றுவதில் அசால்ட்டாக இருந்தாள்.

கணவனது கேலியைக் கண்டு கொள்ளாது எப்படியோ வண்டியில் ஏறி அமர்ந்தாள்.

அவளது பயம் புரிந்தவனாய் அவன் மெதுவாகத் தான் ஓட்டினான். ஒரு சிக்னலில் கடைசி நொடியில் சிவப்பு விளக்கை பார்த்து சடன் பிரேக் போட்டு நிறுத்த நிவேதா வண்டியில் இருந்து வழுக்கிக் கொண்டு இறங்கி ரோடில் நின்றாள்.

''இப்போ எதுக்கு நிவி இறங்கிட்டே? வசதியா இல்லையா?''

''நான் எங்கே இறங்கினேன்? நீங்க பிரேக் போட்ட லட்சணத்தில் கீழே வழுக்கிக்கிட்டு நிக்குறேன்'' என்று சொன்னாள்.

அவள் வழுக்கிக் கொண்டு வண்டியில் இருந்து இறங்கியதை சுற்றி உள்ளவர்கள் எல்லாம் பார்த்துவிட்டார்களே என்ற அவமான உணர்வு அவளது குரலிலும், முகத்திலும் வெளிப்பட்டது.

''சரி நிவி, நீ என்னை மாதிரி ரெண்டு பகமும் கால் போட்டு உட்காரு. அப்போ விழ மாட்டாய்.''

அவள் அதே மாதிரி உட்கார்ந்துவிட்டு, ''இது பெட்டரா இருக்கு ராஜ்'' என்றாள்.

அவளை நினைத்துப் பார்க்கையில் அவனுக்கு வருத்தமாக இருந்தது. அவளை நல்லபடியாக வைத்துக்

கொண்டே ஆக வேண்டும் என்று எப்பொழுதும் போல் இப்பொழுதும் தீர்மானித்துக் கொண்டான்.

அவர்கள் சினிமாப் பார்த்துவிட்டு வீடு வந்ததும், "நிவி, நான் உன்கிட்டே ஒன்னு சொல்லணும்" என்றான்.

"நீ தனியா இருந்துக்கோ. நான் எங்கேயாச்சும் போறேன்னு மட்டும் சொல்லாதீங்க."

அவன் ஒன்றும் சொல்லாமல் அவளைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்கவும்...

"அப்போ அதே தானா? எங்கே போகப் போறீங்க? எத்தனை நாள்? அதுக்குத் தான் சினிமாக்கெல்லாம் கூட்டிட்டுப் போனீங்களா?"

"ப்ச்சு. அப்படி எல்லாம் இல்லைம்மா. ரெண்டு நாளா வீட்டுக்கான திங்க்ஸ் வாங்குறதிலே டைம் போயிடுச்சு. இல்லைன்னா உன்னை எங்கேயாவது கூட்டிட்டுத் தான் போயிருப்பேன்."

"அதை விடுங்க. இப்போ எங்கே போகப் போறீங்க? எத்தனை நாள்?"

"ஹைதராபாத். ஒரு கான்பிரன்ஸுக்காகப் போகப் போறேன். வெள்ளிக்கிழமை நைட் வந்துடுவேன். பஸ்ஸிலே டிக்கெட் வாங்கி இருக்கேன்."

பெருமூச்சை வெளியேற்றியவள், "போயிட்டு வாங்க" என்றாள்.

"என்னால அவாய்ட் பண்ண முடியலைம்மா. சாரி."

அவள் ஒன்றும் சொல்லாது அவனுக்குத் தேவையான துணிகளை எடுத்து வைப்பதில் உதவி செய்தாள்.

"ஏதாச்சும் பிரச்சனைன்னா காயுக்காவுக்குக் கால் பண்ணு. அக்கா நம்மை சனிக்கிழமை விருந்துக்குக்

கூப்பிட்டு இருக்காங்க. ஞாபகம் இருக்கு தானே? அதுக்குப் போகணும். அன்னைக்கு தான் வாட்ச் வாங்கவும் போகணுமோ? அப்போ வந்த உடனே வேலை நிறைய இருக்கு போல!" என்று கூறிக் கொண்டே சென்றவன்,

"நிவி, காயுக்காவைக் கூப்பிட்டுச் சொல்லச் சங்கடப் பட்டால் சுமோத்துக்கு கால் பண்ணு. அவன்கிட்டவும் சொல்லிட்டுப் போறேன்" என்று சொல்லிக் கிளம்பினான்.

அவன் கிளம்பிச் சென்றதும் வீடே வெறிச்சென்று ஆனது. வியாழனன்று காலையில் நிவேதாவின் தோழி சுஜா அழைத்திருந்தாள்.

"ஹேய் சுஜா! எப்படி இருக்கே? ரொம்ப நாளாச்சு உன் கூடப் பேசி..." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே,

"உனக்கு என் கூட எல்லாம் பேச நேரம் இருக்குமா? டாக்டர் சார் கூடப் பேசத்தான் நேரம் இருக்கும்" என்று கேலி பேசியவளை,

"நீ என்னமோ எனக்கு போன் பண்ணிப் பேசினது போலவும் நான் பேசாமல் கட் பண்ணியது போலவும் இப்போ எதுக்கு பில்டப் பண்ணிக்கிட்டு இருக்கே?" என்று கேட்டாள்.

"சரிங்க மேடம். இப்போ சொல்லுறேன் கேட்டுக்கோங்க. நான் இன்னும் சில மணி நேரத்தில் சென்னை விமான நிலையத்தில் கால் பதிக்கப் போகிறேன். ஒரு முழு நாள் சென்னையில் இருப்பேன். நீங்க என்னைப் பார்க்க உங்க டாக்டர்கிட்ட பெர்மிஷன் வாங்கிட்டு வரீங்களா?"

"ஹேய் சூப்பர்! நானே யாருமில்லாமல் தனியாத் திண்டாடிக்கிட்டு இருக்கேன். கொஞ்ச நேரம் என்ன...

ஒரு நாள் முழுசும் உன் கூடவே இருக்கேன். போதுமா?.. என்று சொன்னவள் சில நிமிடங்கள் தோழியிடம் பேசி விட்டு வைத்தாள்.

சுஜா மும்பையில் தங்கி விளம்பரத் துறையில் சொந்த மாக தொழில் செய்பவள்.

நிவேதா அவளுடன் ஹோட்டலில் தங்க முடிவெடுத் தாள். அவள் ராஜீவிடம் ஹோட்டலில் தங்கப் போவது குறித்து ஒன்றும் சொல்லவில்லை.

இதை அறியாத ராஜீவ் வியாழன் இரவே ஹைதரா பாத்தில் இருந்து சென்னை செல்ல பஸ் பிடித்தான். அவனுக்கு அவன் முன்பே அணுகி இருந்த தனியார் மருத்துவமனையில் இருந்து வெள்ளிக்கிழமை மதியம் பணியில் சேரச் சொல்லி அழைப்பு வந்திருந்தது. அதனால் அவன் வெள்ளிக்கிழமை மதியம் கிளம்புவதற்குப் பதில் வியாழன் இரவே கிளம்பிவிட்டான்.

வெள்ளிக்கிழமை காலையில் ஆவலோடு வீட்டிற்கு வந்தவனை வாசலில் இருந்த பூட்டு தான் வரவேற்றது. தன்னிடம் உள்ள இன்னொரு சாவி கொண்டு திறந்து உள்ளே சென்றவன், 'எங்கே போயிருப்பாள்? நம்மகிட்டே சொல்லவும் இல்லை' என எண்ணிக் கொண்டே மணி பார்த்தான். அது ஆறு என்று காட்டியது. எங்கே இருந்தாலும் பரவாயில்லை. எழுந்து பதில் சொல்லட்டும் என எண்ணியவனாய் அவளது கைப்பேசிக்கு அழைத்தான்.

"ஹாய் ராஜ்! இப்பத் தான் தூங்கலாம்ன்னு பார்த்தேன். கரெக்ட்டா கூப்பிட்டீங்க."

"இப்பத் தான் தூங்கப் போறியா? ஏன்? நைட்டெல்லாம் என்ன செஞ்சே?"

"நானும் என் பிரண்டு சுஜாவும் பேசிக்கிட்டு இருந்தோம். நான் சொல்லி இருக்கேன் தானே சுஜா பத்தி.. அவள் சென்னை வந்திருக்காள்."

"இப்போ எங்கே இருக்கே?"

"ஹோட்டலில் இருக்கோம்."

"எதுக்கு அங்க போய் தங்கி இருக்கே? வெட்டிச் செலவு தானே? நான் தான் ஊரிலே இல்லையே. நீங்க ரெண்டு பேரும் நம்ம வீட்டிலே தங்க வேண்டியது தானே?" என்று கடுப்புடன் கேட்டான்.

அவனது செலவுக் கணக்கில் கோபம் அடையப் பெற்ற வளாய், "என் பிரண்டைக் கூட்டிட்டு வந்து தங்க வைக்குற அளவுக்கு உங்க வீடு இல்லை ராஜ்" என்று சொன்னவுடன் ராஜீவ் போனை அணைத்தான்.

அவள் சுட்டிக் காட்டிய அவனது ஏழ்மை நிலை அவனுக்கு வருத்தம் அளிக்கவில்லை. மாறாக அவள் சொன்ன 'உங்க வீடு' என்ற சொற்கள் தான் மனதை வாள் கொண்டு அறுத்தது. அவன் அவளிடம் தான் சென்னை வந்த விஷயத்தையும் சொல்லவில்லை. புது வேலையில் சேரப் போவது குறித்தும் சொல்ல விரும்பவில்லை.

தோழியை அருகே வைத்துக் கொண்டு விவாதம் பண்ண வேண்டாம். அவர் சென்னை வந்ததும் நேரில் சமாதானம் செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்ததால் அவளும் கணவனைத் திரும்ப அழைக்க முயற்சிக்கவில்லை.

அன்று மதியம் அவர்கள் அறையைக் காலி செய்து விட்டு சாப்பிட்டு முடித்ததும் வெளியே ஷாப்பிங் கிளம்பினர். அப்பொழுது எதிர்பாராதவிதமாய் ஒரு

கம்பத்தில் நிவேதாவின் கால் மோதியது. அந்த விக்கத்தில் பட்டுவிட்டதால் வலி விண் விண்ணென்று தெறித்தது. அவள் பல்லைக் கடித்து வலியைப் பொறுக்க... சுஜா பதறிப் போனாள்.

''நிவேதா, வா ஹாஸ்பிட்டல் போவோம்'' என்று கூப்பிட்டாள்.

''ஒண்ணும் பெரிய விஷயம் இல்லை சுஜா. நான் என் ஹஸ்பண்ட்கிட்டே நைட் காண்பிச்சுக்கிறேன்'' என்று மறுத்ததும் சுஜாவும் சரியென்று சம்மதித்தாள்.

ஆனால் ஒரு இருபதடி தூரம் கூட நிவேதாவால் நடக்க முடியவில்லை. அதனால் சுஜா ஒரு டாக்ஸி அமர்த்தி அருகே இருந்த தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள்.

'ஆஹா! இவள் பாட்டுக்கு இங்கே கூட்டி வந்து விட்டாளே! பில்லைத் தீட்டிடுவாங்களே! என்ன செய்யுறது?' என்று நிவேதா கவலைப்பட்டாள்.

செல்வச் சீமாட்டியாய் வளர்ந்தவள் சாதாரண மருத்துவச் செலவிற்குக் கூடக் கவலைப்படும் காலம் வரும் என்று யார் தான் நினைத்துப் பார்த்தார்? இது தான் காலம், நேரம் என்பதோ?

இவர்கள் உள்ளே சென்று தங்களது பிரச்சனையைச் சொன்னதும் ஒரு அறையைச் சுட்டிக் காட்டி அதன் முன் சென்று காத்திருக்கச் சொன்னார்கள். இவர்கள் முறை வந்ததும் உள்ளே சென்ற நிவேதா அதிர்ந்தாள்!

ஏனென்றால் உள்ளே மருத்துவர் இருக்கையில் அமர்ந்திருந்தது ராஜீவ்! இது தான் அவன் இன்று புதிதாய் பணியில் சேர்ந்த மருத்துவமனை.

'ஹைதராபாத்தில் இருக்க வேண்டியவர் இங்கே எப்படி வந்தார்? காலையில் சென்னையில் இருந்து தான் கூப்பிட்டாரா? இன்று இந்த வேலையில் சேர்ந்துவிட்டாரா? சொல்லாமல் மறைச்சிட்டாரா?' எனக் கோபம் அடைந்தவளாய் அவள் கணவனை முறைத்துப் பார்த்தாள். ஆனால் அந்தக் கோபத்திலும் அவளது மனம் 'அப்பாடா! நாம பீஸ் கட்டத் தேவையில்லை' என்று சந்தோஷப்பட்டு நிம்மதி அடைந்தது நிஜம்.

இரண்டு நாட்களாகப் பார்க்காத மனைவியைக் கண்டவுடன் அவனுக்குக் காலையில் ஏற்பட்டிருந்த மனவருத்தம் கூட மறந்து போனது. அவளைப் பார்த்து அவன் புன்னகைக்க முயல.. அவளோ முறைக்கின்றாள்.

'சரி தான் போடி!' என்று எண்ணிக் கொண்டவனாய், ''உட்காருங்க. யாருக்கு என்ன பிரச்சனை?'' என்று அவர்களை அந்நியர்களாய் பாவித்து ஒரு மருத்துவனாய் கேள்வி கேட்டான்.

உள்ளே நுழையும் பொழுது சுஜாவின் கைப்பை தவறிக் கீழே விழுந்தது. அதை அவள் குனிந்து எடுத்தாள். அந்த சமயத்தில் இவர்களுக்குள் நடந்த பார்வைப் பரிமாற்றத்தை கவனிக்காத சுஜா அவனிடம் தன் தோழியின் பிரச்சனையை எடுத்துக் கூறினாள்.

பிரச்சனை நிவேதாவிற்குத் தான் என்று சுஜா தொடங்கியவுடனே ராஜீவ் நிவேதாவின் கரம் பற்றி நாடி பார்க்க ஆரம்பித்தான்.

அவனது கண்கள் நேர் பார்வையாய் சுஜாவைப் பார்த்துக் கொண்டு இருந்தது. மனைவியின் பிரச்சனையாய் அவள் தோழி சொன்னதைக் கேட்டவன், 'ஓ! அந்த சிஸ்ட் தொந்தரவு கொடுக்குதா? வீட்டிலேயே செஞ்சு

முடிச்சிருக்கலாம். நான் சொன்ன போதெல்லாம் கேட்காமல் இப்போ ஹாஸ்பிட்டலுக்கு.. அதுவும் என்கிட்டவே வந்திருக்கியா?' என எண்ணிக் கொண்டான்.

அவன் அவளது நாடியில் பிடித்த பிடியை விடாமலே சுஜாவைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தான். சுஜா இதைச் சற்று நேரம் கழித்தே உணர்ந்தாள்.

'உள்ளே நுழைஞ்சப்போ இந்த டாக்டரைப் பார்த்ததும் ஆள் செம ஸ்மார்ட்டா இருக்கான்னு நினைச்சேன். இப்ப இவன் பண்ணுறதைப் பார்த்தால் கொஞ்சம் வழிஞ்சான் கேசா இருப்பானோ? எதுக்கும் நாம நிவேதாவைத் தனியா விடாமல் கூடவே இருப்போம்' என சுஜா மனதில் முடிவு செய்தாள்.

''ஒரு பத்து நிமிஷ வேலை தான். சின்ன சர்ஜரி. க்ளீன் பண்ணிட்டு கட்டுப் போட்டு முடிச்சுட்டாப் போயிட்டே இருக்கலாம்'' என்று சுஜாவைப் பார்த்துச் சொன்னவன்,

அங்கிருந்த நர்சிடம், ''பேஷண்டை உள்ளே படுக்க வைங்க'' என்று கூறினான்.

சுஜாவும் அவள் பின்னோடு சென்றாள். அவள் போட்டிருந்த சுடிதார் பேண்டை முழங்கால் வரை தூக்கிவிடச் சொன்னான்.

அந்த வீக்கத்தைப் பார்வையிட்டவன், ''ஒண்ணும் பிரச்சனை இல்லை. இப்பவே எடுத்திடலாம்'' என்று பொதுவாகச் சொன்னவன் நர்சிடம் திரும்பித் தனக்குத் தேவையானவற்றைப் பட்டியலிட்டான்.

நர்ஸ் அகன்றதும் மனைவியின் வாழைத் தண்டு கால்களைப் பார்த்தவன், 'சின்ன வயசிலே நல்லா வெண்ணையா சாப்பிட்டு வளர்ந்திருப்பாளோ? இப்படி

வெண்ணை மாதிரி இருக்காள்!' என்று எப்பொழுதும் போல நினைத்துக் கொண்டான். அவனையும் அறியாமல் அவனது கைகள் அவளது கால்களைத் தடவிக் கொடுத்தன.

அவனது செய்கையைக் கண்ட சுஜா, 'ஆள் சபல கேஸ் போலவே? அவன் என்ன சொன்னாலும் சரி. இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது' என்று கடுங்கோபம் அடைந்தாள்.

இவன் இந்தக் காயத்தையே இப்பொழுது தான் பார்க்கிறான். அதற்கும் முன்பே எப்படி அதற்கு வைத்தியம் சொன்னான் என்பதை எல்லாம் சுஜா யோசிக்க மறந்தாள். அவள் அதை மட்டுமா மறந்தாள்? எப்படி ஒரு அந்நிய ஆடவன் தொடுவதைத் தோழி பொறுத்துக் கொள்கிறாள் என்பதையும் தான் சிந்திக்க மறந்தாள்.

நர்ஸ் அவன் கேட்டவற்றைக் கொண்டு வந்து கொடுக்கவும், ''நீங்க வெளியிலே வெயிட் பண்ணுங்க'' என்று சுஜாவைப் பார்த்துக் கூறினான்.

''இல்லை நான் இங்கேயே இருக்கேன்'' என்று கூறி சுஜா வெளியே செல்ல மறுத்தாள்.

''அந்த இடம் மட்டும் மரத்துப் போறதுக்காக ஒரு லோகல் அனஸ்தீஷியா கொடுத்திட்டு வேலையை ஆரம்பிச்சிடுவோம். பேஷண்ட்டுக்கு சுய நினைவு இருக்கும். அதனால அவங்களுக்குத் துணைக்கு ஆள் தேவையில்லை'' என்று அவன் எடுத்துக் கூறியும் சுஜா அந்த இடம் விட்டு அகலவில்லை.

ஒரு விநோதப் பார்வையைச் சுஜா மீது செலுத்தியவன் தன் வேலையை ஆரம்பித்தான்.

அவன் ஊசிப் போட்டு சர்ஜரியை முடித்ததும் அந்த நர்ஸ், "நான் கட்டுப் போடுறேன் டாக்டர்" என்றாள்.

"பரவாயில்லை. நீங்க போய் அடுத்த பேஷண்டைப் பாருங்க. நானே கட்டுப் போட்டு முடிச்சுடுறேன்" என்று சொல்லி அந்த நர்ஸை அனுப்பி வைத்தான்.

'நர்ஸ் வேலையையும் இவனே செய்கிறானே' என்று சுஜா கோபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அவ்வளவு தான் முடிச்சாச்சு. எழுந்துக்கலாம்" என்று சொன்னவன் அவள் எழுந்து கொள்ள கை கொடுத்தான்.

அவள் இறங்குவதற்கு மட்டும் அல்லாமல் அவளைக் கைத் தாங்கலாக நடக்க வைப்பதற்கு முயற்சிக்க, "இனி மேல் நான் பார்த்துக்குறேன் டாக்டர்" என்று சொல்லிய சுஜா தோழியைக் கைப் பிடித்து நடத்திச் சென்றாள்.

"இந்த டாக்டர் சரியான சபல கேஸ் போல. போகும் போது கம்ப்ளெயிண்ட் கொடுக்கணும்" என்று நிவேதா விடம் சொன்னாள்.

அவள் நிவேதாவிடம் கூறியது பின்னே வந்த ராஜீவின் காதில் மிகத் தெளிவாக விழுந்தது. அடடா இது தான் விஷயமா என்று மனதில் சிரித்துக் கொண்டவன்,

"என்னவென்று கம்ப்ளெயிண்ட் பண்ணப் போறீங்க? தேவையில்லாமல் தொடுறான் என்றா? போய் சொல்லிக் கோங்க" என்று சொல்லிக் கொண்டு வந்தவன்,

நிவேதாவின் தாடையைத் தொட்டுத் திருப்பி அவளது இரு கன்னத்திலும் முத்தம் வைத்து, "எப்படியும் கம்ப்ளெயிண்ட் கொடுக்குறதுன்னு ஆச்சு. எதுக்கு கையைப் பிடிச்சான் என்று மட்டும் சொல்லணும். கன்னத்திலே கிஸ் அடிச்சான் என்றும் சேர்த்துக் கம்ப்ளெயிண்ட் கொடுங்க" என்று தெனாவட்டாகக் கூறினான்.

தோழியின் முன் கணவன் முத்தம் கொடுத்தவுடன் நிவேதாவிற்கு வெட்கம் வந்துவிட அவள் பேசாது அமைதியாகத் தலை குனிந்து நின்றாள்.

அவனது தெனாவட்டான குரலில் சுஜா கொதித் தெழுந்தாள். அவளின் கோபம் அமைதியாய் நின்றிருந்த தோழியின் புறம் பாய்ந்தது.

"உனக்கு என்னாச்சு நிவி? ஒங்கி அறைய வேண்டியது தானே?" என்று கேட்கவும் நிவேதா தலை நிமிர்ந்து அவளைப் பார்த்துப் புன்முறுவல் புரிய சுஜாவின் மூளை விழித்துக் கொண்டது.

தெனாவட்டாகத் தன்னிடம் சவால் விடுபவன் ஒரு டாக்டர்.. அதுவும் சர்ஜன். கோபப்பட வேண்டியவளோ பல்லைக் காட்டுகிறாள். ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு என்று மனம் வேகமாகக் கணக்கிட்டது. அவனது பெயர்ப் பலகையைப் பார்க்க விரும்பி அவளது பார்வை அந்த மேஜையில் அதைத் தேடி அலைந்தது.

அவள் எதைத் தேடுகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட ராஜீவ், "நான் இன்னைக்கு தான் வேலைக்கு புதுசா ஜாயின் பண்ணி இருக்கேன். இன்னமும் நேம் போர்ட் செஞ்சு வரலை. மிஸ்டர் நிவேதா என்று செஞ்சு கொண்டு வந்து வைப்பாங்க" என்று சொன்னவுடன்,

தனது இடுப்பில் கை வைத்து அவர்கள் இருவரையும் முறைத்துப் பார்த்த சுஜா, "என்னை வைச்சு ரெண்டு பேரும் காமெடி பண்ணுறீங்களா?" என்று கேட்டாள்.

கணவன் இங்கே வேலை செய்வதே தனக்குத் தெரியாது என்பதை எப்படி விளக்குவது என்று நிவேதா தடுமாறிக் கொண்டிருக்க... அவளுக்குப் பதிலாக ராஜீவ் நிலைமையைத் தெளிவாக விளக்கினான்.

''நான் தான் சொன்னேனே. இங்கே இன்னைக்குத் தான் வேலையிலே சேர்ந்திருக்கேன். வேலையில சேருவதற்காகத் தான் பாதி கான்பிரன்ஸிலே இருந்து ஓடி வந்துட்டேன். நிவிகிட்டே சொல்லலாம்ன்னு பார்த்தால் அவ உங்க கூட ஹோட்டலில் இருந்தாள். சரி நேரிலே சொல்லிக்கலாம்ன்னு பார்த்தேன். நான் என் வைஃபுக்கு ப்ளஸண்ட் ஷாக் கொடுக்கணும்ன்னு நினைச்சேன். ஆனா நீங்க எனக்கு அதிர்ச்சி கொடுக்குறீங்க'' என்றான்.

''நான் நேத்திலே இருந்து நிவேதாவிடம் உங்க போட்டோவைக் காட்டச் சொல்லிக் கேட்டுக்கிட்டு இருந்தேன். இப்பத் தானே புரியுது அவள் ஏன் காட்ட லைன்னு. ஹஸ்பண்ட் இவ்வளவு ஸ்மார்ட்டா இருந்தால் எப்படிக் காட்டுவாள்?!'' என்று சுஜா தனது தோழியைக் கிண்டல் செய்ய,

''ஹேய் சுஜா! நிஜமாவே ராஜ் போட்டோ என் செல் போனில் இல்லை'' என்று அவளுக்கு விளக்கம் கூற,

''நம்ப டிரை பண்ணுறேன் நிவி'' என்று சொன்னவள் ராஜீவைப் பார்த்து, ''மேட் ஃபார் ஈச் அதர். க்ளாட் டு மீட் யூ'' என்று சொல்லிக் கொண்டே தனது வலது கரத்தை நீட்ட...

''நம்பிக் கை கொடுக்கலாமா? போகும் போது கம்ப்ளெயிண்ட் பண்ணிட மாட்டீங்களே?'' என்று அவன் கேலியாய் இழுத்துக் கொண்டே அவளது கைப் பிடித்துக் குலுக்கி, ''நைஸ் மீட்டிங் யூ'' என்றான்.

''எனக்கு டைம் ஆச்சு. நிவியை...'' என்று சுஜா இழுக்கவும்,

''நான் பார்த்துக்கிறேன். நீங்க பார்த்துப் பத்திரமாப் போயிட்டு வாங்க'' என்று கூறி அனுப்பி வைத்தான்.

13



சுஜா வெளியேறியதும் நர்ஸ் உள்ளே நுழைந்தாள். இன்னமும் அந்த இடம் விட்டு நகராத நிவேதாவைக் கேள்வியாய் அவள் பார்க்க...

''சிஸ்டர், இவங்க என் வைஃப்...'' என்று ராஜீவ் தொடங்கியவுடனே,

''நான் நினைச்சேன் டாக்டர்...'' என்று தொடங்கிய வளை வேகமாக இடைமறித்து,

''என்னன்னு நினைச்சீங்க? இந்த டாக்டர் ஒரு வழிஞ்சான் கேஸ் என்றா?'' என்று அவன் பரிதாபமாகக் கேட்க,

''சே சே. இவங்க உங்களுக்கு ஸ்பெஷல்ன்னு நினைச் சேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அந்த பேமஸ் நடிகை பேஷண்ட்டா வந்தாங்களே. நீங்க வழியுற கேசா இருந்தால் அந்த நடிகைகிட்ட இல்ல முதலில் வழிஞ்சு இருப்பீங்க? நீங்க புதுசா ஜாயின் பண்ணி இருக்கீங் களா? அதனால உங்களுக்கு கல்யாணம் ஆன விஷயம் தெரியாமல் இவங்க உங்க லவரா இருப்பாங்கன்னு நினைச்சேன்.''

''ஓ.கே. இவங்களைக் கூட்டிட்டுப் போய் விசிட்டர்ஸ் ரூமிலே உட்கார வைச்சிட்டு ஏதாச்சும் மேகஸின் இருந் தால் படிக்கக் கொடுத்திட்டு வாங்க. போகும் முன்னாடி அடுத்த பேஷண்டை உள்ளே அனுப்பி வைங்க'' என்று சொல்லி தனது வேலையைத் தொடர ஆரம்பித்தான்.

கணவன் தன்னிடம் நேரடியாகப் பேசுவதைத் தவிர்க்கிறான் என்று புரிந்து கொண்ட நிவேதா வருத்தம் அடைந்தாள்.

''மேடம் நான் உங்களை எங்கேயோ இதுக்கு முன்னாடிப் பார்த்திருக்கேன். ஆனா எங்கேன்னு தான் தெரியலை'' என்று அந்த நர்ஸ் சொன்னவுடன்,

நிவேதா, ''அப்படியா சிஸ்டர்? நான் சென்னைக்குப் புதுசு. எனக்குச் சொந்த ஊர் மதுரை. நீங்க என்னை எங்க பார்த்து இருப்பீங்கன்னு தெரியலையே?'' என்றாள்.

''மேடம், நீங்க மதுரையா? நானும் போன மாசம் வரை மதுரையிலே தான் வேலை பார்த்தேன். அசோக் ஹாஸ்பிட்டலில்.''

''அங்கே நான் வந்திருக்கேன் சிஸ்டர். அங்கே உள்ள சீஃப் டாக்டர் என் டாடிக்கு ரொம்ப பிரண்டு. என் டாடி பேரு ரவீந்திரன்.''

''ஓ! ரவீந்திரன் சார் பொண்ணா நீங்க? இப்ப ஞாபகம் வருது. அப்படின்னா நீங்களே சொந்தமா ஹாஸ்பிட்டல் வைக்கலாமே! ஏன் டாக்டர் சார் இங்க வந்து வேலைக்குச் சேரணும்?'' என்று கேட்க ஆரம்பித்தவள், ''பார்த்தீங்களா அங்க பேஷண்ட்டைப் பார்ப்பதை விட்டுவிட்டு உங்க கூட கதை அடிச்சுக்கிட்டு இருக்கேன்'' என்று சொல்லி நகர்ந்தாள்.

இரவு அவளையும் அழைத்துக் கொண்டு வீடு வந்தவன் சாப்பிட்டு முடித்ததும், ''நீயும் உன் பிரண்டும் ஸ்டே பண்ணின ஹோட்டல் பில்லைக் கட்டுவதற்கு பணத்துக்கு என்ன பண்ணினே?'' என்று தனது முதல் கேள்வியைக் கேட்டான்.

அவள் தலை குனிந்த வண்ணம் மெதுவான குரலில், ''நீங்க என் பர்த் டே செலிபிரேஷனுக்கும், வாட்ச் வாங்குவதற்கும் கொடுத்து வைச்ச பணத்தை யூஸ் பண்ணிட்டேன்'' என்றாள்.

ஒரு நொடி கண் மூடித் திறந்தவன் ஒன்றும் சொல்லாது... இன்னும் சொல்லப் போனால் எதையாவது சொல்லி விடுவோமோ எனப் பயந்து போனவனாய் தனது படுக்கை அறைக்குள் சென்று மறைந்தான்.

அவள் தனது நிலையை நொந்து கொண்டே படுக்கை அறைக்குள் நுழைய அவன் அவள் விழுங்க வேண்டிய மாத்திரைகளை எடுத்துக் கொடுத்தான். பெரிய கடமை வீரன் என்று உள்ளுக்குள் புகைந்தவளாய் அதை வாங்கி விழுங்கினாள்.

''ராஜ்...'' என்று மெதுவாக இழுத்தவள் என்னவென்று அவன் கேள்வியாய் நோக்கவும், ''நாம ஏன் சொந்தமா ஹாஸ்பிட்டல் வைக்கக் கூடாது?'' என்றாள்.

''வைஃபுக்கு ஒரு பெர்த் டே கிஃப்ட் வாங்கிக் கொடுக்கவே இங்க வக்கில்லையாம். இதுல ஹாஸ்பிட்டல் தொடங்கணுமாம் ஹாஸ்பிட்டல்'' என்று அவன் சத்தமாக முணுமுணுக்கவும்.

''ராஜ், நான் என்ன பண்ணுறது. அவ திடுதிப்புன்னு வந்து நிப்பாள்ன்னு நான் நினைக்கலை. இது வரைக்கும் என் பிரண்ட்ஸுக்குக் கொடுத்துப் பழகிட்டேன். இனி மேல் அதைக் கொஞ்சம் கொஞ்சமா குறைச்சுக்கிறேன். நீங்க அன்னைக்கு அவ்வளவு தூரம் உங்க நிதி நிலைமையைப் பத்திச் சொல்லியும் நான் செலவு பண்ணியிருக்கேன் என்றால்... என்னால அதைத் தவிர்க்க முடியலைன்னு அர்த்தம். புரிஞ்சுக்கோங்க ராஜ். என்

பர்த் டே தானே ராஜ். அன்னைக்கு முழுசும் நீங்க என் கூடவே இருங்க. அதை விடப் பெரிய கிஃப்ட் எனக்கு வேற என்ன இருக்கு. சொல்லுங்க'' என்றதும்,

பெருமூச்சை வெளியேற்றியவன், ''கடைசியிலே அப்படித் தான் ஆகப் போகுது போல!'' என்றான்.

''அதை விடுங்க. நிஜமாவே ஏன் நீங்க ஹாஸ்பிட்டல் வைக்கக் கூடாது?''

''இடத்துக்கு எங்கே போவேன்?''

''நான் கட்டச் சொல்லலை ராஜ். வாடகைக்கு இடம் பிடிச்சு அதிலே ஏன் வைக்கக் கூடாதுன்னு கேட்கிறேன்.''

''அதுக்கு காசு, பணம், துட்டு, மணி மணி தேவைப் படும்மா'' என்று அவன் பாட ஆரம்பிக்க,

''பேங்கிலே லோன் வாங்குங்க'' என்றாள்.

''எதை அடமானம் வைக்கச் சொல்லுறே?''

''சோழவந்தானில் உங்க பூர்வீக வீடு இருக்கே! அது எவ்வளவு பெருசு!''

தனது கண்களை மூடிச் சில நொடிகள் அமைதி காத்தவன் அவளது கண்களை நேராக நோக்கி, ''நிவி, இனி ஒரு தரம் அந்த வீட்டை அடமானம் வைக்க லாம்ன்னோ, வித்திடலாம்ன்னோ என் முன்னாடி சொல் லாதே. அது எங்க சொத்து இல்லை. கவுரவம். எதுக்காக வும் அதை நான் விட்டுத் தரமாட்டேன்'' என்று மிகத் தீவிரமான குரலில் சொன்னவுடன்,

''ஓ! சாரி ராஜ். அது உங்களுக்கு சென்டிமென்ட்ட லானதுன்னு எனக்குத் தெரியலை. ரியலி சாரி'' என்று சொல்லிக் கொண்டே அவன் மீது சாய்ந்து கொண்டாள்.

அவளை அணைத்துக் கொண்டவனின் மனம் தனது எதிர்காலத்தை எண்ணிக் கவலைப்பட்டது.

மறுநாள் காயத்ரியின் வீட்டு விருந்துக்கு மதியம் வருவதாகச் சொல்லி இருந்தவர்கள் அவனது புதிய வேலையின் காரணமாக இரவு தான் சென்றார்கள். அவர்கள் வீட்டிற்குள் சென்றதும் அங்குள்ள செல்வ நிலைமை நிவேதா எதிர்பார்க்காத அளவில் இருந்தது. எந்தப் பொருளை எடுத்தாலும் மிகவும் விலை உயர்ந்ததாகவே இருந்தது.

அவர்கள் வீடு தனி வீடு. கீழ் தளத்தையும் முதல் மாடியையும் எடுத்துக் கட்டியிருந்தார்கள். வரவேற்பறை யில் இருந்து மாடிப்படி சென்றது. கீழே உள்ள அறையில் மகேஷின் பெற்றோர் இருந்து வந்தனர். மாடி முழு வதையும் காயத்ரியின் குடும்பம் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தது.

''சாரிக்கா. மதியம் வர முடியலை...'' என்று ராஜீவ் சொல்லத் தொடங்கவும்,

''டேய் ராஜீவ்! ரொம்ப ஃபீல் பண்ணாதே. உங்க அக்கா நீ வரலைன்னதும் அவ பிரண்ட்ஸ் கெட்டு கெதருக்குப் போயிட்டு இப்பத்தான் வந்தாள்'' என்றான் மகேஷ்.

''போன வாரம் தானே போனாய்? வாரா வாரம் கெட்டு கெதரா காயுக்கா?''

''நல்லா லட்ச லட்சமா சம்பாதிக்க வேண்டியது. அதை எப்படிச் செலவு பண்ணவென்று தெரியாமல் இப்படிச் செய்ய வேண்டியது'' என்று சொன்ன மகேஷை காயத்ரி முறைத்துக் கொண்டே அந்த இடத்திலிருந்து நகர்த்திக் கூட்டிச் சென்றாள்.

நிவேதா ராஜீவைப் பார்த்து. ''நீங்களும் இஞ்சினியருக்குப் படிச்சிருக்கலாம் ராஜ்'' என்றாள்.

மனைவி தனது தமக்கையின் சம்பாத்தியம் கேட்டு அவ்வாறு சொல்கிறாள் என்பதை உணர்ந்த ராஜீவின் மனம் சுருங்கியது.

இவர்கள் வந்ததை அறிந்த மகேஷின் பெற்றோர் ஆவலுடன் வந்து வரவேற்றனர். நிவேதாவின் கால் காயத்தைப் பற்றி விசாரித்தனர். மாடியில் இருந்து மதுமிதா ஓடி வந்தவள் ''அத்தை'' என்று நிவேதாவைக் கட்டிக் கொண்டாள்.

''காயத்ரி இங்க வா. உன் தம்பி ஃபாமிலியோடு பேசிக்கிட்டு இரு'' என்று மருமகளை வரச் சொல்லி விட்டு மகேஷின் தாய் அடுக்களையை நோக்கி நகர்ந்தார். மகேஷின் தந்தையும் அகன்றதும் இவர்கள் நால்வர் மட்டும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

''நான் போன வாரம் கொடைக்கானல் போனேனா...'' என்று நிவேதா தொடங்கவும்.

''என்னை விட்டுட்டு நீங்க மட்டும் போனீங்களா?'' என்று மதுமிதா சிணுங்கவும்,

அவளது கன்னை பிடித்துக் கொஞ்சிக் கொண்டே. ''எங்க வேனில் உன்னை மாதிரியே ஒரு பொண்ணு வந்துச்சுடா மது. நான் உன்னைத் தான் நினைச்சுக்கிட்டேன்'' என்றாள்.

இவர்கள ஒரு புறம் பேசிக் கொண்டிருக்க அந்தப் பக்கம் காயத்ரி தன் தம்பியிடம், ''வேனிலா போனீங்க? என்ன வேன்?'' என்று தனது விசாரணையை மேற் கொண்டாள்.

''நாளைக்கு அத்தைக்கு பர்த் டே. மது. என்னைப் பார்க்க வரீங்களா?'' என்று நிவேதா கேட்கவும்,

''அப்படியா அத்தை. கண்டிப்பா வரேன். மாமா என்ன கிஃப்ட் வாங்கி வைச்சிருக்கார்?'' என்று தனக்குத் தான் முதலில் விஷயம் தெரிய வேண்டும் என்று ஆவலுடன் கேட்டவளிடம்,

''மாமா எனக்கு வாட்ச் வாங்கித் தரதா சொன்னார். அத்தை தான் இப்போ வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்'' என்றாள்.

இதைக் கேட்டுக் கொண்டே காயத்ரி நகர்ந்தாள். அவர்கள் சாப்பிட்டு முடித்துக் கிளம்பும் போது இரவு வெகு நேரமானது.

வீட்டிற்குள் நுழைந்த உடனே அவன். ''குட் நைட நிவி!'' என்று சொல்லிப் படுத்துவிட்டான்.

கணவன் இரவு பன்னிரெண்டு மணி வரை விழித்திருந்து தனக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லுவான் என்று அவள் எதிர்பார்க்க... அவனோ படுத்துவிட்டான். அவளும் பேசாமல் அவனருகில் படுத்தாள்.

அவனைத் திட்டிக் கொண்டே அவள் தூங்கிப் போனாள். பன்னிரெண்டு மணிக்கு அவளது இடையில் கைப்போட்டு தன்னருகே இழுத்தவன் அவள் விழிப்பு வந்து என்னவென்று உணரும் முன் அவளது உதடுகளைச் சிறை செய்தான். அந்த நீண்ட முத்தத்திற்குப் பின் அவளது காதில். ''ஹாப்பி பர்த் டே குட்டிம்மா'' என்றான்.

அவன் தந்த முத்தத்தை விட அவனது குட்டிம்மா அவளுக்கு அதிக தித்திப்பைத் தந்தது. ஆனால் அதைச்

சொன்னால் அவனது மூடு மாறிவிடும் என்பதை உணர்ந்த வளாய் அவனோடு ஒண்டிக் கொண்டு அவனது கழுத்தைத் தனது கைகளால் கட்டிக் கொண்டு, ''ராஜ் நீங்க தூங்கிட்டீங்கன்னு நான் உங்களைத் திட்டினேன் தெரியுமா?'' என்று சிணுங்கினாள்.

''இப்பப் போய் எப்படிடா தூங்குவேன்? ஏற்கனவே கிஃப்ட்டைத் தான் சொதப்பிட்டேன். இதையாச்சும் சரியாச் செய்ய வேண்டாமா?''

''இதை விட பெரிய கிஃப்ட் என்ன இருக்க முடியும் ராஜ்? வேற யாராலும் கொடுக்க முடியாதது. எனக்கு ரொம்பப் பிடிச்ச கிஃப்ட்டும் கூட.''

''அப்படிங்குறே? பேச்சு மாற மாட்டியே? அடுத்த வருஷமும் நான் இதை மட்டுமே தந்தால் என்னைத் திட்ட மாட்டியே?''

அவனது நெற்றியில் செல்லமாக முட்டியவள், ''கண்டிப்பாத் திட்ட மாட்டேன். ஆனால் பர்த் டேக்கு முன்னாடியோ பின்னாடியோ எதையாச்சும் உங்ககிட்டே இருந்து வாங்கிக்குவேன்'' என்று சொல்லிச் சிரித்தவளை கைப்பிடித்து எழுப்பியவன்,

''அதானே பார்த்தேன். வாங்க மேடம். கேக் கட் பண்ணலாம்'' என்றான்.

''கேக் வாங்கினீங்களா? எப்போ? சொல்லவே இல்லை. எனக்குத் தெரியாமல் எப்படி ராஜ்? உங்க கையிலே அவ்வளவு பெரிய பாக்ஸை நான் பார்க்கலையே!'' என்று ஆச்சரியமாய் கேட்டுக் கொண்டே அவனைப் பின் தொடர...

''பெரிய கேக் வாங்கினால் நீ கண்டுபிடிச்சிடுவேன்னு தெரிஞ்சு தான் ரெண்டே ரெண்டு பீஸ் வாங்கிட்டு

வந்தேன். நாளைக்கு அக்கா, சுமோத்தெல்லாம் வரும் போது பெரிய கேக் வாங்கிக் கட் பண்ணிக்கலாம். இப்போ நமக்கே நமக்கான ஸ்பெஷல் கேக் கட்டிங்'' என்று சொன்னவன் அவளுக்குப் பிடித்த சாக்கோ டிரபிள் கேக்கின் மேல் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்து சாப்பாட்டு மேஜையின் மேல் வைத்தான்.

அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு அவளைத் தன் மடி மேல் இருத்திக் கொண்டு அவளது காதோரம் ஹாப்பி பர்த் டே சாங் பாடினான். அவள் மெழுகுவர்த்தியை ஊதி அணைத்ததும் அந்தக் கேக்கை எடுத்து அவளது வாயில் ஊட்டியவன், ''ஐ லவ் யு டா நிவி!'' என்றான்.

அதை வாய் திறந்து வாங்கியவள், ''லவ் யூ டூ ராஜ்!'' என்று சொல்லி அவனை அணைத்துக் கொண்டாள்.

இருவரும் அதே நிலையில் அமைதியாய் இருக்க... இருவரின் மனமோ பின்னோக்கிச் சென்றது.

அவள் தனது முந்தைய பிறந்த நாட்களை எண்ணி அசைபோட்டாள். அவளது பிறந்த நாளை எப்பொழுதும் ரவீந்திரன் ஆடம்பரமாய் அமர்க்களப்படுத்துவார். அந்த ஆடம்பரம் இந்த வருடம் இருக்காது. ஆனால் இன்றைய இனிமை அதற்கு எந்த விதத்திலும் குறையவில்லை என்று நினைத்து ஆனந்தப்பட்டாள்.

ராஜீவோ அவளது முந்தைய பிறந்த நாள் போல அவள் இன்றும் என்றும் சந்தோஷமாக இருக்க வேண்டும். அதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும் என யோசித்துக் கொண்டிருந்தான்.

முதலில் சிந்தனையில் இருந்து விடுபட்ட ராஜீவ், ''எனக்கெல்லாம் கேக் தர மாட்டீங்களா? நமக்குக்

கிடைச்சாப் போதும்ன்னு சாப்பிட்டுச் சும்மா இருந்துடு வீங்களா?'' என்று கேலி செய்து அவளையும் நிகழ் காலத்திற்கு இழுத்து வந்தான்.

அவர்கள் இருவருக்கும் அன்று இரவு தூங்கா இர வாகிப் போனது. அவள் கண் விழித்த பொழுது மதியம் பன்னிரெண்டு மணி. அருகில் கணவனைத் தேட... அவன் வீட்டில் எங்கேயும் இல்லை என்றதும் விழித்தாள்.

அவளது கைப்பேசியை இயக்கி அவனை அழைக்க எண்ணினாள். ஏகப்பட்ட மிஸ்ட் கால்கள் பதிவாகி இருந்தன. ஒன்று கூடவா நம்மைத் தூக்கத்தில் இருந்து எழுப்பவில்லை? எப்படி என்று யோசித்தவளுக்கு அது ஸைலண்ட் மோடில் இருப்பது தெரிந்தது. ஓ! ராஜ் மாற்றி இருப்பார் என்று எண்ணிக் கொண்டாள்.

வந்திருந்த மிஸ்ட் கால்களில் ஒன்றாவது தனது தந்தையிடம் இருந்து வந்திருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தாள். இல்லை என்றதும் மனம் வருந்தினாள். என்றைக்குத் தான் தனது பிரச்சினை தீரும் என்று நினைத்துப் பெருமூச்சை வெளியேற்றியவள் கணவனுக்கு அழைத்தாள்.

''என்னங்க மேடம் தூங்கி எழுந்துட்டீங்களா?''

''எங்கே ராஜ் போனீங்க?''

''நான் கேக் வாங்க வந்திருக்கேன்மா. நான் வரதுக் குள்ளே குளிச்சு முடி. காயத்திலே தண்ணி படாமல்...'' என்றதும்,

''சரிங்க டாக்டர் சார்'' என்று கூறியவள் குளியலறைக் குள் புகுந்து கொண்டாள்.

மதியம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, ''ராஜ் நான் இனிமேல் கொஞ்சம் கொஞ்சமாய் சமைக்கப் பழகப் போறேன்'' என்றாள்.

எதுக்கு இந்த விஷப் பரீட்சை என்று கேட்க எண்ணி யவன் அவளது முகத்தில் இருந்த தீவிரத்தைப் பார்த்து, ''முதல்ல தோசை ஊத்தக் கத்துக்கோம்மா. அப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறலாம்'' என்றான்.

''கரெக்ட். நாளையில் இருந்து நான் தான் தோசை ஊத்தப் போறேன்'' என்று அறிவித்தாள்.

''சாயங்காலம் அக்கா, மாமா, மது வராங்க. அவங்க வரதுக்கு முன்னாடி கோயிலுக்குப் போயிட்டு வந்துடு வோமா?''

''ம்ம்ம் போகலாம். ஈவினிங் சுமி கூட வருவாள்.''

''ஓ! உன் பிரண்ட்ஸ் எப்படி என் வீட்டுக்கு வரு வாங்க?'' என்று 'என் வீட்டை' அவன் அழுத்திக் கேட்க,

புரியாமல் விழித்தவள், ''என்ன கேட்குறீங்க?'' என்றாள்.

அவன் ஒன்றும் சொல்லாமல் இருக்கவும்... ''ராஜ், சொல்ல வந்ததை முழுசா சொல்லுங்க'' என்று அழுத்திக் கேட்கவும்,

''நீ தானே நேத்து சொன்னே? உன் பிரண்ட் வந்து தங்குவதற்கு என் வீடு ஒண்ணும் அவ்வளவு வசதியா இல்லைன்னு...'' என்று திரும்பவும் என் வீட்டை அழுத்திச் சொல்ல...

''ராஜ், சுஜாவும், சுமியும் ஒண்ணா? அந்த சுஜா கொஞ்சம் அலட்டல் பேர்வழி. அவ ஊருக்குப் போனப்போ என்னை ஸ்டார் ஹோட்டலில் தங்க வைச்சுப் பார்த்துக் கிட்டாள். இப்போ நான் பதிலுக்குச் செய்யலைன்னா என்னை மட்டுமல்லாமல் உங்களையும் கேவலமாப் பேசுவாள். அதனால தான் அவளை இங்கே கூட்டிட்டு

வரலை. அது என்ன... என் வீடுன்னு அழுத்தி அழுத்திச் சொல்லுறீங்க? நான் ஏதாச்சும் அப்படிச் சொன்னேனா?''

ம் என்று அவன் மெதுவாக முணுங்கவும்... ''ராஜ் நீங்க என்ன லூசா? உங்க வீடு என் வீடு இல்லையா? நான் ஏதோ தூக்கக் கலக்கத்தில் சொல்லி இருப்பேன். அதுக்குப் போய் ஃபீல் பண்ணீங்களா?'' என்று செல்லமாக அலுத்துக் கொள்ளவும்,

''நேத்தும் அக்கா...'' என்று தொடங்கியவன் பின் சொல்ல வேண்டாம் என்று தீர்மானித்தவனாய் அந்த இடம் விட்டு நகர ஆரம்பித்தான்.

அவனைத் தடுத்து நிறுத்தியவள், ''ராஜ் எதுவா இருந்தாலும் கேட்டு க்ளியர் பண்ணிக்கோங்க. நீங்களா மனசிலே வைச்சுப் புழுங்காதீங்க. சொல்லுங்க நேத்து அக்கா...'' என்று அவளே எடுத்துக் கொடுக்க,

''நேத்து அக்கா வீட்டிலே நான் இஞ்சினியரிங் படிச்சிருந்தால் வசதியா வாழலாம்ன்னு சொன்னேதானே?''

''ஓ! மை காட்! நான் அப்படியா ராஜ் சொன்னேன்? அன்னைக்கு ஊரிலே இருக்கும்போது அத்தைக்கும், மாமாக்கும் எல்லோரும் மரியாதை கொடுக்குறதைப் பார்த்து ராஜும் வாத்தியாராப் போயிருக்கலாம்ன்னு நினைச்சேன். அதே மாதிரி நேத்து அண்ணி கெட் டு கெதர் பத்திப் பேசினவுடனே நீங்களும் இஞ்சினியரிங் படிச்சிருக்கலாமேன்னு சொன்னேன். அவ்வளவுதான். அதெல்லாம் சும்மா அந்த நேரத்துக்கு தோணின விஷயம். என் ஹஸ்பண்ட் டாக்டருன்னு எனக்குப் பெருமைதான்'' என்று அவள் விளக்கிச் சொல்லவும் அவன் மனம் சமாதானம் அடைந்தது.

''தாங்க்ஸ் டா'' என்று சொல்லி அவளது உச்சியில் முத்தமிட்டவன் அவளைப் படுக்கை அறைக்குள் அழைத்துச் சென்று, ''நாம இந்த மாசத்துக்கு பட்ஜெட் போடுவோமா?'' என வினவினான்.

பேப்பர் பேனாவோடு அமர்ந்தவன் எழுத ஆரம்பித்தான். வீட்டு வாடகை, வேலைக்காரி சம்பளம், மளிகை சாமான் என்று அவன் எழுதிக் கொண்டு இருக்கும் போதே, ''உனக்குத் தோணினதை நீயும் சொல்லு நிவி'' என்றான்.

''நானா? எனக்குப் பார்லர் செலவுக்குப் பணம் வேணும்'' என்று சொன்னதும்,

''சரி. அதுக்கெல்லாம் பட்ஜெட்டிலே இடம் கிடையாது. இந்த மாசம் ஒரு சம்பளம் தான். அதுவும் முப்பத்தைந்து ஆயிரம் தான். எம்.எஸ். முடிச்சுட்டதால அடுத்த மாசத்தில் இருந்து இன்கிரிமென்ட்டா கூட ஐயாயிரம் வரும்'' என்றான்.

''அப்படியா? ஓ.கே. பார்லரைக் கட் பண்ணிடலாம். எனக்கெல்லாம் யோசிச்சுச் செலவு பண்ணத் தெரியாதே! என்கிட்டே போய் பட்ஜெட் போடச் சொல்லுறீங்க?''

''நான் மட்டும் என்ன யோசிச்சுப் பார்த்தா இத்தனை நாளும் செலவு பண்ணினேன். நான் பாட்டுக்கு இருந்தேன். இப்ப என்னை நம்பி ஒருத்தி கழுத்தை நீட்டிட்டதால் நான் பைனான்ஸ் மினிஸ்டர் வேலை எல்லாம் பார்க்க வேண்டி இருக்கு.''

''கல்யாணம் ஆனதிலே டாக்டர் சாருக்கு ஏக வருத்தம் போல?''

"சே சே! என்னை நம்பி எவ கழுத்தை நீட்டுவாள்? நிவேதா மேடம் கழுத்தை நீட்டியதிலே குஷியாத் தான் இருக்கேன். ஆனா என்னைக் கல்யாணம் பண்ணிட்டு நீ தான் கஷ்டப்படுறே."

"நீங்க கஷ்டப்படுறீங்களா ராஜ்?"

"நான் எதுக்குக் கஷ்டப்படணும். உன்னைக் கல்யாணம் பண்ணியதால என் ஸ்டேட்டஸ் என்ன குறைஞ்சா போயிடுச்சு? உன் நிலைமை தான் தாழ்ந்திடுச்சு. அப்போ உனக்குத் தான் கஷ்டம்."

"எனக்குப் பணக் கஷ்டமெல்லாம் கிடையாது ராஜ். என் கவலை எல்லாம 'உங்களை கஷ்டப்படுத்தி விடக் கூடாதுங்கிறதில் தான் இருக்கு."

அவர்கள் கிளம்பிக் கோவிலுக்குப் போய்விட்டு வந்ததும் சுமித்ராவும், சுமோத்தும் வந்தார்கள். தோழியைக் கண்டு துள்ளிக் குதித்தவளிடம்,

"பார்த்தும்மா... கீழ் வீட்டுக்காரங்க அடிக்க வந்திடப் போறாங்க" என்று சுமோத் நக்கல் பண்ண அவனை இரு தங்கைகளும் முறைத்தனர்.

அவர்களது பரிசாக அவர்கள் ஒரு மடிகணினியினைப் பரிசாகத் தர... அதை வாங்கிக் கொள்ள நிவேதா தயங்கினாள்.

"ஹலோ நிவி! இது நாங்க ரெண்டு பேரும் உங்க ரெண்டு பேருக்கும் தரும் வெட்டிங் கிஃப்ட்டும் கூட. வெறும் பந்த் டே கிஃப்ட்னு நினைச்சியா? நல்ல கதையைக் கெடுத்த போ" என்று சுமோத் கிண்டல் செய்யவும் சரி என்று சொல்லி நிவேதா வாங்கிக் கொண்டாள்.

ராஜீவ் தன் நண்பனைக் கூர் பார்வை பார்க்க சுமோத் அவன் பார்வையைத் தவிர்த்தான். இரு தினங்களுக்கு

முன் நிவேதா லாப் டாப் கேட்டவுடன் எங்கே சென்று வாங்கலாம்? என்ன மாடல் புதிதாக வந்திருக்கு? என்று சுமோத்திடம் தான் ராஜீவ் விசாரித்து இருந்தான்.

நண்பன் அதையே பரிசளித்து விட்டான்.

சிறிது நேரத்தில் காயத்ரி தன் குடும்பத்துடன் வந்தாள். மதுமிதா ஓடி வந்து தன் அத்தைக்கு வாழ்த்தைத் தெரிவித்துவிட்டு, "அத்தை, நான் உங்களுக்கு ஒரு கிஃப்ட் வாங்கி இருக்கேன். என்னன்னு சொல்லுங்க?" என்று கேட்டாள்.

"தெரியலையே? நீ சொல்லிடேன் ப்ளீஸ்" என்றதும்,

"பிரிச்சுப் பாருங்க. சர்ப்ரைஸ்" என்று சொல்லி ஒரு பெட்டியைக் கொடுக்கப் பிரித்துப் பார்த்தால் அழகிய கைக்கடிகாரம் இருந்தது. நிவேதா ஆச்சரியத்துடன் தனது கணவனைத் திரும்பிப் பார்க்க... அவன் தனது அக்காவின் பக்கம் பார்வையைத் திருப்ப... அவள் ஏன் நிமிரப் போகிறாள்? அப்பொழுது தான் தன் கணவன் மகேஷுடன் தீவிரமாகப் பேசிக் கொண்டு இருந்தாள்.

ராஜீவ் கண் மூடி அமைதியாகச் சில கணங்களைச் செலவிட்டான். 'ஒருவனுக்கு வாழ்க்கையில் உறவும் நட்பும் நல்ல முறையில் அமைந்து விட்டால் அதை விடப் பெரிய பேறு இல்லை' என நினைத்துக் கொண்டான்.

"அத்தை, மாமாக்கு முன்னாடியே நான் உங்களுக்கு வாட்ச் வாங்கிக் கொடுத்து விட்டேன். அப்படின்னா உங்களுக்கு நான் தானே மாமாவை விட க்ளோஸ்?" என்று மதுமதா கேட்கவும்,

"அப்படிப் போட்டுத் தாக்கு" என்று சுமோத் சிரிக்க... என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் நிவேதா விழிக்க...

"ஹேய் மது! என்னையும், அத்தையும் பிரிக்கத் தான் கிஃப்ட் கொண்டு வந்தியா?" என்று கேலி பண்ணிய ராஜீவ், "உன் அத்தை கூடச் சேர்ந்து விளையாடு. ஓடு. போ" என்று அவர்களை படுக்கை அறைக்குள் அனுப்பி வைத்தான்.

அவர்கள் எல்லோரும் சேர்ந்து பலூன் ஊதி, கலர் பேப்பர் வைத்து அந்த வரவேற்பறையை அலங்கரித்தனர் பின் கேக் வெட்டி, சாப்பாடு வரவழைத்து சாப்பிட்டு முடித்து அவர்கள் கிளம்பிச் சென்றனர்.

அவர்கள் சென்றதும், "நிவி, நீ கேட்ட மாதிரி லேப்டாப் வந்திடுச்சு. அப்போ அந்த ஷேர் டிரேடிங் ஆரம்பிச்சுட வேண்டியது தானே? உனக்கும் பொழுது போகும்" என்றான்.

எப்படிச் செய்வது என்று முதலில் தயங்கியவள், "இல்லை ராஜ். அதுக்கு நம்ம பணத்தை முதலாப் போடணும். குறைஞ்சது ஒரு லட்சமாச்சும் தேவைப்படும்" என்று மெதுவான குரலில் கூறினாள்.

"அந்தப் பணத்தை நான் உனக்குத் தரேன்."

"உங்ககிட்டே ஏது அவ்வளவு பணம்?" என்று கேட்க வந்தவள் தனது கேள்வியைப் பாதியில் நிறுத்த...

"எமர்ஜென்சிக்காகன்னு பணம் வைச்சு இருக்கேன்டா. அதிலே இருந்து தரேன். நான் காலையிலே போனால் நைட் தான் வருவேன். உனக்கு ரொம்ப போர் அடிக்கும். அதனால நீ இதைச் செய். உனக்கும் சம்பாதிச்ச திருப்தி கிடைக்கும்" என்றான்.

'ம்ம்ம் பார்லர் செலவுக்கு ஆயிரம் ரூபாய் கேட்டால் பட்ஜெட்டில் இடமில்லைங்கிறார். இப்ப என்னடான்னா

லட்ச ரூபாய் தரேங்கிறார். அவர் பிளானிங் ஒண்ணும் நமக்குப் புரிய மாட்டேங்குது போ' என நினைத்துக் கொண்டாள்.

அவன் சொன்னபடியே மறுநாளே அவள் கணக்கிற்கு லட்ச ரூபாயை மாற்றினான். அவளும் அந்த வேலையில் மூழ்கினாள். அந்த மடிகணினியினால் பேஸ் புக், மெயில் என்று அவளது பொழுதும் பறந்தது.

14



அடுத்த மாதம் சம்பளம் வாங்கியவுடன் ராஜீவ் பட்ஜெட் போட அமர்ந்தான்.

"இந்த மாசம் ரெண்டு சம்பளம். அதுக்குள்ளே பட்ஜெட் போடலாம். முதல்ல சேவிங்க்ஸ்."

"இல்லை ராஜ். ஷேர் டிரேடிங்கில் வரும் என்னோட வருமானமும் சேர்த்து மூணு."

"அதை உன் செலவுக்கு வைச்சுக்கோம்மா. நான் உன் செலவுக்குன்னு சொல்லிப் பணம் கொடுக்கக் கொஞ்ச காலம் ஆகலாம். அது வரைக்கும் அதை உன் செலவுக்காக வைச்சுக்கோ."

"என் செலவுன்னா? பார்லர் போறதுக்கா?"

"என் வைஃபுக்கு அதைக் கூட நான் செலவு செய்ய மாட்டேனா?"

"யாரோ பட்ஜெட்டில் இடம் இல்லைன்னு சொன்னாங்க?"

"அது போன மாசம். இது இந்த மாசம்" என்று நக்கல் பண்ணியவன், "உன் பிரெண்ட்ஸுக்கு செலவு பண்ண வைச்சுக்கோம்மா" என்றவன்.

அவளை அருகே இழுத்துக் கொண்டு, ''அது சரி உனக்கு எதுக்குப் பார்லர்? ஏற்கனவே என் மாமியார் நல்லா வெண்ணையாக் கொடுத்து வளர்த்து இருக்காங்க போல! சும்மா வெண்ணெய் மாதிரி வழுக்கிக்கிட்டுப் போறே!'' என்று அவளது மென்மையான சருமத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டே சொல்ல...

அவளோ, 'தனது கணவனின் வாயில் இருந்து தாயைப் பற்றிய பேச்சுக்கூட இயல்பாய் வருகிறது. தந்தையைப் பற்றி மட்டும் தான் பேச மறுக்கிறான்' என்று குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள். இவர்களுக்கு இடையே இருக்கும் பனிப்போர் என்று தீரும் என்று அவளுக்கு ஏக்கமாக இருந்தது.

மனைவியின் பதிலை எதிர்பார்த்தவன் அவள் அமைதியாக இருப்பதைப் பார்த்து அவளது முகத்தைத் தன் புறம் திரும்பி, ''நான் கொஞ்சுறது கூடத் தெரியாமல் மேடமுக்கு அப்படி என்ன யோசனை?'' என்று கேட்டான்.

ஒன்றும் இல்லை என்று தலையசைத்து மறுத்தவள் அவனது மார்பில் சாய்ந்து கொண்டாள். வீட்டு நினைப்பு வந்துவிட்டது போல எனப் புரிந்து கொண்டவன் அதற்கு மேல் அவளிடம் ஒன்றும் கேட்கவில்லை.

திருமணம் ஆகி மூன்று மாதங்கள் கடந்திருந்தது.

அன்று மதியம் சாப்பிட்டு முடித்து அந்த தனியார் மருத்துவமனைக்கு ராஜீவ் சென்ற போது அங்கே அவனுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. வழக்கம் போல் முதலில் அறையில் தங்கி இருக்கும் நோயாளிகளைக் கவனிப்பதற்கென்று அவன் ஒவ்வொரு அறையாகச் சென்று பார்வையிட்டுக் கொண்டிருந்தான்.

அங்கு ஒரு அறையில் படுத்திருந்தவர் ரவீந்திரன். அவனைக் காட்டிலும் அவரது அதிர்ச்சி பெரிதாக இருந்தது. ராதா தான் தன் பார்வையை மருமகனின் முகத்தில் இருந்து அகற்றாது பார்த்துக் கொண்டிருந்தார்.

ராஜீவ் தன்னுடைய உணர்ச்சிகளைக் காட்டிக் கொள்ளாமல் உடன் வந்த நர்ஸிடம், ''என்ன கேஸ் சிஸ்டர்?'' என்று கேட்டான்.

''ஹார்ட் அட்டாக் கேஸ் டாக்டர். ஆபரேஷன் செய்ய சீஃப் டாக்டர் நாளைக்கு டேட் குறிச்சிருக்கார்'' என்று சொன்னதும் அவன் அவரது ஃபைலை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.

எல்லா அறைகளிலும் எதைச் செய்தானோ அதையே இங்கேயும் தொடர்ந்தான். அதாவது மாமனார் என்று பரிவு காட்டவும் இல்லை. தனக்கு எதிரானவர் என்று எதிரியாகவும் பாவிக்கவில்லை.

அந்த சிஸ்டர் நோயாளிக்கான பரிசோதனையாய் ரவீந்திரனது பிரஷரைச் சரி பார்த்துக் கொண்டிருக்கும் போது தலைமை மருத்துவர் அவரது அறைக்குள் நுழைந்தார். வந்தவர் ரவீந்திரனைப் பார்த்துத் தலையாட்டிவிட்டு ராஜீவிடம் பேசத் தொடங்கினார்.

''ராஜீவ், சார் மிஸ்டர் ரவீந்திரன். மதுரையைச் சேர்ந்தவர். இங்கே சென்னைக்கு வந்த இடத்திலே ஹார்ட் அட்டாக் வந்திடுச்சு. அதான் இங்கேயே அட்மிட் ஆகிட்டார். நான் நாளைக்கு ஆபரேஷனுக்கு தேதி குறிச்சு இருக்கேன்.''

''இப்பத் தான் டாக்டர் ஆபரேஷன் பத்தி சிஸ்டர் சொன்னாங்க.''

"வெல். நாளைக்கு கரெக்ட் டைம்க்கு வந்திடுங்க" என்று சொன்னதும் சரி என்று தலை ஆட்டிவிட்டுச் சென்றான்.

ராஜீவ் அறையை விட்டு அகன்றதும், "என்ன மிஸ்டர் ரவீந்திரன்? எப்படி இருக்கீங்க? நாளைக்கு ஆபரேஷனுக்குத் தயாரா இருக்கீங்களா?" என்று வினவினார்.

"டாக்டர், நாளைக்கு எனக்கு ஆபரேஷன் நீங்க பண்ணுவீங்களா? இல்லை இப்ப வந்திட்டுப் போன டாக்டரா?" என்று ரவீந்திரன் தன் சந்தேகத்தை முன் வைக்கவும்,

"நான் தான் பண்ணுவேன். அவர் என்னோட அசிஸ்டென்ட். ஸ்மார்ட் பாய். ரொம்பத் திறமையானவன். எனக்கு மட்டும் ஒரு பொண்ணு இருந்தால் அவனுக்குக் கட்டிக் கொடுத்து என் கூடவே வைச்சுக்குவேன். என்ன செய்யுறது? எனக்குப் பொண்ணும் இல்லை. அவனுக்கும் கல்யாணம் ஆகிடுச்சு" என்று சொல்லிச் சிரித்தார்.

அவரது பேச்சினைக் கேட்ட ராதா மாப்பிள்ளை அவ்வளவு திறமையானவரா? கம்பீரமாவும் இருக்கார். நம்ம பொண்ணு பக்கத்திலே நிக்க வைச்சுப் பார்த்தால் ரொம்பவே பொருத்தமாகவும் இருக்கும். இதை விட வேற என்ன வேண்டும் என நினைத்துப் பூரித்துப் போனார்.

ரவீந்திரன் வேறு எதுவும் கேட்காததால், "நாளைக்குப் பார்ப்போம். ஒண்ணும் பயப்படாதீங்க" என்று இரு வரைப் பார்த்தும் பொதுவாகச் சொல்லிவிட்டுச் சென்றார்.

தலைமை மருத்துவரின் அறையைத் தட்டி அனுமதி வாங்கிக் கொண்டு ராஜீவ் உள்ளே நுழைந்தான்.

"டாக்டர், உங்ககிட்டே கொஞ்சம் பேசணும். நீங்க இப்போ ஃப்ரீயா?"

"சொல்லுங்க ராஜீவ். என்ன விஷயம்?"

"நாளைக்கு மிஸ்டர் ரவீந்திரன் ஆபரேஷனுக்கு நான் கண்டிப்பா இருக்கணுமா டாக்டர்?"

"ஏன் அப்படிக் கேட்குறீங்க?"

"இல்லை ஆபரேஷன் நடக்கும்போது நான் உங்களுடன் இருப்பதை பேஷண்ட் விரும்ப மாட்டார். ஆபரேஷன் சமயத்திலே அவர் மனநிலைமை ரொம்ப முக்கியமானது இல்லையா?"

"கண்டிப்பா? ஆனா அவர் ஏன் விரும்ப மாட்டார்ன்னு சொல்லுறீங்க? அவர் என்னிடம் அப்படி ஒன்றும் சொல்லலையே! அவரை உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?"

"யெஸ் டாக்டர். அவரோட பொண்ணைத் தான் நான் கல்யாணம் பண்ணி இருக்கேன். லவ் மேரேஜ். அவரை எதிர்த்துக்கிட்டு பண்ணி இருக்கேன். அதான்..."

"இன்டிரஸ்டிங். ஆனா அவர் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கலையே ராஜீவ். அதனால நீங்க நாளைக்குக் கண்டிப்பா எனக்கு அசிஸ்ட் பண்ணுறீங்க. யூ மே கோ நவ்" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

வீட்டில் தன் மனைவியிடம் அவளது தந்தையின் உடல்நிலை பற்றி அவன் வாய் திறக்கவில்லை.

மறுநாள் அறுவை சிகிச்சை நடக்கும்போது ராதா தனியாக இருந்தார். அவருடன் அவரது வீட்டு டிரைவர் மற்றும் அவரின் மேனேஜர் என்று சில ஆண்கள் உடன் இருந்த போதும் பெண் துணையாக யாரும் இருக்கவில்லை.

ராதாவிற்கு இக்கட்டான நேரத்தில் தனது மகள் தன்னருகே இருக்க மாட்டாளா என்று ஏக்கமாக இருந்தது. கணவனும் மகளை வரச் சொல்லிக் கூப்பிடவில்லை. மாப்பிள்ளையாவது தன் மகளிடம் விஷயம் சொல்லி அழைத்து வருவாரோ என்று நப்பாசையுடன் காத்திருந்தார்.

ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழைவதற்காக அந்த நீண்ட பாதையில் ராஜீவ் தனியாக நடந்து வர... தனது ஆசை நிராசையானது ராதாவிற்குப் புரிந்து போனது.

மகள் தான் வரவில்லை. மருமகனாவது தன்னிடம் ரெண்டு வார்த்தை ஆறுதலாய் பேச மாட்டாரா என்று நினைத்த ராதா ராஜீவைப் பரிதாபமாக ஏறிட்டுப் பார்த்தார். அவராக ஏதாவது கேட்டால் பதில் சொல்லலாம் என்று ராஜீவ் நினைத்தான். அவர் ஒன்றும் கேட்காததால் அமைதியாக அவரைத் தாண்டிச் சென்றான்.

அறுவை சிகிச்சை முடிந்து வெளியே வந்த ராஜீவ் ராதாவிடம், ''ஆபரேஷன் நல்லபடியாக முடிஞ்சிடுச்சு. நல்லா இருக்கார்'' என்று சொல்லி அகன்றான்.

இதை எல்லா மருத்துவர்களுமே வெளியே தவித்துக் கொண்டிருக்கும் நோயாளியின் உறவுக்காரர்களிடம் சொல்லக் கூடிய ஒன்றே! ராஜீவும் அதைத் தான் செய்தான். அதை மட்டும் தான் செய்தான்.

ஒரு மனிதனுக்கு உயிர் போய்விடுமோ என்ற பயம் வரும்போது, இனியாவது திருந்துவோம் என்ற நினைப்புத் தோன்றும். அது ஒரு கெட்டவனை நல்லவனாக மாற்றும். அதே சமயம் பிறருக்குக் கெடுதல் செய்தால் நாம் சாகாமல் இருக்கலாம் என்ற நிலை வருமாயின் எந்த நல்லவனையும் கெட்டவனாக மாற்றும். மொத்தத்தில்

மரண பயம் நல்லவனைக் கெட்டவனாக்கும். கெட்டவனை நல்லவனாக்கும். அகங்காரத்தை அழிக்கும். உள்ளிருக்கும் பாசத்தை வெளிக் கொண்டு வரும். ஒரு மனிதனின் இயல்பைத் தலை கீழாய் மாற்றும் சக்தி மரணத்திற்கு உண்டு.

ரவீந்திரனும் அந்த நிலையில் தான் இருந்தார். ஆபரேஷனுக்குத் தேதி குறித்த போதே அவருக்கு அவரது மகள் மீதான கோபம் வடிய ஆரம்பித்தது. ஆனால் அதைத் தன் மனைவியிடம் தெரிவிக்க வாய் தான் வரவில்லை. துணிச்சல் வந்து சொல்லும் முன்பு ஆபரேஷன் தியேட்டருக்குள் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே மருமகன் இருந்தான் தான். ஆனால் அவனிடம் தன் ஆசையைத் தெரிவிக்க அவரது கவுரவம் இடமளிக்கவில்லை.

அறுவை சிகிச்சைக்குப் பின் அவர் சி.சி.யு.வில் (C.C.U.) அனுமதிக்கப்பட்டார். சுற்றிலும் மருத்துவ இயந்திரங்கள், தன்னைச் சுற்றி ஓடும் வயர்கள், ஒரு கையில் ஏறிக் கொண்டிருக்கும் குளுகோஸ், நெஞ்சில் இருந்து மெல்லிய குழாய் மூலம் வழியும் ரத்தம் என்று அவர் கண் விழித்துப் பார்த்தபோது அவருக்கு மரண பயத்தை விட இது பயங்கரமாகத் தோன்றியது.

இப்படி நோய் வந்து படுக்கும் படியான நிலை வந்து விட்டதே என்று நொந்து போய் பக்கவாட்டில் பார்த்தால் அங்கே படுத்திருந்தவர்களின் நிலைமை அதற்கும் மேல் மோசமாகத்தான் இருந்தது.

தினமும் ராஜீவை அருகில் இருந்துப் பார்க்கப் பார்க்க அவருக்கு மகளைப் பார்க்கும் ஆசை பெருகிக் கொண்டே போனது. அவளது அப்பா என்ற அழைப்பைக் கேட்க அவரது மனம் ஏங்கியது.

ரவீந்திரன் அறைக்கு மாற்றப்பட்ட போது தனது மகளைப் பார்த்தேத் தீர வேண்டும் என்று முடிவு கட்டி விட்டார். ஆனால் இந்த நிலையிலும் கூட தனது மகளைப் பற்றி மருமகனிடம் விசாரிக்க அவரது பணக்காரத் திமிரும், கோபமும் அனுமதிக்கவில்லை. மகளுக்குத் தானே போன் செய்து வரவழைத்துப் பார்க்க. அவரது வறட்டுப் பிடிவாதம் இடம் கொடுக்கவில்லை.

ராஜீவ் காலையில் எழும் முன்னே அவனது கைப்பேசி அலறியது. இந்த நேரத்தில் யார் என்று எடுத்துப் பார்த்தால் காயத்ரி அழைத்திருந்தாள். மணி ஆறு என்று காட்டவும்... 'ஓ விடிஞ்சிடுச்சா' என நினைத்துக் கொண்டே, ''சொல்லுக்கா!'' என்றான் ஒரு கொட்டாவியை வெளியேற்றிய வண்ணம்.

''என்னடா இன்னும் தூங்கி முழிக்கலையா? ஒரு சந்தோஷமான செய்தி. அதைச் சொல்லத் தான் காலங்கார்த்தாலே கூப்பிட்டேன்.''

''சந்தோஷமானதா? அப்போ சீக்கிரம் சொல்லு.''

''நம்ம மது பெரிய மனுஷி ஆகிட்டாடா.''

''ஹேய் அப்படியா?'' என்று கேட்டுக் கொண்டிருக்கும்போதே குளியலறையில் இருந்து நிவேதா வெளியே வரவும்,

''நிவி வா வா. காயுக்கா லைனில் இருக்காள். மது பெரிய மனுஷி ஆகிட்டாளாம்'' என்று சொல்லி கைப்பேசியை அவளிடம் நீட்ட,

''ஹேய் சந்தோஷமான நியூஸ் அண்ணி. மது எப்படி இருக்காள்?'' என்று விசாரிக்க ஆரம்பித்தாள்.

''தெளிவா இருக்காள். இன்னைக்கு சாயங்காலம் தலைக்குத் தண்ணி ஊத்தப் போறோம். நீ கண்டிப்பா

வந்திடணும் நிவேதா'' என்று காயத்ரி அழைப்பு விடுத்தாள்.

''நான் வராமலா அண்ணி. கண்டிப்பா வந்திடுவேன்'' என்று நிவேதா வாக்களித்தாள்.

அன்று காலை பதினோரு மணி போல் ரவீந்திரனின் அறைக்கு வந்த தலைமை மருத்துவர். ''நாளைக்கு நீங்க வீட்டுக்குப் போகலாம். இனி எந்தப் பிரச்சனையும் இல்லை'' என்று கூறினார்.

நாளை வீட்டிற்குச் செல்லலாம் என்று மருத்துவமனையில் சொல்லிய சில மணிநேரம் வரை ரவீந்திரன் கஷ்டப்பட்டுத் தாக்குப் பிடித்தார். இதற்கு மேல் தாங்காது என்று நினைத்தவராய் ஒரு புது எண்ணில் இருந்து மகளுக்குக் குறுஞ்செய்தி அனுப்பினார்.

உங்களுக்கு வேண்டப்பட்டவர் செந்தில் மருத்துவமனையில் அறை எண் நானூற்றி எட்டில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார் என்ற குறுஞ்செய்தியை மகளுக்கு அனுப்பி விட்டு மகளின் வருகைக்காகக் காத்திருந்தார்.

மகள் வருவாள் என ஆவலே உருவாகக் கதவைப் பார்த்த விழி பார்த்தபடி அவர் காத்திருக்க... அங்கு வந்ததோ அவரின் மருமகன். ம்ஹூம் அப்படியும் சொல்ல முடியாது. வந்தது டாக்டர் ராஜீவ்! அவன் வழக்கம் போல் மருத்துவனாய் தானே வந்தான்!

அறைக்குள் வந்தவன் அவரின் கேஸ் ஃபைலைப் பார்வையிட ராதா வழக்கம் போல் தன் மருமகனை வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். மகளைப் பார்க்க முடியாத தன் ஏக்கத்தை மருமகனைப் பார்த்துத் தீர்த்துக் கொண்டார் என்றே சொல்ல வேண்டும்.

அப்பொழுது தான் அந்த அறையின் வாயிலில் கால் வைத்த நர்ஸ், ''டாக்டர், உங்க வைஃப் வேகமா ஓடி வராங்க'' என்று கூறினாள்.

இன்னும் சில நொடிகளில் மகளைப் பார்க்கப் போகிறோம் என்ற நினைப்பு ரவீந்திரனின் உடலைச் சிலிர்க்க வைத்தது.

ஆனால் ராஜீவோ சரேலென அங்கிருந்த சக்கரம் பொருத்தப்பட்ட திரையிடப்பட்ட தடுப்பை இழுத்து விட்டு அறையின் வாசலில் நின்று பார்த்தால் ரவீந்திரன் தெரியாவண்ணம் மறைத்தான். திரைக்கு அந்தப் பக்கம் சென்று நின்று கொண்டு மனைவியை எதிர்கொள்ளத் தயாரானான்.

வேக வேகமாக ஓடி வந்தவள் அறையின் வாசலிலேயே நின்றிருந்த கணனைக் கண்டதும், ''ராஜ், உங்களுக்கு ஒண்ணும் இல்லையே! நல்லாத்தானே இருக்கீங்க?'' என்று படபடப்பாகக் கேட்டாள்.

''உன் கண்ணு முன்னாடி தானேடா நிக்குறேன். ஐயம் ஆல் ரைட். முதல்ல உனக்கு என்னாச்சு? எதுக்கு இப்படி அரக்கப் பரக்க வந்திருக்கே?''

''இல்லை ராஜ். ஒரு எஸ்.எம்.எஸ். வந்தது. அதான் பயந்து போய் ஓடி வந்தேன்.''

''என்ன எஸ்.எம்.எஸ்? முதல்ல நீ என் ரூமிலே போய் உட்காரு. நான் உனக்கு ஜூஸ் கொண்டு வந்து தரச் சொல்லுறேன்.''

''இல்லை எனக்கு எதுவும் வேண்டாம். நான் காயத்ரி அண்ணி வீட்டுக்குக் கிளம்புறேன். அப்புறம் அவங்க எனக்காகக் காத்திருக்கிற மாதிரி ஆகிவிடக் கூடாது.''

''பார்த்துப் பத்திரமாப் போயிட்டு வாம்மா'' என்று சொல்லி அவளைக் கிளப்பினான்.

அவள் சென்றதும் திரையை நகர்த்திவிட்டு நர்ஸிடம் சென்று, ''பிரஷர் எவ்வளவு இருக்கு சிஸ்டர்? சுகர் எவ்வளவு?'' என்று மருத்துவனாய் மாறிக் கேள்வி கேட்க ஆரம்பித்தான்.

ரவீந்திரன் அறை வாயிலையே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். மகள் திரும்ப வரமாட்டாளா? அவளைப் பார்த்துவிட மாட்டோமா என்று ஆசைப்பட்டார்.

அறை வரைக்கும் வந்த மகளைப் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் ஒரு புறம் என்றால்... 'உங்களுக்கு வேண்டப்பட்டவர்' என்று தான் அனுப்பிய குறுஞ் செய்தியைப் படித்த நிவேதா அந்த வேண்டப்பட்டவர் பட்டியலில் தன் கணவனை மட்டுமே வைத்திருக்கிறாள் என்று தெரிந்ததினால் உண்டான வருத்தம் ஒரு புறம் என மனம் வருந்தினார்.

கணவர் அனுப்பிய குறுஞ்செய்தி எதையும் அறியாத ராதா மூன்று மாதங்களுக்குப் பின் மகளது குரலைக் கேட்க முடிந்த தன்னால் அவளைப் பார்க்க முடியாமல் போயிற்றே என்று தவித்தார்.

நர்ஸ் வெளியேறி அடுத்த அறை நோக்கிச் செல்ல ராஜீவ் ராதாவிடம், ''எல்லாம் நார்மலா இருக்கு. ஒண்ணும் பிரச்சனை இல்லை'' என்று அன்றைய மருத்துவ அறிக்கையை அவரிடம் கூறிவிட்டு நகர்ந்தான்.

ராதாவிற்கு ராஜீவிடம் நிவேதா பற்றி விசாரிக்க வேண்டும் என்று தோன்றியது. சென்று கொண்டிருப்பவனை எப்படி அழைப்பது? கணவன் அருகே இருப்பதால் மாப்பிள்ளை என்று தன்னால் கூப்பிட முடியுமா?

ஆனால் மாப்பிள்ளை என்ற உறவு முறையை வைத்துக் கொண்டு டாக்டர் என்று எப்படி அழைப்பது என்று குழம்பியவராய் அவன் புறம் கையை நீட்டிக் கொண்டு வார்த்தை வராமல் தடுமாறிக் கொண்டு நிற்க...

அறைக்கு வெளியே சென்று கொண்டிருந்த ராஜீவ் சரியாக அந்த நேரம் திரும்பினான். அவரது நிலையைப் பார்த்து என்ன என்பதுபோல் புருவம் உயர்த்திக் கேட்க,

ராதா, ''நிவி இப்போ... வந்து நிவிக்கு ஏதாச்சும் விசேஷம் உண்டா?'' என்று கேட்டே விட்டார்.

"எனக்கு வசதி இல்லாததால் இப்போதைக்கு குழந்தை வேண்டாம்ன்னு இருக்கோம்'' என்று மட்டும் சொன்ன வன் சரேலென அந்த அறையில் இருந்து வெளியேறி னான்.

ராதா தன் கணவனைத் திரும்பிப் பார்த்து முறைத்தார்.

15



அன்று இரவு வீடு திரும்பிய ராஜீவ் நிவேதாவிடம், "என்னங்க மேடம் அக்கா வீட்டுக்கு போயிட்டு வந்துட் டீங்களா?'' என்று கேட்டான்.

''ம்ம்ம் போயிட்டு வந்துட்டேன்.''

''போறப்போ இருந்த உற்சாகம் இப்போ இல்லையே. ஏதாவது பிரச்சனையா?''

''அப்படியெல்லாம் இல்லை ராஜ். அவங்க நம்ம மதுக்கு சடங்கு பண்ணப் போறாங்களாம்.''

''ஓ! அது உங்களுக்குப் பிடிக்கலையா?''

''எனக்கு மட்டுமில்லை ராஜ். மதுவுக்குமே இஷ்டம் இல்லை.''

''ஹேய் நீ பாட்டுக்கு மதுகிட்டே உன் ஆதாவைத் தெரிவிச்சிட்டு வந்துட்டியா என்ன?''

''இல்லையில்லை. அது மாதிரி எதுவும் பண்ணலை. அண்ணியோட மாமியார் முன்னாடி நல்ல பிள்ளையா மண்டையை ஆட்டிட்டு தான் வந்தேன். இப்போ உங்ககிட்ட தான் இது மாதிரி சொல்லுறேன்.''

''நல்லவேளை, ஒண்ணும் சொல்லாமல் வந்தியே! அவங்க இஷ்டம்டா. இதுல நாம என்ன சொல்ல முடியும்?''

''ம்ம்ம் எனக்கும் அதுப் புரிஞ்சதால தான் நான் ஒண் ணும் சொல்லாமல் வந்துட்டேன். ஆனாலும் எனக்கு என் னவோ இதை பப்ளிக்கா கொண்டாடுறதுலே இஷ்டமே இல்லை'' என்று சொல்லி அத்தோடு அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தாள்.

சனிக்கிழமை காலை ராஜீவ் கிளம்பிச் சென்றபின் தன்னுடைய கைப்பேசியை நோண்டிக் கொண்டிருந்த வளின் கண்ணில் அந்த குறுஞ்செய்தி சிக்கியது.

ஹேய்! இதை மறந்தே போனேனே? இதை யார் அனுப்பி இருப்பாங்க? வேலை மெனக்கெட்டு இதை எனக்கு அனுப்பி என்னை அல்லாடவிட்டது யாரு? என யோசித்துப் பார்த்தவள் மீண்டும் அதைப் படித்துப் பார்த்தாள்.

'உங்களுக்கு வேண்டப்பட்டவர்...' நாம போன போது ராஜ் அங்கே தான் நின்னுக்கிட்டு இருந்தார். அவர் இல் லாமல் வேற யாராவது இருக்குமா? அந்த அறையில் அனுமதிக்கப்பட்டு இருப்பாங்களோ?

வேண்டப்பட்டவர்ன்னா ராஜ் இல்லாமல் யாரா இருக்கும் என்று சிந்தித்துப் பார்த்த வினாடி ரவீந்திரனின் முகம் மனக்கண்ணில் வந்து நின்றது. ஐயோ! ஒரு வேளை அப்பாவுக்கா? அப்பா அந்த ரூமிலே இருந்தாரா? அப்பாவா இருந்தால் ராஜ் சொல்லி இருப்பார்தானே?

முட்டாள் மாதிரி யோசிக்குறே நிவேதா. அவன் உன் அப்பா என்ற வார்த்தையைக்கூட உச்சரிக்க மாட்டான். அவ்வளவு ஏன்... உன் அப்பா சொல்லுவார் என்று நீ சொன்ன ஒரே காரணத்துக்காக உன்னைக் குட்டிம்மா என்று கூடக் கொஞ்ச மாட்டான். அவனாவது அவரைப் பற்றிச் சொல்லுவதாவது? என்று மனசாட்சி எள்ளி நகையாடியது.

சரி இப்போ பிரச்னை அதுவல்ல. அங்கே இருந்தது யார் என்று விசாரிக்க வேண்டும். எப்படி? நேரில் சென்றால் ராஜீவின் மனைவி வந்து விசாரிக்கிறார்... என்ன காரணம் என்று அவர்களுக்கு ஆராயத் தோணும். அவரோட வேலை இடத்தில் அவருக்கு ஒரு கெட்ட பெயர் வந்து விடக்கூடாது.

நம்ம பேரைச் சொல்லாமல் ரிஷப்சனில் போன் செய்து விசாரிப்போமா என யோசித்துப் பார்த்தவளுக்கு அதுதான் சரியான முடிவெனப்பட்டது. நினைத்ததைச் செயலாக்கும் பொருட்டு அவள் அந்த மருத்துவ மனைக்கு போன் செய்தாள்.

"ஹலோ செந்தில் ஹாஸ்பிட்டல்" என்று அந்தப் பக்கம் ஒரு பெண் சொல்லவும்,

"நானூற்று எட்டில் மிஸ்டர் ரவீந்திரன் இருக்காரா? டிஸ்சார்ஜ் ஆகிட்டாரா?" என்று நிவேதா விசாரித்தாள்.

"ஒரு நிமிஷம் இருங்க. செக் பண்ணிட்டுச் சொல்லுறேன்" என்று சொன்னவள் சில நொடிகளில், "மேடம், அவர் டிஸ்சார்ஜ் ஆகிப் போயிட்டார்" என்றாள்.

"தாங்க் யூ" என்று சொல்லி போனை வைத்தவளுக்கு உடலெங்கும் ஒரு நடுக்கம் பரவியது.

'அப்படின்னா அங்கே அப்பா இருந்திருக்கார். இவர் என்னிடம் சொல்லாமல் மறைந்திருக்கார். வரட்டும் பேசிக்கிறேன்' என்று கறுவிக் கொண்டு கோபத்துடன் காத்திருந்தாள்.

மதியம் சாப்பிட வந்தவன் பார்த்த நொடியிலேயே மனைவியின் முக மாற்றத்தைக் கண்டு பிடித்தான். அவள் ஒன்றும் சொல்லாமல் இருக்கவும்... எதுவாக இருந்தாலும் அவள் வாயில் இருந்தே வரட்டும் என நினைத்தவனாய்,

"என்னங்க நிவி மேடம். இன்னைக்கு காலையில இருந்து என்ன செஞ்சீங்க? என்னைப் பழி வாங்குற மாதிரி ஏதாச்சும் செஞ்சீங்களா? அதான்ம்மா சமையல்ங்கிற பேரிலே ஏதாச்சும் டிரை பண்ணீங்களா?" என்றதும் அவள் அவனை முறைத்துப் பார்க்க,

"அப்பா செம ஹாட்டு மச்சி!" என்று கேலி செய்து சிரித்தான்.

அவளையும் தன்னோடு அமர வைத்துச் சாப்பிட வைத்தான். சாப்பிட்டு முடிக்கட்டும் என்று காத்திருந்தாள்.

சாப்பிட்டுக் கை கழுவியதும், "உங்ககிட்டே கொஞ்சம் பேசணும் ராஜ்" என்றாள்.

நான் எதிர்பார்த்தது தானே என்பது போல் அவன் நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டு, "பேசு" என்றான்.

"நான் அன்னைக்கு எஸ்.எம்.எஸ். வந்துச்சுன்னு உங்க ஹாஸ்பிட்டலுக்கு அரக்கப் பரக்க ஓடி வந்தேன் தானே? நீங்க கூட ஒரு ரூமிலே இருந்தீங்களே? அந்த ரூமிலே யாரு அட்மிட் ஆகி இருந்தாங்க?"

ப்பூ இது தானா உன் கேள்வி என்பது போல் சற்றும் அலட்டிக் கொள்ளாமல், "மதுரையைச் சேர்ந்த பிசினஸ் மேன். ரவீந்திரன் என்று பேர். அவர் தான் அந்த ரூமில் இருந்தார்" என்றான்.

அவன் ஏதாவது மழுப்புவான். அவனிடம் எப்படி எல்லாம் பேசி உண்மையை வரவைக்கலாம் என அவள் காத்துக் கொண்டிருக்க... கணவனது நேரடி பதிலில் நிலை குலைந்து போனாள். ஆனால் சில நொடிகளில் சுதாரித்தவள்,

"அப்போ எங்க அப்பா அங்க தான் இருந்திருக்கார்? நீங்க என்கிட்டே சொல்லாமல் மறைச்சுட்டீங்க?"

"அவர் உன் அப்பாவா? அவர் அப்படியெல்லாம் என்னிடம் சொல்லலையே? நான் ஏன் மறைக்கணும். இத்தனை நாளா எந்த ரூமிலே எந்த பேஷண்ட் அட்மிட் ஆகி இருக்கார்ன்னு நான் என்ன உன்கிட்டே வந்து ஒப்பிச்சுக்கிட்டா இருந்தேன்? இதை மட்டும் சொல்ல லைன்னு நீ குத்தம் சொல்லுறதுக்கு?"

"எங்க அப்பாவும் மத்தவங்களும் ஒண்ணா?"

"ஒண்ணு தான். பின்னே அவர் மட்டும் என்ன ஸ்பெஷல்? எனக்கு என்னோட எல்லா பேஷண்ட்டும் ஒண்ணு தான்."

"நான் என்ன கேட்டுக்கிட்டு இருக்கேன். நீங்க என்ன சொல்லிக்கிட்டு இருக்கீங்க?" என்று கடுப்பாகி

கத்தினவள் சில நொடிகள் கண் மூடித் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டவளாய்,

"அட்லீஸ்ட் அன்னைக்கு நான் அந்த ரூமுக்குள்ளே வந்த போதாவது சொல்லி இருக்கலாம் தானே?" என்று கேட்டாள்.

"ஏன் சொல்லணும்? நீ எப்படி அங்க வந்து சேர்ந்தே? எஸ்.எம்.எஸ்.ஐ பார்த்துவிட்டுத் தானே? அந்த எஸ்.எம்.எஸ். யார் அனுப்பினாங்க? உன் அப்பாவா? உன் அப்பா நம்பரில் இருந்தா வந்துச்சு? இல்லையே? நீ ரூமுக்குள்ளே வந்தபோது நான் உன்னை அந்த ஸ்கிரீன் தாண்டிப் போக வேண்டாம்னு தடுத்தேனா என்ன? இல்லை உன் குரல் உன் அப்பாவுக்குத் தெரி யாதா? உன்னைப் பார்க்கணும்னு அவர் நினைச்சிருந்தா உன்னைக் கூப்பிட்டு இருக்க வேண்டியது தானே? அவர் வாயிலே நான் என்ன பிளாஸ்டர் போட்டா ஒட்டி வைச்சிருந்தேன்? ஆக மொத்தத்தில் அவருக்கு உன் னைப் பார்க்கணும்னு தோணலை. இப்போ நீ தான் என்கிட்டே மல்லுக்கு நிக்குறே!" என்று சொன்னவன் தனது வேலையைப் பார்க்க வெளியே சென்றான்.

கணவனின் கூற்றில் இருந்த உண்மை நிவேதாவைச் சுட்டது. 'ஏன் டாடி என்னைக் கூப்பிட்டுப் பேசணும்னு உங்களுக்குத் தோணலையா? அந்த அளவுக்கா என்னை வெறுத்துட்டீங்க?' என்று நினைத்துக் கண்ணீர் விட்டாள்.

கணவன் தன்னைப் புரிந்து கொண்டு தனக்கு ஒத் துழைப்புக் கொடுத்தால் அவனுடன் சேர்ந்து கொண்டு தந்தையைச் சமாதானப்படுத்தலாம். ஆனால் அவனே அவரை வெறுத்து ஒதுக்கினால்... நான் யார் பக்கம் நின்று போராடுவது? பாசத்திற்கும், காதலுக்கும்

இடையில் நடக்கும் இந்தப் போராட்டம் எப்பொழுது முடியும் என்று இருந்தது.

போராட்டம் ஓய்வதைப் பிறகு பார்க்கலாம். அப்பா எதற்காக மருத்துவமனை வந்தார்? இதை எப்படித் தெரிந்து கொள்வது? மருத்துவமனையில் கேட்டால் நோயாளியின் விபரத்தை வெளியே தெரிவிக்க மாட்டோம் என்று சொல்லி விடுவார்கள். இவரோ சொல்லப் போவதில்லை. அப்புறம் எப்படி... என்று யோசித்தவளின் கண் முன்னே சுமோத்தின் முகம் வந்து போனது.

ஒரு தீர்மானத்திற்கு வந்தவளாக சுமோத்தை அழைத்தவள், ''ஹலோ அண்ணா! எப்படி இருக்கீங்க?'' என்றாள்.

''ஹேய் நிவேதா! நான் நல்லா இருக்கேன். ராஜீவ் என்ன சொல்லுறான்'' என்று அவன் பொதுப்படையாகக் கேட்க, நிவேதா அதையே பிடித்துக் கொண்டாள்.

''ஒண்ணும் சொல்ல மாட்டேங்குறார். அதான் பிரச்சனையே.''

இவள் என்ன சொல்ல வருகிறாள் என்று விழித்த சுமோத், ''ஏதாச்சும் பிரச்சனையா நிவேதா?'' என்று வினவினான்.

''எங்க அப்பா ஹாஸ்பிட்டலில் அட்மிட் ஆன விஷயம் உங்களுக்குத் தெரியுமா தெரியாதா? இந்தக் கேள்வியே அபத்தமா இருக்கு இல்ல... உங்களுக்குத் தெரியாமல் இருக்குமா? ராஜ் சொல்லாமல் மறைச்சுட்டார். இப்ப நானா கண்டு பிடிச்சுக் கேட்டால் உங்க அப்பா ஏன் சொல்லலைன்னு காரணம் கேட்கிறார். ப்சு...'' என்று சலித்துக் கொண்டவள் அமைதியாக அவளது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவனிடம்,

''இனி அது பத்திப் பேசி ஒண்ணும் ஆகப் போவதில்லை. அவர் என்ன காரணத்துக்காக இங்க அட்மிட் ஆகி இருந்தார். அதை மட்டும் சொல்லுங்க போதும்'' என்று கேட்டாள்.

''உங்க அப்பாக்கு ஹார்ட் அட்டாக் வந்து பை பாஸ் சர்ஜரி பண்ணினாங்க நிவேதா.''

''ஹார்ட் அட்டாக்கா? சர்ஜரியா?'' என்று அதிர்ந்தவள், ''உங்களுக்குக் கூட இதை என்னிடம் சொல்லணும்னு தோணலையா?'' என்று அவனைக் குற்றம் சாட்டினாள்.

''ராஜீவ் கேட்டதைத் தான் நானும் கேட்பேன் சொல்ல வேண்டிய உங்க அப்பா ஏன் சொல்லலை?''

''பை'' என்று சொல்லித் தனது பேச்சினை அரை குறையாக முடித்துக் கொண்டு அழைப்பைத் துண்டித்தாள். மனம் தந்தைக்காக இறைவனிடம் பிரார்த்தித்தது.

இர்வு அவன் வீட்டிற்குள் நுழைந்ததும் அவனுக்குக் கதவு திறந்து விட்டவள் அவனை நிமிர்ந்தும் பாராமல் படுக்கை அறைக்குள் சென்று மறைந்தாள்.

'ஆகா! இன்னும் மலை இறங்காமல் இருக்காள் போலவே!' என்று நினைத்துப் பெருமூச்சு விட்டவன் குளியல் அறைக்குள் சென்று கை கால் கழுவி உடை மாற்றிவிட்டு வந்தான்.

மனைவியின் அருகில் படுத்தவன் அவளைத் தன் அருகே இழுத்து அணைத்து அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்து முத்தமிட்டான்.

அவளோ அவனது காதில், ''இப்படிச் செஞ்சால் நான் சமாதானம் ஆகிடுவேன் என்று நினைக்குறீங்களா? நீங்க

செஞ்ச தப்பை உங்க அணைப்பிலும், ரெண்டு முத்தத்திலும் சரிகட்டி விடலாம்ன்னு நினைக்கிறீங்களா?'' என்று கேட்டாள்.

தீச்சுட்டாற் போல் அவளிடம் இருந்து விலகியவன், ''நான் எந்தத் தப்பும் பண்ணலை. உன்னிடம் விளக்கம் சொல்ல வேண்டிய அவசியமும் எனக்கில்லை. அதே மாதிரி உன்னைச் சமாதானம் பண்ண இந்த வழியைக் கையாளும் அளவுக்கு நான் ஒண்ணும் தரங்கெட்டவன் கிடையாது'' என்று சொன்னவன் தலையணையையும் போர்வையையும் எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறி வரவேற்பறையில் சென்று தரையில் படுத்து விட்டான்.

அவன் விலகிச் சென்றதும், 'இப்பக் கூட அவர் செஞ்சது தப்பில்லைன்னே சொல்லுறார் பாரு!' என்று அந்தக் கருத்திலேயே அவளது மனம் உழன்று கொண்டிருந்தது.

சிறிது நேரத்திற்குப் பின்பே அவனைப் பார்த்துத் தான் சொன்ன குற்றச் சாட்டும் அவன் அதுக்கு அளித்த விளக்கமும் புரிந்தது. கோபத்திலே என்ன பேசுறோம்ன்னு தெரியாமல் இப்படித்தான் உளறுவாயா நிவேதா என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

வயிறு பசிக்கவும் தான் இரவுச் சாப்பாட்டைச் சாப்பிடாதது நினைவிற்கு வந்தது. ஐயோ அவரும் சாப்பிடாமலே படுத்து விட்டாரா? இல்லை நம்மை கழட்டி விட்டுத்தான் மட்டும் சாப்பிட்டாரா? சே சே! நம்மை விட்டுட்டுச் சாப்பிட்டிருக்க மாட்டார். போய் சாப்பாடு போடலாம் என நினைத்து வெளியே சென்று பார்த்த போது ராஜீவ் அசதியில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

அவள் கூப்பிட்டுப் பார்த்தும் அசைந்து கொடுக்கவில்லை. மதியம் சாப்பிட்டது... இவ்வளவு நேரமும் உழைத்துக் களைத்துப் போய் வந்த மனுஷனை சாப்பிட விடாமல் செய்து விட்டோமே என்று நினைத்தவள் தானும் சாப்பிடாமல் உள்ளே சென்று படுத்தாள்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால் அதிகாலையில் எழுந்து கொள்ளாமல் ராஜீவ் தன் தூக்கத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தான். காலை ஏழரை மணி போல் அவனது கைப்பேசி ஒலித்து அவனது தூக்கத்தைக் கலைத்தது.

அதன் சத்தத்தில் எழுந்தவன் படுத்த வாக்கிலேயே அதை எடுத்துப் பார்க்க... அவனது தந்தை அழைத்திருந்தார். தூக்கக் கலக்கத்தில் இருந்ததால் அதை இயக்கியவன் ஸ்பீக்கரில் போட்டான். தலையணையில் தலையைச் சாய்த்துப் படுத்துக் கொண்டே, ''சொல்லுங்கப்பா!'' என்றான்.

''இன்னும் தூங்கி எழுந்துக்கலையாப்பா? நான் வேணா அப்புறம் கூப்பிடட்டுமா?'' என்று அவர் பாசத்துடன் கேட்க,

'என்ன காரணத்திற்காக அழைத்தாரோ?' என நினைத்தவன், ''அதெல்லாம் ஒண்ணுமில்லைப்பா. டைம் ஆச்சே, இப்ப எழுந்தால் தான் கிளம்பச் சரியா இருக்கும். இன்னைக்கு மதியம் லீவ் தானே. வேண்டுமென்றால் அப்போ தூங்கிக்குவேன். நீங்க சொல்லுங்கப்பா'' என்றான்.

''அம்மா தான் ராஜா உன்னிடம் பேசணும்ன்னு சொன்னாள். நான் அவகிட்டேயே போனைக் கொடுக்கிறேன்'' என்று சொல்லித் தன் மனைவியிடம் கைப்பேசியைத் தந்தார்.

''ராஜா. நீ இப்ப தான் எழுந்திருக்கிறாய் போல! உனக்கு இப்போ பேச நேரமிருக்காப்பா? ஹாஸ்பிட்டல் போக டைம் ஆகிடுச்சா?'' என்று யசோதா கேட்டவுடன்,

''அம்மா நீங்க என்ன சொற்பொழிவா நிகழ்த்தப் போறீங்க? உங்க பேச்சைக் கேட்க எனக்கு டைம் இல்லாமல் போவதற்கு. சும்மாச் சொல்லுங்கம்மா'' என்று மகன் ஊக்கவும்,

''வேற ஒண்ணுமில்லைப்பா. நம்ம மதுக்குட்டி கடங்கு பற்றித் தான் பேசணும்ன்னு பார்த்தேன்'' என்று யசோதா மெதுவாக இழுக்கவும்,

''ம்ம்ம் சொல்லுங்கம்மா...'' என்று ராஜீவ் அதற்கு மேல் இழுத்தான்.

''நானும் அப்பாவும் நேற்று நகைக் கடைக்குப் போய் அவ கழுத்துக்கு ஆரம் வாங்கிட்டு வந்தோம்'' என்றார்.

''ஓ! வாங்கிட்டீங்களா? எவ்வளவு ஆச்சு? பணம் சரியா வந்துச்சாம்மா?'' என்று ஒரு வேகத்துடன் கேட்டான்.

''வளையல்கள் வித்த காசிலே ஆரம் வாங்கிட்டோம் ராஜா. ஒண்ணும் பிரச்சனையில்லை. உன் சார்பா என்ன வாங்குறதுன்னுதான்...'' என்று அவர் தயங்கவும்,

''நானும் அது பற்றி தான்யா யோசிச்சுகிட்டே இருக்கேன். ஒண்ணும் புரிபடலை'' என்றான்.

''உன் கல்யாணத்தன்னைக்கு நீ சென்னைக்குக் கிளம்பும்போது தாலிச் செயின் வாங்க அம்மாவோட நகையைக் கொடுத்தேனே! அதிலே ஏதாச்சும் மிச்சம் இருக்காப்பா?''

''இல்லைம்மா. பழைய நகைன்னு கழிவு போக மீதி உள்ள பணத்திலே தாலிச் செயினும் நிவிக்கு சின்னதா

ரெண்டு கம்மல், கழுத்துக்குச் செயின், வளையல்னு வாங்கிக் கொடுத்திட்டேன்மா'' என்று ஒருவித குற்ற உணர்வுடன் சொல்ல,

மகனின் குரலில் இருந்து அவனது மனதைப் படித்தவராய் யசோதா, ''பொம்பளப் பிள்ளை கையில காதில நகை போடாமல் எப்படிப்பா இருக்க முடியும்? நீ வாங்கிக் கொடுத்தது தான் சரி. அதிலே தப்பு ஒண்ணும் இல்லப்பா'' என்றார்.

அவன் பதிலொன்றும் சொல்லாமல் அமைதி காக்க...

''அம்மாவோட மூணு சரம் செயின் சும்மா தானேப்பா இருக்கு. அதை வேணா அழிச்சிட்டு...'' என்று தொடங்கவும்,

''அதையும் அழிச்சிட்டு நீங்க எதைப் போடுவீங்க?'' என்று வேகமாகக் கேட்டான்.

''நான் என்ன தினமுமா அதைப் போட்டுக்கிட்டு இருக்கேன்?''

''தினமும் போடலைன்னாலும் விசேஷங்களுக்குப் போட்டுத் தானேம்மா ஆகணும். நாளைக்கே நம்ம மது சடங்கிலே வெறும் கழுத்தோடவா நிப்பீங்க?''

''இல்லைப்பா...''

''அம்மா போதும்மா. இப்படிச் சொல்லிச் சொல்லியே தான் நாலு வளையலைத் தவிர எல்லாத்தையும் வித்துட்டீங்க. இப்போ மீதி இருக்கிற அந்தச் செயினையும் விற்கணும்ன்னா... நான் ஒத்துக்க மாட்டேன்.''

''அப்போ உன் பிரண்ட்ஸ்கிட்டே கடன்...'' என்று தனது கேள்வியை முடிக்காமல் நிறுத்த,

''இல்லைம்மா அது சரி வராது.''

''வெளியே கடன்...''

"எதைக் காட்டிம்மா கடன் கேட்கச் சொல்லுறீங்க? சொத்து ஏதாச்சும் காட்டணும். இல்லைன்னா என் டாக்டர் சர்ட்டிபிகேட் தான் காட்டணும். சரியா கட்ட முடியலைன்னால் வேலையிடத்தில் வந்து தகராறு பண்ணுவாங்க. மானம் போகும்."

"அப்படின்னா ராஜா அந்த பாங்கிலே இருக்கிற பணம்..."

"அம்மா!" என்று கோபமாக அவரை இடைமறித்தவன், "உங்ககிட்டே எத்தனை தடவை சொல்லுறது. அது மெடிக்கல் எமர்ஜென்ஸிக்காக உள்ளது. அதிலே கை வைக்க முடியாது."

"இல்லப்பா. நீ தான் பாலிசி எடுத்து வைச்சிருக்கியே?"

"அம்மா மெடி க்ளைம் பாலிசியிலே மொத்த பணமும் எல்லாம் தர மாட்டாங்கம்மா."

"நாங்க நல்லாத் தானேப்பா இருக்கோம்."

"அம்மா நோயெல்லாம் சொல்லிக்கிட்டு வராதும்மா. இப்போ என்னையவே எடுத்துக்கோங்க. எனக்கே திடீர்ன்னு ஆக்ஸிடென்ட் ஆச்சுன்னா என்னோட மருத்துவச் செலவுக்கு யாரிடம்..." என்று சொல்லத் தொடங்கியவனை,

"ராஜாஆஆஆ" என்று இடைமறித்து அலறியவர், "காலையிலே எதுக்குப்பா இப்படி அச்சானியமா பேசுறே?" என்று மகனிடம் போனில் சொன்னவர் தன் கணவரைப் பார்த்து,

"என்னங்க நீங்களே அவன்கிட்டே பேசுங்க. நான் கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வரேன்" என்று சொல்லி கைப்பேசியைத் தன் கணவரிடம் கொடுத்துவிட்டு சேலை முந்தானையால் தன் கண்களில் இருந்து வரும் நீரைத் துடைத்துக் கொண்டே சென்றார்.

இந்தப் பக்கம் "அம்மா அம்மா!" என்று ராஜீவ் அலறிக் கொண்டு இருக்க.... கைப்பேசியைக் காதில் வைத்த சந்தரம், "என்னப்பா சொன்னாய்? அம்மா அழுதுக்கிட்டே போறாள்?" என்று கேள்வி எழுப்பினார்.

அவன் மெதுவான குரலில் தன் தந்தையிடம் மீண்டும் அதைச் சொல்ல,

"என்ன ராஜா? இப்படிப் பேசுறே?"

"இல்லைப்பா... புரிஞ்சுக்காம பேசுறாங்களேன்னு விளக்கமாகச் சொல்லலாம்னு பார்த்தேன். அதான்..." என்று இழுத்து நிறுத்த,

"சரிப்பா உனக்கு டைம் ஆச்சு. நீ ஹாஸ்பிட்டல் கிளம்பு."

"அப்பா, அம்மாவை..."

"அவளை நான் பார்த்துக்கிறேன் ராஜா. நீ பார்த்துப் பத்திரமா போயிட்டு வா" என்றார்.

"சரிப்பா" என்று சொல்லி கைப்பேசியை அணைத்தவன், எழுந்து தன் படுக்கையறைக்குள் சென்று மனைவியைத் தேட...

அவளோ ஜன்னலருகில் நின்று வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அவளிடம் ஒன்றும் பேசாது அவன் குளியலறைக்குள் நுழைந்து கிளம்ப ஆரம்பித்தான்.

அவன் குளியலறைக்குள் நுழைந்ததும் சடாரெனத் திரும்பிய நிவேதா தன் கண்களில் வழியும் நீரைத் துடைத்துக் கொண்டே அறையைவிட்டு வெளியேறினாள். அடுக்களைக்குள் புகுந்து கொண்டாள்.

நிவேதா ராஜீவ் தன் தந்தையிடம் பேசிய அனைத்தையுமே படுக்கையறைக் கதவின் அருகே நின்று கேட்டுக்

கொண்டிருந்தாள். புகுந்த வீட்டின் இல்லாமை கூட அவளுக்கு வருத்தம் அளிக்கவில்லை. எனக்கு ஆக்ஸிடெண்ட் ஆனால் என்று கணவன் கூறியதைக் கேட்டுத் தான் அவளுக்கு வருத்தமாய் இருந்தது. கண்களில் கண்ணீர் கரை கட்டி நின்றது.

அவனுக்கு ஏதாவது ஆகி விட்டால் தன் கதி என்ன என்று நினைத்துப் பார்த்த அந்த பேதை நெஞ்சம் தடுமாறியது. தன்னால் ஒரு நொடி கூட அவன் இல்லாத உலகத்தில் வாழ முடியாதென்ற எண்ணம் தோன்றியது.

உடனே கணவனிடம் இது குறித்துச் சண்டை போட வேண்டும் என்ற எண்ணம் தான் முதலில் தோன்றியது. மூன்று மாதங்களுக்கு முன்பிருக்கும் நிவேதா என்றால் அதைத் தான் செய்து இருப்பாள். ஆனால் இப்பொழுது இருப்பவளோ சிறிதளவேனும் பக்குவப்பட்டவளாய் மாறியிருக்கிறாள். அதுவும் நேற்றைய இரவுக்குப் பின் இனி யோசித்துத் தான் செயல்பட வேண்டும் என்று அவள் திடமான முடிவு எடுத்திருந்தாள்.

அவன் வேலைக்குச் செல்ல நேரமானதை உணர்ந்தவள் தனது சண்டையை மதியத்துக்கு ஒத்திப் போட்டாள். அதனால் கணவனிடம் இருந்து தனது கண்ணீரை மறைக்க நினைத்துத் தான் அவனுக்கு முதுகு காட்டி ஜன்னல் பக்கம் திரும்பி நின்றாள்.

அடுக்களைக்குச் சென்று தோசை வார்த்தாள். இரவு சாப்பாட்டிற்காகத் தயாரித்து உபயோகிக்காமல் பிரிஜ்ஜிலே இருந்த சாம்பாரை எடுத்துச் சூடு பண்ணினாள்.

அவன் தயாராகி வெளியே வரவும் சாப்பாட்டை மேஜை மேல் வைத்துவிட்டுப் படுக்கையறைக்குள் சென்று மறைந்தாள்.

ராஜீவிற்கு, 'என்னடா இது? இவ என் பொண்டாட்டி தானா என்று இருந்தது. காலையில் ஒரு சண்டை இழுக்கலை என்றாலும் ஒரு முறையாவது பரிசாய் கொடுப்பாள்ன்னு பார்த்தால் நிமிர்ந்து கூடப் பார்க்காமல் போகிறாள்' என நினைத்தான்.

அவன் சாப்பிட்டு முடிக்கும்போது அவள் சுடிதார் அணிந்து தயாராகி வந்து நின்றாள்.

'என்ன விஷயம்?' என்பது போல் நிமிர்ந்து அவளைப் பார்க்க,

''என்னைப் போற வழியிலே கோயில்ல விட்டுட்டுப் போங்க'' என்று மட்டும் சொன்னவள் தன்னோட சாவியை எடுத்துக் கொண்டு மடமடவென வெளியேறினாள்.

'இன்னைக்கு என்ன, மேடம் இந்நேரம் கோவிலுக்குப் போறாங்க? இங்க நின்னா நான் கேள்வி கேட்டிடுவேன்னு பயந்து போய் வெளியே ஓடுறதைப் பாரு. சரி வந்து இவளைக் கவனிச்சுக்கலாம்' என நினைத்தவனாய் தனக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டு வெளியேறினான்.

நிவேதா தன் மாமியாரைப் பின்பற்றி ராஜீவ் பேருக்கு அர்ச்சனை செய்யவே கோவிலுக்குக் கிளம்பினாள். ராஜீவ் பைக்கை உதைத்துக் கிளப்பியதும் அவன் பின்னே சென்று அமர்ந்தவள் அவனிடம் எதுவுமே பேசவில்லை. அவன் அவளைக் கோவிலில் இறக்கிய பொழுது கூட ஒன்றும் சொல்லாமல் நிமிர்ந்து அவன் முகம் பார்த்து ஒரு சின்ன தலை அசைப்பை மட்டும் தந்துவிட்டு கோவிலுக்குள் சென்றுவிட்டாள்.

ராஜீவ் செல்லும் தன் மனைவியைப் பார்த்துக் கொண்டே அசையாது நின்றான். இது புயலுக்கு பின் அமைதியா?

இல்லை புலி பாயக் காத்திருக்கிறதா? என நினைத்துப் பார்த்தான். மனைவி தனது தொலைபேசி உரையாடலைக் கேட்டு இருப்பாள் என அவன் நினைத்துப் பார்க்க வில்லை. ஒரு பெருமூச்சுடன் தனது வண்டியைக் கிளப்பிக் கொண்டு சென்றான்.

16



அன்று மதியம் ராஜீவ் வீடு திரும்பியதும் கதவைத் திறந்துவிட்ட நிவேதா கதவைச் சாற்றிவிட்டு அவன் கொண்டு வந்திருந்த பொருட்களைக் கீழே வைக்கும் வரைக்கும் தான் அமைதியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதன் பின் அவனருகே சென்றவள் அவனது சட்டைக் காலரைக் கொத்தாகப் பிடித்து, ''வாய் இருக்குன்னு என்ன வேணா சொல்லுவியாடா?'' என்றாள்.

என்னடா இவள் நாம கேட்க வேண்டிய கேள்வியை அவள் கேட்கிறாள் என நினைத்துக் கொண்டு விழித்துக் கொண்டு நின்றான். அவள் அடுத்துப் பேசிய பேச்சு காலையில் இருந்து அவள் புதிராக நடந்து கொண்டதின் மர்மத்தை அவனுக்கு விளக்கியது.

''ஏன்டா ரோட்டிலே நீ மட்டும் தான் போறியா? நாங்க எல்லாம் நடமாடலையா? எங்களுக்கு எல்லாம் ஆக்ஸிடென்ட் ஆகாதா? அடிபடாதா?'' என்று கண்களில் வடியும் கண்ணீருடன் கேட்டவளை அருகே இழுத்தவன் அவளது கையில கை வைத்து, ''சாரிடா நிவி. ரியலி சாரி. நீங்க எல்லாம் இவ்வளவு ஹர்ட் ஆவீங்கன்னு நான் நினைக்கலை'' என்று சொல்லிக்

கொண்டே அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டவன் தன்னோடு இறுக்கி அணைத்து ஆறுதல்படுத்தினான்.

புதிய பிரச்சனையில் பழைய சண்டையும், அதற்கான சமாதானமும் தேவையில்லாமலே போனது.

அவளின் விசும்பல் ஒலி நிற்காததைக் கண்டவன், "அதான் சாரி சொல்லிட்டேனில்லை. இன்னும் எதுக்குடா அழுகுறே? இனிமேல் யோசிச்சுக் கவனமாப் பேசுறேன்" என்று சொல்லிக்கொண்டே வந்தவன் அவளைத் தன்னிடம் இருந்து பிரித்து நிறுத்தி, ''நீ காலையிலே ஏதாச்சும் சாப் பிட்டியா?'' என்று கேட்கவும் நிவேதா தலை குனிந்தாள்.

அவன் முகத்தைப் பார்த்து அவளால் பொய் சொல்ல முடியாது. அதே சமயம் உண்மையைச் சொன்னாலும் திட்டுக் கிடைக்கக் கூடும் என்றறிந்தே தலை கவிழ்ந்தாள்.

''உனக்கு எத்தனை தடவை நிவி சொல்லியிருக்கேன். உன் கோபத்தையும், துக்கத்தையும் சாப்பாட்டிலே காட்டாதேன்னு'' என்று சொல்லிக் கொண்டே சாப் பாட்டு மேஜையில் இருந்து மதிய உணவைத் தட்டில் வைத்து அவளைப் பார்த்து, ''முதல்ல சாப்பிடு!'' என்றான். அவள் அசையாமல் அவனையே பார்த்தாள்.

''என்ன பார்வை வேண்டிக் கிடக்கு? வா வந்து சாப்பிடு.''

அவள் ஒன்றும் சொல்லாமல் அவனைப் பார்த்து ஒரு கேலிப் புன்னகையை உதிர்த்துவிட்டு தண்ணீர் கூஜாவை எடுத்துக் கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்தாள்.

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரிந்து கொண்டவன் புன்னகைத்தவாறு அந்தத் தட்டை எடுத்துக் கொண்டு அவளைப் பின் தொடர்ந்தான்.

படுக்கையில அமர்ந்திருந்தவளிடம் தட்டை நீட்ட அப்பொழுதும் அதை வாங்காமல் 'ஆ' என்று தன் வாயைப் பிளந்து காட்ட...

"என்ன ராஜ் நிவிக் குட்டிம்மா இன்னைக்கு ஒரேடியா செல்லம் கொஞ்சுறாங்க!" என்று சத்தமாகத் தன்னைத் தானே கேள்வி கேட்டவனிடம்,

"எப்படி ராஜ் கூப்பிட்டீங்க? இன்னொரு தடவை கூப்பிடுங்க" என்று அவள் கண்களில் மின்னல் மின்னக் கேட்க, அவன் சட்டென்று முகம் மாறினான். அவன் முகம் மாறிய விதத்தில் அவள் மனம் சுருங்கினாள்.

அவன் அமைதியாய் ஒரு வாய் சாதத்தை எடுத்து அவளது வாய் அருகே கொண்டு போக அவள் ஒன்றும் சொல்லாமல் தன் வாய் திறந்து அதை வாங்கிக் கொண்டாள்.

நான்கு வாய் சாதம் உண்டதும் தன் கையை அவளும் தட்டுக்குள் விட... சரி அவளே சாப்பிட்டுக் கொள்வாள் என நினைத்து அவன் தனது வாயருகே தனது கையைக் கொண்டு போக, அவள் வேகமாக தடுத்து நிறுத்தி தனது வாய்க்குக் கொண்டு சென்றாள். தன் கையிலிருந்த சாதத்தை கணவனுக்கு ஊட்டியவள்,

"அது என்ன ஒரு வேலையைப் பாதியிலே விடுறீங்க? நானே எடுத்து சாப்பிடுறதுன்னா எப்போ சாப்பிட்டு முடிக்க? உங்களைப் பார்க்க வைச்சிட்டுச் சாப்பிட்டால் எனக்கு வயிறு வலிக்குமேன்னு தான் உங்களுக்கு ஊட்டினேன். அவ்வளவு தான். மரியாதையா ஊட்டுங்க!" என்றாள்.

"மேடம் நிவேதா சாப்பிடுங்க!" என்று சொல்லிக் கொண்டே அடுத்த கவளத்தை ஊட்டியவன்,

அதற்கு அடுத்து, "மிசஸ் ராஜ் சாப்பிடுங்க!" என்றான்.

"என்ன இது?" என்று கேலியாகக் கேட்டவளிடம்,

"மரியாதைம்மா... நீ தானே சொன்னே!" என்றதும்,

"ஹேய்! எல்லோரும் ஓடி வந்து சிரிச்சிடுங்க. என் ஹஸ்பண்ட் ஜோக் அடிக்குறாராம்" என்று சிரிக்காமல் நக்கல் பண்ண... அவன் அவளது கேலியில் சிரித்தான்.

அவன் சாப்பிட்டு முடித்துக் கை கழுவிவிட்டு வந்தான். அவளருகே படுக்கையில் அமர்ந்ததும் கணவனை திமிர்ந்து பார்த்தவள்,

"எதுக்கு ராஜ் நேற்று வெளியே போய் தரையிலே படுத்தீங்க?" என்றாள்.

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதா வேண்டாமா என ஒரு நொடி யோசித்தான். பின் 'மரியாதைப் பன்மை மிலே கேள்வி கேட்கும் போதே சொல்லிடுடா ராஜ். இல்லைன்னா ஆபத்து' என்று உணர்ந்தவனாய்,

"நீ மட்டும் அப்படிப் பேசலாமா?" என்றான்.

"தப்பாப் பேசினால் வாயிலேயே ரெண்டு போடுங்க" என்றாள்.

"இங்கேயா?" என்று கேட்டுக் கொண்டே அவளது உதடுகளை வருடியவன், "அப்புறம் வீங்கிடுச்சுன்னா எனக்குத் தானே கஷ்டம்" என்று கண்ணடித்துச் சொன்னான்.

அது அவளிடம் எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை.

"எனக்கு வாய்த் துடுக்கு ஜாஸ்தியில்ல. நிறைய நேரம் நான் பாட்டுக்கு ஏதாச்சும் சொல்லிப் பிரச்சனையாக்கிடுறேன் இல்ல..."

"அப்படியில்லை நிவி. நிறைய நேரம் பிரச்சனை எதனால ஏற்பட்டதுன்னு அலசி ஆராய்ஞ்சு அதை உடனுக்குடன் தீர்க்கப் பார்க்கிறாய்."

"நான் முன்கோபி தானே ராஜ்? எனக்குச் சட் சட்டுன்னு கோபம் வந்திடுது தானே?"

"இல்லைடா. நீ எழுபத்தைந்து பெர்சென்ட் கலகலப் பானவள். மீதி இருபத்தைந்து பெர்சென்ட் தான் உனக்குக் கோபம் வரும்" என்றதும்,

'நாம நம்மிடம் உள்ள குறையைச் சொன்னால் இவர் நம்மகிட்டே உள்ள நிறைகளைச் சொல்கிறாரே' என மனம் வருந்தியவள் ஒன்றும் பேசாது அவனது மார்பில் சாய.

அவளது முதுகை வருடிக் கொடுத்துக் கொண்டே, ''மனசைப் போட்டு அலட்டிக்காதேம்மா. போகப் போக நீயே நிதானமாச் செயல்பட ஆரம்பிச்சிடுவே. பிரச்சனையைத் தீர்க்காமல் ரெண்டு மூணு நாளைக்கு இழுத்துக்கிட்டுப் போனால் தான்மா கஷ்டம். நீ தான் உடனுக்குடன் எங்கூட சமாதானம் ஆகிடுறியே. அப்புறம் என்னடா...'' என்று ராஜீவ் சொன்னதும் நிவேதா சமாதானம் அடைந்தாள்.

இனிமேல் ஒரு முறைக்கு இரு முறை யோசிச்சுத் தான் பேச வேண்டும் என்று தனக்குள் தீர்மானம் எடுத்துக் கொண்டாள். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது காயத்ரி அழைத்தாள்.

கைப்பேசியை இயக்கியவன், ''சொல்லு காயுக்கா'' என்றான்.

''டேய் ராஜீவ்! இன்னைக்கு ஈவினிங் நீ ஃப்ரீயா?''

''சொல்லுக்கா! என்ன விஷயம்? எனக்கு வெளியே போற வேலை எல்லாம் இல்லை. வழக்கம் போல நைட்டின்னருக்கு தான் வெளியே போகணும்.''

''நீயாகச் சொல்லாதே. நிவேதாகிட்டே கேட்டுட்டுச் சொல்லு.''

''உனக்கு எங்கேயாச்சும் வெளியே போகணுமா நிவி?'' என்று மனைவியைப் பார்த்துக் கேட்க, அவள் 'இல்லை' என்று தலை அசைத்ததும்,

''இல்லக்கா. நாங்க எங்கேயும் போகலை'' என்றான்.

''ஒண்ணுமில்லைடா. ஒரு ஐந்து மணி போல வந்து உங்க ரெண்டு பேருக்கும் மதுவின் சடங்குக்கு இன்விடேஷன் கொடுக்க வரலாம்ன்னு இருக்கோம். அதான் கேட்டேன்.''

''ப்பூ இதுக்குத் தானா இவ்வளவு பில்டப் கொடுத்தாய்! நான் உன் வீட்டுக்கு வரேன்டா. நீ வீட்டிலேயே இருன்னு சொன்னால் இருந்திட்டுப் போறேன். அதை விட்டுட்டு... ஆயிரம் கேள்வி கேட்குறே. நீ வா. நான் எங்கேயும் போகலை'' என்று சொன்னதும்,

''சரிடா. சாயங்காலம் பார்க்கலாம்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தாள்.

தனது அக்கா சொன்னதை மனைவியிடம் பகிர்ந்தவன், ''நான் ஒரு மணி நேரம் தூங்கி எழுந்துக்கிறேன். உன் போனிலே அலாரம் வை'' என்றான்.

அவள் அவ்வாறே செய்ய அவன் தூங்க ஆரம்பித்தான். அவனைப் பார்த்துக் கொண்டே அருகே அமர்ந்திருந்தவள் எப்பொழுது தூங்கினாளோ! அதை அவளே அறியாள். யாரோ தன்னை உலுக்கி எழுப்பவும் தான் கண் விழித்துப் பார்த்தாள்.

''அக்கா வரும் நேரமாச்சும்மா. நீ முகம் கழுவித் தயாராகணும் இல்லையா... அதுக்குத் தான் எழுப்பினேன்'' என்றதும் குளியலறைக்குள் சென்று முகம் கழுவ ஆரம்பித்தாள்.

முகத்தை சீர் செய்து தயாராகி படுக்கை அறையிலிருந்து வெளியே வந்தவள், ''ராஜ் அக்காக்குச் சாப்பிடக் கொடுக்க...'' என்று ஆரம்பித்ததும்,

''ஸ்வீட் வாங்கிட்டு வந்திட்டேன் நிவி'' என்று சொன்னான்.

''யூ ஆர் சோ ஸ்வீட்'' என்று இருந்த இடத்தில் இருந்தவாறே கணவனைக் கொஞ்சிக் கொண்டாள்.

"பால் வாங்குனீங்களா?" என்று அடுத்த கேள்வியைக் கேட்க அவன் அதற்கு ஆமாம் என்று சொன்னதும் அவள் அமைதியாகி விட,

"என்ன நிவி. இப்ப நான் சோ மில்கியா?" என்று கேட்டான்.

"பக்கத்திலே வந்தேன்... கடிச்சு வைச்சிருக்கேன்" என்று சொல்லி அவனைக் கடிப்பது போல் பாவனைக் காட்ட, அவன் சிரித்துக் கொண்டிருக்கும் போதே வாசலில் அழைப்பு மணி அடித்தது.

"வாங்கக்கா. வாங்க மாமா!" என்று ராஜீவும், "வாங் கண்ணி. வாங்கண்ணா!" என்று நிவேதாவுய அவர்களை வரவேற்றார்கள்.

"மது வரலையா அண்ணி?" என்று நிவேதா கேட்டதும், "எதுக்கு உங்கூடச் சேர்ந்து விளையாட ஆள் தேடுறியா?" என்று ராஜீவ் கிண்டலாகக் கேட்க,

காயத்ரியோ, "அவ வரணும்ன்னு அடம் பிடிச்சாள். எங்க அத்தை தான் விடமாட்டேன்னுட்டாங்க. தண்ணி ஊத்தி யாச்சுன்னாலும் சடங்கு முடியுற வரைக்கும் வெளியே அனுப்ப மாட்டேன்னு சொல்லிட்டாங்க" என்றாள்.

ஓ என்று மட்டும் சொன்னவள் தனது கருத்தை வெளியிட விரும்பவில்லை. நிவேதாவிற்கு இந்த மாதிரி சம்பிரதாயங்களில அதிக நம்பிக்கை இல்லை. ஆனால் அது அவர்களது நம்பிக்கை. இதில் தான் எதுவும் சொல்லக் கூடாது என்று நினைத்து அமைதியானாள்.

வந்தவர்களுக்கு ஸ்வீட் காரத்தைத் தட்டில் வைத்துக் கொண்டு வருவதற்காக அடுக்களைக்குள் புகுந்தாள். பொதுவாக காயத்ரியும் அவள் பின்னோடு எழுந்து வருவாள். ஆனால் இன்று அப்படி வராமல் இருக்கவும் அவள் தன் தமபியிடம் தனித்துப் பேச விரும்புகிறாள்

என நிவேதா புரிந்து கொண்டாள். அதனால் அவள் அடுக் களையை விட்டு வெளியே வர முயற்சிக்கவில்லை.

அவள் எதிர்பார்த்த மாதிரியே காயத்ரி ராஜீவிடம் பேசினாள். அது நிவேதா காதிலும் விழுந்தது. அது என்ன பெரிய அரண்மனையா? அந்த சின்ன வீட்டின் வரவேற் பறையில் உட்கார்ந்து பேசியது அவளது காதிலும் தெளிவாகவே விழுந்தது.

"அம்மா காலையிலே போன் பண்ணியிருந்தாங்கடா ராஜீவ்" என்று காயத்ரி ஆரம்பித்ததுமே ராஜீவின் முகம் மாறியது.

அவனது கையை எடுத்துத் தனது கையில் வைத்து அழுத்திக் கொடுத்தவள், "அம்மா தான் ஆரம் வாங்கி வைச்சு இருக்காங்களே! அதுவே போதும்டா. நம்ம குடும் பத்துப் பரிசுன்னு சொல்லிக்கலாம். அம்மா இப்போ செய்யுறாங்க. நீ அவ கல்யாணத்துக்கு செய். எப்படியும் அதுக்குள்ளே நீ நல்ல நிலைமைக்கு வந்துடுவே தானேடா! அப்புறம் என்னடா? கவலைப்படாதே" என்று சொல்லியும் அவனது மனக் கலக்கம் அகலவில்லை என்பதை அவன் முகமே எடுத்துக் காட்டியது.

சரியாக ராஜீவின் கைப்பேசிக்கு ஒரு அழைப்பு வந்தது. அவன் அதை எடுத்துப் பேசிக் கொண்டே வீட்டை விட்டு வெளியேறினான். அவன் அருகில் இல்லை என்ற தைரியத்தில் நிவேதாவை மறந்தவர்களாய் காயத்ரியும், மகேஷும் பேச ஆரம்பித்தார்கள்.

"என்னங்க இவ்வளவு வருத்தப்படுறான்."

"அவன் குணம் நமக்குத் தெரிஞ்சது தானே காயு?"

"ப்ச்சு. இதுக்குத் தான் இந்த சடங்கே வேண்டாம்ன்னு சொன்னேன். உங்க அம்மா பிடிவாதமா வைக்கணும்ன்னு

சொல்லுறாங்க. நீங்களும் எனக்குச் சப்போர்ட் பண்ணாமல் போயிட்டீங்க.''

''நான் உங்க பக்கம் பேசினாலும் தப்பாத் தான்மா போகும். நான் வேண்டாம்ன்னு சொன்னால் என்ன காரணம்ன்னு கேட்பாங்களே!''

''நம்ம மதுக்குப் பிடிக்கலைன்னு சொல்ல வேண்டியது தானே!''

அவர்களது பேச்சினைக் கேட்டுக் கொண்டிருந்த நிவேதா 'ஐயோ! எங்களால இவங்களுக்குள்ளே தகராறு வந்திடுமோ?!' என பயந்து போனாள்.

''அவங்க கடந்த ரெண்டு வருஷமாவே நம்ம மதுகிட்டே இது விஷயமாப் பேசிப் பேசியே அவளை சம்மதிக்க வைச்ச விஷயம் உனக்கு தெரியும் தானே! உன் கல்யாணத்தைப் பார்க்க நாங்க உயிரோட இருப்போமோ இல்லையோ! அதனால உன் சடங்கையாச்சும் பெரிய அளவில் செஞ்சு எங்க கண் குளிரப் பார்க்கணும்ன்னு சொல்லிச் சொல்லியே அவளைச் சம்மதிக்க வைச்சுட்டாங்க. அவனுக்கு விருப்பம் இல்லைன்னால் கூட அவ தன் பாட்டிக்காக மண்டையை ஆட்டி இருக்கா. அதனால அந்தக் காரணம் எல்லாம் சொல்ல முடியாதும்மா. ராஜீவ் பற்றியும் நம்மால ஒண்ணும் சொல்ல முடியாது. வேற என்ன காரணம் சொல்லுறது? நீயே சொல்லு?'' என்று மகேஷ் கேட்டதும்,

''இதுக்கு வேற வழியே இல்லையா?'' என்று வருத்தத்துடன் கேட்ட காயத்ரியிடம்,

''எனக்கு இப்பத் தான் ஒரு ஐடியா தோணுச்சு. அவன் சார்பா நாமளே நகை வாங்கிடுவோம்'' என்று சொன்ன அடுத்த நொடி,

''ஹேய்! இது நல்லா ஐடியா! எனக்கு ஏன் இப்படி எல்லாம் தோணாமல் போச்சு. அவன்கிட்டே அப்படியே சொல்லிடலாம்'' என்று முகம் கொள்ளா சந்தோஷத்துடன் சொன்னாள்.

''அவசரப்படுறியே காயு. நீ சொன்ன உடனே உன் தம்பி இதுக்குச் சம்மதிச்சுடுவானா?''

''ஆமாங்க. அவன் தான் பெரிய தன்மானச் சிங்கமாச்சே!'' என்று ஒரு விதக் கோபத்துடனும், வருத்தத்துடனும் கூறிய காயத்ரி, ''அப்போ என்ன செய்யலாம்?'' என்று மகேஷைப் பார்த்துக் கேட்க,

''நாம நம்மோட ஐடியாவை இப்ப அவன்கிட்டே சொல்ல வேண்டாம். சபையிலே அவனோட நகைன்னு உங்க அம்மாவை வைச்சுக் கொடுக்க வைச்சிடலாம். அப்படிச் செஞ்சால் தான் அவனால மறுத்துச் சொல்ல முடியாது. என்ன நம்மளை முறைப்பான். அதெல்லாம் பார்த்தால் வேலைக்கு ஆகாது'' என்றான்.

''நீங்க சொல்லுறது தாங்க சரி. ஆனால் விழா முடிஞ்ச பின்னாடி சண்டை போடுவான். அதை நினைச்சா எனக்கு இப்பவே வயித்திலே புளியைக் கரைக்குதுங்க.''

''உங்க வீட்டிலே நீ பெரியவளா? இல்லை அவனா? உன் அக்கா கெத்தைக் காட்டு.''

''யாரு நானு? அவன்கிட்டே? நீங்க வேற... அவனுக்கு விவரம் தெரியுற வரைக்கும் தாங்க நான் அவனுக்கு அக்காவா இருந்தேன். அதுக்கப்புறம் அவன் தான் எனக்கு அண்ணனா இருக்கான். இங்க உட்காரு... அங்க நிக்கா தேலே ஆரம்பிச்சு நான் டிரஷ் பண்ணுற வரை ஐயா அதிகாரம் பண்ணுவார்'' என்று பெருமூச்சு விட்டாள்.

''நீ எனக்குக் கூட இப்படிப் பயந்ததில்லையே காயு'' என்று புன்சிரிப்புடன் கூறிய மகேஷ்,

"அப்போ என் தங்கச்சி நிவேதா நிலைமை அதோ கதி தான் என்று சொல்லு" என்று தன் மனைவியை வம்புக்கு இழுத்தான்.

"சே சே! உங்க தங்கச்சி யாரு... அவ போடச் சொல்லுற தோப்புக் கரணத்தை என் தம்பி போடுவான் இல்ல" என்ற கேலி பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜீவ் போன் பேசிவிட்டுத் திரும்பும் வரையிலும் நிவேதா அடுக்களையில் இருந்து வெளியே வரவில்லை. 'இப்படிப்பட்ட உறவுகளை அடைய ராஜீவ் ரொம்பவே கொடுத்து வைத்திருக்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்டாள்.

அவர்கள் இருவரையும் பத்திரிகை வைத்து அழைப்பு விடுத்தவர்கள் நகையைப் பற்றிப் பேச்செடுக்காமல் சென்றார்கள்.

17



புதன்கிழமை மதுவின் சடங்கு. அன்று ராஜீவ் அரசாங்கப் பணிக்கு மட்டும் விடுப்பு எடுத்திருந்தான். மதியத்துக்கு மேல் தனியார் மருத்துவமனைக்குச் சென்று கொள்ளலாம் என முடிவு செய்திருந்தான்.

காலையில் அவனுக்கு முன்பே எழுந்த நிவேதா தங்கள் கல்யாணப் புடவை உடுத்தி போலி நகை அணிந்து தலையில் பூ வைத்து என அலங்காரம் பண்ணிக் கொண்டு தயாராவதைப் பார்த்த ராஜீவிற்கு மயக்கமே வந்தது.

"நீ தானாடா நிவி? அன்னைக்கு என்னமோ எதுக்கு இந்த பங்ஷன் என்று கேட்டுக்கிட்டு இருந்தாய்...

இன்னைக்கு என்னடான்னா ஊருக்கு முந்தி முதல் ஆளா கும்மா ஜம்முன்னு கிளம்பி நிற்கிறாய்... என்னங்க மேடம் விஷயம்?" என அவன் நக்கல் பண்ணினான்.

"இப்பவும் தான் சொல்லுறேன். இந்த பங்ஷன் எனக்குப் பிடிக்கலை என்று. அதுக்காக எங்க அண்ணன் பொண்ணு பங்ஷனுக்குப் போகாமல் இருக்க முடியுமா? நானெல்லாம் என் பொண்ணுக்கு இந்த மாதிரி பங்ஷன் எல்லாம் வைக்க மாட்டேன்."

"அது சரி... இன்னும் இங்க பிள்ளைப் பெத்துக்கற ஐடியாவே இல்லையாம். அதுக்குள்ளே அவ சடங்கு வரைக்கும் யோசிக்க ஆரம்பிச்சுட்டியா... பலே பலே."

"நான் மாட்டேன்னு சொல்லலையே ராஜ். இப்பக் கூட நான் ரெடி தான். சீக்கிரமாப் பெத்துக்குவோம். அப்படியாச்சும் என் அப்பா என்னை மன்னிச்சு அவர் கூட சேர்த்துக்குவார்."

"ஏன் உன் அப்பா வீடு மாதிரி இந்த வீடு உனக்கு வசதியா இல்லைன்னு உங்க அப்பா கூட சேரணும்னு நினைக்கிறியா?"

"ராஜ் நீங்க பேசுறது அபத்தம்னு தெரிஞ்சே எப்படி ராஜ் இப்படிப் பேசுறீங்க? சரி நம்ம பிரச்சனையை அப்புறமா பேசிக்கலாம். கிளம்புங்க" என்று சொல்லி ஒரு பெரிய பையைத் தூக்கிக் கொண்டு வந்தாள்.

அவள் மீதிருந்த கோபத்தில் அவன் அது என்ன வென்று கேட்கவில்லை. அவள் ஏறி அமர்ந்ததும் வண்டியைக் கிளப்பியவன் தன் அக்கா வீடு சென்று சேரும் வரைக்கும் பேசவில்லை.

முதல் நாள் இரவே குருவாயூர் ரயிலில் சுந்தரமும், யசோதாவும் சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். மகளுக்கு உதவி செய்ய வேண்டி நேராக அங்கேயே சென்று

இறங்கிவிட்டார்கள். காயத்ரி தன் தம்பியையும், தம்பி மனைவியையும் கூட முதல் நாளே வந்துவிடும் படி அழைத்திருந்தாள். ராஜீவ் தான் மறுத்துவிட்டான்.

தாய் மாமன் என்பதால் அவன் முதல் ஆளாய் வர வேண்டும் என்று தன் அத்தை எதிர்பார்ப்பார்களே என்று தான் காயத்ரி தம்பியை முன் தினமே வரச் சொல்லி அழைத்தாள். தம்பி மனைவி ஒரு வேளை தயாராகத் தாமதமாகி அல்லது இடையில் போக்குவரத்து நெரிசலில் மாட்டி அவர்கள் வந்து சேரத் தாமதமானால் தனது மாமியாருக்கு என்ன பதில் சொல்வது என்று வேறு அவளுக்குப் பயமாக இருந்தது.

முதல் ஆளாய் ராஜீவும், நிவேதாவும் வந்து இறங்கவும் காயத்ரிக்கு அப்பாடா என்றிருந்தது. ஆனால் அடுத்த நொடியே அந்த மனநிலை மாறியது. மாற்றியவள் நிவேதா தான்.

வந்தவள் நேராகத் தனது மாமியாரைப் பார்த்து நலன் விசாரித்தவாறே மகேஷின் தாயிடம் சென்றவள், "அம்மா நீங்க சொன்னபடியே எல்லாம் வாங்கிட்டேன். உங்களை அந்தத் தட்டு மட்டும் எடுத்து வைக்கச் சொன்னேனே! அது ரெடியா?" என்றாள்.

மகேஷின் தாயும் நிவேதாவிடம், "நானும் உன்கிட்டே சொன்னபடி உனக்குத் தாம்பாளம் ரெடி பண்ணி வைச்சுட்டேன் பாரு" என்று சொல்லி இரு தாம்பாளங்களை அவளிடம் தந்தார்.

'என்னடா இது... இவ பாட்டுக்கு இப்படி ஆப்பு வைச்சிட்டாளே!' என்று சுந்தரம், யசோதா, காயத்ரி, மகேஷ் ஆகிய நால்வரும் திகைத்துப் போய் நின்றிருந்தனர். ராஜீவ் வந்ததும் மகேஷின் அம்மாவுக்குத் தெரியாமல் நால்வரும் சேர்ந்து அந்த நகையை யசோதா

மூலம் இது எங்க பரிசு. இது என் பையனோடது என்று கொடுத்துவிடலாம் எனத் திட்டமிட்டு இவர்கள் காத்திருக்க...

நிவேதா வந்தவளோ நேராக மகேஷின் அம்மாவின் முன்னிலையிலேயே அவள் வாங்கி வந்த பொருட்களைக் கடைபரப்பினால்... என்ன செய்ய முடியும்? எப்படி அந்த நகையை அவற்றுடன் சேர்க்க முடியும் என்று தெரியாமல் விழித்தனர்.

ராஜீவ் தன்னால் நகை வாங்க முடியவில்லை என்பதால் அன்று காயத்ரி சொன்னது போல் மதுவின் கல்யாண சமயத்தில் பெரிய அளவில் பரிசு கொடுத்து விடலாம் என்று முடிவுகட்டி இருந்தான்.

நிவேதா தான் கொண்டு வந்திருந்த பையில் இருந்து தேங்காய், பழம், ஸ்வீட் என்று ஒவ்வொன்றாக எடுத்து வைக்க ஆரம்பித்தாள். ராஜீவிற்கு தன் அக்கா மற்றும் மாமாவின் ஏற்பாடு தெரியாததால் அவன் மட்டுமே அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். இல்லையில்லை... தன் மனைவி குறித்துப் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரண்டாவது தாம்பாளத்தில் முதலில் ஒரு பட்டுப் புடவையை வைத்தாள். அதன் பின்னே மல்லிகைப் பூவை வைத்தவள் ஒரு நகை டப்பாவையும் எடுத்து வைத்தாள்.

ராஜீவ் தவிர அனைவரின் முகமும் மலர்ந்தது. ஓ! அவர்களே ஏதோ ஏற்பாடு பண்ணிவிட்டார்களா என்று முதலில் முகம் மலர்ந்தவர்கள் ஆனால் எப்படி என்ற எண்ணம் தோன்றியவுடன் வேகமாக ராஜீவின் புறம் பார்வையைத் திருப்பினர்.

பாறை போல் இறுகி இருந்த அவளது முகத்தைப் பார்த்ததுமே அவனுக்கும் தெரியாமல் இது

நடந்திருப்பது அவர்களுக்குப் புரிந்து போனது. இதெல்லாம் நிவேதாவின் வேலையா? ஆனால் அவளால் மட்டும் இது எப்படிச் சாத்தியமானது? செய்த வேலையையும் கணவனுக்குத் தெரியாமல் வேறு செய்திருக்கிறாள் போலவே! இது எதிலே கொண்டு முடியப் போகுதோ என அவர்கள் நால்வரும் கவலைப் பட்டனர்.

ராஜீவ் தன் மனதிற்குள் 'அன்னைக்கு நான் அப்பா, அம்மாகிட்டே பேசியதை கேட்டாள் என்பது அன்று மதியம் ஆக்ஸிடென்ட் நடப்பது பற்றிச் சண்டை போட்டதிலேயே தெரிந்தது. ஆனால் முக்கியமான இந்த விஷயத்தைப் பற்றி பேசாமல் இருக்கிறாளே என்ன காரணம் என்று நான் யோசித்துக் கொண்டிருக்க... தானே ஏதோ வேலை செய்து இருக்காள். அதை என்னிடம் சொல்லாததில் இருந்தே எனக்குப் பிடிக்காத வேலையைச் செய்து இருக்காள் என்று தெரிகிறது. என்னவாக இருக்கும்? அவங்க அப்பா சம்பந்தப்பட்ட யாரிடமாவது கடன் வாங்கி இருப்பாளோ? என்று நினைக்கும் பொழுதே அவனது முகம் மிகக் கடுமையாக மாறியது.

அவள் நிமிர்ந்து தன்னைப் பார்ப்பாள் என்று அவனது பார்வை அவளையே தொடர... அவளோ அவன் இருக்கும் திசைப் பக்கம் கூடத் திரும்பவில்லை.

பெரியவர்களின் நிலை இப்படி இருக்க மதுமிதா ஆவலுடன் அந்த நகையைப் பார்வையிட்டாள்.

"நீங்க செலக்ட் பண்ணுனீங்களா அத்தை? சூப்பரா இருக்கு. செட்டா கம்மல் வளையல் கூடவா? ரொம்ப சூப்பரா இருக்கு" என்று சந்தோஷத்துடன் கூவினாள்.

மகேஷின் தாயும் அதை ஆவலுடன் பார்வையிட்டவர், "இந்தக் காலத்துப் பசங்க டேஸ்ட்டுக்கு

வாங்கியிருக்கே! ரொம்ப நல்லா இருக்கு. என்னை எல்லாம் கூப்பிட்டுப் போயிருந்தால் நான் பழங் காலத்துப் பாணியிலே செலக்ட் பண்ணிடுவேன் என்று தானே விட்டுவிட்டுப் போயிட்டே!" என்று அவளைப் பார்த்துக் கேட்க.

"அம்மா, பழைய டிஸைனைத் தானேம்மா ஆண்டிக் என்ற பெயரில் இப்ப எல்லாம் விற்குறாங்க. உங்களை அலைக்கழிக்க வேண்டாம்ன்னு பார்த்தேன். அவ்வளவு தான். உங்களுக்குப் பிடிச்சிருக்கில்லே? எனக்கு அது போதும்" என்றாள்.

மகேஷின் தாய் தன் மருமகளைப் பார்த்து, "வா காயத்ரி. உன் தம்பி சம்சாரம் எவ்வளவு அழகா வாங்கிட்டு வந்திருக்கா பாரு!" என்று அழைத்தார்.

இருக்கும் பிரச்சனையைப் பற்றி அவரிடம் ஒன்றும் சொல்ல முடியாமல் காயத்ரி மாமியாரின் அருகே வந்து நகையைப் பார்வையிட்டாள். நெக்லஸ், கம்மல், வளையல் எல்லாத்தையும் சேர்த்தால் பத்து பவுன் தேறுமே! இத்தனை லட்சங்களை இவள் எப்படி ஏற்பாடு செய்தாள் என கவலையுற்றாள்.

காயத்ரியின் முகத்தைக் கவனிக்காத அவளது மாமியார் யசோதாவைப் பார்த்து, "என்ன சம்பந்தி உங்களை வேற தனியாகக் கூப்பிடணுமா? வாங்க வந்து பாருங்க" என்று அழைப்பதில் மும்முரமானார்.

காயத்ரி நிவேதாவின் முகம் பார்க்க... அவள் ஏன் இவர்களை எல்லாம் பார்க்கிறாள். இப்போதைக்கு மகேஷின் தாயின் அருகே இருப்பது தான் தனக்குப் பாதுகாப்பான இடம் என்று கருதிய நிவேதா அவரின் அருகிலேயே இருந்தாள். அவர் சொல்லும் சிறு சிறு வேலைகளைச் செய்து கொடுத்து மகேஷின் தாயிடம் நல்ல பேர் வாங்கினாள்.

"நம்ம ராஜீவோட சம்சாரம். பெரிய கோடீஸ்வரி. ஆனால் கொஞ்சம் கூட பந்தா இல்லாத பொண்ணு. ரொம்ப அடக்கமான பொண்ணும் கூட..." என்று தன் உறவினர்களிடம் எல்லாம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

'கிழிஞ்சது கிருஷ்ணகிரி! நான் உங்க வீட்டுப் பையனை மிரட்டிக் கல்யாணம் பண்ணிய கதை தெரிந்தால் நீங்க இப்படிப் பேச மாட்டீங்க. நான் அடக்க மானவளா? சுத்த அடாவடி... ம்ம்ம் என்னைப் பற்றித் தெரியாமல் இருக்கீங்க... இதுவும் நல்லதுக்குத் தான்' என நிவேதா மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

விழா முடிந்து சாப்பிட்டு முடித்ததுமே ராஜீவ் கிளம்பத் தயாரானான். ஆனால் நிவேதாவிற்கு வீட்டிற்குச் செல்லவே பிடிக்கவில்லை. இல்லையில்லை... ராஜீவைத் தனியாகச் சந்திக்கவே பிடிக்கவில்லை. அதனால் அவள் வீட்டிற்குச் செல்வதை ஒத்தி வைக்கவே விரும்பினாள்.

"ராஜ், நீங்க ஹாஸ்பிட்டல் கிளம்புங்க. நான் இன்னும் கொஞ்ச நேரம் இருந்துட்டு அப்புறமா வரேன்" என்று நல்ல பிள்ளை போல் சொல்லிப் பார்த்தாள்.

ஆனால் மனைவியின் உண்மைக் காரணம் தெரிந்ததினாலே ராஜீவ் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. அவனுக்கு அவளிடம பணம் வந்த கதையை உடனே தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் அவளை வீட்டிற்கு அழைத்துச் செல்வதிலேயே குறியாக இருந்தான். காயத்ரியுமே 'நிவேதா இங்கேயே இருக்கட்டுமே!' என்று தம்பியிடம் சொல்ல முற்படவில்லை. அதனால் வேறு வழியின்றி நிவேதா ராஜீவுடன் கிளம்பினாள்.

கிளம்பும் முன் மகேஷிடம் தாயிடம் வந்த நிவேதா, "அம்மா எங்க வீட்டுக்கு ஒரு நாள் வாங்க" என்று அழைப்பு விடுத்தாள்.

"நானும் உன் வீட்டுக்கு வரணும் என்று தான் பார்க்கிறேன். முடிய மாட்டேங்குது. அந்த வீடு பால் காய்ச்சின போது வந்தது தான். சீக்கிரமா வரேன்" என்று சொன்னதும் ராஜீவின் முகம் இருண்டது.

சுந்தரம் மகன் அருகே வந்து, "ராஜா, மெதுவா விசாரி. ரொம்பக் கோபப்படாதே. அவளுக்கும் உன்னை விட்டால் யாருமில்லை. அதனால சாந்தமாவே விசாரி" என்று மகனுக்கு அறிவுரை கூறி அனுப்பினார்.

அவன் அவருக்குப் பதிலொன்றும் சொல்லாமல் சரி என்பது போல் தலையை மட்டும் அசைத்தான்.

காயத்ரி தனது தந்தை சொன்ன அறிவுரையைக் கூடச் சொல்லவில்லை. இது கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள பிரச்சனை. 'இதிலே நாம தலையிடக் கூடாது' என எண்ணியவளாய் அவர்களுக்கு மௌனமாகவே விடை கொடுத்தாள்.

அவர்கள் அனைவருமே நிவேதாவிற்காகக் கவலைப் பட்டனர். ஏனென்றால் கடந்த சில மணி நேரமாக ராஜீவ் யாரிடமும்... முக்கியமாக அவனது குடும்ப உறுப்பினர்களிடம் சிரித்துப் பேசவில்லை. அவனது முகம் கடுமையாக இறுகியிருந்தது.

வீட்டை அடைந்ததும், "நான் போய் டிரஸ் சேஞ்ச் பண்ணுறேன்" என்று சொல்லி அவள் படுக்கையறைக்குள் நுழையப் பார்க்க,

அவளது கையைப் பிடித்துத் தடுத்தவன், "எனக்குப் பதில் சொல்லிவிட்டு அப்புறமா என்ன வேணா செய்" என்றான்.

"என்ன சொல்லணும் ராஜ்?"

"பணம் எங்கே இருந்து வந்தது?"

"எந்தப் பணம் ராஜ்?"

"நிவேதா, டோண்ட் டிரை டு ஆக்ட் டூ ஸ்மார்ட். பதில் சொல்லு" என்று அவன் கடுமையாகக் கேட்க,

இதற்கு மேல் தன்னால் கணவனிடம் மறைக்க முடியாது என்பதை உணர்ந்தவளாய் மெதுவான குரலில், "என் நகையை அடமானம் வைச்சேன் ராஜ்" என்றாள்.

அவள் அப்படிச் சொன்னதும் அவன் அவளது கழுத்தில் உள்ள தாலிச் சங்கிலி இருக்கிறதா என்ற பார்வையிட்டான். கணவனின் எண்ணப் போக்கினை உணர்ந்தும் நிவேதா ஒன்றும் சொல்லாமல் கேள்வி அவனிடம் இருந்தே பிறக்கட்டும் என்று பேசாமல் இருந்தாள்.

"உன் நகையா? உன்னிடம் அவ்வளவு நகை கிடையாதே? எந்த நகை?" என்று கேட்டதும்,

"என் வைரக் கம்மல்..." என்று முடிக்கும் முன்பே,

"வைரமா? உன் அப்பா உனக்குப் போட்டாரா? எப்போ?" என்று அவன் மடமடவென்று கேள்விகளை அடுக்க,

"ராஜ், நான் வீட்டை விட்டு வெளியேறும் போது என் அப்பா வாங்கித் தந்த எந்த நகையையும் எடுத்துட்டு வரலை. இது எங்க பாட்டி போட்டது. இது எப்பவும் என் கூடவே தான் இருக்கும்" என்றாள்.

"அவ்வளவு சென்ட்டிமென்டான நகையை ஏன் விற்றாய்?"

கணவன் தன்னைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றிக் கேள்விகளாகக் கேட்பதில் கடுப்பானவள், "நான் நகையைத் தானே வித்தேன். என்னை விற்கலையே?!" என்று கேட்டு அடுத்த நொடி கன்னத்தில் அறை வாங்கினாள்.

அறை வாங்கியவள் அடுத்த நொடியே, "சாரி ராஜ், ஏதோ ஃப்ளோவிலே சொல்லிட்டேன்" என்றாள்.

அவளை அறைந்துவிட்டு தனது கண்களை இறுக மூடித் தனது கோபத்தினைக் கட்டுப்படுத்தி சில நொடிகள் அமைதியாக இருந்தவன் தனது வலது கை எரியவும் தான் கண் திறந்து அதைப் பார்வையிட்டான்.

அறைஞ்சவனுக்கே இப்படி வலிச்சால் அறை வாங்கியவளுக்கு என்று நினைக்கும் போதே நெஞ்சு பதறியது. அவளது கன்னத்தைத் திருப்பிப் பார்வையிட முயன்றான்.

"ஒண்ணும் தேவையில்லை" என்று அவனது கையைத் தட்டி விட்டாள்.

"நிவி படுத்தாதே. சாரி டா. இனிமேல் நீயும் என்ன பேசுறோம்ன்னு யோசித்துப் பேசு. நானும் கோபத்திலே இருந்ததால் சட்டுன்னு கை நீட்டிட்டேன். சாரிம்மா. இது தான் பர்ஸ்ட் அன்ட் லாஸ்ட் டைம்" என்று சொன்னதும்,

"ஓ! டாக்டர் சாருக்கு இன்னொரு முறை கூட அறையணுமுங்கிற நினைப்பு இருக்கோ? எதுக்கு ராஜ் இப்போ என்னை அறைஞ்சீங்க?" என்று கேட்கவும்,

"என் பொண்டாட்டியைப் பற்றி தப்பா பேசினால் அறையத் தான் செய்வேன்" என்று சொன்னவன் அவள் தடுத்ததையும் மீறி அவள் கன்னம் திருப்பிப் பார்வை யிட்டவன், "ஓ காட்!" என்று அதிர்ந்தான்.

"இரு வரேன்" என்று சொல்லி மருந்துப் பெட்டியை எடுத்து வந்தான்.

"லூசு லூசு. எப்பவுமே ஒரு டாக்டராத் தான் நடந்துக்கணுமா? ஒரு ஹஸ்பண்டா நடந்துக்கத் தெரியாதா? அடிபட்டதுக்கு பார்க்கிற வைத்தியத்தைப் பாரு!" என்று சத்தமாகவே முணுமுணுத்தாள்.

அவளைத் தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தவன் அவளது கன்னத்தில் முத்தமிட்டான். பின் மருந்துப் பெட்டியில் இருந்து மருந்தை எடுக்கவும்...

'அவ்வளவு தானா?' என்பது போல் பார்த்துக் கொண்டிருந்தவளிடம், "நகையை அடமானம் வைச்சியா? இல்லை மொத்தமா வித்துட்டியா?" என்று கேட்கவும்,

"ஓ! உங்க கேள்வி பதில் செஷன் இன்னும் முடியலையா? அப்போ நீங்களே வைச்சுக்கோங்க உங்க கிஸ்ஸை" என்று சொல்லியவள் அவன் முத்தம் கொடுத்த

தன் கன்னத்தைக் கிள்ளி அவனது உதட்டில் கொண்டு போய் வைத்தாள்.

அவளது செய்கையைப் பற்றி விமர்சிக்காமல் அவன் மீண்டும் அதே கேள்வியைக் கேட்க,

"நான் அப்போ சொன்னதைச் சரியாக் காதிலே வாங்கிக்கலையா? அடமானம் தான் ராஜ் வைத்தேன்" என்றாள் கடுப்பாக.

"எவ்வளவு ரூபாய்க்கு?"

"மூணு லட்ச ரூபாய் வாங்கினேன்."

"ஒரு சின்ன கம்மலுக்கா அவ்வளவு பணம் கிடைச்சது?"

"அந்த வைரம் அபூர்வமானது. அதை எங்க பாட்டி ஸ்பெஷலா செஞ்சு வாங்கினாங்க."

அவளது கன்னத்தில் மருந்தைத் தடவியவன் மேலும் மருந்துப் பெட்டிக்குள் தலையை விட்டு எதையோ குடைய ஆரம்பித்தான்.

நிமிர்ந்தவன் அவளிடம், "டிரஸ் மாத்திவிட்டுக் கொஞ்ச நேரம் படுத்திரு. நான் இதோ வரேன்" என்று சொல்லி வெளியேறினான்.

திரும்பி வந்தவன் அவளிடம் ஒரு மாத்திரைக் கொடுத்து விழுங்கச் சொன்னான். அவள் அதை விழுங்கியவுடன் அவள் கையில் ஒரு கவரைக் கொடுத்தான்.

அது என்னவென்று தெரியாமல் ஒரு யோசனையுடனே வாங்கிப் பிரித்தவள் உள்ளே மூன்று ஆயிரம் ரூபாய் கட்டுக்கள் இருப்பதைப் பார்த்து அதிர்ந்தாள்.

"என்ன ராஜ் இது?" என்று கேள்வி எழுப்பினாள்.

"பார்த்தா தெரியலை. பணம். அதிலே மூணு லட்சம் இருக்கு. இதுல மேற்கொண்டு கொஞ்சப் பணம் இருக்கு. இந்த மூணு நாளுக்கு வட்டி கட்டணும் இல்லையா? இந்தா இதையும் வைச்சுக்கிட்டு அந்த அடகு கடைக்குப் போய் அந்த கம்மலை மீட்டுக் கொண்டு வா" என்றான்.

"இந்தப் பணத்தை எங்கேயிருந்து ராஜ் வாங்கினீங்க?"

இப்போ கேள்வி கேட்பது அவள் முறையாயிற்று.

"சுமோத்கிட்டே இருந்து வாங்கினேன்."

"சுமோத் அண்ணாகிட்டே என்ன காரணம் சொல்லிப் பணம் கேட்டீங்க?"

"உண்மையைத் தான் சொன்னேன்."

"அன்னைக்கு உங்க அம்மா அப்பா சொன்ன போதே நீங்க என் சுமோத் அண்ணாகிட்டே வாங்கலை?"

"அப்போ..." என்று சொல்லத் தொடங்கியவனை ஒரு கைக் காட்டித் தடுத்தவள்,

"உங்களுக்கு உங்க பொண்டாட்டியை விட பிரண்டு பெருசா போயிட்டார். அதாவது உங்க பிரண்டு முன்னாடி என்னைத் தோற்கடிச்சுட்டீங்க. அப்படித் தானே?" என்று சத்தம் எடுத்துக் கத்தியவள்,

"அப்படி இல்லைம்மா நிவி" என்று அவன் சொல்லத் தொடங்கிய சமாதானத்தைக் கேட்க அவள் அந்த இடத்தில் நிற்கவில்லை.

மடமடவென்று ஒரு சுடிதாரை எடுத்தவள் குளியலறைக்குள் சென்று உடை மாற்றி வந்தாள். பணத்தை எடுத்து கைப்பையில் வைத்தவள் அந்த அடமான ரசீதையும் டீரோவில் இருந்து எடுத்து வைத்துக் கொண்டாள்.

"நீங்க ஹாஸ்பிட்டல் போற வழியிலே நான் இறங்கிக்கிறேன்" என்றதும் ராஜீவிற்கு 'இவள் அதிரடியா செய்யுற வேலைக்குப் பின்னாலே என்ன வில்லங்கம் காத்திருக்குன்னு தெரியலையே!' என்று தோன்றியது.

18

அன்று இரவு அவன் வீடு வந்ததும் அவளிடம் நகையைப் பற்றி விசாரிக்க அவள் அந்த நகை டப்பாவை அவனிடம் நீட்டினாள்.

இது தானா அந்தக் கம்மல் என்பது போல் பார்வை மிட்டவன் அவளிடம் அந்த நகையைப் பற்றி வேறு ஒன்றும் கேட்டுக் கொள்ளவில்லை.

"சாப்பிட்டியா நிவி?"

"ம்ம்ம்" என்ற ஒலியே பதிலாகக் கிடைத்தது.

"அம்மாவும், அப்பாவும் இன்னைக்கு நைட்டே ஊருக்குப் போறதா சொன்னாங்க. உன்கிட்டே பேசினாங்களா?"

"ம்ம்ம்."

"நாளைக்குக் காலையிலே உன் பிரண்டு பவித்ரா கல்யாணத்துக்கு நீ கோயம்புத்தூர் போகணும் தானே நிவி?" என்று கேட்டான்.

"ம்ம்ம்" என்று முணகிக் கொண்டே படுக்கையில் படுத்துக் கொண்டாள்.

அவளருகே சென்றவன் அவளது கன்னக் காயத்தை ஆராய்ச்சி செய்தான்.

"நிவி நான் இப்போ எப்படி டிரீட் பண்ணட்டும்? டாக்டராவா? இல்லை உன் ஹஸ்பண்டாவா? என்று அவளது காதில் கிசுகிசுத்தான்.

கணவன் தன்னிடம் சமாதான உடன்படிக்கை மேற்கொள்ள விரும்புகிறான் என்று தெரிந்தும் அதுக்கு உடன்பட விரும்பாது அவள் தனது கையை வைத்து அவனைத் தள்ளிவிட்டாள்.

"நிவி, உன் ராஜ் இன்னைக்கு செம மூடிலே இருக்கான். டோன்ட் மிஸ் தி சான்ஸ்" என்றான்.

நிமிடங்கள் கடந்தும் எந்த ஒரு அசைவும் அவளிடம் தெரியாமல் போக பெருமூச்சுவிட்டவன், "நிவி எழுந்து மாத்திரையை மட்டும் போட்டுக்கோ" என்றான்.

அவள் அதற்கும் பேசாமல் இருக்க...

"சொன்னதைச் செய்யப் போறியா இல்லையா?" என்று அவன் குரல் உயர்ந்த.

டக்கென்று எழுந்தவள் அவன் தந்த மாத்திரையை விழுங்கிவிட்டுப் படுக்கையில் விழுந்தாள்.

அவன் அவளது கன்னத்தில் அந்த மருந்தினைத் தடவினான். ஒரு கை அவளது கன்னத்தை வருட அடுத்த கையினால் அவளது முடியைக் கோதிக் கொடுத்துக் கொண்டே அவளது அருகிலேயே சாய்ந்த வாக்கில் அமர்ந்திருந்தான்.

அவனது கையில் ஈரம் தட்டுப்படவும் அவனது மனம் தாங்கொணா வேதனையில் வாடியது.

அவளது கண்ணீரைத் துடைத்தவன், "சாரிடா நிவி. சாரி ஃபார் எவ்ரிதிங். உன்னை ரொம்ப கஷ்டப்படுத்துறேனாடா நிவி? அழாதேடா. உன் கண்ணுல இருந்து கண்ணீர் வரதுக்காடா நான் இந்தப் பாடுபடுறேன்!" என்றான்.

அவனது குரலில் மிதமிஞ்சிய வருத்தம் தென்பட்டது. சாப்பிடக் கூடத் தோன்றாமல் உடையையும் மாற்றாமல் அவள் அருகிலேயே படுத்துக் கொண்டான்.

அதிகாலையிலேயே அவள் குளித்துத் தயாராகிக் கிளம்பும் பொழுது அவனும் எழுந்து தயாராகி இருந்தான்.

"சென்ட்ரல் ஸ்டேஷன் தானே? வா உன்னை டிராப் பண்ணுறேன்" என்று சொல்லவும் அவள் அவனை நிமிர்ந்து கூடப் பார்க்காது நடந்தாள்.

வெளியே செல்லத் தொடங்கியவளை வீட்டினுள் இழுத்தவன் கதவை அடைத்துவிட்டு, "நிவி ப்ளீஸ் பேசாமல் மட்டும் போகாதே. அப்புறம் நீ வரவரைக்கும் என்னால நிம்மதியா வேலையைக் கூட பார்க்க முடியாது. ரொம்பக் கோபமா இருந்தால் என்னைத் திட்டு. இல்லை நாலு அடி கூட அடிச்சுக்கோ. இப்படி

அமைதியா மட்டும் இருக்காதே. ப்ளீஸ் என்னை நிமிர்ந்து பாரு'' என்று கெஞ்சினான்.

அவள் அதற்கும் பேசாமல் இருக்க வேறு வழியின்றி கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான். அவளைத் தனது வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்ட்ரல் ரயில் நிலையம் நோக்கிப் பயணப்பட்டான். அவளை இறக்கி விட்டவன் அவளிடம் சொல்லிக் கொள்ளாமலேயே தனது வண்டியைக் கிளப்பிக் கொண்டு போனான். அவன் அவ்வாறு சொல்லாமலே சென்றது நிவேதாவிற்கு வருத்தத்தை அளித்தது.

'கொஞ்ச நேரம் முன்பு வரை எப்படிக் கெஞ்சினான். அவனை நீ மதிச்சியா?' என்று மனசாட்சி கேள்வி கேட்டது.

ஒருவேளை திரும்பி வருவானோ என்று இரண்டு நிமிடங்கள் அவள் அங்கேயே நின்று பார்த்து ஏமாந்து போனாள். ரயிலில் தனது பெட்டியில் ஏறி அமர்ந்தாள்.

மதியம் கோவை சென்று இறங்கும் வரையிலும் கணவனிடம் இருந்து எந்த போனோ, குறுஞ்செய்தியோ வரவில்லை.

'ரொம்பத் தான் ஸ்டிரிக்ட் ஆபீசர் ஆகிட்டடா ராஜ். உன்னை வந்து கவனிச்சுக்கிறேன்' என மனதுக்குள் கணவனுக்கு அர்ச்சனை பண்ணினாள்.

அவள் கோவையில் ரயிலை விட்டு இறங்கி நடை மேடையில் நடக்கும் பொழுது அவளுக்கு அவளது கணவனிடம் இருந்து குறுஞ்செய்தி வந்திருந்தது. 'பத்திரமாகப் போய் சேர்ந்துவிட்டாயா? என்று கேட்டிருந்தான். இவள் பதிலுக்கு ம்ம் என்று மட்டுமே அனுப்பினாள்.

'அவனே இறங்கி வந்தாலும் நீ அடங்க மாட்டேங்கிறாய். இந்த லட்சணத்திலே அவனைத் திட்டுகிறாய். முதலில் நீ உருப்படுற வழியைப் பாரு!' என்று

சொல்லிய மனசாட்சியின் குரலைப் புறந் தள்ளியவாறு ஒரு துள்ளலுடனே அவள் அந்த ரயில் நிலையத்தை விட்டு வெளியேறினான்.

காலையில் இருந்து கணவனது பாராமுகத்தினால் மனம் நொந்து போயிருந்தவள் அவனது குறுஞ்செய்தியைப் பார்த்த நொடியில் உற்சாகம் அடையப் பெற்றாள்.

பவித்ராவின் கணவனாகப் போகும் கணேஷ் கோயம்புத்தூரைச் சேர்ந்தவன். அதனால் அவர்களது திருமணம் கோவையில் நடைபெற உள்ளது.

கல்யாண மண்டபத்திலே சுமித்ராவைக் கண்டதும் நிவேதாவின் உற்சாகம் இரட்டிப்பாக்கியது. அவர்கள் இருவரும் சேர்ந்து பவித்ராவைக் கிண்டல் செய்தனர். மாலை ரிசப்ஷனுக்கு தோழியின் அருகில் நின்று அவளைச் சீண்டிச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தனர்.

ரிஷப்சன் முடிந்தவுடன் சுமித்ராவைத் தனியே அழைத்துச் சென்ற நிவேதா, ''சுமி, வா ஊருக்குப் போவோம்'' என்றாள் மொட்டையாக.

''ஊருக்கா? எந்த ஊருக்கு? காலையிலே கல்யாணம் இருக்கு இல்லையா? இப்போ போய் ஊருக்குக் கூப் பிடுறே?''

''நீ வருகிறாயா இல்லையா? அதை மட்டும் சொல்லு'' என்று கறார் குரலில் கேட்டவளிடம்,

''சரி போவோம் நிவி. எந்த ஊருக்கு? சென்னைக்கா? நான் அப்பாகிட்டே பெர்மிஷன் வாங்கணுமே?'' என்று சுமித்ரா கேட்டதும்,

''சென்னைக்கு இல்லை மதுரைக்குத் தான். வா போகலாம்'' என்றாள்.

''ராஜீவ் அண்ணா மதுரைக்கு வந்து இருக்காங்களா?''

இல்லை என்று நிவேதா தலை அசைத்து மறுத்ததும் சுமித்ராவுக்குள் மணி அடித்தது. இப்போ எதுக்கு இவ

மதுரைக்குப் போக நினைக்கிறாள் எனக் குழம்பியவளாய், ''மதுரையிலே என்ன விசேஷம் நிவி?'' என்று கேட்டாள்.

''ஏன் விசேஷம் இருந்தால் தான் மதுரைக்குப் போகணுமா? உன் வீட்டுக்கு நான் வரக் கூடாதா?'' என்று எடக்கு முடக்காய் நிவேதா கேள்வி கேட்டவுடனே சுமித்ராவிற்கு 'கண்டிப்பாய் ஏதோ பிரச்சனை தான்' என்று புரிந்து போனது.

நேற்று நிவேதாவின் கம்மலை மீட்க ராஜீவிற்கு சுமோத் பணம் கொடுத்தது வரை சுமித்ராவிற்கு தெரியும். தோழியை நன்கு அறிந்தவள் என்ற முறையில் சுமித்ரா நிவேதா அதிரடியாக ஏதாவது செயலில் இறங்குவாள் என எதிர்பார்த்தாள் தான். ஆனால் என்ன செய்யப் போகிறாள் என்பது தான் அவளால் கணிக்க முடியவில்லை.

சுமித்ரா தனது கைப்பேசியை எடுத்து இயக்க அதை வேகமாக தடுத்த நிவேதா, ''இப்போ யாருக்கு போன் பண்ணப் போறே?'' என்று ஒரு வேகத்துடன் கேட்கவும்,

''எங்க அப்பாக்கு நிவி. நாம திடீர்ன்னு புரோக்ராம் மாத்தினதைச் சொல்ல வேண்டாமா? நைட் நேரத்திலே நாம ரெண்டு பொண்ணுங்க தனியா வரப் போறோம்ன்னு சொல்லாமல் இருக்க முடியுமா?'' என்று தோழியைப் பார்த்துக் கேள்வி எழுப்பினாள்.

''நம்ம கார். நாம பார்த்து வளர்ந்த டிரைவர். இதிலே என்ன ரிஸ்க்?''

''உனக்கு என்னாச்சு நிவி? இது மாதிரி எல்லாம் பொறுப்பா வேலை செய்யணும்ன்னு எப்பவும் நீ தானே சொல்லுவே? இன்னைக்கு நானே செய்யுறதையும் தடுக்கிறே!'' என்று சுமித்ரா சந்தேகமாய் கேட்டதும்,

'ச்சு' என்று அலுத்துக் கொண்டவள், ''சரி நீ பேசு!'' என்று சுமித்ராவின் அருகிலேயே நின்று கொண்டாள்.

'ஆகா! விஷயத்தை நம்மாளே ராஜீவ் அண்ணனிடம் சொல்ல முடியாது போலவே!' என நினைத்த சுமித்ரா படு விவரமாகத் தனது அண்ணனின் கைப்பேசி எண்ணிற்கு அழைத்தாள்.

''ஹேய் சுமி? என்ன இந்த நேரத்திலே?'' என்று சுமோத் கேட்கவும்,

''சாரிப்பா தூக்கத்திலே எழுப்பிட்டேனா?'' என்று சுமித்ரா கேட்கவும் சுமோத் குழம்பிப் போனான்.

''ஹலோ சுமி மேடம். நான் தூங்கமல. நீங்க தான் தூக்கக் கலக்கத்தில் இருக்கீங்க போல. அப்பா போனுக்குப் போடுறதுக்குப் பதிலா எனக்குப் போட்டு இருக்கீங்க'' என்றதும்,

''தெரிஞ்சு தான் பா போட்டேன். உங்ககிட்டே விஷயத்தைச் சொல்லணும்மில்லே. அப்புறம் உங்ககிட்டே சொல்லலைன்னு நீங்க திட்டுவீங்க தானே! நானும் நிவியும் இப்போ நம்ம காரிலே கிளம்பி காலையிலே மதுரைக்கு வந்து சேர்ந்திடுவோம். அதைச் சொல்லத் தான் போன் பண்ணினேன்'' என்று சொல்லவும் சுமோத்திற்கு விஷயம் புரிபட்டது.

''சுமி, நிவேதா கோபமா இருக்காளா? அவ மதுரை போற விஷயத்தை எங்ககிட்டே சொல்ல விடமாட்டேங்குறாளா?'' என்று கேட்கவும்,

''ம்ம்ம்'' என்று சுமித்ரா உம் கொட்டவும்,

''சரி சுமி. நீங்க பத்திரமாப் போங்க. நான் அப்பாக்கு போன் பண்ணி விஷயம் சொல்லிடுறேன். ராஜீவ்கிட்டயும் பேசிடுறேன். ஜாக்கிரதை'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

சுமித்ராவும் நிவேதாவும் பவித்ராவிடம் சென்று, ''நாங்க ஊருக்குக் கிளம்புறோம்'' என்று சொன்னதும்,

''என்ன விளையாடுறீங்களா? காலையில கல்யாணத்தைக் கூடப் பார்க்காமல் இப்பவே ஊருக்குப் போக வேண்டிய அவசியம் என்ன?'' என்று எகிறினாள்.

''பவி, கொஞ்சம் வேலை இருக்கு. புரிஞ்சுக்கோ'' என்று அலுப்புடன் நிவேதா சொல்ல... சுமித்ரா காட்டிய கண் ஜாடையினால் ஏதோ விஷயம் இருப்பதை அறிந்து கொண்ட பவித்ரா மனமே இல்லாமல் அவர்களுக்கு விடை கொடுத்தாள்.

சென்னையில் தன் வீட்டில் அமர்ந்து கொண்டு சுமோத் நிவேதா பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தான். 'இந்த நிவேதாக்கு மதுரையிலே என்ன வேலை? அதுவும் ராஜீவுக்குத் தெரியாமல். ஒருவேளை அவங்க அப்பாவைப் பார்க்க நினைக்கிறாளோ?' என நினைத்த நொடி... இதை உடனடியாக ராஜீவிடம் சொல்லியாகணும் என எண்ணியவனாய் அவனது கைப்பேசிக்கு அழைத்தான்.

முதல் ரிங்கிலேயே போனை எடுத்த ராஜீவ், ''என்னடா மச்சான். தூக்கம் வரலையா? இந்நேரம் கூப்பிட்டு இருக்கே?'' என்று கேட்டான்.

''ராஜீவ் உங்க வீட்டிலே இப்ப ஏதாச்சும் விசேஷமா?'' என்றவுடன்,

'இவனுக்கு நடுராத்திரியில் இது என்ன ஆராய்ச்சி?' என நினைத்தவனாய், ''உனக்குத் தெரியாதாடா? நேற்றுக் காலையிலே தானே நம்ம மதுவுக்கு சடங்கு செஞ்சோம்'' என்றான்.

''நான் முடிஞ்சு போனதைக் கேட்கலை. மதுரையிலே உங்க சொந்தக்காரங்க வீட்டிலே யாருக்காவது கல்யாணம், காதுகுத்து... இப்படி ஏதாச்சும்?''

''அப்படி எதுவுமில்லை. இப்போ எதுக்குடா இந்த சர்வே?''

''நிவேதா மதுரைக்குப் போகிறாள்'' என்று சுமோத் சொன்னதும்,

''வாட்? நிவியா? மதுரைக்கா? யார் சொன்னது?'' என்று ராஜீவ் அதிரவும், சுமோத் தங்கை தனக்குப் போனில் தெரிவித்ததைப் பகிர்ந்தான்.

''உடனே நாம மதுரைக்குப் போவோமாடா?'' என்று சுமோத் கேட்கவும்,

''சுமோத் நிவேதா ஊரிலே இல்லைன்னு நானே வலியக் கேட்டு இன்னைக்கு நைட் டியூட்டி வாங்கினேன்டா. அதனால இப்போ உடனே கிளம்ப முடியாது'' என்றதும்,

''அப்போ மச்சான் நான் காலை ஃபிளைட்டுக்கு டிக்கெட் போடுறேன். போற வழியிலே உன்னை வந்து பிக்கப் பண்ணிக்கிறேன்'' என்றான்.

''சரிடா. காலையிலே பார்ப்போம்'' என்று கூறி அழைப்பைத் துண்டித்தான்.

'ஏன் நிவி இப்படிப் பண்ணுறே? என்ன செய்யப் போகிறாய்ன்னு நினைச்சாலே பயமா இருக்கு' என நினைத்துக் கவலைப்பட்டவன் அடுத்த நொடியே சுமோத்திற்கு அழைத்தான்.

''என்னடா ராஜீவ்?''

''சுமோத், எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணு.''

''சொல்லுடா. செய்யுறேன்.''

''எனக்கு என்னமோ மனசே சரியில்லைடா. இது வரைக்கும் நிவி எங்கிட்ட பேசாமல் இருந்ததேயில்லை. ஆனால் நான் உன்னிடம் பணம் வாங்கினதில் இருந்து இப்ப வரைக்கும் பேச மாட்டேங்குறாள். இப்போ வேற நமக்குத் தெரியாமல் மதுரைக்கு போகிறாள். நான் காலையிலே கிளம்புறேன். நீ இப்பவே... உன்னால இப்பவே கிளம்ப முடியுமாடா?''

''சரிடா நான் கிளம்புறேன்.''

''உனக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லையே?''

"இல்லைடா மச்சான். நான் ஃபிளைட் டிக்கெட் எடுத்து உன் ஆஸ்பிட்டலுக்கே கொடுத்து அனுப்புறேன். நீ டாக்ஸி பிடிச்சு சென்னை ஏர்போர்ட்டுக்கு போய் கொள். மதுரை ஏர்போர்ட்டுக்கு நான் கார் அனுப்புறேன்."

"தாங்க்ஸ்டா. அப்பப்போ போன் பண்ணு."

"சரிடா. காலையிலே பார்ப்போம்" என்று சொல்லி அழைப்பை வைத்த சுமோத் நண்பனுக்காக விமானச் சீட்டிற்கான ஏற்பாட்டைச் செய்ய ஆரம்பித்தான். அந்த வேலை முடிந்தவுடன் மதுரைக்குக் கிளம்பினான்.

19



சுமித்ராவும், நிவேதாவும் மதுரையில் உள்ள சுமித்ராவின் வீட்டிற்கு முதலில் சென்று இறங்கினார்கள்.

"வாங்கம்மா!" என்று பாசத்துடன் சுமித்ராவின் தந்தை வரவேற்றார். அவரிடம் பேசிவிட்டு அவர்கள் குளித்துத் தயாராகி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது சுமோத்தின் கார் உள்ளே நுழைந்தது.

சுமோத்தைக் கண்ட நிவேதா திகைத்தாள். தன் தோழியைத் திரும்பிப் பார்த்தாள். அவள் தன்னைத் திரும்பிப் பார்ப்பாள் என்று தெரிந்ததினாலேயே சுமித்ரா கர்ம சிரத்தையாய் தனது தட்டைப் பார்த்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

நிவேதா, "வாங்கண்ணா" என்று சுமோத்தை வரவேற்றாள்.

"ஹாய் நிவேதா! நீ எங்கே இங்கே? நீயாவது வாண்டு கூப்பிடுறியே! என் கூடப் பிறந்தவ நிமிர்ந்து பார்க்குறாளா பாரு. சாப்பாட்டைப் பார்த்துட்டால் போதும். அவளுக்கு வேற எதுவும் தேவை இல்லை" என்று தங்கையை நக்கல் பண்ண,

"இப்போ எதுக்கு வந்ததும் வராததுமா என்னை நக்கல் பண்ணுறே? நீ வந்த வேலையைப் போய் பாரு" என்று சுமித்ரா அவனுக்குத் திருப்பிக் கொடுத்தாள்.

"என்ன அண்ணா விசேஷம்? திடீர்ன்னு வந்திருக்கீங்க" என்று நிவேதா கேட்டவுடன்,

தன் அண்ணனை முந்திக் கொண்டு சுமித்ரா, "ஏன்? அவன் வீட்டுக்கு அவன் வரக்கூடாதா?" என்று பட படத்தாள்.

'போச்சு! இவளே காட்டிக் கொடுத்துவிடுவாள் போல!' என சுமோத் பயந்தது போலவே தான் நடந்தது.

சுமித்ராவின் மீது ஒரு ஆச்சரியப் பார்வையைச் செலுத்திய நிவேதா, "இப்போ உனக்கு எதுக்கு இத்தனைப் பதட்டம்? அண்ணாவைக் கேள்வி கேட்டால் நீயேன் பதில் சொல்லுறே? அண்ணா வந்ததைப் பார்த்து நீ ஆச்சரியம் காட்டலை..." என்று சொல்லிக் கொண்டே வந்தவள்,

தன் தோழியின் கண்களை நேருக்கு நேர் சந்தித்து, "நேற்று நைட் நீ அங்கிளுக்குப் போன் பண்ணலை. அண்ணனுக்குத் தான் போன் பண்ணியிருக்கே! அப்படித் தானே?" என்று கேட்டாள்.

தோழியின் பார்வை வீச்சைத் தாங்க முடியாதவளாய் சுமித்ரா தலை குனிய,

"நீங்க மட்டும் தான் வந்து இருக்கீங்களா? இல்லை உங்க க்ளோஸ் பிரண்டும் வந்திருக்காரா?" என்று அந்த 'க்ளோஸில்' அழுத்தம் கொடுத்து சுமோத்தைப் பார்த்துக் கேட்க,

அவன் உண்மையைச் சொல்லவா வேண்டாமா என்று சிந்திக்க எடுத்து கொண்ட சில நொடிகளே நிவேதாவின் கேள்விக்கான பதிலைத் தந்தது.

"ஓ! அப்போ அவரும் தான் வந்து இருக்காரா? எங்கே அவர்? ஹோட்டலிலே ரூம் போட்டுத் தங்கியிருக்காரா? இல்லை அவங்க வீட்டுக்குப் போயிட்டாரா?" என்றாள்.

"இல்லைம்மா. பத்தரை மணிக்கு ஜெட் கனெக்ட்டிலே தான் கிளம்புறான்."

"ஓ! அப்படி ஒருத்தர் நைட்டிலும், ஒருத்தர் ஃபிளைட்டிலும் கிளம்பி வர என்ன அவசியம் இருக்கு? சொல்லுங்க."

"நீ என் நிவேதா அவன்கிட்டே கூடச் சொல்லாமல் இப்போ மதுரைக்கு வந்தே?"

"என்னோட வைரக் கம்மலை விற்கத் தான் மதுரைக்கு வந்தேன்."

"வாட்? விற்கவா?"

"ஆமா அது அபூர்வ வகை வைரம். அதை வாங்கின இடத்திலேயே விற்றால் தான் அதுக்கான உண்மையான விலை கிடைக்கும்னு தான் இங்கே வந்தேன்."

"ராஜீவ்க்குத் தெரிஞ்சால் திட்டுவான், கோபப்படுவான்."

"தெரிஞ்சால் தானே! அவர் மதுரையில் கால் பதிக்கும் முன்னாலேயே அதை விற்று முடிச்சிடுவேன்."

"அதை விற்கும் அளவுக்கு இப்போ என்ன அவசியம் வந்துச்சு?"

இப்படிக் கேட்ட சுமோத்தை குற்றம் காட்டும் பார்வை பார்த்தாள்.

ஐயோ! இவ எதுக்கு என்னை இப்படிப் பார்க்கிறாள் என்று சுமோத் கலவரமானான். அவனுக்குத் தன் தங்கை சுமித்ராவைச் சமாளிப்பது சுலபம். எப்பவுமே நிவேதாவைச் சமாளிப்பது தான் கஷ்டம்.

"நீங்க செஞ்சு வைச்ச காரியத்துக்கு உங்ககிட்டே பேசவே கூடாதுன்னு நினைச்சேன். ஆனாலும் கூடவே வளர்ந்த பாசம்..." என்று அவள் உச் கொட்ட,

"நான் என்னம்மா செஞ்சேன்? என்னைப் பார்த்து முகம் திருப்புற அளவுக்கு நான் என்ன தப்புப் பண்ணினேன்?"

"நீங்க எதுக்கு ரெண்டு நாள் முன்னாடி ராஜ்க்குப் பணம் கொடுத்தீங்க?"

"என் பிரண்டு கேட்டான். கொடுத்தேன். இதிலே என்ன தப்பு?"

"உங்க பிரண்டு எதுக்காக பணம் கேட்கிறார் என்று உங்களுக்குத் தெரியும் தானே?"

"தெரியும்."

"அப்போ எனக்கும் என் ஹஸ்பண்டுக்கும் இடையிலே நீங்க எதுக்குப் புகுந்தீங்க? நான் பணம் கொடுத்தால் என்ன... நிவேதா பணம் கொடுத்தால் என்ன அப்படின்னு எனக்கு அண்ணனா இருந்து உங்க பிரண்டுக்கு அட்வைஸ் பண்ணியிருக்கணுமா, வேண்டாமா?"

அவன் பதில் சொல்லாது மௌனிக்கவும்...

"என் அண்ணாவா இருந்து ராஜ்க்கு அட்வைஸ் பண்ணலை. சரி அதை விட்டுத் தள்ளுங்க. ஒரு பிரண்டா ராஜ்கிட்டே உன் வைஃப் தான்டா உனக்கு முதல் உறவு. அப்புறமாத் தான்டா நட்பெல்லாம்னு சொல்லியிருக்கணும் தானே?!"

இதற்கு தன்னால் என்ன பதில் சொல்ல முடியும் எனச் சில நொடிகள் அமைதி காத்தான். அதன் பின், "குடும்பத்து பாரம்பரிய நகையை எதுக்கு அடகு கடையிலே வைச்சிக்கிட்டுன்னு நினைச்சிருப்பான்மா" என்றான்.

ஒரு விரக்திச் சிரிப்பு சிரித்தவள். ''அது அடகுக் கடையிலே அடைபட வேண்டாம்ன்னு தான் நான் அதை விற்க முடிவு பண்ணிட்டேன்.''

''அப்படியாவது என் பணத்தை உடனே திருப்பிக் கொடுக்கணுங்கிற அவசியமென்ன நிவேதா? அப்போ நீ என்னை அண்ணனா நினைக்கலையா?''

''ஒரு கணவன் மனைவிக்கு இடையிலே யாருமே வரக்கூடாது. சொந்தம், பந்தம், நட்பு எல்லாமே அங்க ரெண்டாம் பட்சம் தான். ஆனால் அவர் உங்களை நெருக்க மாகவும், என்னை ரெண்டாம் பட்சமாகவும் நினைச்சுட் டார். இப்படி அவர் நினைக்கக் காரணமா இருந்த நகையை இனிமேல் என்னால போட முடியும்ன்னு நினைக் கிறீங்களா?''

சுமித்ரா தன் வாய் திறந்து ''அபூர்வ வைரம்ன்னு சொல்லுறியே நிவி. அதை ஏன் விற்கணும்? அப்புறமா அதை வாங்குறது கஷ்டம் தானே?'' என்றாள்.

''எனக்கு என் ராஜ் மட்டும் போதும். வேற எதுவும் வேண்டாம்'' என்று சொல்லிக் கண்களை மூடி மௌன மானாள்.

மூவருமே அமைதியாய் சில நிமிடங்கள் அமர்ந்திருந் தார்கள். சுமோத் வீட்டின் உள்ளே வந்து இவர்கள் மூவரும் பேச ஆரம்பித்ததுமே சுமித்ராவின் பெற்றோர் சிறியவர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை அவர் களே பேசித் தீர்த்துக் கொள்ளட்டும் என்று பின்னணியில ஒதுங்கிக் கொண்டனர்.

மெதுவாகக் கண் திறந்த நிவேதா சுமோத்திடம், ''இப்போ எனக்கு அண்ணனா இருந்து என் கூட நகைக் கடைக்கு வரீங்க. இங்க வேலை முடியுற வரைக்கும் ராஜிடம் எதுவும் சொல்லாமல் இருக்கீங்க. அப்படி என்னை மீறிச் சொன்னீங்கன்னா என்ன நடக்கும்ன்னு எனக்கே தெரியாது'' என்று தீர்மானமாகச் சொன்னாள்.

அப்பொழுது சுமோத்தின் கைப்பேசி சிணுங்கியது. ராஜீவ் தான் அழைத்திருந்தான். நிவேதாவைப் பார்த்துக் கொண்டே கைப்பேசியைக் காதில் வைத்தான்.

''டேய் சுமோத், நான் ஏர்போர்ட் நெருங்கிட்டேன்டா. நீ ஊருக்குப் போயிட்டியா?''

''ம்ம்ம் வந்துட்டேன்டா.''

''நிவேதா என்ன செய்யுறாள்?''

'ம்ம்ம் என் உயிரை வாங்குறாள்' என்று சுமோத் சொல்லத் தான் நினைத்தான். 'சொல்லிவிட்டு யார் அவ ளிடம் பேச்சு வாங்குவது?' என்று எண்ணியவனாய், ''ம்ம்ம்...'' என்று மட்டும் சொன்னான்.

''என்னடா பக்கத்திலே இருக்காளா?''

''ஆமாம்.''

''ஏதாச்சும் பிரச்சனையா? அவளுக்காகத்தான் நீ வந்திருக்கேன்னு புரிஞ்சுக்கிட்டாளா?

''அப்படித் தான்.''

'அப்போ நான் வரப் போறதையும் சொல்லிட்டியா? இல்லை அவளே கெஸ் பண்ணிட்டாளா?''

''யெஸ்.''

''ஓ! அப்படின்னா ஏதாச்சும் சொல்லி உன்னை கார்னர் பண்ணுறாளா?''

''கரெக்ட்.''

''ஓ.கே. நான் வரும் வரைக்கும் எப்படியாச்சும் சமாளிடா'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

கைப்பேசியை அணைத்த சுமோத் ஒன்றும் சொல் லாது நிவேதாவைப் பார்க்க...

''என்ன சொல்லுறார் உங்க பிரண்டு? எப்படியாச்சும் என் பொண்டாட்டியை சமாளிங்குறாரா? அப்படி இந்த மதுரையிலே நான் என்ன செஞ்சிடுவேன் என்று நீங்க எல்லோரும் இந்த பயம் பயப்படுறீங்கன்னு தான்

எனக்குப் புரியவே மாட்டேங்குது'' என்று சொன்னவள் தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டு,

''வெல்! என்னவா வேணா இருந்திட்டுப் போகட்டும். நான் கடைக்குப் போகணும். முதல்ல நீங்க போய் குளிச்சுச் சாப்பிடுங்க'' என்று சொல்லி சுமோத்தை அவனது அறைக்குள் அனுப்பி வைத்தாள்.

20



அறைக்குள் நுழைந்த சுமோத்திற்கு நிவேதா கேட்ட, 'அப்படி இந்த மதுரையிலே நான் என்ன செஞ்சிடுவேன் என்று நீங்க எல்லாம் இந்த பயம் பயப்படுறீங்கன்னு தான் எனக்குப் புரியவே மாட்டேங்குது' என்ற கேள்வியே எண்ணத்தில் சுழன்று கொண்டிருந்தது.

அவன் கடந்த காலத்தை நினைத்துப் பார்க்க ஆரம்பித்தான்.

* * *

ராஜீவின் திருமண நாள். நிவேதாவின் பெற்றோர்கள் வரவில்லை என்ற ஒரே குறையைத் தவிர வேற குறையொன்றும் இல்லாமல் திருமணம் சிறப்பாகவே நடந்து முடிந்தது.

திருமணம் முடிந்து மணமக்கள் விருந்து சாப்பிட்டு முடித்த பின் ராஜீவின் கைப்பேசிக்கு புது எண்ணில் இருந்து அழைப்பு வந்தது.

எடுத்துப் பேசினான். ''ஹலோ ராஜீவ் பேசுறேன்.''

''நான் ரவிந்திரன் பேசுறேன். ஓ! சாரி டாக்டர் சாருக்கு அப்படிச் சொன்னால் புரியாது இல்லை. நீங்க கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தாலி கட்டினீங்களே நிவேதா... அவளோட அப்பா பேசுறேன்'' என்று எகத்தாளமாக அவர் ஆரம்பிக்க,

''சொல்லுங்க'' என்று ராஜீவ் மொட்டையாக முடித்தான். அவர் குரலில் இருந்த எகத்தாளம் அவனை மாமா என்று அழைத்து அவரிடம் உரிமை கொண்டாட விடவில்லை.

''நான் கொஞ்சம் உங்களைப் பார்க்கணுமே! உடனே வரீங்களா?''

அவன் எந்த பதிலும் சொல்லாமல் தயங்க...

''டாக்டர் சார், நான் ஒன்னும் உங்களை அடியாள் வைச்சு அடிச்சு உங்க உயிருக்கு எந்தக் கேடும் விளைவிக்க மாட்டேன். என்னை நம்பி வரலாம். நான் என்ன ரௌடியா?'' என்றதும்,

''வரேன். எங்கே வரணும்?'' என்றான்.

''எங்க வீட்டுக்கு வாங்க. நிவேதாவுக்குத் தெரியாமல் வாங்க. அதுவும் உடனே வந்தால் உங்களுக்கு நல்லது'' என்று சொல்லி போனை அனைத்துவிட்டார்.

அவனது முகம் யோசனையில் தோய்ந்திருக்க... அருகே வந்த சுமோத்தும், சுந்தரமும் என்னவென்று விசாரித்தார்கள். அவர்களிடம் ராஜீவ் விவரம் தெரிவித்ததும் இருவருமே, ,

''நீ தனியாப் போக வேண்டாம். நாங்களும் வரோம்'' என்ற கருத்தையே வலியுறுத்தினார்கள்.

சரி என்று அவர்கள் மூவருமே பிறரிடம் எந்த விவரத்தையும் தெரிவிக்காது சுமோத்தின் காரில் பயணமானார்கள். வழிநெடுக என்ன விஷயமாக இருக்கும் என்று குழம்பிக் கொண்டே தான் சென்றார்கள்.

தன் பெண் காதலிப்பவன் தன்னை விட அந்தஸ்தில் குறைந்தவன் என்பதை அறிந்ததுமே ரவீந்திரனுக்கு ராஜீவ் மீது விருப்பம் இல்லாமல் போனது. அதுவும் அவன் தான் தன்னை நடு வீதியில் எதிர்த்தவன் என்று தெரிய வந்ததும் சுத்தமாகப் பிடிக்காமல் போனது.

அதனால் உடனடியாக தனது அந்தஸ்திற்கு நிகரான ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து அதைத் தன் குடும்பத் தாரிடம் தெரிவிக்கவும் செய்தார். ஆனால் அவரது மகளோ அதே தினத்தில் காதலித்தவனையே சட்டப்படி திருமணம் முடித்துவிட்டாள். அதனால் அவர் தனது ஆட்டத்தை ஆட முடிவு செய்துவிட்டார்.

ராஜீவுடன் கூட வந்து இறங்கிய சுமோத்தை ஓர் கூர்பார்வை பார்த்த ரவீந்திரன் உள்ளே வாங்க எனும் விதமாய் தலையைக் கூட அசைக்கவில்லை. இவர்களைப் பார்த்தவுடன் அவர் சடாரென வீட்டிற்குள் சென்று மறைய ராஜீவிற்கு அவமானமாக இருந்தது.

''நானாவது வயதில் சிறியவன். அவருக்குத் தெரியாமல் அவர் பொண்ணைக் கல்யாணம் பண்ணிய கோபம். ஆனால் என் அப்பா என்ன கெடுதல் செய்தார்?' என நினைத்துப் பொருமினான்.

'நீங்க அவசியம் இந்த வீட்டிற்குள் நுழையத் தான் வேண்டுமா?' என்று நினைத்தவனாய் தன் தந்தையைப் பார்த்து. ''அப்பா, நீங்க உள்ளே...'' என்று தயங்கி நிறுத்த.

''அதான் இவ்வளவு தூரம் வந்திட்டோமே ராஜா. என்ன சொல்லுறார்ன்னு தான் கேட்போம். நாமளும் தப்பு செஞ்சு இருக்கோமில்ல... பொறுத்துத் தான் போகணும்'' என்றார்.

''நீங்க என்னப்பா செஞ்சீங்க? தப்பு செஞ்சது நான் தானே!''

''நீ வேற நான் வேறயா ராஜா. வா உள்ளே போவோம்'' என்று சொல்லி அவரே முன்னால் சென்றார். அவரை சுமோத்தும், ராஜீவும் பின் தொடர்ந்தார்கள்.

அங்கிருந்த சோபாவில் அமர்ந்திருந்த ரவீந்திரன் அவர்களை அமரச் சொல்லவில்லை. கணவனது நடவடிக்கைப் பிடிக்கவில்லை என்றாலும் ராதாவால்

அவரை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது அடுக்களையின் வாயிலில் நின்று கொண்டிருந்தார். இவர் தான் என் மாப்பிள்ளையா? என்று ராஜீவைப் பார்வையிட்டார்.

ராஜீவிற்கு அந்த இடத்தில் நிற்கப் பிடிக்காமல் விஷயத்தைக் கேட்டுவிட்டு இடத்தைக் காலி செய்வோம் என்ற எண்ணம் தோன்ற அவனே பேச ஆரம்பித்தான்.

''என்ன விஷயமா என்னை வரச் சொன்னீங்க?''

''உங்க பேரு தானே ராஜீவ்? உன் பொண்டாட்டி பேரு தானே நிவேதா?''

இது என்ன கேள்வி என்பது போல் பார்த்துக் கொண்டே, ''ஆமாம்'' என்று மட்டும் சொன்னான்.

''உங்க பொண்டாட்டி என்கிட்டே கடன்பட்டிருக்காங்க. அதுக்கு ஈடா உங்க சொத்தை எடுத்துக்கச் சொல்லி கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்காங்க. அதோட ஜெராக்ஸ் காப்பி இந்தாங்க'' என்று சொல்லி ஒரு பத்திரப் பேப்பர் ஜெராக்ஸை அவர் நீட்டினார்.

என்ன சொல்கிறார் எனக் குழம்பியவர்களாய் அவர்கள் மூவருமே விழிக்க... ராஜீவ் அந்தப் பேப்பரைக் கை நீட்டி வாங்கினான்.

''எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சொத்துப் பத்திரத்தைக் கொடுக்கப் பாருங்க. இல்லைன்னா நீங்க டைவர்ஸ் பேப்பரில் சைன் பண்ணிட்டு இடத்தைக் காலி பண்ணுங்க. அவ உங்க பொண்டாட்டியா இருந்தால் தானே நீங்க உங்க சொத்தெல்லாம் எனக்குக் கொடுக்க வேண்டியிருக்கும். என்ன செய்யுறதுன்னு அப்படி வெளியே போய் பேசிட்டு வாங்க' என்று சொல்லி வாசலை நோக்கிக் கை காட்ட... ராஜீவிற்கு பெருத்த அவமானமாக இருந்தது.

அவர்கள் மூவரும் வெளியேறி கார் நிறுத்தும் இடத்திற்குச் சென்று அந்தப் பத்திரத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள்.

அதில் ராஜீவின் மனைவியாகிய நான் என்று தொடங்கி ரவிந்திரனின் பிசினஸில் தன்னால் ஏற்பட்ட நஷ்டத்திற் காக தங்களது சொத்தை எழுதித் தருவதாகக் குறிப்பிடப் பட்டு இருந்தது. கீழே நிவேதாவின் கையொப்பம் இடப்பட்டிருந்தது. இன்றைய தேதி குறிப்பிடப்பட்டு இருந்தது.

''இது நிவேதாவோட கையெழுத்து தானான்னு தெரியலையே!'' என்று ராஜீவ் சந்தேகம் எழுப்பினாள்.

அதை வாங்கிப் பார்வையிட்ட சுமோத், ''எனக்கு அதுலே சந்தேகமே இல்லைடா. அவ இதுவரைக்கும எனக்கு எத்தனை பர்த் டே கார்டு கொடுத்திருப்பாள். இது அவ கையெழுத்து தான்'' என்றான்.

''ஆனால் எப்படிடா இப்படி ஒரு கையெழுத்து போட்டாள்?''

''அது தான் புரியலை. ஒரு வேளை வெத்துப் பேப் பரிலே கையெழுத்து வாங்கி வைச்சிருப்பாரோ?''

''அப்படியும் இருக்குமாடா?''

''அதுக்கு சான்ஸ் நிறையடா ராஜீவ். தேதி வேற இன்னைக்குத் தேதி போட்டிருக்கு. நான் எதுக்கும் எங்க லாயர் அங்கிளுக்கு போன் பண்ணி ஏதாவது பண்ண முடியுமான்னு கேட்கிறேன்'' என்று சொல்லிய சுமோத் தனது குடும்ப வக்கீலுக்கு போன் பண்ணினான்.

''ஹலோ அங்கிள், எப்படி இருக்கீங்க?'' என்று நலன் விசாரித்தவன் நேரடியாக விஷயத்தை அவரிடம் சொல்லி, ''என் அங்கிள் சட்டப்படி இதிலே ஏதாச்சும் செய்ய முடியுமா?'' என்று கேட்டான்.

''அந்தப் பையன் உன் பிரண்டா சுமோத்?''

''ஆமா அங்கிள் ராஜீவ் என் பிரண்டு தான்.''

''இங்க பாரு சுமோத்... நான் தான் உங்க குடும் பத்துக்கும் வக்கீல். நிவேதா குடும்பத்துக்கும் வக்கீல்.

நிவேதா ஒரு பையனோட சுத்துறான்னு கேள்விப்பட்ட உடனேயே ரவிந்திரன் களத்திலே இறங்கிவிட்டார். அவர் பக்காவா திட்டம் போட்டு தன் பொண்ணுகிட்டே அவ பேரிலே சொத்து வாங்கப் போறேன்னு பொய் சொல்லி வெற்றுப் பத்திரத்திலே கையெழுத்து வாங்கிட்டார்.

அவர் அதைக் காட்டி தன் பொண்ணை பிளாக் மெயில் பண்ணலாம்ன்னு நினைச்சார். அதாவது ராஜீவைக் கல்யாணம் பண்ண நினைச்சால் அந்தக் கையெழுத்தை வைச்சு அவன் சொத்தை அபகரிச்சுக்குவேன் என்று பயமுறுத்தி கல்யாணம் பண்ணவிடாமல் தடுத்திட லாம்ன்னு பார்த்தார். ஆனால் நிவேதா அவருக்கு அப்படி ஒரு வாய்ப்பைக் கொடுக்கவே இல்லை. அவ தன் அப்பா கண்ணுலயே விரலை விட்டு ஆட்டிட்டாள். கமுக்கமா காரியத்தை முடிச்சுட்டாள்.

அதான் இப்போ பொண்ணுக்குத் தெரியாமல் உங்களை இப்படிச் சிக்க வைக்க நினைக்குறார். முறையா தாலி கட்டும் முன்னாடி உங்ககிட்டே இதைக் காட்டி பயங்காட்டணும் என்று நினைச்சார். அப்படிச் செஞ்சால் அந்தப் பையன் தாலி கட்டாமல் டைவர்ஸ் பேப்பரில் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போயிடுவான் என்று நினைச்சார். தன் பொண்ணு தான் விரும்பின பைய னோட ரிஜிஸ்தர் கல்யாணம் ஆன மறுநாளே தன்னிடம் வந்து சேர்ந்திடுவாள்ன்னு கணக்குப் போட்டார்.

ஆனால் அவர் கெட்ட நேரம்ன்னு தான் சொல் லணும். அவர் அந்தப் பத்திரத்தை வைச்ச இடம் தெரி யாமல் நேத்து முழுசும் தேடினார். நேத்து நைட் தான் அது பாங்க் லாக்கரில் இருக்கிற விஷயம் ஞாபகம் வந்திருக்கு. அதை எடுத்துட்டு வந்து வார்த்தைகளை டைப் பண்ணுறதுக்குள்ளே நீங்க அந்தப் பக்கம் கல்யாணத்தைப் பண்ணி வைச்சுட்டீங்க. அதான்

எப்படியும் அந்தப் பையனைப் பழி வாங்கியே தீரணும்ன்னு நிக்குறார்.

நீங்க சொத்தைத் தர சம்மதிக்கலைன்னா கோர்ட், கேசு, நிவேதா அரெஸ்ட் வரைக்கும் விஷயம் போகும்.

என்னைக் கேட்டால் அந்தப் பையன் நம்ம நிவேதாவை சின்சியராக் காதலிச்சால் பேசாமல் சொத்தைத் தூக்கிக் கொடுத்துட்டு நிம்மதியா வேலையைப் பார்க்கப் போகச் சொல்லுவேன். சொத்து போனால் எப்படியும் கொஞ்ச வருஷத்திலே சம்பாதிச்சுக்கலாம். போலீஸ் கேஸ் அப்படி இப்படின்னு ஆகிப் பேரைக் கெடுத்துக்க வேண்டியதில்லை. யோசித்து முடிவு பண்ணச் சொல்லு'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தார்.

சுமோத் வருத்தத்துடன் அதை அவர்களிடம் கூறினான். அப்பொழுது ரவீந்திரன் யாரிடமோ போனில் பேசிக் கொண்டே வந்தார்.

''பெரிய இடத்துப் பொண்ணைக் கல்யாணம் பண்ணினால் அவ சொத்துப் பூராவும் அனுபவிக்கலாம்ன்னு பார்த்திருப்பாங்க. இப்ப சொத்தை எழுதிக் கேட்ட உடனே முழி பிதுங்கிப் போய் நிக்குறாங்க. உண்மையிலே என் பொண்ணு மேலே பாசம் இருந்தால் சொத்தைக் கொடுத்துட்டு பொண்ணு மட்டும் போதும்ன்னு போக வேண்டியது தானே? சரியான ஆம்பிள்ளையா இருந்தால் என் பொண்ணுகிட்டே விஷயத்தைச் சொல்லாமல் சிக்கலைத் தீர்க்க வேண்டியது தானே! ஒண்ணு சொத்தைக் கொடுக்கணும். இல்லைன்னா டைவர்ஸ் பேப்பரிலே சின்ன கையெழுத்து'' என்று இடக்காய் கூறிக் கொண்டே உள்ளே சென்று மறைந்தார்.

அவர் நிஜமாகவே போன் பேசியது போல் தெரியவில்லை. இவர்களிடம் தான் மறைமுகமாக செய்தி சொன்னது போல் இருந்தது.

அவரது பேச்சில் ரோஷமடைந்த சுந்தரம், ''அப்படி நம்ம சொத்தில் என்னவெல்லாம் அவருக்குத் தருவதா அந்தப் பத்திரத்திலே எழுதியிருக்கான்னு பாருப்பா'' என்றார்.

சென்னையில் ராஜீவ் புதிதாக வாங்கிய அபார்ட்மென்ட், அவனது கனவு மருத்துவமனை கட்டுவதற்கு என்று அவன் சென்னையில் வாங்கியிருந்த மனை, மதுரையில் அவர்களுக்கு உள்ள வீடு, அவர்களது ஊரில் உள்ள பூர்வீக வீடு, நிலபுலன்கள், தோப்பு எல்லாம் தருவதாக எழுதி இருந்தது.

அதைப் படித்துப் பார்த்த ராஜீவ் அதிர்ந்து போய் நிற்க...

''இதெல்லாம் அராஜகம்டா. எப்படிடா இப்படிப் பண்ண அவருக்கு மனசு வந்துச்சு?'' என்று சுமோத் கோபத்தில் இரைந்தான்.

''அதை விடுப்பா. எப்படி இவ்வளவு கரெக்ட்டா நம்ம சொத்தைக் குறிப்பிட்டு இருக்கார்?'' என்று சுந்தரம் கேட்டவுடன்,

''ஓ காட்!'' என்று கூவித் தலையில கை வைத்துக் கொண்டு சுமோத் தரையில் அமர்ந்துவிட்டான்.

''என்னாச்சுடா?'' என்று பதறிப் போய் அவனருகே குனிந்த ராஜீவிடம்,

''சாரிடா மச்சான். நிவேதா காதலிக்குற விஷயம் தெரிஞ்சதும் அவ அப்பா என்னைக் கூப்பிட்டு விசாரணை நடத்தினார். நான் தான் நீ நல்லவன். வசதியில் மட்டும் தான் உங்களை விடக் குறைஞ்சவன். ஆனால் அதுக்குன்னு வசதியே இல்லாதவன் கிடையாதுன்னு சொல்லி உன் சொத்து பட்டியலை அவர்கிட்டே ஒப்பிச்சேன். ஆனா அது இப்படி ஆகும்னு தெரியாமல் போச்சுடா. நானே உனக்கு ஆப்பு வைச்சிட்டேன்டா. சாரிடா ராஜீவ்'' என்று வருத்தம் தெரிவித்தான்.

"டேய்! லூசு மாதிரி உளறாதே. நீ சொல்லலைன்னா அவர் இந்த வேலையை ஒரு துப்பறியும் நிறுவனம் மூலம் கண்டுபிடிச்சு இருக்கப் போறார். உனக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை. மனசைப் போட்டுக் குழப்பிக் காதே. முதல்ல எழுந்திரு!" என்று சொல்லி அவனைத் தூக்கி நிறுத்தினான்.

"டேய் ராஜீவ், இந்தப் பிரச்சனையை நாம நிவேதா கிட்டே விட்டுடுவோம். அவ தான்டா இவரைச் சமாளிக்கச் சரியான ஆள்" என்று சுமோத் யோசனை கூறவும்,

"வேண்டாம் சுமோத்" என்று மறுத்தான்.

"ஏண்டா வேண்டாம்? அவர் நம்மை உசுப்பேத்துற துக்குத் தான் நீ ஆம்பிளையா இருந்தால் என் பொண்ணு கிட்டே சொல்லாதேன்னு சொல்லுறார்."

"நான் அதுக்காக மட்டும் சொல்லலைடா சுமோத். விஷயம் தெரிஞ்சால் அவ உயிரை விட்டுடுவாள்."

'என்னடா உளறுறே?"

"ப்ச்சு... இதை நான் சொல்லலைடா. அவளே தான் சொன்னாள். அவ அப்பா தனக்கு எதிரா ஒரு துரும்பையும் அசைக்க மாட்டார். அப்படி ஒண்ணு நடந்தால அது தான் அவ வாழ்க்கையின் கடைசி நாள்ன்னு சொன்னாள்."

"இப்போ என்ன தான்டா பண்ணுறது?"

சுமோத்தின் கேள்விக்கு ராஜீவிற்குப் பதிலாக சுந்தரம், "ராஜீவ்க்கு அரசாங்க உத்யோகம் இருக்கு. எனக்கும் என் பொண்டாட்டிக்கும் பென்ஷன் வருது. அதனால எங்க ளால சமாளிச்சுக்க முடியும். உங்க வக்கீல் சொன்னபடி சொத்தைக் கொடுத்திட்டுப் போக வேண்டியது தான்" என்று பதிலளித்தார்.

"அப்பா விளையாடாதீங்க. சென்னையில உள்ள வீடோ மனையோ இல்லேன்னாக் கூட நம்மாள வாழ்க் கையை நடத்த முடியும். இன்னும் சொல்லப் போனால்

நம்ம மதுரை வீடு, நிலபுலன், தோப்பு... இது அத்தனை யும் போனாலும் பரவாயில்லை. ஆனால் ஊரிலே உள்ள நம்ம வீடு... அதை எப்படிப்பா விட்டுக் கொடுக்க முடியும்? நிலபுலன்களை எப்பவுமே நாம குத்தகைக்கு விடுறதால அது நம்ம கை விட்டுப் போனால் யாருக்கும் தெரியப் போறதில்லை. மிச்ச சொத்தும் அப்படித் தான். ஆனால் நாம குடியிருக்கிற நம்ம பரம்பரை வீடு... நம்மாள ஊருக்குள்ளே தலை காட்ட முடியாதுப்பா."

ஐந்து நிமிடங்கள் மூவருக்கும் இடையில் பலத்த மௌனம் நிலவியது.

"அப்பா ஹாஸ்பிட்டல் கட்ட நான் பேங்கிலே பணம் போட்டு வைச்சிருக்கேன் தானே! அதைக் கொடுத்து வேணா நம்ம பரம்பரை வீட்டை மட்டும் நம்மகிட் டேயே வைச்சுக்குவோம். மனையே இல்லாமல் எது மேலே ஹாஸ்பிட்டல் கட்டுவது?" என்று விரக்தியுடன் சொன்ன நண்பனின் நிலை சுமோத்திற்கு கண்களில் நீரை வரவழைத்தது.

சுந்தரம் தனது சம்மதத்தைத் தெரிவிக்கவும், "அப்பா, அம்மாகிட்டே ஒரு வார்த்தை..." என்று தயங்கினான்.

"அவளைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும் ராஜா. அவளும் இதையே தான் சொல்லுவாள். இப்போ கல் யாண வீடு என்பதால் வீடு நிறைய ஆட்கள் இருப்பாங்க. நான் அப்புறமா அவகிட்டே பக்குவமாச் சொல்லிக்கிறேன்."

"ம்ம்ம் சரிப்பா. உள்ளே போய் பேசிப் பார்ப்போம்" என்றவனுக்கு ரவீந்திரனின் வீட்டை நோக்கிக் கால்கள் செல்ல மறுத்தன.

"நீ இங்கேயே இரு ராஜீவ். நான் போய் பேசிட்டு வரேன். பாங்கிலே உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கு?" என்று கேட்டுத் தெரிந்து கொண்டு சுமோத் உள்ளே சென்றான்.

சென்றவன் பத்து நிமிடங்களில் திரும்பி வந்தான்.

''என்னடா ஒத்துக்கிட்டாரா?''

''ப்ச்சு. உன் பணம் மட்டும் போதாதாம். உன்னோட காரும் கூட வேண்டுமாம்'' என்று எரிச்சல் மிகவுறச் சொல்லவும்,

''அந்த வீடு ஒண்ணு இருந்தால் போதும்டா. எனக்கு வேற எதுவும் தேவையில்லை. வேற என்ன சொன்னார்?'' என்றான்.

''இப்பக் கையோட நம்ம கூட ஆள் அனுப்புவாராம். எல்லாப் பத்திரத்தையும் கொடுத்தனுப்பணுமாம். அந்த ஆள் சென்னைக்கும் வருவானாம். நாளைக்கே சென்னையில் உள்ள வீட்டையும், காரையும் ஒப்படைக்கணுமாம்.''

அவர்கள் மூவரும் வீட்டை விட்டு வெளியேறியதும் ராதா தன் கணவரிடம், ''உங்களுக்கே இது நியாயமாத் தெரியுதாங்க? அவங்களைத் துன்பப்படுத்தி என்ன சாதிக்கப் போறீங்க?'' என்று கேட்டார்.

''நீ சொல்லி நான் எதுவும் கேட்கப் போவதில்லை. எதுக்கு வீணா உன் எனர்ஜியை வேஸ்ட் பண்ணுறே?'' என்று சொன்னவர் தன் அறைக்குள் சென்று மறைந்தார்.

வசதியில்லாத வீட்டில் நிவி எப்படிக் காலம் தள்ளுவாள்? அவளுக்கும் அவ புருஷனுக்கும் இதனால பிரிவு வருமோ? அதைத் தான் இவர் எதிர்பார்க்கிறாரா? அப்படி நடந்திடுமா? மீனாட்சித் தாயே! என் பெண்ணைக் காப்பாற்று! என்று ராதாவின் மனம் புலம்ப ஆரம்பித்தது. அப்பொழுது அன்றொரு நாள் நிவேதா சொன்ன 'நான் என் மனசுக்குப் பிடிச்சவனைத் தான் கல்யாணம் பண்ணுவேன். அவனுடன் இணை பிரியாது வாழ்வேன்' என்ற விஷயம் நினைவிற்கு வந்து அவரது மனதைக் கொஞ்சம் திடப்படுத்தியது.

அறைக்குள் சென்ற ரவீந்திரன் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தால் கடுங்கோபத்தில் இருந்தார்.

'தாலி கட்டும் முன்பே நிவியை ராஜீவிடமிருந்து மீட்கலாம் என்று பார்த்தால் பத்திரம் தொலைந்து விட்டது. பத்திரம் கிடைத்ததும் அவர்களைக் கூப்பிட்டு மிரட்டினால்... உங்க பொண்ணு வேண்டாம். எங்களுக்கு எங்க சொத்து வேண்டும்ன்னு சொல்லுவாங்கன்னு பார்த்தால்... லூசுப் பசங்க சொத்தைக் கொடுக்குறோம்ன்னு சொல்லிட்டுப் போறானுங்க. சரி... இவங்க சொத்து வேண்டாம்ன்னு முடிவெடுக்கலாம். வீட்டிலே போய் விட்டுப் பொம்பளைங்ககிட்டே கலந்து பேசும் போது மனசு மாறினாலும் மாறுவாங்க. பொறுத்திருந்து பார்ப்போம்!' என்று எண்ணிக் கொண்டார்.

சுந்தரம், ராஜீவ், சுமோத் ஆகியோர் காரில் ஏறிப் பேசிக் கொண்டு சென்றார்கள். அவர்கள் தெருமுனையை அடைந்த போது நிவேதா வீட்டு டிரைவர் வேலு தன் கையைக் குறுக்கே நீட்டி அவர்களது காரைத் தடுத்து நிறுத்தினார்.

சுமோத் ராஜீவிடம், ''இது நிவேதா வீட்டு டிரைவர்'' என்று சொல்லிக் கொண்டே காரில் இருந்து இறங்கினான். ராஜீவும் இறங்க... வேலு அவனருகில் வந்து,

''தம்பி நீங்க தான் எங்க பாப்பாவைக் கல்யாணம் பண்ணி இருக்கீங்களா?'' என்று கேட்டார்.

ஆம் என்று ராஜீவ் தலை அசைத்ததும், ''நல்லா அழகாத் தான் இருக்கீங்க. எங்க பாப்பாக்கு ஏத்த ஜோடி தான். எங்க பாப்பா நல்ல பொண்ணு தம்பி. அவளைக் கண் கலங்காமல் பார்த்துக்கோங்க. ஏதும் கோபத்திலே கூடக் குறையப் பேசினால் கோவிச்சுக்கிடாதீங்க தம்பி. கொஞ்சம் பொறுத்துக்கிடுங்க. உங்களையே நம்பி வந்திருக்கு. நல்லபடியாப் பார்த்துக்கோங்க. எங்க ஐயா

கோபம் ஒரு நாள் மாறும். அவராலையும் பாப்பாவை விட்டுட்டு ரொம்ப நாள் இருக்க முடியாது. எல்லாம் சீக்கிரமாச் சரியாப் போகும். எங் குலசாமி கருப்பசாமி காப்பாத்துவார்'' என்று சொன்னதும்,

அவரது பேச்சில் நெகிழ்ந்த ராஜீவ் அவரது கைகளைப் பற்றிக் கொண்டே, ''உங்க பாப்பாவை நான் பத்திரமாப் பார்த்துக்கிறேன். கவலைப்படாதீங்க'' என்று நம்பிக்கை அளித்துவிட்டு அவரிடம் இருந்து விடைபெற்று காரில் ஏறிக் கிளம்பினான்.

'பெண்ணைப் பெற்றத் தகப்பன் தன் மாப்பிள்ளை யிடம் சொல்ல வேண்டியதை எல்லாம் அந்த வீட்டு வேலையாள் சொல்லுகிறார். பெண்ணைப் பெற்றவரோ வாழ விடமாட்டேன் என்று சவால் விடுகிறார். என்ன உலக மடா இது!' என நினைத்து ராஜீவ் பெருமூச்சுவிட்டான்.

சென்னையில் உள்ள வீட்டை நாளைக்கே ஒப்படைக் கணும் என்றால் இன்னைக்கே சென்னைக்குக் கிளம்ப ணுமே! கல்யாணம் ஆன அன்றே கிளம்புவது என்றால்... நிவேதாவிடம் என்னவென்று சொல்லிச் சமாளிப்பது? என்று ராஜீவ் சிந்திக்க ஆரம்பித்தான்.

நேற்று அவளிடம் போனில் பேசும் போது முதலிரவு பற்றி ஏதாவது பேசினோமா என்று சிந்தித்துப் பார்த்தான். இல்லை என்றே தோன்றியது. நல்ல வேளையாக அக்காவும், அப்பாவும் வந்து தடுத்துவிட்டார்கள். அப்படி யென்றால் நாளைக்கு எக்ஸாம் என்று சொல்லிவிட்டுக் கிளம்ப வேண்டியது தான் என்று முடிவு செய்தான்.

தன் நண்பனிடம், ''சுமோத், நீ சொத்து போனது விஷயமா நிவேதாகிட்டே ஒண்ணும் சொல்லக் கூடாது'' என்று எச்சரித்தான்.

''அவ உயிரை விட்டுடுவாள்ன்னு நீ பயப்படும் போது நான் எப்படிடா சொல்லுவேன். ஆனா நான் சுமிகிட்டே சொல்லித் தான்டா ஆகணும்.''

''என்டா அப்படிச் சொல்லுறே?''

''அவ பாட்டுக்கு உன் வசதி பற்றி நிவேதாகிட்டே ஏதாச்சும் உளறிடக் கூடாது இல்லையா?''

''நீ சொல்லுறதும் கரெக்ட் தான்டா.''

''அப்பா, அக்காகிட்டே கூட ஒரு வார்த்தையும் சொல்லாமல் செஞ்சுட்டோமோ?''

''அவகிட்டே நாம அனுமதி கேட்க வேண்டிய தேவை மில்லைப்பா. நாம அவளைக் கட்டிக் கொடுத்ததுக்குப் பின்னாடி தாத்தா சொத்திலே பேத்திக்கும் பங்கு இருக் குன்னு அவர் சொத்திலே பாதியைக் கொடுத்திட்டோம். நானும் அம்மாவும் சம்பாதிச்சதிலேயும் பாதியைக் கொடுத்திட்டோம். ஆனால் அவளும் நம்ம குடும்பத்து உறுப்பினர்ங்கிற முறையிலே அவளுக்கு விஷயம் சொல்லணும். அவ்வளவு தான். மாப்பிள்ளைகிட்டேயும் சொல்லியாகணும்.''

''அவங்கெல்லாம் நிவேதாவைத் தப்பா நினைப்பாங் களா? முதல்ல உங்களுக்கு அப்படி ஏதாச்சும் எண்ணம்...'' என்று அவன் தயங்க,

''அவ நம்ம வீட்டுப் பொண்ணுப்பா. அவளுக்காக நாம செலவழிக்காமல் வேற யாருப்பா செலவழிப்பா? நம்ம கெட்ட நேரம். வேறென்ன சொல்ல. நான் நேற்று நீ ரிஜிஸ்டர் ஆபீஸில் இருந்து போன் பண்ணியதுமே உன் ஜாதகத்தைத் தூக்கிக்கிட்டு ஜோசியரிடம் போனேன். அவர் உனக்கு இப்போ கிரக நிலை சரியில்லைன்னு சொன்னார். சீக்கிரமே நிலைமை சரியாகிடும். இந்த மட்டுக்கும் பணத்தோட போச்சேன்னு நினைச்சுக்கோ'' என்று தேற்றினார்.

* * *

மூன்று மாதங்களுக்கு முன் ராஜீவின் திருமண நாளன்று நடந்ததை நினைத்துப் பார்த்த சுமோத் தன் மனதில்,

'அன்று ரவீந்திரனுக்கு அனைத்தையும் கொடுத்து விட்டு ராஜீவ் இப்படி நூறையும் ஆயிரத்தையும் எண்ணி எண்ணிச் செலவு செய்து கொண்டிருக்கிறான். எங்கே அவளது அப்பா செய்த துரோகம் அவளுக்குத் தெரிந்து விடுமோன்னு பார்த்துப் பார்த்துக் காரியங்கள் செய்கிறான்.

கௌரவம்ன்னு சொல்லி என்னிடம் இருந்தும் எந்த உதவியும் ஏத்துக்க மறுத்துவிட்டான். கொடுத்தே பழகிய கைக்கு வாங்கத் தெரியாது என்பது சரிதான். ஆனால் ஒரு நண்பனா என்னால அவன் கஷ்டப்படுவதைப் பார்க்க முடியலை. இப்பத் தான் நிவேதா அவள் அப்பா வீட்டு நகையை அடமானம் வைச்சது தெரிஞ்சு பதறிப் போய் என்னிடம் பணம் வாங்கி இருக்கான். ஆனால் இவ விஷயம் புரியாமல் அதுக்கும் சண்டை போடுகிறாள்.

ஆனால் அவ கோபத்திலும் நியாயம் இருக்கு தானே!

அவ வாழ்க்கையில் பணக் கஷ்டம் என்ற ஒன்றை நினைச்சுக் கூடப் பார்த்து இருக்க மாட்டாள். ராஜீவை விட அவளுக்கு ஒண்ணுக்கு பத்தாய் கொடுத்துத் தான் பழக்கம். அப்படிப்பட்ட பொண்ணு இந்த அளவு சமாளிப்பதே பெரிய விஷயம். இதுலே கணவன் தன்னை புறக்கணித்து விட்டானோ என நினைத்து கோபப்படுகிறாள். அவளைச் சொல்லியும் குற்றமில்லை.

ம்ம்ம்... அன்று ராஜீவ் அவனது அக்கா இதை எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்று பயந்தான். ஆனால் அவனுக்கும் மேல் அல்லவா அவர்களும் நிவேதாவைத் தாங்குகிறார்கள்! உண்மையிலேயே நிவேதா கொடுத்து வைத்தவள் தான். எத்தனை பேருக்கு அமையும் இப்படி ஒரு நாத்தனார், மாமனார், மாமியார்?' என நினைத்துப் பார்த்த சுமோத் நிவேதாவுடன் கடைக்குச் செல்வதற்காகக் கிளம்ப ஆரம்பித்தான்.

21



அடுத்த அரை மணி நேரத்திற்குள் அவர்கள் வெளியே கிளம்பிச் சென்றனர். நிவேதா தான் வழக்கமாக நகை வாங்கும் கடைக்கு காரை விடச் சொன்னாள். அந்த நகைக் கடையின் முன்னே காரை நிறுத்த இடம் இல்லாததால் சுமோத் தனது காரைச் சற்றே தள்ளி நிறுத்தினான்.

சுமோத் காரில் இருந்து இறங்கி கார் கதவை மூடி விட்டு நிவேதாவைப் பார்க்க அவள் ஒரே இடத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள். 'யாரை இப்படிப் பார்க்கிறாள்?' என அவன் அந்த திசையில் பார்க்க... அங்கே ரவீந்திரன் நின்று கொண்டிருந்தார்.

'அய்யய்யோ சனி என் நண்பனின் வாழ்க்கையிலே இப்படி அடுத்தடுத்து விளையாடுகிறார் போலவே!' என்று நொந்து போனான்.

இத்தனை நாட்களாகப் பாராமல் இருந்த தனது தந்தையை எதிர்பாராமல் சந்தித்ததில் அவள் மனசெல்லாம் மத்தாப் பூவாய் மலர்ந்தது. கண்களில் கண்ணீர் கரை கட்டியது. தனது கணவனின் கட்டளையை மறந்தவளாக, ''டாடி!'' என்று கூவிக் கொண்டே அவர் இருந்த பக்கம் ஓட்டமும் நடையுமாய் செல்ல ஆரம்பித்தாள்.

அவளைத் தடுக்கும் வகை தெரியாது... தடுக்கா விட்டால் பெரிய பிரச்சனையில் வந்து முடியுமே என்ற எண்ணத்தில் அவள் பின்னே சுமோத் ஓடினான். அதற்குள் ரவீந்திரன் மகளைப் பாராது அவரது காரில் ஏறிப் போய்விட்டார்.

அப்பாடா மயிரிழையில் உயிர் தப்பினேன் என்று சுமோத் ஆசுவாசப்பட்டான். அப்பொழுது அவனுக்கு ஒரு போன் வர அதை எடுத்துப் பேச ஆரம்பித்தான். பேசி முடித்த பின் நிவேதாவின் அருகில செல்லலாம் என அவன் பின் தங்கியது தப்பாக போயிற்று.

தனது தந்தையை காண ஓடோடி வந்தவளுக்கு மூச்சு வாங்கியது. அதே இடத்திலே ஏமாற்றம் பரவ நின்ற வளுக்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது. இது நடு வீதி. இங்கே அழக் கூடாது என்று தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டவளின் தோளில் ஒரு கை விழுந்தது.

யாரென்று திரும்பிப் பார்க்க... அங்கே ராதா நின்று கொண்டிருந்தார்!

முகம் கொள்ளாப் பூரிப்புடன், ''அம்மா எப்படிம்மா இருக்கீங்க? நீங்களும் டாடி கூடத் தான் வந்தீங்களா? டாடி ஆபீஸ் போயிட்டாரா? அதான் நீங்க மட்டும் இருக்கீங்களா? டாடி எப்படி இருக்கார்? என்னை எல்லாம் நினைச்சுப் பார்ப்பீங்களா? என்னைப் பற்றி அப்பா ஏதாச்சும் பேசுவாரா?'' என்று அவள் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போக...

அவளை ஒரு விசித்திரப் பார்வை பார்த்துக் கொண் டிருந்த ராதாவைக் கண்டவள், ''என்னம்மா நான் பாட் டுக்குக் கேட்டுக்கிட்டே இருக்கேன். நீங்க பாட்டுக்கு ஒண்ணும் பேசாமலே இருக்கீங்க. உங்களுக்கும் என் மேலே கோபமா?'' என்று மனத் தாங்கலுடன் கேட்டாள்.

ராதா தன் மகளைப் பார்த்து, ''என் மகள் ரோஷக் காரின்னு நான் இத்தனை நாளா நினைச்சுப் பெருமைப் பட்டுக்கிட்டு இருந்தேன். நீ இவ்வளவு ரோஷம் கெட்ட வளா? எப்படி நிவேதா உன்னால உங்க அப்பாவை மன்னிக்க முடிஞ்சது? நானா இருந்தால் அவர் பண்ண

காரியத்துக்கு ஏழேழு ஜென்மத்துக்கும் பகைமை பாராட்டி இருப்பேன்'' என்றாள்.

சரியாக இந்த நேரம் தான் போன் பேசி முடித்த சுமோத் நிவேதா பக்கம் திரும்பினான். திரும்பியவன் ராதாவைப் பார்த்ததும், ''ஐயையோ இவங்க எப்போ வந்தாங்க. இவங்க என்ன செய்யப் போறாங்கன்னு தெரியலையே'' என்று சத்தமாகப் புலம்பிக் கொண்டே அவர்களை நோக்கி வேக நடை போட்டான். ஆனால் அதற்குள் காலம் கடந்திருந்தது.

''அப்படி என்னம்மா பெருசா பண்ணிட்டார்? அவ ருக்குப் பிடிக்காத கல்யாணம் பண்ணினால் இதைக் கூட ஒரு தகப்பன் செய்ய மாட்டாரா?'' என்று தந்தை தன்னிடம் இத்தனை நாட்களாக பேசாது இருப்பதை மனதில் வைத்து நிவேதா கேட்க,

''அதுக்குன்னு இப்படியா? நீ ஒரு பையனை லவ் பண்ணுறது தெரிஞ்சவுடனே உன் பேரிலே சொத்து வாங்கப் போறதா சொல்லி உன்னிடம் வெத்துப் பத் திரத்தில் கையெழுத்து வாங்கிட்டு அதைக் காண்பிச்சு... உன்னைக் கட்டிகிட்ட ஒரே பாவத்துக்காக மாப்பிள்ளை கிட்டேயும், அவர் அப்பாகிட்டே இருந்தும் மொத்த சொத்தையும் எழுதி வாங்கி அவங்களை ஒட்டாண்டி யாக்கி நடுத் தெருவிலே நிறுத்துவார்?''

ராதா இதை சொல்லி முடிக்கவும் சுமோத் வரவும் சரியாக இருந்தது.

''என்னம்மா உளறுறீங்க?'' என்று நிவேதா கேட்டதும்,

''யாரு நான் உளறுறேனா? உன் கழுத்திலே தாலி கட்டி முடிஞ்ச கையோடு மாப்பிள்ளையும் அவர் அப்பாவும் வந்து அவங்களுக்கு சொந்தமான அத்தனை சொத்தையும் உன் அப்பா பேருக்கு மாற்றிக் கொடுத் தாங்களா இல்லையான்னு நீயே கேளு. இதோ

நிக்குறானே சுமோத்... அவனும் தானே அன்னைக்கு வந்து இருந்தான்'' என்று கூறவும்.

'இவங்க சொல்லுவது நிஜமா? என்பது போல் அவனைத் திரும்பிப் பார்க்க அவனால் மறுக்கவும் முடியவில்லை. நண்பனுக்குச் செய்து கொடுத்த சத்தியத்தினால் அவளது பார்வைக்கான பதிலையும் சொல்ல முடியாது தலை கவிழ்ந்தான்.

'இத்தனை நாள் என்னால்... என் காதலினால் என் ராஜ்க்கு துன்பமா? அதுக்குக் காரணம் என் அப்பாவா?' என்று நினைத்தவளின் சிந்தனை அதிலேயே நின்றது. ஏனெனில் அதற்குப் பின்பு அவள் உடல் தொய்ந்து அந்த இடத்திலேயே மயங்கி விழுந்தாள்.

சுமோத்தும் ராதாவும் பதறிப் போய் அவளை உலுக்க அவளிடம் அசைவே இல்லை. அவள் முகத்தில் தண்ணீர் தெளித்துப் பார்த்தும் எந்தப் பயனும் இல்லை.

''ஆன்ட்டி, என் காரைப் பக்கத்திலே தான் நிறுத்தி இருக்கேன். இவளை ஹாஸ்பிட்டல் கூட்டிட்டுப் போயிடலாம். நீங்க வரீங்களா...'' என்று சந்தேகமாகக் கேட்கவும்.

''இப்பவும் நான் தான் இவளுக்கு அம்மா'' என்று சொன்னார்.

இவர்களைச் சுற்றிக் கூடத் தொடங்கிய கூட்டத்தை விலக்கிவிட்டு அவளைத் தூக்கிக் கொண்டு காரினுள் ஏற்றி மருத்துவமனை நோக்கி விரைந்தான்.

மருத்துவமனையில் அவளை மருத்துவர்கள் பரிசோதிக்க ஆரம்பித்ததும் ராஜீவிற்கு போன் செய்து தகவல் தெரிவிக்கலாமா என ஒரு நொடி யோசித்தான். எப்படியும் மதியம் அவனே வந்து விடுவான். அதற்குள் அவனைக் கலவரப்படுத்த வேண்டாம் என எண்ணிய சுமோத் தனது நண்பனுக்கு நிவேதாவின் உடல் நிலை பற்றி எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை.

அவன் நினைத்ததற்கு மாறாக ராஜீவ் அழைத்திருந்தான்.

''என்னடா ராஜீவ் நீ இந்நேரம் ஃபிளைட்டுக்குள்ளே தானேடா இருக்கணும். ஃபிளைட்டிலே செல்போன் ஸ்விட்ச் ஆஃப் பண்ணச் சொல்லலையா?''

''இல்லைடா. இந்த ஃபிளைட்டிலே மினிஸ்டர் ஒருத்தரும் டிராவல் பண்ணப் போறாராம். அவர் இன்னும் வந்து சேரலை. அதனால ஃபிளைட்டை எடுக்க மாட்டேங்குறாங்க. ஃபிளைட் டிலே ஆகுது. அங்கே எதுவும் பிரச்சனை இல்லையே?''

நண்பனின் சில மணி நேர மன நிம்மதிக்காக, ''இல்லைடா'' என்று பொய்யுரைத்தான்.

''நிவேதா பக்கத்திலே இருக்காளா?''

''ஆமாடா.''

''அவகிட்டே போனைக் கொடேன். அவ என்கூட நேற்று முழுசுமே பேசலைடா. என்னமோ எனக்கு மனசுக் கஷ்டமா இருக்கு'' என்று பரிதவித்தான்.

தன் உணர்வு இல்லாமல் இருப்பவளிடம் போனைக் கொடுத்து எப்படிப் பேசச் சொல்லுவது? அவளை மயக்கத்தில் இருந்து தெளிய வைக்கத் தான் மருத்துவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லவும் முடியாமல் சுமோத் மௌனிக்க...

''என்னடா என் கூடப் பேசச் சம்மதிக்க மாட்டேங்குறாளா?'' என்று அவனாகவே கேள்வி கேட்டதும்,

சுமோத்தை அதையே ஆமோதித்து, ''நீ நேரிலே வாடா. எல்லாத்தையும் சரி பண்ணிடலாம்'' என்று கூறி ஆறுதல்படுத்தினான்.

ராஜீவிடம் பேசிவிட்டு ராதாவின் அருகில் சென்றான்.

''என்ன ஆன்ட்டி ஏதாச்சும் முன்னேற்றம் தெரியுதா?''

"ஒண்ணும் தெரியலைப்பா. இன்னும் டாக்டர் யாரும் வெளியே வந்து ஒண்ணும் சொல்லலை. போனிலே யாருப்பா?"

"ராஜீவ் தான் பேசினான். ஆன்ட்டி."

"அவர்கிட்டே விஷயம் சொன்னியா?"

"இல்லை ஆன்ட்டி. இவ அவன்கிட்டே சொல்லாமல் மதுரைக்குக் கிளம்பிவிட்டாள். எதுவும் பிரச்சனை வரக் கூடாதுன்னு பயந்து அவன் ஏற்கனவே இங்க தான் வந்துக்கிட்டு இருக்கான். நேரிலேயே விஷயம் சொல் லிக்கலாமேன்னு தான் விட்டுட்டேன். அதுக்குள்ளே இவ மயக்கம் தெளிஞ்சு எழுந்துட்டாள்ன்னா பிரச்சனை இல்லை."

"அதுவும் சரி தான். சரி இவளுக்கு இத்தனை நாளும் இந்த விஷயம் தெரியாதா சுமோத்?"

"ஆமா ஆன்ட்டி. நாங்க ராஜ் மிடில் கிளாஸ் ஃபேமிலியைச் சேர்ந்தவன். அவனிடம் சொத்து எதுவும் கிடையாதுன்னு சொல்லி வைச்சிட்டோம்."

"காதலிக்கும் போது மாப்பிள்ளையைப் பற்றி அவள் விசாரிக்கவே இல்லையா?" என்று ஆச்சரியமாக ராதா கேட்க,

"அவளுக்கு ராஜ் மேலே அபிப்ராயம் வந்ததுமே என்னிடம் வந்து அவனது குணம் பற்றி விசாரித்தாள். நான் அவன் குணத்தைப் பற்றி சொல்லிவிட்டு அவன் வசதியானவன் தான். ஆனால் உன்னளவுக்குக் கிடை யாதுன்னு சொல்ல நினைச்சு வசதின்னு தொடங்கின துமே, அது எனக்குத் தேவையில்லைன்னு சொல் லிட்டுப் போயிட்டாள்" என்றான்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது மருத்துவர் வெளியே வந்தார். இவர்கள் ஆவலும் பதட்டமுமாக அவர் முகம் பார்க்க,

"நத்திங் டு வொரி. அதிர்ச்சியினால தான் மயக்கமாகி இருக்காங்க. இப்போ மயக்கம் தெளிஞ்சுடுச்சு. ஒரு பாட்டில் டிரிப்ஸ் மட்டும் ஏத்தினதும் கிளம்பலாம். ஒரு ஒன்றரை மணி நேரம் ஆகும். அடுத்த செக்-அப்..." என்று அவர் தொடங்கவுமே,

"அவள் ஹஸ்பெண்டே ஒரு சர்ஜன் தான் டாக்டர். இப்போ இங்கே தான் வந்துக்கிட்டு இருக்கார்" என்று சுமோத் சொன்னதும்,

"ஓ! அப்படின்னா பிரச்சனை இல்லை. அவரே பார்த் துக்குவார். டேக் கேர்!" என்று சொல்லி அவர் அகன்றார்.

இவர்கள் நிவேதா அருகே சென்றதும் அவள் இரு வரையும் பார்த்து, "இப்பவாச்சும் என்னிடம் மறைக் காமல் என்ன நடந்துச்சுன்னு விஷயம் சொல்லுங்க" என்றதும்,

சொல்வதா வேண்டாமா என இருவருமே தயங்க...

"அது தான் எனக்குத் தெரிய வேண்டிய முக்கிய விஷயம் தெரிஞ்சிடுச்சே! மீதிக் கதையை தானே கேட் கிறேன். சொல்லுங்க. அதைக் கேட்பதால் எனக்கு ஒண்ணும் ஆகிடாது" என்றாள்.

சுமோத் மெதுவான குரலில் அன்று நடந்தது அனைத்தையுமே சொல்லி முடித்தான்.

"என்கிட்டே ஏன் மறைச்சாராம்" என்று தன் கணவன் பற்றி சந்தேகம் கேட்டவளிடம் அன்று ராஜீவ் தன்னிடம் கூறிய காரணத்தை சுமோத் சொன்னதும்,

"இருக்கலாம்... அன்னைக்கு இருந்த நிவேதாக்கு அவ அப்பா மட்டுமே பிரதானமா இருக்கலாம். ஆனா இப்போ இருப்பவளுக்கு அவ ஹஸ்பண்ட் மட்டும் தான் முக்கியம். அதனால தான்... என்னாலயா என் ராஜ்க்கு பிரச்சனை அப்படின்னு நினைச்சு தான் என் மனசு கிடந்து

அடிச்சிக்குது'' என்று சொன்னவள் கண்களை மூடிக் கொண்டு அமைதி காத்தாள்.

அவளுக்கு டிரிப் இறங்கி முடிக்கும் தருவாயில் அவர்கள் பில்லைக் கொண்டு வந்து நீட்ட... அதை வாங்க ராதா கை நீட்டினார். ஆனால் அதற்கு முன்பே சுமோத் அதைக் கைப் பற்றியிருந்தான்.

''என்கிட்டே தா சுமோத். நான் போய் கட்டிட்டு வரேன்'' என்று ராதா சொன்னதும்,

'ராதாவைப் பணம் கட்ட சம்மதித்தால் ராஜீவ் என்ன சொல்லுவானோ? அவனுக்கு சம்மதம் இல்லாத செயலை நான் எப்படி அனுமதிப்பது? ஆனால் கேட்பது நிவேதாவின் தாயார். அவளுக்கு ரத்த சொந்தம். எப்படி மறுப்பது?' என்று சுமோத் விழித்துக் கொண்டிருக்கும் போதே,

நிவேதா தன் வாய் திறந்து, ''அம்மா, சுமோத் அண்ணாவே போய் பணம் கட்டிட்டு வரட்டும்'' என்று கூறிவிட்டாள்.

சுமோத் நிம்மதியாக உணர்ந்தான். ராதா மனதில் அடி வாங்கினார். அவரது மனம் அழுதது. தகப்பனுக்கும், மகளுக்கும் இடையில் வழக்கம் போல் தனது தாய் பாசம் தான் அல்லல்படுவது புரிந்து மனதுக்குள் வருந்தினார்.

மதுரை விமான நிலையத்தில் வந்து இறங்கிய ராஜீவ் தன் தந்தையின் கைப்பேசிக்கு அழைத்தான்.

''அப்பா, நான் ஒரு வேலையா மதுரை வந்திருக்கேன். முடிஞ்சா ஊருக்கு வரேன். இல்லைன்னா இப்படியே சென்னைக்குப் போயிடுவேன்.''

''சரிப்பா. நீ உன் தோதுப்படி பார்த்துக்கோ. முடிஞ்சா வா. நாம இப்பத் தானேப்பா அக்கா வீட்டு விசேஷத்திலே பார்த்தோம். அதனால நீ வந்த வேலையை கவனி'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தார்.

மகன் தன்னிடம் சொல்லக் கூடிய விஷயம் என்றால் சொல்லியிருப்பான் என நினைத்த சுந்தரம் அவன் மதுரை வந்த காரணத்தைக் கேட்காது விட்டார்.

விஷயம் என்னவென்று தனக்கேத் தெளிவாகத் தெரியாத போது வயதானவரிடம் எதையும் சொல்லி அவர் மனநிலையைக் கெடுப்பானேன் என நினைத்தே ராஜீவ் தனது தந்தையிடம் எதுவுமே சொல்லாமல் தனது மதுரைப் பயணத்தைப் பற்றி மட்டுமே சொல்லிவிட்டு வைத்தான்.

மருத்துவமனையில் அவர்கள் மூவரும் ரிசப்ஷன் அருகே வரும் போது ராஜீவ் சுமோத்தின் கைப்பேசிக்கு அழைத்தான்.

''டேய் சுமோத் நான் உன்கிட்டே பேசிட்டு வைச்சவுடனே மினிஸ்டர் வந்திட்டார்ன்னு ஃபிளைட் கிளம்பிடுச்சு. நீ அனுப்பிய காரிலே நான் ஏறி வந்துகிட்டு இருக்கேன். நேரா நான் வீட்டுக்கே வந்திடவா?'' என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே சுமோத்தை கடந்து சென்ற இரண்டு வார்டு பாய்கள் ஆபரேஷன் பற்றி ஏதோ பேசிக் கொண்டே போக...

ஒரு மருத்துவனான ராஜீவிற்கு சுமோத் தற்சமயம் மருத்துவமனையில் இருக்கிறான் என்ற விஷயம் உடனே புரிபட்டது.

''ஹாஸ்பிட்டல் வந்திருக்கியாடா சுமோத்?'' என்று கேள்வி எழுப்பினான்.

என்ன சொல்லுவது என்று சுமோத் சிந்திக்க எடுத்துக் கொண்ட சில நொடிகளில் ராஜீவே தனது அடுத்த கேள்வியாக,

''யாருக்காச்சும் உடம்பு சரியில்லையா?'' என்று கேட்டான். சுமோத் பதில் சொல்லும் முன்பே, ''நிவியா?'' என்று பதட்டத்துடன் அடுத்த கேள்வி வந்தது.

சுமோத், ''ம்ம்ம்'' என்று சொன்னதும்,

''எ... ன்... னா... ச்சு... டா?'' என வினவினான். இந்த ஒற்றை வார்த்தையை உதிர்ப்பதற்கே அவன் பெரும் பாடுபட்டுப் போனான்.

சுமோத் மெதுவான குரலில் நடந்த அனைத்தையும் தன் நண்பனிடம் பகிர்ந்தான்.

''தெரிஞ்சிடுச்சா? இப்போ எப்படி இருக்காள்?'' என்று ஒரு கணவனாக கேள்வி கேட்டவன், அதன் பின்னே ஒரு மருத்துவனாய், ''அவ BP எவ்வளவு இருந்துச்சு? என்னவெல்லாம் டெஸ்ட் பண்ணிப் பார்த்தாங்க?'' என்று கேட்க ஆரம்பித்தான்.

ஆனால் எந்த ஒரு கேள்விக்கும் சுமோத் பதில் அளிக்கும் முன், ''நான் அவகிட்டே பேசியே ஆகணும். நீ அவளிடம் போனைக் கொடு...'' என்று சொல்லத் தொடங்கியவன், ''இல்லையில்லை வேண்டாம். நானே அவ மொபைலுக்குக் கூப்பிட்டுக்கிறேன்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

ராஜீவ் வழக்கத்திற்கு மாறாக படபடப்பாக இருப்பது சுமோத்திற்குப் புரிந்தது. 'நல்லவேளை அவன் கார் ஒட்ட வேண்டிய அவசியம் இல்லாமல் டிரைவரை அனுப்பி இருக்கிறேன். அவன் இந்த நிலையில் வண்டி ஒட்டுவதென்பது ஆபத்தான ஒரு விஷயம்' என நினைத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

நிவேதாவின் கைப்பேசி அடிக்கவும் அவள் அதை எடுத்துப் பார்த்தாள். கணவனின் எண் ஒளிரவும் பேசாமல் இருந்தாள். அவளருகே வந்த சுமோத்,

''நிவேதா போனை எடுத்துப் பேசு. அவன் ரொம்ப படபடப்பா இருக்கான். உன் குரலைக் கேட்டால் தான் அமைதியாவான்'' என்று எடுத்துரைத்தான்.

நிவேதா கைப்பேசியை இயக்கிக் காதில் வைத்து, ''ஹலோ'' என்றதும் அவன் அழைத்த ''நி... வி'' என்ற அழைப்பு அவள் உயிர் வரை சென்று தாக்கியது.

அவளுக்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது. கணவனிடம் பேசினால் எங்கே அழுதுவிடுவோமோ என பயந்தவளாய், ''நான் நல்லா தாங்க இருக்கேன். நீங்க நேரிலே வாங்க. பேசிக்கலாம்'' என்று சொல்லி அந்த அழைப்பைத் துண்டித்தாள்.

அருகில் இருப்பவர்களை நிமிர்ந்து பாராமல் தன் கண்ணோரம் துளிர்த்த நீரை தனது கைக் குட்டையால் துடைத்துக் கொண்டாள். அவளது மனநிலை அவர்களுக்கு நன்றாகப் புரிந்தது.

மறுபடியும் சுமோத்திற்கு ராஜீவ் அழைத்தான்.

''நிவி அழறாளாடா?''

''ஆமாடா. ஆனால் பொது இடம்ன்னு தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கிட்டு இருக்காடா.''

''அவளைப் பார்த்துக்கோடா. நான் இன்னும் கொஞ்ச நேரத்திலே அங்கே வந்திடுவேன்.''

''ராஜீவ் நீ போனைக் கட் பண்ணாதே. எனக்கு என்னவோ இவ என் வீட்டுக்கு வருவாள்ன்னு தோணலை. ஒரு வேளை அவ அப்பாவைப் பார்க்கப் போனாலும் போவாள். அதை உன்கிட்டே என்னைச் சொல்ல விடாமல் தடுத்தாலும் தடுப்பாள். அதனால லைனைக் கட் பண்ணாமல் கொஞ்ச நேரம் அமைதியா இரு'' என்று சொன்னான்.

ராஜீவ் சம்மதம் சொன்னதும் நிவேதாவின் அருகே சென்று, ''போகலாமா நிவேதா?'' என்று கேட்டு அவளை கார் நிறுத்திய இடத்திற்கு அழைத்துச் சென்றான்.

சுமோத் ராதாவைப் பார்த்து, ''உங்களுக்கு கார் வருமா? இல்லை டாக்ஸி பார்க்கணுமா?'' என்றான்.

நிவேதா அவரை முந்திக் கொண்டு, ''அண்ணா, நாம இப்போ இவங்க வீட்டுக்குத் தான் போகப் போறோம். அதனால அவங்க நம்ம கூடவே வரணும்ன்னா வரட்டும்'' என்றாள்.

'நாம நினைச்சது சரியாப் போச்சு!' என்று சுமோத்தும், 'இவங்க வீடுன்னு சொல்லுறாளே ஏன் அது அவ வீடு இல்லையா?' என்று ராதாவும் நினைத்துக் கொண்டார்கள்.

''உடனே இந்த தகவலை உங்க பிரண்டுகிட்டே ஒலிபரப்பணும்ன்னு தோணுமே!'' என்று இடக்காகக் கேட்டவள் அவன் அமைதியாகப் பார்க்கவும், ''நீங்க ஒண்ணும் சொல்லத் தேவையில்லை. வண்டியை எடுங்க!'' என்று சொல்லி காரில் ஏறி அமர்ந்தாள்.

தனது தாயைப் பார்த்து, ''உங்க ஹஸ்பண்டுக்கு போன் பண்ணி அவரை வீட்டுக்கு வரச் சொல்லுங்க. என்னைப் பற்றி ஒன்றும் சொல்ல வேண்டாம்'' எனத் தன் தாயிடம் அடுத்த உத்தரவைப் பிறப்பித்தாள். ராதாவும் அவ்வாறே காரணம் சொல்லாமல் ரவீந்திரனை வீட்டிற்கு வரும்படி அழைத்தார்.

அவளது முடிவினைத் தெளிவாகக் கேட்ட ராஜீவ் தனது கைப்பேசியை அணைத்தான். டிரைவரிடம் சொல்லி காரை நிவேதாவின் வீட்டிற்குத் திருப்பினான்.

காரில் பயணிக்கும் போது, ''நான் ஒரு குட்டிக் கதை கேள்விப்பட்டிருக்கிறேன். அதை இப்போ சொல்லுறேன் கேளுங்க'' என்று நிவேதா சொல்லத் தொடங்கினாள்.

''ஒரு ராஜா முனிவர் ஒருவரைப் பார்க்கச் சென்றாராம். அப்போ அந்த முனிவர் ரெண்டு ஓலைச் சுவடிகளில் எதையோ எழுதி இரு பெட்டிகளில் வைச்சுப் பூட்டி அந்த ராஜாவிற்கு பரிசளித்தாராம்.

'உனக்கு உன் வாழ்க்கையில் சமாளிக்க முடியாத துன்பம் வரும் போது இந்தப் பெட்டியைப் பிரித்துப் பார். அதே மாதிரி நீ அதீத சந்தோஷத்தில் திளைக்கும் போது இந்தப் பெட்டியை எடுத்துப் பார்' என்று அடுத்த பெட்டியைச் சுட்டிக் காட்டினாராம்.

ராஜாவும் அப்படியே செய்கிறேன்னு சொல்லி அதை வாங்கிச் சென்றாராம். அடுத்த மாதம் போர் மூண்டது. அவனது மக்கள் அனேகம் பேர் மாண்டு போயினர். ராஜாவிற்கு தான் தோற்கப் போவது உறுதி என்று தோன்ற ஆரம்பித்துவிட்டது. அப்பொழுது முனிவரின் பரிசு ஞாபகம் வந்து அவன் அதைத் திறந்து பார்த்தானாம். அந்த ஓலையிலே 'இதுவும் கடந்து போகும்!' அப்படின்னு எழுதி இருந்துச்சாம்.

இந்தத் துன்பமும் கடந்து போகும்ன்னு புரிஞ்சுக்கிட்ட ராஜா தனது மன தைரியத்தைத் திரட்டி அந்த போரிலே வென்றானாம். நாடே விழாக் கோலம் பூண்டிருந்தது. ராஜாவை வரவேற்க ஊரே திரண்டிருந்தது. ராஜாவிற்கு சந்தோஷம் தாங்கவில்லை. அப்பொழுது முனிவரின் அடுத்த பரிசு பற்றி ராஜாவிற்கு ஞாபகம் வந்தது. ராஜா அந்த ஓலை சுவடியை எடுத்துப் பார்க்க அதிலும் 'இதுவும் கடந்து போகும்!' என்று இருந்துச்சாம். அப்போ இந்த சந்தோஷம் கூட நிலையானது இல்லைன்னா எதற்கு இந்த ஆர்ப்பாட்டம், ஆடம்பரம்ன்னு ராஜாவிற்கு தோணுச்சாம். அதனால அன்றிலிருந்து பகட்டான வாழ்க்கையைத் துறந்தாராம்.

இந்தக் கதையைச் சொன்னவங்க இந்தக் கதை மூலமா வாழ்க்கையிலே நமக்கு எதுவுமே நிரந்தரமானது இல்லைன்னு கருத்து சொன்னாங்க. எனக்கு அன்னைக்கு

அவ்வளவு தெளிவா விளங்கலை. ஆனா அதுக்கான அர்த்தம் இப்போ தெளிவா விளங்குது.

அன்னைக்கு நான் அனுபவிச்ச வசதியும் நிரந்தரமானது இல்லைன்னும் புரிஞ்சு போச்சு. அதே மாதிரி எங்க வீட்டிலே என்னிடம் காட்டிய பாசமும் கூட நிரந்தரமானது இல்லைன்னு ஆகிப் போச்சு இல்லே? என்று கேட்டாள்.

எந்தக் கவலையும் இல்லாமல் பறந்துக்கிட்டிருந்த பெண் தத்துவமாய் பேசவும் ராதா மனம் வருந்தினார். இத்தனைக்கும் காரணம் தன் கணவர் தானே என்று அவரது மனம் அவரைச் சாடியது. எதற்கு அளவுக்கு அதிகமாகப் பாசத்தைப் பொழிய வேண்டும்? இப்போ எதற்கு இப்படித் தள்ளி வைக்க வேண்டும் என்று நினைத்து விரக்திப் புன்னகை புரிந்தார்.

22



கார் அவளது வீட்டைச் சென்று அடையவும் ராதா பரபரப்புடன் தனது மகளைப் பார்த்து, ''வாடாம்மா!'' என்று ஆசை பொங்க அழைத்தார்.

''நான் உங்க வீட்டுக்கு உறவாட ஒண்ணும் வரலை. நீங்களே சொன்ன மாதிரி நான் ரோஷக்காரி தான். உங்க வீட்டுக்காரர்கிட்டே கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. அவர் கார் வாசலிலே நிக்குது. வந்துட்டார் போல. போய் அவரை ஹாலுக்கு வரச் சொல்லுங்க.''

அவளது தாய் அரக்கப் பரக்க வீட்டிற்குள் நுழைய... நிவேதா அவரை நிதானமாய் பின் தொடர்ந்தாள்.

அங்கே அன்றொரு நாள் சென்னையில் பீனிக்ஸ் மாலில் இருந்து ராஜீவ் தன்னைக் கூட்டிக் கொண்டு சற்றிய கருப்பு நிற ஹூண்டாய் வெர்னா கார் நிற்கக் கண்டாள்.

''என்னிடம் கார் இல்லையேம்மா. பைக் மட்டும் வாங்கியதாகத் தானே நேத்து சொன்னேன்.''

தங்களது திருமணத்திற்குப் பின் அவனது கார் பற்றிக் கேட்டபொழுது கணவன் கூறிய வார்த்தைகள் மனதில் ரீங்காரமிட்டன. தனது கண்களை இறுக மூடித் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்தினாள்.

வாசலில் கார் வந்து நிற்கும் ஓசையைக் கேட்ட ரவீந்திரன் தனது அலுவலக அறையில் இருந்து வெளியே வந்தார். வந்தவர் தனது மகளைக் கண்டதும் 'கோயம் புத்தூரில் இருக்க வேண்டியவள் இங்கே எங்கே வந்தாள்?' எனக் குழம்பினார். நிவேதா வீட்டை விட்டுப் போனாலும் அவர் தன் மகளின் அன்றாட நடவடிக்கைகளை ஆள் வைத்து கவனித்துக் கொண்டு தான் இருந்தார்.

அப்பொழுது தான் மகளின் வாடிய தோற்றம் கண்ணில் பட்டது. அவளது கையில் ட்ரிப்ஸ் ஏற்றியதற்கு அடையாளமாக சொருகப்பட்டிருந்த வென் ஃப்ளானைக் கண்டவர், ''என்னடா குட்டிம்மா ஆச்சு?'' என்று பதறியவராய் அவளருகே ஓடி வந்து அவளது கையைப்பற்ற,

அவரது கையை உதறியவள், ''நான் எப்பவுமே வெளி ஆண்களை என்னைத் தொட அனுமதிப்பதில்லை'' என்றாள்.

அவளது கூற்றில், ''கு... ட்... டி... ம்... மா...'' என்று ரவீந்திரன் அதிர்ந்து போய் நின்றுவிட்டார்.

இது அவள் தனது தந்தைக்குக் கொடுத்த முதல் அடி.

"நான் மிசஸ் ராஜீவ். உங்ககிட்டே சில விஷயம் பேச வந்தேன். சரி நான் அப்பாயின்மென்ட் எதுவும் வாங்கலை. இப்போ உங்களுக்கு டைம் இருக்குமா? பேசலாமா?"

மகள் தந்த அதிர்ச்சியில் இருந்து தன்னை மீட்டுக் கொண்டவர், "சோபாவிலே உட்கார்ந்து பேசுடா" என்றார்.

"அன்னைக்கு என் ஹஸ்பண்ட் வந்தப்போ நீங்க உட்கார வைச்சுப் பேசுனீங்களா?" என்று கேட்டவள் பதிலை சமோத்திடம் இருந்து எதிர்பார்த்து அவனைத் திரும்பிப் பார்க்க... அவன் அவளது பார்வையைத் தவிர்க்க வேறு புறம் தலையைத் திருப்பினான்.

"சோ உட்காரச் சொல்லலை! அப்போ எனக்கு மட்டும் என்ன வரவேற்பு வேண்டிக்கிடக்கு?" நானும் நின்னுக்கிட்டே பேசுறேன்."

சரியாக இந்த நேரத்தில் தான் ராஜீவ் வந்து சேர்ந்தான். வந்தவன் ஒசை எழுப்பாது தனது நண்பன் அருகில் நின்று கொண்டு நடப்பதை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

"உங்க பிசினஸில் நான் ஏதோ நஷ்டம் ஏற்படுத்திக் கொடுத்துட்டேன்னு சொன்னீங்களாம். அது என்னென்னு விசாரிச்சுட்டுப் போகலாம்ன்னு தான் வந்தேன்."

"இல்லைடாம்மா... அது..." என்று தொடங்கியவரை கைக் காட்டித் தடுத்தவள்.

"நீங்க சொல்லுறதை எல்லாம் நம்புறதுக்கு நான் ஒண்ணும் அப்பாவி சுந்தரம் வாத்தியாரோ இல்லை அவர் பையன் ராஜீவோ இல்லை. என்னை வளர்த்தவர்

பிசினஸிலே கரை கண்டவர்னு சொல்லுற ரவீந்திரன். அவர் எனக்கு நல்ல விஷயங்களைச் சொல்லிக் கொடுத்ததை விட பிசினஸிலே ஏற்படுற ஒட்டைகளையும், அதை அடைக்குற வழிகளையும் தான் நிறைய சொல்லிக் கொடுத்தார். நீங்க எட்டடி பாஞ்சுட்டீங்க. நான் பதினாறு அடி பாய்ந்து காட்டட்டுமா?

உங்க மேல கேஸ் போட்டு எங்க வீட்டுக்காரர் சொத்தை மீட்கட்டுமா? இல்லை உங்களை மாதிரியே தந்திரமா எழுதி வாங்கட்டுமா?

நீங்க ஒரு விஷயத்தை மறந்துட்டீங்க. நீங்க ஊரிலே இல்லாத சமயத்தில் செக்-புக்கில் முதற் கொண்டு உங்க கையெழுத்தை நான் தான் போடுவேன். இப்போ போடட்டுமா? அதுவும் பத்திரப் பேப்பரிலே? உங்க அத்தனை சொத்தையும் எழுதிக்கட்டுமா? உங்களை நடுத் தெருவிலே நிக்க வைக்கட்டுமா?

என்னடா இவ நம்ம மேல கேஸ் போடாமல் உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்காளே... அது நம்ம மேலே உள்ள பாசத்துல அப்படின்னு தப்புக் கணக்குப் போட்டுடாதீங்க. கேஸ் போட்டால் இழுத்துக்கிட்டு போகும். உங்களுக்கேத் தெரியாமல் தந்திரமா இந்த வேலையைச் செஞ்சு இருப்பேன். ஆனால் இப்ப கொஞ்ச நாளா ஒரு நல்ல மனுஷன் கூட வாழ்ந்துட்டேனா... அதான் நாமளும் தந்திரமா செயல்படணுமான்னு யோசிக்குறேன்.

ஆனா அப்படித் தான் அவர் சொத்தை மீட்கணும் ஒரு நிலை வந்தால் அதுக்கும் தயங்க மாட்டேன். எந்த எல்லைக்கும் போக நான் தயார்" என்று பெண் புலியெனத் தன் தந்தையிடம் பாய்ந்தாள்.

ரவீந்திரன் தனது அறைக்குள் சென்று மறைந்தார்.

ரவீந்திரன் மருத்துவமனையில் படுத்திருந்த போது தனது மகளைப் பார்க்கவும் ஏங்கினார். அருகிலிருந்து மருமகனைப் பார்த்துப் பார்த்துச் செய்த தப்பிற்காகவும் வருந்தினார். 'எங்களுக்கு வசதி இல்லை. அதனால் குழந்தைப் பேற்றை ஒத்தி வைத்திருக்கிறோம்' என்று ராஜீவ் சொல்லிச் சென்றதும் உள்ளுக்குள் பொடிப் பொடியாக நொறுங்கிப் போனார்.

நானா? நானா என் குலம் தழைக்கத் தடையாய் இருக்கிறேன். என்னுடைய வறட்டுப் பிடிவாதமா காரணம் என்ற நினைப்பு அவரை நிம்மதியில்லாமல் அலைக் கழித்தது. நிவேதா இன்று விஷயம் தெரிந்து வராமல் போயிருந்தாலும் அவரே வந்து அவர்களிடம் எல்லா வற்றையும் ஒப்படைப்பதாய் தான் இருந்தார்.

அதனால் மகளிடம் வாதாடாமல் எல்லாவற்றையும் தூக்கிக் கொடுக்க நினைத்தவர் பணத்தைப் பெட்டியில் வைத்து அதிலேயே பத்திரங்கள் மற்றும் வீட்டு சாவி என எல்லாவற்றையும் வைத்துப் பூட்டிக்கொண்டு வந்து கொடுத்தார். கார் சாவியை மட்டும் கையிலே கொடுத் தார்.

அவரிடம் இருந்து அனைத்தையும் பெற்றுக் கொண் டவள், "அவரோட வீடு சும்மா தான் இருக்கா? இல்லை வாடகைக்கு விட்டிருக்கீங்களா? ஏன் கேட்குறேன்னா நீங்க பக்கா பிசினஸ் மேன். எல்லாத்தையும் காசாக்கத் தானே பார்ப்பீங்க."

மகளின் குத்தல் பேச்சு மனதை வருத்திய போதும் அவளது கேள்விக்கான பதிலாய், "வாரா வாரம் ஆள் வைச்சுக் க்ளீன் பண்ணிக்கிட்டு தான் இருக்கேன். இன்னொரு சாவி அங்க ஒருத்தரிடம் இருக்கு. நீ ஊருக்குப் போகும் முன்னாடி இன்னொரு முறை க்ளீன் பண்ணச் சொல்லுறேன் குட்டிம்மா" என்றார்.

அவள் அதற்கு பதில் ஒன்றும் சொல்லாது அமைதி யாக இருக்க தன்னை நியாயப்படுத்த முனைபவராய், "குட்டிம்மா அப்பா உன் மேலே வைச்சப் பாசத்திலே தான்டா இப்படி செஞ்சுட்டேன். நீ எப்படி என்னை விட் டுட்டுப் போகலாம்ங்கிற கோபம்" என்று சொன்னதுமே, நிவேதா வெகுண்டாள்.

"என்னது பாசமா? இதுக்குப் பேரா பாசம்? பாசம்னா உங்களுக்கு என்னன்னு தெரியுமா?

நீங்க செஞ்சு வைச்ச வேலையால... இருக்க வீடு இல்லாம ராஜ் வாடகை வீடு தேடி அலைஞ்சார். வாடகை வீடு கிடைக்குற வரைக்கும் என்னை சென்னைக்குக் கூட்டிக்கிட்டுப் போக முடியாமல் என்னை ஊரிலேயே விட்டுட்டுப் போனார். அந்த ஊரிலே இருக்க முடி யாமல்... இல்லையில்லை... சரியாச் சொன்னால் இருக்கப் பிடிக்காமல் நான் முகத்தைத் தூக்கி வைச்சுக் கிட்டு அலைஞ்சேன். இதுக்குக் காரணம் நீ தானே என்று அப்போ என்னைப் பார்த்து ஒரு வார்த்தை கூட சொல்லாமல் இருந்தாங்களே என் மாமனார் மாமியார்... அவங்க என் மேலே வைச்ச அன்புக்குப் பேரு தான் பாசம். அப்போ மட்டுமில்லை இன்னைக்கு வரைக்கும் இந்த சொத்து விஷயமா அவங்க ஒரு வார்த்தை கூட சொன்னதில்லையே?!

இதோ நான் இன்னைக்கு போட்டு இருக்கிற எல்லா நகையும் அவங்க நகையை அழிச்சுச் செஞ்சதுதானே! இது விஷயமா ஒரு வார்த்தை என்னிடம் சொல்லி யிருப்பாங்களா?

அப்புறம் ராஜ்..." என்று ஆரம்பித்தவள் தன்னை நினைத்தே ஒரு இகழ்ச்சி புன்முறுவல் புரிந்தவள் சில நொடிகள் கண் மூடி அமைதி காத்தாள்.

"கொஞ்சமாவா நான் அவரைப் படுத்தினேன். வசதிக் குறைவினால் எங்களுக்கு இடையே எத்தனையோ பிரச்சனைகள் வந்தபோதும்... ஒரு முறை கூட என்னோட இந்த நிலைமைக்கு நீ தான் காரணம் என்று அவர் சொன்னதே இல்லை தெரியுமா? அவர் என் மீது வைச்சதுக்குப் பேரு தான் பாசம்.

நீங்க என் மேலே பாசம் வைக்கலை. இவ நம்மளை விட வேற யாரையும் பெருசா நினைக்கக் கூடாதுன்னு நினைச்சீங்க. ஒரு வாத்தியார் குடும்பத்துக்கிட்டே நாம தோத்துப் போறதான்னு நினைச்சீங்க. உங்க ஈகோ அடிபடக் கூடாதுன்னு பார்த்தீங்க. அவ்வளவு தான். உண்மையிலேயே உங்க பொண்ணு மேலே உங்களுக்குப் பாசம் இருந்திருந்தால் அவ நல்லா இருக்கணும்னு தான் யோசிச்சு இருக்கணும். அதை விட்டுட்டு வாழப் போன இடத்திலே எல்லோர் கூடவும் சண்டை போட்டுட்டு உங்களிடம் திரும்பி வரணும் அப்படின்னு யோசிச்சு இருக்கக் கூடாது.

அது கூட ஒரு வகையான சாடிஸம் தானே?

உங்ககிட்டே பேசினால் எனக்கு விஷயம் தெரிஞ்சிடும்னு நினைச்சு உங்ககிட்டே என்னைப் பேச விடாமல் தடுக்குறதுக்காக ராஜ் என்னிடம் உனக்கு நான் முக்கியமா இல்லை உங்க அப்பாவான்னு கேட்பார். அப்போ எல்லாம் நான் நினைப்பேன்... அவர் சரியான மேல் சாவனிஸ்ட்டுன்னு. இப்போ இல்ல தெரியுது. அவர் சாவனிஸ்ட் இல்லை. நீங்க தான் சாடிஸ்ட்டுன்னு.

என் ராஜ் என்ன தப்புப் பண்ணினார்ன்னு அவரைத் தண்டிக்க நினைச்சீங்க? உங்களை எதிர்த்தான்னா? ஒரு பொறுப்புள்ள பிரஜையா இருங்கன்னு சொன்னது ஒரு குத்தமா? அதுக்காக உடனே அவரைப் பழி வாங்கக் கிளம்பிடுவீங்களா?

ரெண்டாவது காரணம் அந்தஸ்து. பணம்... அது மட்டுமே வாழ்க்கை இல்லையே. இதோ மூணு மாசமா உங்க பணம் இல்லாமல் நான் சந்தோஷமாத் தானே இருந்தேன். என் வீட்டுக்காரர் சொத்தை எல்லாம் நிமிஷத்திலே சம்பாதிச்ச நீங்க இந்த மூணு மாசமா நிம்மதியா ஒரு வேளை சாப்பாடு சாப்பிட்டு இருப்பீங்களா? அப்படி நீங்க சாப்பிட்டு இருந்தா மனுஷனா நீங்க பிறவி எடுத்திருக்க வேண்டியதே இல்லை" என்று சொன்னதும் ரவீந்திரன் தன் மேனியில் சாட்டையடி விழுந்ததைப் போல் துடித்தார்.

ராஜீவோ மனைவியின் பேச்சில் அதிர்ந்து அவளைக் கண்டிக்கவும் மறந்தவனாய் நின்று கொண்டிருந்தான்.

தந்தைக் கலங்குவதைக் கண்டும் காணாதவளாய், "மூணாவது காரணம்... எங்க ரிஜிஸ்தர் மேரேஜ். உங்களை தோற்கடிக்க அதை அவர் நடத்தினார்ன்னா நினைக்குறீங்க. கண்டிப்பா இல்லை. அதை நடத்தி முடிச்சது நான்! அவருக்கு அப்படியெல்லாம் கிரிமினலா யோசிக்கத் தெரியாது. உங்க புத்தி தெரிஞ்சதுனால நான் தான் அப்படி ஒரு காரியம் செய்ய ஏற்பாடு பண்ணினேன். ராஜுக்கு வேலைக்கு ஏற்பாடு பண்ணுவதா சொல்லி சுமோத் அண்ணா மூலமா அவருடைய சர்ட்டிபிகேட் எல்லாம் வாங்கி காரியத்தைக் கமுக்கமா முடிச்சது நான்! நான் மேலே சொன்ன மூணு விஷயத்துல என் ராஜ் மேலே என்ன குறை கண்டீங்க. எதுக்கு இத்தனை விரோதம்?

உங்க அப்பா உனக்கு எதிரா சதி செஞ்சால் நீ என்ன செய்வேன்னு அன்னைக்கு ராஜ் என்னிடம் கேட்டார். அப்படி ஒரு விஷயம் என் வாழ்க்கையில் நடக்காது. அப்படி நடந்துட்டால் அதுக்கு அப்புறம் எனக்கு

வாழ்க்கையே கிடையாதுன்னு சொன்னேன்'' என்று அவள் சொன்னதும்,

அவளது வார்த்தையில் அதிர்ந்தவராய் ரவீந்திரன், ''குட்டிம்மா ஆஆ...'' என்று கூவினார்.

அவரைக் கேலியாக நோக்கியவாறே, ''ஆனால் துரோகம் செய்யுற உங்களுக்காக நான் ஏன் என் வாழ்க்கையை முடிச்சுக்கணும்? உயிரோடு இருந்து இது வரைக்கும் என் ராஜுக்கு நான் உருப்படியா எதையும் செய்யலை. இப்போ செத்துப் போய் அவரை அலைக்கழிக்க விரும்பலை. ஆனால் நான் அவரிடம் அன்னைக்குச் சொன்னது மட்டும் நிஜமாகப் போகிறது.

உங்க பொண்ணு நிவேதா செத்துப் போயிட்டாள். இப்போ உயிரோடு உங்க முன்னாடி பேசிக்கிட்டு இருப்பது மிஸ்டர் சுந்தரத்தோடு மருமகள். ராஜோட பொண்டாட்டி. எனக்கு இந்த ஐடென்டிட்டி மட்டும் போதும்'' என்று சொல்லித் திரும்பியவள் மெல்லியதாய் அதிர்ந்தாள்.

அங்கே ராஜீவ் நின்று கொண்டிருந்தான். 'இதெல்லாம் உங்க வேலை தானா?' என்பது போல் சுமோத்தைப் பார்த்தவள் சடக்கென்று ரவீந்திரனிடம் திரும்பி,

''நான் உங்க கம்பெனியிலே வேலை பார்த்தப்போ நீங்க எனக்குக் கொடுத்த பணத்தை எல்லாம் என் அக்கவுண்ட்டிலே போட்டு வைச்சிருந்தேன். எனக்கு அந்த பேங்க் ஏ.டி.எம் கார்டு வேண்டும். அது என் உழைப்பிலே வந்த பணம் தானே! அதை ஏன் நான் விட்டு வைக்கணும். அதைக் கொஞ்சம் தரீங்களா?'' என்று கேட்டதும்,

''நீ போய் எடுத்துக்கோடா'' என்று ராதா வாய் மொழியாகவும் ரவீந்திரன் சைகை மூலமாகவும் தெரிவித்தனர்.

தனது படுக்கை அறைக்குள் சென்றவள் தனது அலமாரியில் இருந்து தனது கார்டை எடுத்துவிட்டுத் திரும்பும் போது நடை தடுமாறி தனது படுக்கையில் அமர்ந்தாள். மெத்தென்று இருந்த படுக்கை அவளை அப்படியே உள்வாங்கிக் கொண்டது. ஆனால் அவளுக்கோ புதை குழியில் சிக்கிய ஒரு உணர்வைக் கொடுத்தது.

அன்று இந்தப் படுக்கையுடன் ஒப்பிட்டுத் தான் ராஜீவ் வாங்கிய படுக்கை கடினமாக இருப்பதாக நினைத்தாள். ஆனால் அதே படுக்கை இன்று புதைகுழியானது.

இது தான் மனித மனங்களின் விசித்திரம். ஒன்றைப் பிடித்துவிட்டால் அது பற்றிய நல்லது மட்டும் தான் கண்ணுக்குத் தெரியும். ஆனால் அதுவே பிடிக்கவில்லை என்றால் அது பற்றிய குறைகள் மட்டுமே மனம் முழுவதும் வியாபித்து இருக்கும்.

ராஜீவ் ரவீந்திரனையே பார்த்துக் கொண்டு வாசலிலேயே அசையாது நின்றான்.

ரவீந்திரன் ராஜீவைப் பார்த்து, ''மாப்பிள்ளை உள்ளே வாங்க. நான் செஞ்சதெல்லாம் தப்புத் தான். என்னை மன்னிச்சிடுங்க. அவளையும் என்னை மன்னிக்கச் சொல்லுங்க. நீங்க சொன்னால் அவள் கேட்பாள்'' என்று மன்றாடினார்.

தனது அறையில் இருந்து திரும்பி வந்தவள் தன் கணவனிடம், ''இன்னும் இங்கே என்ன செய்யுறீங்க? வாங்க போகலாம். இந்தாங்க உங்க கார் சாவி. காரை எடுங்க'' என்று சொல்லி அவனிடம் சாவியை நீட்டியவள்... அவன் அதைப் பெற்றுக் கொண்டதும் அவனது கையைப் பிடித்து வெளியே இழுத்தவள் சடாரெனத் திரும்பி தனது தந்தையைப் பார்த்து,

''ரெண்டு நாள் முன்னாடி நகையைத் தானே வித்தேன். என்னை விற்கலையேன்னு நான் கேட்டேன் என்று ராஜ் என்னை அறைஞ்சார். ஆனா நீங்க என்னைச் சில கோடிக்கு வித்துட்டீங்க'' என்றாள்.

''வித்திட்டேனா?'' என்று அதிர்ந்தவர் அருகில் இருந்த சோபாவில் ஒய்ந்து போய் அமர்ந்தார்.

''நிவி வயசானவர். உடம்புக்கு முடியாதவர். போதும். உன் பேச்சைக் குறை'' என்று ராஜீவ் தன் மனைவியை எச்சரித்தான். ஆனால் அவள் அதனைக் காதில் கூட வாங்காது தனது பேச்சினைத் தொடர்ந்தாள்.

''அவர் அடிச்சதிலே எனக்கு கன்னம் தான் வலிச்சது. ஆனா நீங்க அடிச்சதிலே...'' என்றவள் தனது நெஞ்சைத் தொட்டுக் காட்டிவிட்டு,

''இந்த உலகத்திலேயே யார் எனக்கு எதிரா மாறினாலும் நீங்க மாற மாட்டீங்கன்னு அசைக்க முடியாத நம்பிக்கை வைச்சிருந்தேன். ஆனால் அந்த என்னோட நம்பிக்கை பொய்யாப் போச்சு. என் லைஃபிலே நான் யாரை வேணா மன்னிப்பேன். ஆனா கூடவே இருந்து நம்ப வைச்சு கழுத்தறுக்கறவங்களை மட்டும் மன்னிக்கவே மாட்டேன்'' என்று சொன்னவள் தன் கணவனை இழுத்துக் கொண்டு வெளியேறினாள்.

கேட்டைத் தாண்டிச் சென்று தனது காரில் ஏறப் போன சுமோத்திடம், ''அண்ணா தாங்க்ஸ்ன்னு ஒரு வார்த்தை சொல்லி உங்களை நான் பிரிக்க விரும்பலை. ஆனால் அதே சமயம் என்னாலே சொல்லாமல் இருக்கவும் முடியலை. தாங்க்ஸ். எனக்காக இன்னும் ஒரு ஹெல்ப் பண்ணுங்க'' என்றாள்.

''சொல்லும்மா. என்ன செய்யணும்?''

''நான் நகைக் கடைக்குப் போறேன். உங்க வீட்டிலே உள்ள என் லக்கேஜை அங்கே கொண்டு வந்து தரீங்களா?''

''திரும்பவும் நகைக் கடைக்கா? எதுக்கு?'' என்று அதிர்ந்தவனிடம்,

''நகை விற்க இல்லை. வாங்கப் போறேன்'' என்று சொல்லி விடை கொடுத்தாள்.

அவனது கார் நகர்ந்ததும் திரும்பியவளின் முகம் வாடியது. அங்கே ராஜீவ் ஆசையுடன் தன் காரை வருடிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது செய்கை அவளுக்கு மனக் கஷ்டத்தையும், கடுப்பையும் சேர்த்தே தந்தது.

தன்னால் தானே... தனது தந்தையால் தானே... அவன் இவ்வாறெல்லாம் துன்பப்படும்படி ஆனது என்று நினைத்த போது மனம் வருத்தம் அடைந்தாள் என்றால்... இதை எல்லாம் சொல்லாமல் தனியே துன்பம் அனுபவித்து இருக்கானே என்று கணவனின் மேல் கடுப்பும் வந்தது.

நிவேதா அருகில் நெருங்கவும் ராஜீவ் தனது உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு டக்கென்று காரில் ஏறி அமர்ந்தான்.

'பாரு பாரு இப்பக் கூட என்னிடம் இருந்து தன்னோட உணர்ச்சியை மறைக்கிறார்' என்று கடுப்பானாள்.

அவள் முன் சீட்டில் ஏறி அமர்ந்து, ''நான் நகைக் கடைக்குப் போகணும்'' என்று சொல்லி சீட்டில் தலை சாய்ந்து கொண்டாள்.

''நிவி, எப்படிடா இருக்கே?'' என்று தழுதழுப்புடன் கேட்டவன் அவள் கைகளை எடுத்து வருட அவள் பதிலும் சொல்லவில்லை. கண் திறந்து பார்க்கவும் இல்லை. ஒரு பெருமூச்சை வெளியேற்றியவன் காரை ஓட்ட ஆரம்பித்தான்.

23



நகைக் கடைக்குள் நுழைந்ததும் அவள் முதலில் சங்கிலிப் பிரிவிற்குள் நுழைந்தாள்.

''அத்தை உங்ககிட்டே எந்த மாதிரி செயினைக் கொடுத்து எனக்குத் தாலிச் செயினை வாங்கச் சொன்னாங்க?'' என்று கேட்டு அவன் ஒன்றைக் காட்டவும் அதே மாதிரி நகை ஒன்றைத் தேர்ந்தெடுத்தாள்.

பின் வளையல் பிரிவிற்குச் சென்று, ''வயதானவர்கள் போடுவது போல டிசைன் காட்டுங்க'' என்று கடைக் காரரிடம் சொல்லி அதையும் வாங்கிக் கொண்டாள்.

சுமோத் கடை வாயிலில் நின்று கொண்டு ராஜீவை அழைத்து அவளது பெட்டியை ஒப்படைத்துவிட்டுச் சென்றான்.

அவள் வாங்கிய நகைகளுக்கான பணத்தை ராஜீவ் செலுத்த முயன்ற போது அவனைத் தடுத்தவள் தனது கார்டு மூலம் பில்லிற்கான பணத்தைச் செலுத்தினாள்.

வெளியேறப் போனவளைத் தடுத்தவன், ''நிவி முதல் முறையா நகைக் கடைக்கு வந்திருக்கோம். வா உனக்கு ஏதாச்சும் வாங்குவோம்'' என்று வைரம் இருக்கும் பக்கம் கை காட்ட தனது தலை அசைத்து அவனது ஆசையை மறுத்தவள் கடையை விட்டு வெளியேறிச் சென்றாள்.

வெளியே வந்து காரில் ஏறி அமர்ந்ததும், ''நேரா சோழவந்தானுக்கு வண்டியை விடுங்க. அத்தையையும், மாமாவையும் பார்க்கணும்'' என்றாள்.

அவன் ஏதோ சொல்வதற்காக வாயைத் திறந்ததும், ''நான் சொன்னதை மட்டும் செய்யுங்க. சாக்கு போக்கு

சொல்ல முயற்சிக்காதீங்க'' என்று சொன்னவுடன் காரை ஓரமாக நிறுத்தியவன்,

''அம்மாவும் அப்பாவும் வீட்டிலே இருக்காங்களான்னு கேட்டுத் தெரிஞ்சுக்கிறேன் மா. திடீர்ன்னு போய் நிக்க முடியாது இல்லையா. ஜஸ்ட் இன்பார்ம் பண்ணிட்டுப் போகலாம்'' என்று சொன்னவன் தனது கைப்பேசியில் இருந்து தனது தந்தைக்கு அழைத்தான்.

''அப்பா நான் தான் பா. நானும் நிவியும் இப்போ அங்கே வரோம். வீட்டிலே தானே இருக்கீங்க?'' என்று நேரடி யாக விஷயத்துக்கு வந்தான்.

''வீட்டிலே தான் பா இருக்கோம். நீ மட்டும் தானே மது ரைக்கு வந்திருக்கிறதா சொன்னாய். நிவேதா பிரண்டு கல்யாணத்துக்கு கோயம்புத்தூர் இல்ல போகப் போறதா அன்னைக்குச் சொன்னாய். அவள் எப்போ மதுரைக்கு வந்தாள்?'' என்று சுந்தரம் கேட்டதும்,

மனைவியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இதற்கு என்ன பதில் சொல்வது என்று நினைத்தவன் அவளைப் பார்த்துக் கொண்டே,

''ஆமா அப்பா. நாங்க ரெண்டு பேரும் கிளம்பிட் டோம். இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்திடுவோம்'' என்று அவர் கேட்டதுக்கு பதில் சொல்லாது சம்பந்தமே இல்லாத இன்னொரு பதிலைச் சொல்லிக் கொண்டிருக் கும் போதே நிவேதா அவனது கையில் இருந்து கைப்பேசியைப் பறித்து அதை ஸ்பீக்கரில் போட்டாள்.

''என்னப்பா மழுப்புற? நிவேதா பக்கத்திலே இருக் காளா? அப்போ நீ ஆமா இல்லைன்னு மட்டும் பதில் சொல்லு. சரியா?'' என்று சுந்தரம் கேட்டதும்,

ராஜீவ் நிவேதாவின் முகத்தையே பார்க்க... அவள் பேசுங்க என்பது போல் சைகை காட்ட...

ராஜீவ், ''ம்ம்ம்...'' என்று மட்டும் சொன்னான்.

''ஏதாச்சும் பிரச்சனையா?''

''ஆமா.''

''அவங்க அப்பா விஷயமாவா?'' என்று அடுத்த கேள்வி கேட்டார்.

''ஆமா.''

''நீ ஏதாச்சும் உளறினாயாடா? உனக்குக் கோபத்திலே எதைப் பேசுவதுன்னு தெரியாதாடா!'' என்று அவர் தன் மகனைக் கடிந்து கொள்ள...

'இல்லை' என்று ராஜீவ் பதில் அளிக்கும் முன் நிவேதா தன் வாய் திறந்து, ''சொல்லிட கில்லிட போறார் மாமா. நீங்க வேற...'' என்று சலித்துக் கொண்டாள். கூடவே கணவனுக்கு ஒரு முறைப்பையும் பரிசளித்தாள்.

அந்தப் பக்கம் சுந்தரம் ஒன்றும் சொல்லாது... சொல்ல முடியாமல் விழித்துக் கொண்டிருந்தார்.

'இந்தப் பையனுக்கு அறிவே கிடையாது. ஸ்பீக்கர் ஆன் பண்ணி இருக்குன்னு சொல்லி இருக்கலாம் தானே?' என்று மனதில் மகனைத் திட்டி கொண்டார்.

''சரி நேரிலே வாங்க பேசிக்கலாம்'' என்று பொதுப் படையாகப் பேசிவிட்டு வைத்து விட்டார்.

அவர்கள் ஊருக்குச் சென்று சேரும் வரை நிவேதா வாய் திறந்து பேசவில்லை. ராஜீவ் அவளிடம் பேச முயற்சி செய்தும் அவள் அதை லட்சியம் செய்யவில்லை. அவள் முகத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே அவன் காரைச் செலுத்திய போது மட்டும்,

''நேரா ரோட்டைப் பார்த்து ஓட்டுங்க. நான் எங்க மாமனார் மாமியாருக்கு ஒரே மருமகள்'' என்று கொஞ்சம் கூட அலட்டிக்காமல் சொன்னாள்.

அவர்கள் வீட்டு வாசலில் ஏதோ வண்டி நின்று கொண்டிருந்ததால் அடுத்த வீட்டு வாசலில் காரை நிறுத்தினான். அவர்கள் வீட்டிற்குள் நுழையவும் யசோதாவும் சுந்தரமும் அவர்களை வரவேற்றார்கள்.

நிவேதாவின் கையில் செருகி இருந்த வெண்ஃப்ளானைப் பார்த்த யசோதா, ''என்னம்மா கையிலே? குளுகோஸ் ஏத்தினீங்களா? என்னாச்சு?'' என்று மருமகளிடம் கேள்வியை ஆரம்பித்தவர், ''ஏன்டா உடம்புக்கு முடியாத பொண்ணை பஸ்ஸிலேயா அலைக்கழிச்சே?'' என்று மகனைக் குறை கூறுவதில் வந்து முடித்தார்.

''இல்லைம்மா காரில்...'' என்று ராஜீவ் கூறிக் கொண்டு இருக்கும் போதே,

''பெருசா ஒண்ணும் இல்லைத்தை. காலையிலே மயங்கி விழுந்துட்டேன். அதான் சோர்வா இருக்கேன்னு ஒரு பாட்டில் டிரிப்ஸ் போட்டாங்க'' என்றாள்.

''நீ வந்து படுத்து ரெஸ்ட் எடு. உனக்காக நாங்க ரூமிலே ஏ.சி மாட்டிட்டோம். நீ போன தடவையே ஏ.சி இல்லாமல் ரொம்பக் கஷ்டப்பட்டியா... அதான் ரெண்டு நாள் முன்னாடி மாட்டினோம்'' என்று யசோதா சொல்லவும்,

''எனக்கு மாட்டியாச்சு. ஆனா மதுவுக்கு? அவள் வந்து தங்கினால் என்ன செய்வீங்க?''

''அடுத்து அவளுக்காகவும் ஒண்ணு மாட்டிடுவோம்.''

''இருக்குற சொத்தை எல்லாம் வாரிக் கொடுத்தாச்சு. அப்புறம் எப்போ மாட்டுவீங்க அத்தை? அடுத்த மூணு மாசப் பென்ஷன் பணத்திலே மிச்சம் பிடிச்சா?'' என்று கேட்கவும் யசோதா திருதிருவென விழித்தார்.

சுந்தரம் மகனைக் கேள்வியாய் நோக்கினார். அவன் ஆமோதிப்பதாய் தலை அசைத்தான்.

தனது தந்தை அவளிடம் தந்த பெட்டியைத் தன் மாமனாரிடம் தந்தவள் அவரது காலில் விழுந்து, ''என்னை மன்னிச்சிடுங்க மாமா'' என்றாள்.

''ஐயோ உடம்பு சரி இல்லாத பொண்ணு. என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?'' என்று சொல்லிக்கொண்டே யசோதா அவளைப் பாய்ந்து வந்து தூக்கினார்.

''நீ என்ன தப்புச் செஞ்சேன்னு என்னிடம் மன்னிப்புக் கேட்கிறாய்?'' என்று சுந்தரம் கேட்டார்.

தனது கைப்பையில் இருந்து அன்று வாங்கிய வளையல்களை யசோதாவின் கைகளில் அணிவித்தாள். சங்கிலியை அவரது கழுத்தில் அணிவித்துக் கொண்டே, ''நீங்களும் என்னை மன்னிச்சிடுங்க அத்தை'' என்று சொல்லி அவரது காலிலும் விழப் போக...

அவளைத் தடுத்து நிறுத்தி அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டவர், ''நீ என்னம்மா தப்பு செஞ்சே? எல்லாம் இவன் நேரம். இவன் ஜாதகத்திலே கிரக நிலை சரியில்லைன்னு ஜோசியர் சொன்னார். அதுபடி நாம கஷ்டப்படணும்ன்னு விதி இருக்கு. அதுக்கு நீயோ நானோ என்ன செய்ய முடியும்?'' என்று சொன்னதும்,

இவங்க எல்லோருமே தங்களோட பெருந்தன்மை யாலே என்னை அடிக்குறாங்களே என நினைத்துக் கொண்டாள்.

''என்னால நிக்க முடியலை அத்தை. நான் உட்கார்ந் துக்கிறேன்'' என்று சொல்லி தரையில் அமர்ந்துவிட்டாள்.

ராஜீவ் வேகமாக அவளருகே வந்து, ''என்னாச்சு நிவி? மயக்கமா இருக்கா?'' என்று விசாரித்தான்.

சுந்தரம் மகனது மருத்துவ உபகரணங்களை எல்லாம் எடுத்து வந்து தந்தார். அவன் அதை வைத்து அவளைப் பரிசோதித்தான். BP சரியாகவே இருந்தது. அவளது

மனச் சோர்வே அவளது உடல் சோர்வுக்கான காரண மென அவனுக்குப் புரிந்தது.

''என்னப்பா? எதுவும் பிரச்சனையா?'' என்று கவலை யோடு சுந்தரம் கேட்க,

''அதெல்லாம் ஒண்ணுமில்லைப்பா. பிரஷர், நாடித் துடிப்பு எல்லாமே நார்மலாத் தான் இருக்கு. கொஞ்சம் டயர்டா இருக்காள். அவ்வளவு தான்'' என்றான்.

ராஜீவும் யசோதாவும் அவளைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று படுக்க வைத்தார்கள்.

ராஜீவ் தன் காரிலேயே சென்னைக்குச் செல்ல நினைத்தான். முதல் நாள் இரவு முழுவதும் தூங்காமல் வேலை பார்த்ததால் சோர்வாக இருந்தான். அதனால் தற்காலிக டிரைவர் ஒருவரை அமர்த்திக் கொண்டு தனது காரிலேயே சென்னைக்குச் செல்ல ஏற்பாடு செய்தான்.

அங்கிருந்து சென்னைக்குக் கிளம்பும் வரையிலும் நிவேதா கணவனின் பார்வையையும் அருகாமையை யும் தவிர்த்தாள். இரவுச் சாப்பாடு முடிந்ததும் அவர்கள் சென்னைக்குக் கிளம்பினார்கள். நிவேதா பின் சீட்டில் படுத்துக் கொண்டாள். ராஜீவ் முன் பக்கமாக ஏறி அமர்ந்தான்.

அதிகாலையில் அவர்கள் ராஜீவின் சொந்த வீட்டை அடைந்தார்கள். நிவேதாவுடன் மாடி ஏறியவன் தனது வீட்டை திறந்து உள்ளே சென்றான். மூன்று மாதங்களுக்கு பின் தனது வீட்டில் அதுவும் தனது மனைவியுடன் கால் பதித்ததும் ராஜீவிற்கு மனதுக்குள் உற்சாக ஊற்றுப் பெருகியது.

''வெல்கம் ஹோம் நிவி!'' என்று சொல்லி அவளது கைப்பிடித்து அழைத்துச் சென்றான். அவள் அங்கிருந்த சோபாவில் சென்று அமர்ந்தாள்.

மனைவி தன்னைத் தவிர்க்கிறாள் என்பது ராஜீவிற்கு நன்றாகப் புரிந்தது. ஆனால் அதைப் பேசித் தீர்க்க இது சரியான சமயமன்று என்று நினைத்தவன் குளிய லறைக்குச் சென்று குளித்துவிட்டு வந்தான்.

"நிவி நான் ஹாஸ்பிட்டல் கிளம்புறேன். அந்த வீட்டிலே போய் நம்ம டிரஸை எடுக்கணும். அதனால மதியம் வீட்டுக்கு வரமாட்டேன். சரவண பவனில் டயல் பண்ணிட்டு சாப்பாடு கொண்டு வந்து தரச் சொல்லு றேன். சாப்பிட்டு ரெஸ்ட் எடு. இங்கே சமையல் வேலை செஞ்சுக்கிட்டு இருந்தவங்ககிட்டே போன் பண்ணிப் பேசிட்டேன். அவங்க கொஞ்ச நேரத்திலே வந்திடு வாங்க. சரியா?" என்றான்.

ஒரு தலை உருட்டலே பதிலாகக் கிடைத்தது. அவளிடம் உட்கார்ந்து பேசுவதற்கான நேரம் இதுவல்ல என்று உணர்ந்தவனாய் அங்கிருந்து மனமே இல்லாமல் சென்றான்.

கணவன் கிளம்பிச் சென்றதும் அந்த வீட்டைத் தன் பார்வையால் வலம் வந்தாள். அது மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட ஃபிளாட். விலை உயர்ந்த சோபா, நாற்பது இஞ்ச் டி.வி, பிரிஜ், வாஷிங் மெஷின் என்று சகல விதமான பொருட்களும் விலை உயர்ந்த தாகவே இருந்தது.

நான் எதுக்குக் கஷ்டப்படணும் நிவி? உன்னைக் கல்யாணம் பண்ணியதால என் ஸ்டேட்டஸ் என்ன குறைஞ்சா போயிடுச்சு? உன் நிலைமை தான் தாழ்ந் திடுச்சு. அப்போ உனக்குத் தான் கஷ்டம்."

கணவனது குரல் காதில் ஒலிக்க... இதற்கு முந்தைய வீட்டையும், இதையும் ஒப்பிட்டு மனம் வெதும்பினாள்.

சாப்பாடு வந்ததும் சாப்பிட்டு மாத்திரையையும் விழுங்கிவிட்டு அங்கிருந்த படுக்கை அறை ஒன்றிற்குள்

சென்று முடங்கினாள். அங்கே பெரிய டச் ஸ்கீரின் கம்ப்யூட்டர் ஒன்று வீற்றிருந்தது.

"லாப் டாப்பா? நான் ஒரு டாக்டர்ம்மா. எனக்கு எதுக்கு கம்ப்யூட்டர்?"

"இப்பத் தான் நான் எனக்குன்னு காஸ்ட்லியா ஒரு மொபைல், பைக், வாட்சன்னு வாங்க ஆரம்பிச்சேன்."

அடுக்கடுக்காய் எத்தனை பொய்கள்! அத்தனையும் யாருக்காக? எனக்காக... நான் அப்படிப் பெருசா உங்களுக்கு என்ன செஞ்சேன் ராஜ்? என்று மனதிற்குள் கணவனிடம் கேள்வி கேட்டாள்.

இரவில் வழக்கத்திற்கு மாறாக அவன் விரைவாகவே வீடு திரும்பினான். வந்ததுமே மனைவியைப் பார்த்து,

"சாப்பிட்டியா நிவி?" என்றான்.

தலையைக் குனிந்து கொண்டே, "சாப்பிட்டேன்" என்றாள்.

"மாத்திரை போட்டியா?"

"ம்ம்ம்."

"உனக்கு என் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்கப் பிடிக்கலையா? நீ என்கிட்டே நல்லாப் பேசி மூணு நாள் ஆகுது. மூச்சுக்கு முந்நூறு ராஜ் உன் வாயிலே இருந்து வரும். ஆனா இப்போ ஒரு ராஜ் கூட உன் வாயிலே இருந்து வரலை. நான் அந்தளவுக்கு அந்நியமாய் போயிட்டேனா?" என்று வருத்தத்துடன் கேட்கவும்,

அவள் அவனை அணைத்துக் கொண்டு கதறி அழுதாள்.

நேற்றிலிருந்து தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு தனது மனதிற்குள்ளேயே மருகிக் கொண்டு

இருக்கிறாள். அது அவளது உடல் நலத்திற்கு நல்லதல்ல என்று உணர்ந்தவனாய் அவளை அழவிட்டு அமைதியாக அவளது முதுகை வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

"ஏன் ராஜ் இப்படிப் பண்ணினீங்க? எல்லோர் முன்னையும் என்னைக் கூனி குறுக வைச்சிட்டீங்களே ராஜ்? அவர் ஒரு விதமா தண்டிச்சார்ன்னா நீங்க எல்லோரும் பெருந்தன்மையா நடந்து என் குற்ற உணர்ச்சியை அதிகப்படுத்திட்டீங்க. உங்களில் யாராவது ஒருத்தர் என்னைத் திட்டி இருந்தால் கூட என் மனசு ஆறியிருக்கும். ஆனால் யாருமே ஒரு வார்த்தை கூடச் சொல்லலியே? இது வரைக்கும் எனக்கு மத்தவங்களுக்குக் கொடுத்துத் தான் பழக்கம். ஆனால் கடந்த மூணு மாசமா எனக்காக எல்லோரும் கொடுத்திருக்கீங்க. உங்க சொத்து, நிம்மதி, சந்தோஷம். இப்படி எல்லாத்தையும் தாரை வார்த்து இருக்கீங்க. இதை எல்லாம் புரிஞ்சுக்காத ஜடமா இருந்திருக்கேனே! உங்களை எல்லாம் நிமிர்ந்து பார்க்க முடியாமல் அப்படியே பூமிக்குள்ளே புதைஞ்சிட மாட்டோமான்னு இருக்கு."

"ப்சு. ஓசு மாதிரி பேத்தக் கூடாது."

"என்னால தானே நீங்க இவ்வளவு கஷ்டப்பட்டீங்க. அன்னைக்கு என் பர்த் டேக்கு உங்களால பிரசண்ட் வாங்கிக் கொடுக்க முடியலை. ஆனா உங்க சொத்தெல்லாம் திரும்ப கிடைச்ச உடனே இன்னைக்கு என்னடான்னா... முதல் தடவையா நகைக் கடைக்கு வந்திருக்கோம் நகை வாங்கிக்கோன்னு சொல்லி நீங்க வைரம் இருக்குற திசையிலே கை காட்டுறீங்க. அப்போ உங்களோட அன்றைய நிலைமைக்கு நான் தானே காரணம்."

"உன்னால எனக்கு ஒரு கஷ்டமும் இல்லைடா."

"எனக்காக இந்த மூணு மாசமா நிறைய பொய் சொல்லி இருக்கீங்க. இப்பவாவது என்ன நடந்ததுன்னு உண்மையைச் சொல்லுங்க ராஜ்."

"எங்க தாத்தா பெரிய பணக்காரர். அவரோட சம்பாத்தியம் தான் தோப்பு, நிலபுலன், வீடு எல்லாமே! எங்க அப்பாவுக்கு வாத்தியார் வேலை பார்க்கணும்னு ஆசை. எங்க தாத்தா குறுக்கே நிக்கலை. கூட வேலை பார்த்த சாதாரண குடும்பத்துப் பெண்ணான என் அம்மாவைக் கல்யாணம் பண்ண எங்க அப்பா ஆசைப்பட்ட போதும் எங்க தாத்தா மறுப்பு சொல்லலை. அதனால தான் நான் உன்னை அதிரடியாக் காதல் கல்யாணம் பண்ணுவதை என் அம்மாவும் அப்பாவும் ஆதரிச்சாங்க. எங்க சொத்துப் போன போதும் அவங்க தைப் பெருசா எடுத்துக்கலை.

அந்த பூர்வீக வீட்டை மட்டும் தக்க வைக்கக்க பணம் கொடுப்பதா பேசின போது கமோத் எவ்வளவு பணம் என்னிடம் இருக்குன்னு கேட்டான். நான் எமர்ஜென்ஸிக் காகன்னு ஒரு அஞ்சு லட்சத்தையும் ஒரு வீடு பிடிச்சு செட்டில் ஆகத் தேவையான பணத்தையும் கழிச்சது போக மீதி உள்ள பணத்தைத் தான் சொன்னேன்.

நல்ல வேளை அந்த பூர்வீக வீடு கிடைச்சதால் யாருக்கும்... ஏன் எங்க அக்கா மாமியாருக்குக் கூட விஷயம் தெரியாமல் மறைச்சாச்சு.

நாமளும் கொஞ்ச நாள் கஷ்டமான வாழ்க்கையை வாழ்ந்து பார்த்தால் தானே அடுத்தவங்க கஷ்டம் நமக்குப் புரியும். இது பத்தின பேச்சு போதும். நான் சாப்பிடப் போறேன். எனக்குப் பசிக்குது வா" என்று உணவு மேஜைக்கு அழைத்துச் சென்றவன் இட்லியைப்

பிய்த்து தனது வாயில் வைக்காமல் தன்னையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த நிவேதாவின் வாயருகே கொண்டு செல்ல அவள் வேகத்துடனே அதை வாய் திறந்து வாங்கிக் கொண்டாள்.

''குட்டிம்மா வாயைத் திறக்குற வேகத்தைப் பார்த்தால் சாப்பிட்ட மாதிரி தெரியலையே!'' என்று அவளைப் பார்த்துக் கேட்கவும்,

''ராஜ் குட்டிம்மா சொல்லாதீங்க'' என்று கடுப்புடன் கூறினாள்.

''ஏன் சொல்லக் கூடாது. என் வைஃபை நான் எப்படி வேணாக் கூப்பிடுவேன். குட்டிம்மா குட்டிம்மா...'' என்று அவன் அழுத்தி அழுத்திச் சொன்னான்.

அவள் அவனை முறைப்பதைக் கண்டு கொள்ளாமல், ''நான் ஏன் முன்னாடி அதை அவாய்ட் பண்ணினேன் என்றால் எங்கே உங்க அப்பாப் பத்தி நான் ஏதாச்சும் உளறிடுவேனோ அப்படின்னு தான் குட்டிம்மாவை என் வாயுக்குள்ளே முழுங்குவேன். இப்போ தான் எல்லா விஷயமும் உனக்கு தெரிஞ்சிடுச்சே. அதனால இனிமேல் அப்படித் தான் கூப்பிடுவேன்.''

''உங்களுக்கு அவர் மேலே கோபமே வரலையா ராஜ்?''

''கோபமே வராமல் இருக்க நான் என்ன புத்தரா இல்லை மகாத்மாவா? கோபம் வந்துச்சு. எனக்குச் சென்னையிலே தான் வேலைன்னு முடிவான உடனே நான் இந்த வீட்டை வாங்கினேன். டி.வியும், மியூஸிக் சிஸ்டமும் தான் வாங்கி வைச்சிருந்தேன். என்னைக்கு உன்னைக் காதலிக்க ஆரம்பிச்சேனோ அப்பத் தான் ஒவ்வொரு பொருளா தேடித் தேடி வாங்கினேன். உன்னை ராணி மாதிரி வாழ வைக்க ஆசைப்பட்டு காத்திருக்க... அதை அவர் நிராசையா மாத்தினால்... கல்யாணம் ஆன

முதல் நாளே உன்னைத் தனியா விட்டுட்டு அவர் அனுப்பிய ஆளுங்களுடன் சொத்தை ஒப்படைக்க சென்னை போனால் கோபம் வராதா என்ன? கட்டுக்கடங்காமல் வந்தச்சு.

என் கோபத்துக்குக் காரணமே உன்னை என்னால நல்லபடியாப் பார்த்துக்க முடியலையேன்னு தான். நீ என் உயிர் குட்டிம்மா. கல்யாணத்துக்கு அப்புறமா உனக்கு வந்த முதல் பிறந்த நாளுக்கு ஒரு கிஃப்ட் கூட வாங்கிக் கொடுக்க முடியலையேன்னு ஆத்திரம் வந்துச்சு தான். ஆனா அதெல்லாம் இப்போ பறந்து போச்சு. அதுக்குக் காரணமும் நீ தான். அவர் உன் அப்பாங்கிற காரணம் தான் அவர் செஞ்ச எல்லாத் தப்பையும் மறக்கவும் மன்னிக்கவும் வைக்குது. எனக்கு நீ முக்கியம்டா. நீ மட்டும் தான் முக்கியம். உனக்காக நான் எதுவும் செய்வேன்'' என்று உணர்ந்து சொன்னவனைக் கண்ணில் நிறைந்த நீருடன் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

வழியும் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டவன் அவளைச் சாப்பிட வைத்துத் தானும் சாப்பிட ஆரம்பித்தான். அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது காயத்ரியிடம் இருந்து போன் வந்தது. ஸ்பீக்கரை ஆன் செய்தவன், ''ஹாய் காயுக்கா!'' என்றான்.

''வீட்டுக்கு வந்துட்டியாடா?''

''வந்துட்டேன். சாப்பிட்டுக்கிட்டு இருக்கேன். சொல்லு...''

''அப்பா போன் பண்ணினார்டா. விஷயத்தைக் கேட்கவே சந்தோஷமா இருந்துச்சு.'' என்று அவள் தொடங்கவுமே...

ஆகா அக்கா இது விஷயமாவா பேசப் போகிறாள்! நாம பாட்டுக்கு ஸ்பீக்கரை ஆன் பண்ணிட்டோமே என

நினைத்த ராஜீவ் அதை மாற்ற நினைக்க நிவேதா அவனைத் தடுத்துவிட்டாள். காயத்ரி தனது பேச்சினைத் தொடர்ந்தாள்.

''என்னோட பல நாள் மனவருத்தம் ஒரு முடிவுக்கு வந்திடுச்சுடா. நான் பணம் கொடுத்தப்போ நீயும் அப்பாவும் வாங்கிக்கலைன்னு எனக்கு எவ்வளவு கஷ்டமா இருந்துச்சு தெரியுமா? அதெல்லாம் நீங்க கொடுத்தது தானேடா.''

''அக்கா திருப்பி வாங்குறதுக்கா சீர் கொடுப்பாங்க.''

''அடப்போடா! பெத்து வளர்த்து படிக்க வைச்சுக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பீங்களாம். கல்யாணத்துக்கு அப்புறமா பிறந்த வீட்டுக்கு ஒரு கஷ்டம்ன்னா நாங்க எங்க சம்பாத்தியத்திலே இருந்து உதவி செஞ்சா அதை ஏத்துக்க மாட்டீங்களாம். ஆனா அதே எனக்கு ஒரு கஷ்டம்ன்னா நீங்க ஓடி வருவீங்களாம். நாங்க ஏத்துக் கணுமாம். இது எந்த ஊர் நியாயம்டா?

பொண்ணா மட்டும் பொறக்கவே கூடாதுடா. என் வீட்டுக்காரர் ஒத்துக்கலைன்னா கூடப் பரவாயில்லை. அவரே உதவி செய்யுன்னு தானே சொன்னார். அப்பக் கூட ஏத்துக்க மாட்டேன்னுட்டீங்களேடா. சரி பணம் தான் வாங்கிக்கலை. அட்லீஸ்ட் ஹனி மூன் டூர் பேக்கேஜ் ஏற்பாடு பண்ணித் தரேன் என்று சொன்னேன் தானே! அதையாச்சும் ஒத்துக்கிட்டு இருக்கலாமில்ல.''

''அக்கா அதான் கல்யாணப் பரிசா எங்க ரெண்டு பேர் கழுத்துக்கும் நகை செஞ்சு மாட்டினியே. என்னமோ ஒண்ணுமே செய்யாத ரேஞ்சுக்கு ஃபீல் பண்ணுறே! மாமாக்கு விஷயம் தெரியும் சரி...உன் மாமியாருக்குத் தெரிஞ்சு உன்னால எனக்கு உதவி செய்ய முடியுமா?''

''அவங்ககிட்டே எதுக்குடா சொல்லணும்? மறைச்சுட்டால் போச்சு.''

''ம்ம்ம்... அங்க தான் ஆரம்பிக்கும் உன் வாழ்க்கை மிலே பிரச்சனை. அதனால தான் நானும் அப்பாவும் பிடிவாதமா உன்னிடம் பணம் வாங்க மறுத்தோம். நீயும் எங்களைப் புரிஞ்சுக்கோ.''

''போடா. எதையாச்சும் பேசிக் கடுப்பைக் கிளப்பாதே. சரி இப்பவாச்சும் அவளை ஹனிமூன் கூட்டிட்டுப் போ.''

''அதான் அப்பவே கூட்டிட்டுப் போனேனேக்கா.''

''எது ஊரிலே உள்ளவங்களை எல்லாம் வேனிலே கூட்டிக்கிட்டு ஊர் சுத்தப் போனியே அதுவா? டேய்! உன் வீடு தேடி வந்து உதைப்பேன்.''

நிவேதா இடை புகுந்து, ''அண்ணி நாம எல்லோருமே சேர்ந்து போவோம்'' என்றாள்.

''நிவேதா, அதுக்கு பேர் டூர். நான் சொல்லுறது...''

''எனக்கும் புரியுது அண்ணி. நானும் மூணு மாசத்துக்கு முன்னாடி ஹனிமூனுக்கும் டூருக்கும் ஆறு வித்தியாசம் சொன்னவள் தான். ஆனா வாழ்க்கையை வாழ்ந்து பார்த்த பின்னாடி தான் சில வார்த்தைகளோட அர்த்தமும், சில உறவுகளின் மதிப்பும் புரியுது.''

''ஹேய் நிவி! நிறுத்து நிறுத்து. எது என்ன தத்துவமா பொழியறே? நீ விளையாட்டுப் பிள்ளையாவே இரு. அப்பத் தான் அழகு.''

''ஏன் காயுக்கா இப்படிப் பேசி அவளைத் தடுக்குறே! அவளே எப்பவாச்சும் தான் இப்படிச் சொல்லுவாள். எதைன்னு கேட்குறியா? உன் தம்பி நல்லவன்னு தான்.''

''அவ எப்போடா உன்னை நல்லவன் என்று சொன்னாள்?'' என்று காயத்ரி ஆச்சரியமாகக் கேட்க,

''இப்பத் தான் சொன்னாளே! சில உறவுகளோட மதிப்பு புரிஞ்சதுன்னு. அதுக்கு உன் தம்பி நல்லவன் வல்லவன்னு அர்த்தம். இது கூட உனக்குப் புரிலையா?'' என்று கேட்டான்.

''அடப் போடா அடாவடி! சரி சாப்பிட்டுத் தூங்குங்க. நாம அப்புறமாப் பேசலாம்'' என்று அணைப்பைத் துண்டித்தாள்.

''ராஜ், உங்க அக்கா உங்க சார்பா மது பங்ஷனுக்கு நகை வாங்கி வைச்சிருந்தாங்க. அதை சபையிலே வைச்சுக் கொடுத்தால் உங்களால ஒண்ணும் சொல்ல முடியாதுன்னு நினைச்சாங்க. நான் அதனால தான் கம்மலை அடமானம் வைச்சு அந்த நகையை வாங்கினேன்.

நான் போன நிமிஷம் வரைக்கும் என்னால உங்க அக்கா எந்தக் கஷ்டமும் படலை. அதனால உங்க அக்கா முன்னால தலை குனியுற நிலமை எனக்கு இல்லைன்று நினைச்சேன். ஆனால் அவங்க பேச்சைக் கேட்ட பின்னால தான் அவங்களோட மனக்கஷ்டம் புரியுது. என்னால உங்க எல்லோருக்குமே கஷ்டம் தானே!

ஆனா ராஜ் இத்தனை நாளில் நான் ஒரு தடவை கூட இருந்திருந்து இவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டோமேன்னு வருத்தப்படவே இல்லை. அப்படி மட்டும் நினைச்சிருந்தா என்னாலையே என்னை மன்னிக்க முடிஞ்சிருக்காது ராஜ். நான் சொல்லுறதை நம்புறீங்க தானே?

சாப்பிட்டு முடித்துக் கை கழுவிவிட்டு வந்தவன், ''உன்னை நம்பாமல் போவேனா? அதே மாதிரி நானும் ஒரு நாளும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்காக வருத்தப்பட்டதே இல்லை நிவி. சரி வா நம்ம பெட்

ரூமுக்குப் போவோம்'' என்றதும் அவள் தான் கலையில இருந்து தூங்கிக் கொண்டிருந்த அறை நோக்கிச் செல்ல...

''மேடம் அந்த ரூமுக்கு ஏன் போறீங்க? நம்ம ரூம் இந்தப் பக்கம் இருக்கு. வாங்க!'' என்று கூட்டிச் சென்றான்.

அந்தப் படுக்கையறை மிகப் பெரியதாக இருந்தது. அவளுடைய புகைப்படம் பெரிதுபடுத்தப்பட்டு படுக்கை அறைச் சுவற்றில் மாட்டப்பட்டிருந்தது.

அதைப் பார்த்தவள் கடுப்பாகி, ''அதைக் கழட்டி பெட்ரோல் ஊத்திக் கொளுத்துங்க'' என்றாள்.

''வாயிலேயே போடுவேன். எதுக்குடி என் பொண்டாட்டி போட்டோவைக் கொளுத்தச் சொல்லுறே! உங்க அப்பா மட்டும் வீடு பூராவும் மாட்டி வைச்சிருக்காரு. நான் ஒண்ணே ஒண்ணு வச்சிருக்கேன். உனக்கு அது பொறுக்கலையா?''

''என்னது நீங்க மாட்டினதா? இந்த வீட்டிலே இருக்குன்னா... கல்யாணத்துக்கு முன்னாடியில்லே மாட்டியிருக்கணும்! உங்களுக்கு எப்படி என் போட்டோ கிடைச்சது? இந்த டிரஸ் நான் அன்னைக்கு பீச்சுக்கு வரும் போது போட்டிருந்தேன். அப்படின்னா அன்னைக்கு எடுத்தீங்களா? ஆனா அன்னைக்கு உங்க கையிலே கேமரா எதுவும் இல்லையே?''

''அப்பா எத்தனை கேள்வி... நீ என்னைப் பார்க்குறதுக்கு முன்னாடியே நான் உன்னைப் பார்த்து கவுந்திட்டேன்டா. என் கேமரா வைச்சுத் தான் எடுத்தேன். இந்தப் பொண்ணுங்க எல்லாம் கேமராவைப் பார்த்திட்டால் உடனே அதிலே உள்ள போட்டோவைப் பார்க்க ஆரம்பிச்சிடுவீங்களே! அதான் எனக்கு வம்புன்னு கேமராவைக் காரிலேயே வச்சிட்டு வந்துட்டேன்.''

"ஓ! சார் எனக்கும் முன்னாடியே கவுந்தாச்சா? சும்மா ஒண்ணும் தெரியாத மாதிரி ஃபிலிம் காட்டுனீங்களா?"

"ஆமா அந்தக் கவிதையைக் கூட நான் தான் சுமோத்திடம் கொடுத்து உன்னிடம் கொடுக்கச் சொன்னேன். அவன் தான் சொதப்பிட்டான்.

"அன்னைக்கு அந்தக் கவிதையால பவித்ராவிற்குப் பிரச்சனையில்லை என்றதும்... நான் சந்தோஷ மனநிலையில் இருந்ததால் சுமோத் அண்ணா கவிதை எப்படி வாட்ச் மேன் கையிலே சிக்குச்சுன்னு யோசிக்காமல் விட்டுட்டேன். அதுக்கு அப்புறம் எப்படியாச்சும் உங்கிட்டே என் லவ்வைச் சொல்லிடணும் என்று அதிலேயே கவனமா இருந்திட்டேனா... அந்தக் கவிதைப் பத்தி சிந்திச்சுக் கூடப் பார்க்கலை."

"அதை நான் தான் எழுதினேன் தெரியுமா?"

"நீங்களா?" என்று அவள் ஒரு மாதிரி பார்க்கவும்,

"ஹேய்! நான் தமிழ் வாத்தியார் பையனாக்கும். எனக்கும் கவிதை எழுதத் தெரியுமாக்கும்."

"ராஜ் தயவு செய்து அதைக் கவிதைன்னு வெளியே சொல்லிடாதீங்க. அன்னைக்கு அந்தக் கவிதையை சுமோத் அண்ணன் எழுதியது என்று நினைத்துத் தான் நான் போனாப் போறார் அவர் பிரண்டு... அதாவது உங்க முன்னாடி மானத்தை வாங்க வேண்டாமேன்னு சும்மா இருந்தேன். ஆனா இப்போ சொல்லுறேன் கேளுங்க. வசனமா எழுத வேண்டியதை ரெண்டு ரெண்டு வார்த்தையா பிரிச்சு எழுதினா அதுக்குப் பேரு கவிதை கிடையாது ராஜ். இதுக்கு எங்க மாமனாரை வேற கூட்டுச் சேர்த்துக்கப் பார்க்குறீங்க."

"கவிதை நல்லாயில்லையா? நான் ஒரு முகத்தைப் பார்த்து ஈர்க்கப்பட்டு தான் அந்த கவிதையே எழுதினேன். அப்போ அந்த முகத்தோட வசியம் அப்படி போல!" என்று அவன் கண்சிமிட்டிச் சொன்னதும்,

அவள் தனது இடுப்பில் கை வைத்து முறைத்துக் கொண்டே, "என் முகம் உங்க கவிதை மாதிரி கேவலமாவா இருக்கு?" என்றவள், "எல்லாம் சரி. இதையெல்லாம் ஏன் அன்னைக்கே சொல்லலை" என்று கேள்வி எழுப்பினாள்.

"உன்கிட்டே சொன்னால் நீ இந்தப் போட்டோவைக் கேட்பாய். உங்க அப்பா ஆளுங்க இந்த வீட்டில் இருந்து என் துணியையும், புக்ஸையும் தான் எடுத்துக்க அனுமதிச்சாங்க. போட்டோ அவங்க சின்னம்மாவோடதாம். தொடக் கூடாதுன்னு சொல்லிட்டானுங்க. அடப் போங்கடா! நான் உங்க சின்னம்மாவையே தொட்டுக் கிறேன் என்று சொல்லிவிட்டு வந்திட்டேன்" என்றவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

"அப்போ நான் ஃபோர்ஸ் பண்ணி உங்களைத் தாலி கட்ட வைக்கலையா? அப்பாடா! அது வேற எனக்கு உறுத்திக்கிட்டே இருந்துச்சு."

"நீ அப்படிப் பண்ணலைன்னாலும் நானே உன் அப்பாகிட்டே வந்து பொண்ணு கேட்டு போராடி ஜெயிச்சிருப்பேன்டா."

"யாரு? நீங்க? போராடி? அதான் பார்த்தேனே! மொத்த சொத்தையும் அப்பாவும் பையனும் எழுதிக் கொடுத்துவிட்டு வந்ததை. என் வாயிலே நல்லா வந்திடும்."

"எதுடா வாந்தியா? வா வா. முதல்ல அந்த ஏற்பாட்டை பார்ப்போம்" என்று அவன் சொன்னவுடன் சில நொடிகளுக்குப் பின்பே அவன் சொல்ல வருவது புரிந்து சீ என்று வெட்கப்பட்டாள்.

24



ஏழு மாதங்களுக்குப் பின்...

அடுக்களைக்குள் உள்ளே நுழைந்த யசோதா, ''நிவேதா, இங்கே என்னம்மா செய்யுறே?'' என்றார்.

''உங்க பிள்ளைக்கு சாப்பாடு எடுத்து வைக்குறேன் அத்தை.''

''என்கிட்ட சொன்னால் நான் செய்ய மாட்டேனாம்மா?''

''இது ஒரு வேலையா அத்தை? சின்னச் சின்ன வேலை செஞ்சால் தான் பிரசவம் ஈஸியா இருக்குமாம். உங்களுக்கும் அந்தப் பாடத்தை இன்னொரு தடவை உங்க பிள்ளையை விட்டு எடுக்கச் சொல்லட்டுமா?'' என்று ஆறு மாத கர்ப்பத்தினால் சற்றே மேடேறிய வயிற்றுடன் நின்று கொண்டிருந்த நிவேதா கேட்கவும்,

''ஐயோ வேண்டாம்மா. நான் கூட என் ஸ்டூடண்ஸை இப்படி அறுத்ததில்லை. ஆனா ராஜா வாயை திறந்து பாடம் நடத்தினான்னா என் காதிலே ரத்தமே வந்திடும்'' என்று யசோதா மகனைக் கிண்டல் பண்ணினார்.

அதைக் கேட்டு நிவேதா நகைத்தாள். நிவேதா கருவுற்ற நாள் தொடங்கி தான் ஒரு மருத்துவன் என்பதாலும் பிறக்கப் போவது அவனது முதல் குழந்தை என்பதாலும் பிரசவம் குறித்து அவன் எடுக்கும் பாடங்கள் அப்படித் தான் இருந்தது.

''என்ன மாமியாரும் மருமகளும் சேர்ந்து என் தலையை உருட்டுறீங்களா?'' என்று கேட்டுக் கொண்டே

வந்த ராஜீவ் தாய் பார்க்கும் முன்பு மனைவியின் கன்னத்திலும், மணி வயிற்றிலும் முத்தம் பதித்து நிமிர்ந்தான்.

கணவனது செயலில் மகிழ்ந்தவளாய் சாப்பாட்டை மேஜையில் கொண்டு வைக்கும் வேலையில் இறங்கினாள். கூடவே யசோதாவும் அவளுக்கு உதவி புரிந்தார்.

பாதிச் சாப்பாட்டில், ''குழம்பு சூப்பர்மா!'' என்று தாயைப் புகழ்ந்தான்.

''உனக்கு பிடிச்சு என்னடா செய்ய? மசக்கையா இருக்கிறவளுக்கு பிடிக்கலையே? நானும் தினமும் எதை எதையோ போட்டுத் தான் செஞ்சு பார்க்குறேன். ஒண்ணும் சரியா வரமாட்டேங்குது'' என்று அங்கலாய்த்தார்.

அவரது பேச்சில் மருமகளின் வாய்க்கு நல்லவிதமாய் சமைத்துப் போட வேண்டும் என்று நினைக்கும் அவரது அக்கறையும், ஆதங்கமும் வெளிப்பட்டது.

மாமியாரைச் சமாதானப்படுத்துவதற்காக, ''அத்தை எங்க அம்மா ஒரு குழம்பு வைப்பாங்க. அதிலே என்ன சேர்ப்பாங்கன்னு என்னைக் கேட்க முடியாது. புளிக் குழம்பு தான். அதைப் பற்றி நினைச்சாலே நாக்கிலே எச்சில் ஊறும். உங்க குழம்பு அது மாதிரி இல்லை. அவ்வளவு தானே ஒழிய இதை நல்லாயில்லைன்னு நான் சொல்லலை அத்தை'' என்றாள்.

ராஜீவும் யசோதாவும் அர்த்தபுஷ்டியான பார்வையைப் பரிமாறிக் கொண்டார்கள்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை. நிவேதா கோவிலுக்குச் செல்ல ஆசைப்பட்டதால் காலைச் சாப்பாட்டிற்குப் பின் ராஜீவ் அவளை அழைத்துச் சென்றிருந்தான். அவர்கள் மதியச் சாப்பாட்டிற்குத் தான் வீடு வந்து சேர்ந்தார்கள்.

இருவரும் சாப்பிட அமர்ந்து நான்கு வாய் சாப்பிட்ட நிவேதா, ''என்ன அத்தை குழம்பு வித்தியாசமா இருக்கு?'' என்று கேட்டுக் கொண்டே கை கழுவ எழுந்தாள்.

''நல்லா இருக்கா? உனக்குப் பிடிச்சிருக்கா? என் பாதிச் சாப்பாட்டிலே எழுந்துட்டே?''

''ஓ! சூப்பர் டேஸ்ட்டா இருக்கே! இருபத்தி மூணு வருஷமா சாப்பிட்ட குழம்பாச்சே! பிடிக்காமல் போகுமா?''

''நீ சொல்லுறது புரியலையே.''

''நேற்று நான் எந்தக் குழம்புப் பத்திச் சொன்னேனோ அதே குழம்பு கொஞ்சம் கூட டேஸ்ட் மாறாமல் வந்து குதிச்சதன் மர்மம் என்ன அத்தை?'' என்று கேட்டாள்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் யசோதா தன் மகன் புறம் திரும்பிப் பார்க்க... ராஜீவ் போச்சுடா! என்று மானசீகமாய் தலையில் கை வைத்துக் கொண்டான்.

''என்ன அம்மாவும் பிள்ளையும் கூட்டா? பாலம் கட்ட முயற்சிக்கிறீங்களா? நான் ரோஷக்காரி. என் பிள்ளைக்கு என்னைக் காட்டிலும் ரோஷம் ஜாஸ்தி. உள்ளே போன நாலு வாய் சாதம் இப்போ வெளியே வருதா இல்லையான்னு பாருங்க'' என்று சொன்னதும் பக்கத்துப் படுக்கையறையில் இருந்து வெளியே வந்த ராதா,

''இன்னமும் வெளியவே வராத பிள்ளையை உன் பிள்ளைன்னு சொல்லி நீ பெருமைப்பட்டுக்குவ... உன்னைத் பெத்து இத்தனை வருஷம் வளர்த்த எனக்கு ஒரு குழம்புச் செஞ்சு போடுற உரிமையில்லையா? உனக்கும் உன் அப்பாக்கும் சண்டைன்னா நான் என்னடி

செஞ்சேன்? நான் ஒண்ணும் இந்தக் குழம்பை உன் அப்பா வீட்டிலே செஞ்சு எடுத்துட்டு வரலை. உன் புருஷன் வீட்டிலே உள்ள பொருட்களை வைச்சுத் தான் செஞ்சேன். வா வந்து மீதியைச் சாப்பிடு. என் பேரப் பிள்ளை என்ன செய்யுதுன்னு நானும் பார்க்கிறேன்'' என்று சொல்லி அவளைக் கைப் பிடித்து நடத்திச் சென்று தட்டின் முன் அமர வைத்தவர் அந்த சாதத்தை எடுத்து அவளுக்கு ஊட்ட ஆரம்பித்தார்.

ராஜீவ் தனது தட்டைத் தூக்கிக் கொண்டு அடுக்களைக்குள் செல்ல, யசோதாவும் அவன் பின்னே சென்றார். சுந்தரம் சப்தமில்லாமல் படுக்கையறைக்குள் பதுங்கினார்.

தனித்து விடப் பட்ட தாயும் மகளும் பார்வையாலேயே தங்களின் பாசத்தைப் பரிமாறிக் கொண்டார்கள். இருவரும் தங்களது கண்களில் வழியும் கண்ணீரைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

நிவேதாவிற்கு கர்ப்பம் உறுதியான நாள் தொடங்கி தன் தாயைப் பார்க்க வேண்டும் என்று ரொம்பவே ஆவலாக இருந்தது. வீம்பு பிடித்துக் கொண்டு தான் தனது ஆவலை அவள் வெளியே சொல்லாமல் இருந்தாள்.

இன்று ராதாவின் அதிரடியான பிரவேசம் அவளை சந்தோஷத்தில் திக்குமுக்காட வைத்தது என்றே சொல்லலாம். சாப்பிட்டு முடித்த பின் சோபாவில் தாயின் தோள் சாய்ந்து அமர்ந்தாள். தாயின் கையைப் பிடித்துக் கொண்டு கண்மூடி அந்த நொடி தந்த மனநிறைவை அனுபவித்தாள்.

அப்பொழுது எதிர் சோபாவில் வந்தமர்ந்த ரவீந்திரன், ''குட்டிம்மா'' என்று கூப்பிட்டதும் தாயின் கையை

விடுவித்தவள் எழுந்து தன் படுக்கை அறைக்குள் சென்று மறைந்தாள்.

ரவீந்திரன் தலை கவிழ்ந்தார். அவர் அருகே வந்த சுந்தரம், ''சம்பந்தி கவலைப்படாதீங்க. அவ அம்மாவை எத்துக்கிட்டாள் தானே. கொஞ்சம் கொஞ்சமா மாறுவாள்'' என்று நம்பிக்கை ஊட்டினார்.

'மாமனாரை பெரியவர்கள் மூவரும் சமாதானப் படுத்துவார்கள். நாம உள்ளே சென்றவளைக் கவனிப் போம்!' என நினைத்தவனாய் ராஜீவ் தங்களது படுக்கை அறைக்குள் நுழைய,

''இதெல்லாம் உங்க வேலை தானா ராஜ்?'' என்று கேட்டாள்.

''நீ அவரை நல்லாப் பார்த்தியா? பாதி ஆளாய் போயிட்டார். மனுஷனாப் பொறந்தா மறக்கவும், மன்னிக்கவும் தெரியணும் நிவி! அவரோட பாசத்தை நீ புரிஞ்சுக்கோ!''

''உங்க எல்லோரையும் விட அவர் பாசம் எனக்கு நல்லாவே தெரியும் ராஜ். நான் மட்டும் அன்னைக்கு உங்க கூட வந்திருந்தேன்னா அவராலை என் முகத்தைப் பார்த்து உங்க சொத்தை எழுதித் தாங்கன்னு கண்டிப்பா கேட்டு இருக்க முடியாது. அவர் பாசம் எனக்குப் புரியுது. புரியாமல் இல்லை. நான் கோபத்திலே தான் அன்னைக்கு பாசம்ன்னா என்னன்னு அவருக்கு டியூஷன் எடுத்தேன். ராஜ், அவர் என் எதிரே நின்னு சண்டை போட்டிருந்தால் பரவாயில்லை. ஆனால் அவர் என் முதுகிலே குத்திட்டார். என்னால அதை மறக்க முடியலையே!'' என்று மறுகினாள்.

''அவர் உன்னை முதுகில் குத்திட்டாருன்னு இவ்வளவு ஃபீல் பண்ணுறியே... நீ மட்டும் அவருக்கு எதிரே

நின்னா போராடினே? அவருக்குத் தெரியாமல் ரிஜிஸ்டர் மேரேஜ் தானே பண்ணினே! அப்போ அதை என்னன்னு சொல்லுறது?''

''அப்படின்னா அவர் என்னைத் தானே பழி வாங்கணும். உங்களைக் கூட என்னைக் கல்யாணம் பண்ணியதால்... இல்லைன்னா முன்னாடி உள்ள பகையில பழி வாங்கிட்டதா வைச்சுக்கிட்டாலும் என் மாமனார் மாமியாரை எல்லாம் எதுக்குக் கஷ்டப்படுத்தினார். அவங்களை எல்லாம் நான் எப்படி பேஸ் பண்ணுவேன்னு யோசிச்சுப் பார்த்தாரா?''

''அவர் சொத்தைக் கேட்டு வாங்கினார் தான். ஆனால் அவர் நினைச்சிருந்தா ஊருக்குள்ளே எங்களோட நிலபுலன் தோப்பு எல்லாம் கை மாறிடுச்சுன்னு சொல்லி எங்க கவுரவத்தை குறைச்சிருக்கலாம் தானே! ஆனால் அவர் அதை செய்யலையே! நாங்க கடைசி வரை யாருக்குமே விஷயம் தெரியாத அளவுக்கு கவுரமாத் தானே நடமாடினோம். காயத்ரி மாமியார் என்னைக்கு என் வீட்டுக்கு வராங்களோ அன்னைக்குத் தான் நாங்க மாட்டிக்குவோம்ன்னு நான் பயந்து போயிருந்தேன். உம் சொந்த வீடு என்னாச்சுன்னு கேட்பாங்களேன்னு பயந்தேன். ஆனால் அவங்க நம்ம வீட்டுக்கு வரும் முன்னாடியே உங்க அப்பா எல்லாத்தையும் தான் திருப்பிக் கொடுத்திட்டாரே! நாங்க யார்கிட்டவும் அவமானப் படலையே.''

''மாமனாருக்கு நல்லா ஜால்ரா தட்டுறீங்க ராஜ்!''

''பாவம்மா. செஞ்ச தப்புக்காக எவ்வளவு ஃபீல் பண்ணுறாரு தெரியுமா? அப்பாக் காலிலேயே விழப் போனார். நீ அவருக்கு ஒரே பொண்ணுடா. நீ இப்படி முகம் திருப்பினால் அவர் என்ன பண்ணுவார்?''

கண்களை இறுக மூடித் திறந்தவள், ''ராஜ் அவர் இங்கே வந்து போகட்டும். நீங்க எல்லாம் தெய்வங்களா இருந்து அவரை மன்னிச்சு உறவு கொண்டாடுங்க. ஆனா என்னைக் கட்டாயப்படுத்தாதீங்க. ஒரு ஸ்விட்ச் சைத் தட்டி ஆன் ஆஃப் மோடுக்கு மாற்றுவதற்கு என் மனசு ஒண்ணும் எலக்ட்ரானிக் சாதனம் இல்லை'' என்றாள்.

அவள் இவ்வளவு தூரம் இறங்கி வந்ததே பெரிது என்று நினைத்தான். அவளது முடிவைக் கேட்ட ரவீந்திரன் உடனே தன் ஜாகையை மதுரையில் இருந்து சென்னைக்கு மாற்றினார். ராஜீவ் குடியிருந்த அடுக்கு மாடிக் குடியிருப்பிலேயே ஒரு வீட்டை விலை பேசி வாங்கினார். எப்படியும் மருமகன் தனது தொழிற் சாலையைப் பார்த்துக் கொள்ளப் போவதில்லை. மகளும் மருத்துவமனையைத் தான் நிர்வாகம் செய்யத் தயா ராகிறாள் என்று தெரிந்த உடனே அவர் தனது மதுரை தொழிற்சாலையை விற்க ஏற்பாடு செய்திருந்தார். அதனால் அவர் சென்னையிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டார். அவருடன் சேர்ந்து அவரது கார் டிரைவர் வேலுவும் தன் இருப்பிடத்தைச் சென்னைக்கு மாற்றிக் கொண்டார்.

25



சில மாதங்களுக்குப் பின்...

பிரசவ அறையில் நிவேதா வலியால் துடித்துக் கொண்டிருக்க... அவளருகில் நின்று கொண்டு ராஜீவ் அவளுக்கு தைரியம் கொடுத்துக் கொண்டிருக்க...

அறைக்கு வெளியே பெரியவர்கள் நால்வரும் மனதால் துடித்துக் கொண்டிருந்தனர்.

அந்தக் கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு ஒரு நர்ஸ் வெளியேறுவதற்கும், நிவேதா அப்பா என்று அலறுவதற்கும், குழந்தையின் வீல் என்ற அழுகுரல் கேட்பதற்கும் சரியாக இருந்தது.

சுந்தரம், யசோதா, ராதா ஆகிய மூவரும் குழந்தையின் அழுகுரல் கேட்டு குதூகலித்துக் கொண்டிருக்க... ரவீந் திரன் மட்டும் மகள் அலறிய 'அப்பா' என்ற சொல்லில் ஆனந்தித்திருந்தார்.

அவள் பிறந்த பொழுது அவளது அழுகுரல் தந்த ஆனந்தத்தை விட இன்றைய அவளது 'அப்பா' என்ற அழுகுரல் அவருக்கு அளவில்லா ஆனந்தத்தைத் தந்தது. அவரது மனம் எல்லையில்லா நிம்மதி அடைந்தது.

வெளியே எட்டிப் பார்த்த ராஜீவ், ''பேத்தி பிறந்திருக் கிறாள்'' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தான்.

''குழந்தையை இப்போ காட்ட மாட்டாங்களா ராஜா?'' என்று ஆவலாக யசோதா கேட்க,

''குழந்தையைக் குளிக்க வைச்சதும் நானே தூக்கிட்டு வரேன் மா'' என்றான்.

''மாப்பிள்ளை...'' என்று ராதா ஆரம்பிக்கவும்,

''நிவி நல்லா இருக்காள் அத்தை. எந்தப் பிரச்சனை யும் இல்லை'' என்று அவர் கேட்க நினைக்கும் கேள்விக் கான பதிலைத் தெரிவித்துவிட்டு உள்ளே சென்று மறைந்தான்.

அரை மணி நேரம் சென்ற பின் ராஜீவ் தன் மகளைத் தூக்கிக் கொண்டு வர... ரவீந்திரன் தவிர மூவருமே அவன் அருகே சென்று குழந்தையைக் கண்டு

மகிழ்ந்தனர். அவர் மட்டும் அசையாது அதே இடத்தில் அமர்ந்திருக்கவும் ராஜீவ் யோசனையுடன் அவரைப் பார்க்க...

அப்பொழுது தான் அவன் பார்வை சென்ற திக்கை அவர்களும் திரும்பிப் பார்த்தனர். ரவீந்திரனின் நிலை கண்டு குழம்பினர்.

ராஜீவ் தன் மகளைத் தூக்கிக் கொண்டு அவர் அருகே சென்று, ''மாமா'' என்று அழைத்தான்.

மகளுடனான தனது முந்தைய ஆண்டுகளைப் பற்றிய எண்ணத்தில் மூழ்கி இருந்தவரை அவனது அழைப்பு நனவுலகிற்கு இழுத்து வந்தது. கனவிலிருந்து விழித்தவர் ராஜீவைக் கண்டு எழுந்தார். அப்பொழுதும் பேத்தியைக் காண ஆவல் கொள்ளவில்லை.

பேத்தியைப் பாராது தனது மருமகனைப் பார்த்து, ''உங்களுக்குக் கேட்டுச்சா மாப்பிள்ளை? நீங்க கவனிச்சீங்களா?'' என்றார்.

எதைச் சொல்கிறார் என்று புரியாதவனாய் விழித்துக் கொண்டே, ''என்ன மாமா சொல்லுறீங்க?'' என்றான்.

''என் பொண்ணு அப்பான்னு கத்தினாளே! அதைக் கேட்டீங்களா?'' என்று திரும்பக் கேட்கவும்,

அவள் கத்தியதைக் கவனித்திராத ராஜீவ் இவருக்கு மூளை எதுவும் கலங்கிவிட்டதா என்று பயந்து போனான்.

அவனது எண்ணத்தைப் பொய்யாக்கும் வண்ணம் ஒரு நர்ஸ் வந்து, ''பேஷண்ட்டை ரூமுக்கு ஷிப்ட் பண்ணிட்டோம். இங்கே மிஸ்டர் ரவீந்திரன் யாரு? பேஷண்ட் அவரைக் கூப்பிடுறாங்க. போய் பார்க்கச் சொல்லுங்க'' என்றாள்.

''இதோ போறேன்'' என்று தன் வயதையும் மீறித் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடினார். எஞ்சி நின்ற

நால்வருமே ஒரு சந்தோஷப் பார்வையைப் பரிமாறிக் கொண்டார்கள்.

அறைக்குள் நுழைந்தவர் படுத்திருந்த மகளின் அருகே சென்று அவளது தலையை வருடினார். அந்தத் தொடுகையில் கண்விழித்தவள் தந்தையின் கையைத் தனது கைகளுக்குள் புதைத்துக் கொண்டாள்.

''அன்று 'அந்நிய ஆடவன்' என்று சொல்லித் தன் கை விலக்கிய மகள் இன்று தானே வலிய வந்து கை பற்றவும் தன்னை அவள் மன்னித்து ஏற்றுக் கொண்டது அந்தத் தந்தைக்குப் புரிந்து போயிற்று.

வழக்கமாக அவர் மூச்சுக்கு முன்னூறு முறை விளிக்கும் குட்டிம்மா கூட அவர் வாயில் இருந்து வெளிவரவில்லை. துக்கத்தில் மட்டுமல்ல அளவில்லா ஆனந்தத்திலும் வார்த்தைக்குப் பஞ்சம் ஏற்படும்.

மகளது கையை அவர் மென்மையாக அழுத்திக் கொடுக்க... வார்த்தைகளற்ற அந்தத் தொடுகையின் மூலம் அவர்கள் இருவருமே அடுத்தவரிடம் தங்களது மன்னிப்பை வேண்டிக் கொண்டனர்.

மகளது கண்களில் வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கும் போதே அவர்கள் அனைவரும் உள்ளே நுழைந்தனர். ராதா தனது கண்ணீரைத் தன் சேலை துனியால் துடைத்துக் கொண்டார். இத்தனை நாளும் கணவனுக்கும் மகளுக்கும் இடையே அவர் தானே படாதபாடுபட்டார்.

''அம்மா, அந்த லீவரைச் சுத்தி என் பெட்டைக் கொஞ்சம் ஏத்திவிடுங்கம்மா. நான் சாய்ந்து உட்கார்ந்துக்கிறேன்'' என்று நிவேதா சொன்னதும் அந்த படுக்கையைச் சரி செய்து அவளது முதுகிற்கு தலை

யணையை அண்டை கொடுத்து ராதாவும் யசோதாவும் அவளை சாய்ந்த வாக்கில் உட்கார வைத்தார்கள்.

ராஜீவ் ரவிந்திரனின் அருகே சென்று, ''மாமா உங்க மகளைக் கொஞ்சினது போதும். இப்பவாச்சும் என் மகளைக் கொஞ்சுறீங்களா? உங்க மகளை விட உங்க பேத்தி பெரிய ஆளா வருவாள். நான் பிறந்த அன்னைக்கு நீங்க என்னைக் கொஞ்சவே இல்லையாமே தாத்தான்னு உங்களை ஆயுசுக்கும் படுத்தி வைப்பாள். ஜாக்கிரதை!'' என்று சிரித்துக் கொண்டே எச்சரித்தான்.

''ஆமா மாப்பிள்ளை. நீங்க சொல்லுறது சரி தான். செஞ்சாலும் செய்வாள்'' என்று சொன்னவர் பேத்தி யிடம் குனிந்து, ''குட்டிம்மா தாத்தாகிட்டே வாங்க'' என்றார்.

உடனே நிவேதா, ''டாடி இப்போ என்ன சொன்னீங்க?'' என்று கேட்டு அவரை முறைத்தாள்.

உடனே ரவீந்திரன், ''வாய் தவறி சொல்லிட்டேன்டா. எப்பவுமே நீ தான்டா என் குட்டிம்மா. வேணும்ன்னா இவளை பேபின்னு கூப்பிடட்டுமா?'' எனக் கேட்டு மகளிடம் சம்மதம் வாங்கிய பின் பேத்தியைப் பார்த்து, ''நீங்க வாங்கடா பேபி'' என்று கொஞ்சிக் கொண்டே தன் கைகளை நீட்டினார்.

ராஜீவ் ஒரு அரை வட்டம் அடித்து அவரிடம் தன் மகளை தர மறுத்தவன் நிவேதாவின் அருகே போடப் பட்டிருந்த சேரில் அமர்ந்து கொண்டு,

''நீங்க ஒண்ணும் யார்கிட்டேயோ பெர்மிஷன் வாங்கிட்டு வந்து என் பொண்ணைக் கொஞ்சத் தேவையில்லை'' என்று மாமனாரைப் பார்த்துச் சொன்னவன் குனிந்து தன் மகளிடம், ''உனக்கு நான் இருக்கேன்.

இல்லைடா குட்டிம்மா? இவர் தன் பொண்ணைக் கொஞ்சுறதை விட நான் உன்னை அதிகமாகக் கொஞ்சு வேன்டா குட்டிம்மா. இனிமே நாம ரெண்டு பேரும் தான் பெஸ்ட் பிரண்ட்ஸ். என்னடா குட்டிம்மா?'' என்று வரிக்கு ஒரு குட்டிம்மா போட்டுக் கொஞ்சினான்.

''ராஜ்...'' என்று அழுதுவிடும் குரலில் நிவேதா அழைக்க...

அவளை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே, ''குட்டிம்மா உங்க அம்மாவைப் பார்த்தியா? அவ அப்பாவும் அவளைத் தான் கொஞ்சணுமாம். உன் அப்பாவும் அவளைத் தான் கொஞ்சணுமாம். இது டூ மச்சா இல்லை?'' என்று கேட்டான்.

அவன் நிவேதாவைப் பார்த்து, ''உனக்கு நான் முக்கியமா? இல்லை உங்க அப்பாவா?'' என்றான்.

அவன் சற்றும் யோசிக்காமல், ''எங்கப்பா தான்'' என்றாள்.

ரவீந்திரன் தன் பெண்ணைப் பெற்ற தந்தையாய் அவளது பதிலில் ஒரு நொடி பூரித்தார். ஆனால் அடுத்த நொடியே தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்து விட்ட தந்தையாய் 'என்னடா இவ பாட்டுக்கு இப்படிச் சொல்லிட்டாளே... மாப்பிள்ளை கோபித்துக் கொள்வாரோ?' என அஞ்சினார்.

ஆனால் அந்த மாப்பிள்ளையே குனிந்து தன் மகளிடம், ''கிரேட் எஸ்கேப்டா குட்டி!'' என்று சொல்லித் தனது கைகளால் மகளது கன்னத்தைத் தொட்டு தன் உதடுகளில் ஒற்றிக் கொண்டவன் மேலும், ''நான் கூட எங்கே உங்கம்மா என் பேரை சொல்லிடுவாளோன்னு பயந்தே போனேன். இன்னமும் இவளையே பார்த்துக்

கிட்டு இருந்தால் உன்னை யார் பார்த்துக்கிறது?'' என்று சொல்லி அடுத்த கன்னம் தொட்டு முத்தமிட்டவன்,

''எனக்குக் குழந்தை பிறந்தவுடனே என் நேரம் நல்லா இருக்கும்ன்னு ஜோசியர் சொன்னாராம். அது கரெக்ட் தான்டா குட்டி. பாரு! அவளே அவங்க அப்பா கூடப் போய் ஒட்டிக்கிட்டாள். நான் உனக்கே உனக்குத் தான்டா. அப்பா கட்டுற ஹாஸ்பிட்டலுக்கு அப்பா உன் பேரைத் தான் வைப்பேன். சரியா?'' என்று சொல்லி இன்னுமொரு முத்தம் கொடுத்தான்.

நிவேதா சத்தமாகத் தன் வாய்விட்டு, ''ஒண்ணு, ரெண்டு, மூணு'' என்று எண்ணத் தொடங்கவும்,

சுந்தரம், ''என்னம்மா நிவேதா! கோபத்தைக் கட்டுப் படுத்த எண்ண ஆரம்பிச்சுட்டியா?'' என்று மருமகளைப் பார்த்துக் கேட்டவர் மகனைப் பார்த்து, ''ஏன் ராஜா அவளைக் கோபப்படுத்துறே!'' என்றார்.

ராதா தன் மகளின் முகம் தனது கணவனை விட்டு அகலாது இருப்பதைக் கண்டு கொண்டார். அவள் தன் கணவனிடம் பேச விரும்புகிறாள் என்பதைப் புரிந்து கொண்டவர், ''நாமெல்லாம் கொஞ்சம் வெளியே இருப்போமா?'' என்று கேட்டு அனைவரையும் அந்த அறையை விட்டு நகர்த்தினார்.

வெளியே வந்த சுந்தரம், ''இந்தப் பையனுக்கு அறிவே இல்லை. இப்போ போய் அவளை வெறுப் பேத்துறான்'' என்று புலம்பினார்.

ரவிந்திரன் அவரிடம், ''இவளும் இப்படி எங்க அப்பா தான் முக்கியம்ன்னு சொல்லலாமா சம்பந்தி?'' என்றார்.

''ஹையோ'' என்று தலையில் அடித்துக் கொண்ட ராதா, ''உங்க பிள்ளைங்களை நீங்க அவ்வளவு தான்

புரிஞ்சு வைச்சு இருக்கீங்க. அவ இந்த பதிலைச் சொல்லணும்ன்னு தானே மாப்பிள்ளை அந்தக் கேள்வியே கேட்குறார்'' என்றார்.

அவரது கருத்தை ஆதரிக்க யசோதாவும், ''அவங்க ரெண்டு பேரும் தெளிவாத் தான் இருக்காங்க. நீங்க ரெண்டு பேரும் புலம்பாமல் அமைதியா இருங்க'' என்றார்.

அறையின் உள்ளே...

கையில் வைத்திருந்த மகளை மனைவியிடம் தந்தவன் அவள் நன்றாகத் தாங்கிப் பிடித்துக் கொள்ளவும் அவளது நெற்றியில் முத்தமிட்டு ''ஒண்ணு'' என்று சொல்லி இரு கன்னங்களிலும் முத்தமிட்டு ''ரெண்டு'', ''மூணு'' என்று முறையே சொன்னவன் அவளது உச்சியில் அழுத்தமாய் முத்தமிட்டு, ''இது ஸ்பெஷல்'' என்றான்.

''என்னங்க மேடம் கணக்கு சரியாப் போச்சா? நீ எதுக்கு எண்ணிக்கிட்டு இருக்கேன்னு தெரியாமல் உன் மாமனார் என்னைத் திட்டுறார். ஆனா என் மாமியார் விவரமானவங்க. எல்லோரையும் தள்ளிக்கிட்டுப் போயிட்டாங்க பாரு'' என்று சொன்னவன் அவளது வலது கைப்புறம் அமர்ந்து அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டான்.

மகளது மேனியை வருடிக் கொடுத்துக் கொண்டே கணவனின் தோள் மீது சாய்ந்து கொண்டவன், ''எண்ணிக்கை எல்லாம் சரியாகிடுச்சு. ஆனால் ஸ்பெஷலுக்கான இடம் தான் மாறிப் போச்சு'' என்றாள்.

''இப்போதைக்கு அது தான்'' என்று ராஜீவ் சொன்னதும்,

''எப்போ பார்த்தாலும் டாக்டராவே நடந்துக்க வேண்டியது'' என்று கேலி பேசியவள் அடுத்த நொடியே முகத்தை தீவிரமாக வைத்துக் கொண்டு, ''ராஜ் இப்போ உங்களுக்கு சந்தோஷமா?'' என்றாள்.

''ரொம்பத் திருப்தியா இருக்குடா.''

''நான் எது பத்திக் கேட்குறேன்னு உங்களுக்குப் புரியுதா ராஜ்?''

''உன்னை எனக்குத் தெரியாதாடா? ஆனா எப்படி இந்த திடீர் ஞானோதயம்?''

''பாப்பா பொறக்கறதுக்கு ஒரு ரெண்டு நிமிஷம் முன்னாடி எனக்கு நான் செத்துப் போயிடுவேன் என்றே தோண ஆரம்பிச்சிடுச்சு'' என்றதும் அவளது தோளை அழுத்திக் கொடுத்தான்.

''அப்போ எனக்கு அப்பா முகம் மட்டும் தான் கண் முன்னால வந்து போச்சு. அவரை மன்னிக்காமலே போயிட்டோம்ன்னா எப்படி அவராலை அதைத் தாங்க முடியும்ன்னு நான் பயந்து போனேன். அப்பான்னு கத்தினேன். ஒருவேளை நான் இறந்தால் கூட நான் அவரை மன்னிச்சிட்டதா அது உங்களுக்கெல்லாம் உணர்த்தும்ன்னு நினைச்சுத் தான் அப்படிக் கத்தினேன். நீங்க கேட்டீங்களா ராஜ்?''

இல்லை என்று தலையாட்டி மறுத்தவன், ''பக்கத்திலே நின்னுக்கிட்ட இருந்த எனக்குக் கேட்கலைடா. ஆனா கேட்க வேண்டியவர் சரியாக் கேட்டு இருக்கார்டா'' என்று சொன்னவன் அவரது நிலையை எடுத்துரைத்தான்.

''எத்தனை நாள் வாழப் போறோம்ன்னு தெரியாமல் எதுக்குப் போட்டி பொறாமை கோபம்ன்னு இப்பத் தோணுது.

அன்னைக்கு நான் எங்க அப்பா என் மேலே வைச்ச பாசமும் மாறக் கூடியது தான் என்று சொன்னேன். அப்படிப் பார்த்தால் நானும் மாறித் தானே போனேன். எங்கப்பா எனக்கு எதிரா திரும்பினால் உயிரை விட்டு விடுவேன் என்று சொன்னவள் கல்லுகுண்டு மாதிரி நல்லாத் தானே இருக்கேன். இன்னும் சொல்லப் போனால் அவர் செஞ்சதை மறந்திட்டு என் ஹஸ் பண்டைக் காக்கணும் அப்படின்னு தானே என் சிந்தனை முழுவதும் இருந்துச்சு. அப்போ என் பாசமும் மாறித் தானே போச்சு. அப்புறம் அவர் மட்டும் மாறிட்டாருன்னு சொல்லக் கூடாது இல்லை.''

'உன் மாற்றம் நல்லவிதமானது. ஆனால் அவரது பாசம் ஆவேசம் கோபம் அழிவுன்னு மாறுச்சு. ஆனால் இப்போ நான் எதையாவது சொல்லி உன்னைக் குழப்ப விரும்பலை. எப்படியோ நீ உன் அப்பாவை ஏத்துக்கிட்டால் அதுவே எனக்குப் போதும்' என மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

அப்பொழுது தங்களது கண்களை மூடிக் கொண்டே, ''நாங்க உள்ளே வரலாமா? கண்ணைத் திறக்கலாமா?'' என்று கேட்டுக் கொண்டே சுமோத்தும், சுமித்ராவும் உள்ளே நுழைந்தனர்.

மனைவியின் தோள் மீதிருந்த கைகளை அகற்றியவன், ''அடச் சீ! கண்ணைத் திறங்க. இங்க என்ன ரொமான்ஸா பண்ணிக்கிட்டு இருக்கோம்'' என்று ராஜீவ் கேலி பண்ணவும்,

கண்களைத் திறந்த சுமித்ரா, ''ஹேய் பேபி!'' என்று கூவிக் கொண்டே குழந்தையின் அருகே சென்று கொஞ்ச ஆரம்பித்தாள்.

''என்னடா அண்ணனும், தங்கச்சியும் வந்திருக்கீங்க? உங்க ஜோடிப் புறாக்களை எங்கே காணோம்?'' என்றதும்,

''அவங்க எல்லாம் டீசன்ஸிங்கிற பேரிலே வெளியே நிக்குறாங்க. எங்களுக்கு அதெல்லாம் கிடையாதுன்னு சொல்லி உள்ளே நுழைஞ்சுட்டோம்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே சுமோத்தின் மனைவி, சுமித்ராவின் கணவன் மற்றும் வெளியே காத்திருந்த நால்வரும் உள்ளே நுழைந்தனர்.

ராஜீவ் படுக்கையை விட்டுக் கீழே இறங்கியவன் தனது மகளை மீண்டும் தனது கைகளில் வாங்கிக் கொண்டு இருக்கும் போது மதுமிதா உள்ளே நுழைந்தாள்.

''ஹேய் மது! வா வா. உன் கூட விளையாட ஜோடி வந்திருச்சுப் பாரு'' என்று நிவேதா சொன்னவுடன்,

'அப்போ நீங்க விளையாட மாட்டீங்களா அத்தை?' என்று கவலையுடன் மதுமிதா கேட்கவும்,

ராஜீவ், ''அந்த கவலையே உனக்கு வேண்டாம் மது. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் நான் இன்னும் வளரலைன்னு உங்க அத்தை நிரூபிச்சாள். அதனால கண்டிப்பா நீ அவ கூடவே விளையாடலாம்'' என்றதும், நிவேதா அவனைப் பார்த்து முறைத்தாள்.

உள்ளே நுழைந்த காயத்ரி, ''ஒரு ரூமுக்குள்ளே இத்தனை பேரா? டேய் ராஜீவ்! என்ன தான் நீ டாக்டர் என்றாலும் இந்த ஹாஸ்பிட்டலில் இனிமேல் உன்னை உள்ள சேர்க்க மாட்டாங்கடா!'' என்று கேலி பண்ண அனைவரும் நகைத்தனர்.

பாசத்தைக் கோபம் என்னும் திரை மறைக்கலாம். ஆனால் அந்த திரை தற்காலிகமானதே தவிர நிரந்தரமானது இல்லை.

*